உ

சிவமயம்.

பராபரவித்யா விவரண

சிவாகம வேததாரதம்யம்.

வேதாகம தாரதம்யம்.

இஃது

திருசிரபுரத்திற்கடுத்த

திருவானைக்காவலி லிருக்கும்

சிவாகம பாடசாலை உபந்யாஸகராகிய

பச்சாம்பேட்டை

ஸத்யோஜாத சிவாச்சாரியாரால்

இயற்றப்பட்டு

திருசிராபுரம்

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ அச்சுக்கூடத்தில்

வெளியிடப்பட்டது.

1910

உ

சிவமயம்.

பராபரவித்யா விவரண

சிவாகம வேத தாரதம்யம்.

வேதாகம தாரதம்யம்.

இஃது

திருசிரபுரத்திற் கடுத்த

திருவானைக்காவலி லிருக்கும்

சிவாகம பாடசாலை உபன்யாஸகராகிய

பச்சாம்பேட்டை

ஸத்யோஜாத சிவாசாரியாரால்

இயற்றப்பட்டு

திருசிரபுரம்

லக்ஷ்மீ விலாச முத்திராக்ஷர சாலையில்

வெளியிடப்பட்டது.

1908

உ

சிவமயம்.

வேதாகம தாரதம்ய முகவுரை.

சிவபக்த சிகாமணிகளாகிய நம்மனோர் பலர்க்குந் தெரி
வித்துக் கொள்வதாவது. மதுரை சிவதர்ம பரிபாலன சபையா
ரால் பிரசுரித்த சைவ தூஷண நிராகரண மென்னுந் தலைப்
பேர் புனைந்த புத்தகத்திற் வேதஸாரஞ் சிவாகம மென நிரூபித்
திருத்தலை சிற்சிலர் ஆக்ஷேபித்து வேத முயர்ந்ததா? சிவாகமம்
உயர்ந்ததா? அல்லது இரண்டும்சமமா? என ஆசங்கிக்க புகு முன்
னிலையில் வேதசாரம் சிவாகம மென்பது விடையாக தெனவும்
இவர்கள் கூறிய சமாதானம் வேதத்திற்கே மகிமை சார்ந்துள்ள
தெனவும் இஃதன்றி வாயுஸம்ஹிதா வாக்கியத்தில் சிரௌதா
சிரௌத விவகாரங் கூறியவிடத்தில் சுருதிஸாரம் சிரௌதமென
வும் ஸ்வதந்திரம் இதரமெனக் குறித்துள்ளது அச்ரௌதமெ
னவும் கூறப்பட்டிருத்தலின் காமிகாதிகளான அசிரௌதசிவாக
மங்களை சிரௌதமென வலிந்தீட்டிப்பொருள்கொண்டது குற்ற
மாமெனவும் சுருதி சூத்திரர் முதலினோர்க்கு அத்யயன விலக்
காய் நிற்றலின் சூத்திரரும் படிக்க விதித்துள்ள சிவாகமம் வேத
ஸார மாதல்யாங்ஙன மெனவும் வேதத்தை நோக்க ஸாரம் விசே
ஷ மாதல் பற்றி இங்ஙனம் சூத்திரர்க்கு அத்யயன ஹேதுவு
டாகா தெனவும் இவ்வாறுள்ள பல் வகையாம் ஆசங்கைகளை
எம்பால் சிற்சிலர் ஆசங்கிக்கப் புகுந்ததால் அவ்வாசங்கை நிரா
கரித்து உண்மை யுபகரிக்க வேதாகம தாரதம்மிய மென்னும் இ
மெய் நூல் வெளிப்படுத்த துணிந்தோம்.

இந்நூல் வெளியிட எம்மை பன்முறை வர்ப்புறுத்தி
பொருள் நலம் உபகரித்து சைவாபிமான மேற்கொண்டு நிற்கும்
பூதலூர் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியா ரவர்களுக்கு எ
ப்பொழுதும் நன்றி பாரர்ட்டக் தக்கவராயிருக்கின்றோம் அவர்
வேதசிவாகமங்களில் வைத்திருக்கும அன்பும் அவ்வன்புதடித்து
நம் சிவ பெருமானிடத்து அந்தரங்க விசுவாசமும் வைத்தது.
மென்மேல் அபிவிர்த்தி யடையு மென்பதில் தடையில்லை.

சுபம்:—இப்புத்தகம் வேண்டுபவர் எமக்காவது பூதலூர்
சுப்பிரமணிய சிவாச் சாரியாரவர்களுக்காவது தெரிவித்துக் கொ
ண்டால் விலாஸதாரர்களுக்கு வி. பி. மூலியமாய் அனுபபப்படும்.

ஸத்யோஜாத சிவாச்சாரியார்.

ஆகம பாடசாலை உபன்யாஸகர்

திருவானைக்காவல், திருச்சி.

உ

திருச்சிற்றம்பலம்.

சைவதூஷண நிராகரணம்.

வேதாகமதாரதம்யம்.

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

சைவதூஷணநிராகரணமென்னும்

இத்தலைப் பெயரிட்ட புத்தகமொன்று மதுரை பிரும்மஸ்ரீ கல்யாண சுந்தரபட்டரவர்களால் கிடைக்கப்பெற்றவை நோக்கியானந்தமுற்றோம்—அவற்றுள்? தியஸாபிகல் ஸொஸைட்டியாரது ஒரு குறிப்பு வருமாறு? எனத்தொடங்கி மூன்று வைதிக மதங்களில்? ஒன்றாகிய விசிஷ்டாத்வை தத்தைப்பற்றி? இஃது எழுதப்பட்டதாகையால் இதில் சைவமதமானது அடங்கவில்லை எனவும்? சிவஞானமுனிவர் முதலியவர்கள்சைவத்தை வேதாந்தத்தைவிட்டு முற்றும் விலக்கி? வேதாந்திற்கு புறம்பான ஆகமசாஸ்திரங்களையே ஆதரவாக்கி சிலவேறுபாடுள்ள தாத்பரியங்களுட

னும். சித்தாந்தம் என்கிற நாமதேயத்துடனும் சைவமதத்தை ஸ்
தாபித்து? அது அவருக்குப் பின்வந்தவர்களால் அநுஷ்டிக்க
ப்பட்டு வருகின்றது எனவும்? அதை வைதிக விசிஷ்டாத் வைத
த்துடன் சேர்க்காமல் பிரத்தியேகமாக விவரித்துப்பேசுவதுதான்
உசிதமென்றெண்ணி இப்பத்திரிகையில் பிரஸ்தாபப் படுத்தவில்
லை என்பது ஸொஸைட்டியாரது அபிமதமென்பதைக்காட்டப்
பட்டிருந்தது- வைதிகமதமென இதுகாறுஞ்செவியுற்றதில்லை யா
தலின் உபயரட்டைக் கெருடனென்பதுபோல் மூன்று வைதிக
மதமென வரைந்துள்ளது யாதென உற்றுநோக்கப் புகுவோமா
க - த்வைதம் -அத்வைதம்-விசிஷ்டாத்வைதம்-இம்மூன்றும் மூ
ன்றுவைதிகமத மென்பதவர் கொள்கையாதலால் இவை முயற்
கோடுபோல் முடிந்துள்ள மதங்களேயாகும் - த்வைதம்-அத்வை
தம்-விசிஸ்டாத்வைதமென பாட்டி கதையாய் வழங்கற்பாலதன்
றி உலகினருள் இம்மதத்தவ ருளரென்ப தெங்கெனுங் காணோம்
உளரேல் ஈண்டெடுத்து விளக்குவாராக. ராணுவத்தார்ஜனகணித
க்குறிப்பில் பிராமணஜாதிசிவமதமென தம்மதத்தை வெளியாக்கி
யுள்ளதோடும்,ஒத்தி பந்தகம் சாஸனம் கடன்பத்திரம் முதலிய
வற்றிலும் இவ்வாறே குறிக்கப்பட்டிருக்கின்றதை இவர்கள் இன்
றுமறியார்கள்-த்வைதம்-அத்வைதம்- விசிஷ்டாத்வைதம் முதலி
யமதங்களுளதாயின் அவற்றை யேன்வரிவித்துக்காட்டாதொழி
ந்தனர். இவற்றால் மதத்தொகையில்கணக்கிடா வைதிகமதமென
புதிதாய்ப்புதுக்கிய இம்மதங்களைவேத விஹித தர்மங்களன்றென்
பதா யொதுக்கப்படும்.வேதங்களிலோ- ஶிவமத்வைதம் ஶாந்தம்
சதுர்த்தம் மந்யந்தே-என்னுஞ் சுருதிவாக்கியத்தால் சிவ பெருமா
னை அத்வைதராகவும் துரீயராகவும் சுருதிகளினுத்கோஷிக்கின்ற
படியால் அத்வைதம் அங்கமும்சிவமங்கியுமாய் முடிபுற்றிருத்தல்
பற்றி அங்கிரூபமான சிவத்தை முன்னற்கொண்ட சைவமதமே
அத்வைத மென்பது தெற்றென விளங்கும். இவற்றை நீற்று அ
த்வைதமெனத் தனிமதம்புதுக்குதல் யெதுநிமித்தம்-அத்வைத
மென்பது தனித்துள்ளபதார்த்த மன்றாதலால் அத்வைதப்பட்டு
நிற்கும் பதார்த்தம் யாது-சிவபெருமானை யன்றோ-இவற்றால் ப
ரம வைதிக சிகாமணிகளும்சைவஸமயத்தவராய் வெளிவரத்துணி
வுற்றனர் இவற்றில் சிறிதுன்னோக்காது மூன்று வைதிக மதமெ
ன வறிவித்துணர்த்தியதும் விந்தையே இம்மும்மதங்களும் ஒறு

ங்கே வைதிகமதமாயின் ஒன்றையொன்று கண்டிக்கக்காரணமில்லை - த்வைதம் அத்வைதத்தைக்கண்டித்தும்-அத்வைதம் த்வைதத்தைக் கண்டித்தும்- விசிஷ்டாத்வைதம் த்வைதாத்வைதங்களைக் கண்டித்துமிருப்பதால் இம்மூன்று மொன்றிலொன்று முறணியவேறுவேறு விஷயங்களை நிலைநாட்டியுளதாதலின் மூன்று வைதிகமதமென ஒருங்கு சேர்க்க முயன்றது சரியாகா-இம்மூன்று மதமும் வைதிகமதமா- இதிலொன்றிற்கொன்று தாரதம்மிய முளதா- எது வைதிகம்-எது அவைதிகம்-ஈண்டெடுத்து விளக்குவாமாக - மதமென்பது தெய்வத்தை முன்னாகக்கொண்டுவரும் நற்பேராதலால் அத்வைத மதத்தவர்க்குத் தெய்வம் யாது-அவரணியும் புண்டிரங்களெவை-அவர்கொள்ளும் பிரமாண நூலெது பிர்ம்மமே தெய்வம்- பஸ்மபுண்டிரம் சித்திரபுண்டிரம் மிர்த்திகாஊர்த்தவபுண்டிரம் முதலியவைகள் இம்மதஸ்தரணியும் புண்டிரங்கள் இதற்கு வேதமே பிரமாணமெனக் கூறுவராயின் - பிரமாணம் - பிரமேயம் - பிரமிதியென்னும் திருபுடி வியவகாரம் இங்ஙனம் வருமாதலின் அத்வைதக் கொள்கையுடைய இவர்களுக்குத் தனக்கன்யம்மித்தையாதலால் வேதம் மாத்திரம் சத்யமாதல் யாங்கனம் - பிரம்மம் வேதமென யிரு பொருள்த் தொந்தமுண்டாதலால் இவர்க் கத்வைத ஹானி வந்து விடும் பிரம்மத்தின் உச்சுவாஸம் நிச்சுவாஸம் வேதமெனக்கூறுதலின் பாதை யேர்படக்காரணமில்லை யென்பரேல்-ஸ்ய ஹ வா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத் யத் ருக்வேதோ-என்னும் வாக்கியத்தால் இந்த மஹத்தானபூதத்துக்கு உச்சுவாஸ நிச்சுவாஸமே ரிக்காதி வேதங்களெனக்கூறியிருத்தலின் மஹதோபூதசப்தம் யார்பொருட்டு வேதங்களில் பிரஸ்தாபித்துள்ளது-மூக்கிருந்தாலன்றோ உச்சுவாஸ நிச்சுவாஸ மேர்ப்படக்காரணம் மூக்குள்ள பிரம்மம் இவர்களுக்கு மித்தையாயிருத்தலின் அவற்றால் வெளிப்பட்ட வேதங்களில் சத்யபுத்தி வருதல்யாங்கனம்-இவர்கள் விவஹாரம் மேல்ச்செல்லச் செல்லத்தான் மாத்திரமே ஸத்யம் மற்றயாவும் பொய்யெனக் கூறுவராதலால் இவர்க்கன்யமான வேதமும் பொய்த்துஅவற்றாலாய வைதிகமும் பொய்த்துவிடும், வைதிகம்வேதாகமபுராண இதிஹாஸாதி பிரமாணங்களை கைப்பற்றிநிற்கும் ஸத்பிராமணர் ப்ரத்தெநிற்றலால் இவற்றையப்ராமாண்யமென்றோதுக்குவோர்க்கு வைதிகம்ஏராதுஏராது. இவர்கள் தங்களை வைதிகரெனப்பிறர்கூ

ராது தாமே கூறிக்கொள்வதென்போலிருக்குமெனின் கிறிஸ்து
வர்தங்களைஞானியெனவும் வேதாகமாதி சர்ச்சாத்திராராய்ச்சியும்
சர்யை கிரியை யோகம் ஞானமென்னும் சாதனசதுஷ்டய சுத்தா
த்வைத சிவஸாக்ஷாத்கார மயமாம் சைவசமயத்துள்ள ஸத்பிரா
மணுதிகளையும் மற்றுள்ளவர்களையும் அஞ்யாநியெனக் குறை கூ
ருதலை யொத்திருக்கும். இங்ஙனம்நோக்காது யாம் வைதிகர் என
மென்மேலெழுவதால் ட்ாதுபயன் இவர்கள் மூன்று வைதிக மத
மென காட்டியது - த்வைதவிசிஷ்டாத்வைத அத்வைத பாஷ்ய
ங்களை நோக்கியதாலென தெரியவருகிறதால் ஸ்ரீகண்டபாஷ்யத்
தை எங்கனம் வைத்துள்ளாரென்பது விளங்கவில்லை-அவற்றை
உட்கொண்டிருப்பதால் நான்கு வைதிகமதமென கூட்டி முடித்
தலுங்கூடும் இவர் பாஷ்ய விவரணங் கூறி இருப்பது பஞ்சபா
ண்டவரை தெரியாதாக் கட்டில்க்கால்போல் முக்கிளை இரண்டுபி
ரிவாய் என ஒருவிரல் நீட்டி கீழே ஸைபர் எழுதி அதையும் அ
ழித்து விட்டதை யொத்திருக்கின்றது வேதபாஷ்யம் நான்காயி
ருத்தலின் நான்கு வைதிகமதமென்பதொழிந்து மூன்று வைதி
கமதமென பிரஸ்தாபித்ததெக் கருத்துப்பற்றியோ விசிஷ்டாத்
வைதமென்பதால் ஸ்ரீகண்டபாஷ்யம் அதனுள்ளடங்குமெனின்
ராமாநுஜ பாஷ்யமொன்றிருப்பதால் அவை என்றுமென்பதையு
ற்று நோக்குவாராக ஸ்ரீகண்ட பாஷ்யம் ராமாநுஜ பாஷ்யம் இவ்
விரண்டும் விசிஷ்டாத் வைதமாயிருத்தலின் அங்ஙன கூறப்பட்ட
தெனின் இவ்விரண்டும் பதித்வனிரூபணத்திலும் பத்தமுத்திலோ
கோத்பத்தி முதலிய விவரணங்களிலொன்றிலொன்று முரணிய
வேறுவேறு சித்தாந்தங்களைநிலைநாட்டியுள்ள இவ்விரண்டும் ஒரு
புடைத்தாய நூலாதல் யாங்கனம்-விசிஷ்டாத் வைதமென்னுஞ்
சொலலானே அவை ஒரு புடைத்தாய் நிற்குமெனின் விசிஷ்டா
த் வைதமென்றதால் அத்வைதமும் அதனுள்ளடங்கிய பொரு
ளாதலின் வேறு பிரித்துகூற வெளிவந்த தெற்றுக்கோ- இவற்
றால் மூன்று வைதிக மதமென கூறியது குளறி விசேஷ நாய் நி
ற்கின்றது இவர்கள் வைதிகரென்பதுண்மையாயின் வேதம் பிர
மாணமாய் கொள்ளவேண்டி வருகிறது- 𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯
𑌾𑌨𑌾𑌂 என்னுஞ் சுருதி வாக்கியத்தால் ஈசானமுகத்தில் சகலவி
த்தைகளும் தோற்றியதென்பது வெளியாயினமயின் இம்முகத்
தினின்று வெளிவந்ததற்கு வித்யாவாசகம் சிறப்பித்து கூறப்பட்

டிருக்கின்றது-முண்டகோபநிஷத்தில்-த்வே வித்யே வேதிதவ்யே இ
தி ஹஸ்ம யத்ப்ரஹ்மவிதோ வதந்தி பராசைவாபராச- என்னும்
வாக்கியத்தால் இரண்டுவித்தைகள் அறியவேண்டுமெனவும் பிரு
ம்மவித்துக்களாயுள்ளோர் இவ்வாறே அறிகிறார்களென்றும் அ
வைபரமபரமென பேதப்பட்டு நிற்குமெனவுங் கூறியிருத்தலால்
வித்தை இரண்டுடையதென்பது தெற்றெனவிளங்கும் | தத்ரா
பரா ருக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோऽதர்வவேத: சிக்ஷா
கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி அத பராயயா தத
க்ஷரமதிகம்யதே - என்னும்வாக்கியத்தால்-ருக்கு-எஜுஸ்-ஸா
மம்-அதர்வணம்முதலியவேதங்கள் நான்கும்சிக்ஷவியாகரணம்
சந்தஸ்நிருக்தம்ஜோதிஷம்கற்பமுதலியவேதாங்கங்களாறும்அப
ரவித்தையெனவும்அக்ஷரத்தைஅதிக்கிரமித்துள்ளதுபரவித்தை
யெனவுங் கூரியிருத்தலால் வைதிகவாதம்பூண்ட இவர்களிங்ஙன
மென்செய்வர்-வேதம்அபரமெனவும்வேதாதீகமாம்வித்தையொ
ன்றுளதெனவேதமுகத்தால்வெளிப்படுலின்முன்னர்ஈசானமு
கத்தில்ஸகலவித்தைகளுந் தோற்றியதென்னும்சுருதிக்கும் இங்ங
னம்பரவித்யாபிரதிபாத்தியங்கூரியசுருதிக்கும்ஒருபுடையொற்று
நிற்றலால்இப்பரவித்தையாதெனவைதிகராவார்யாவரும் ஊகித்த
றியப்புகுவாராக-பரவித்தை உபநிஷத்துக்களென கூறுவராயின்
உபநிஷத்து வேதமோ அல்லது வேதான்னியமா - வேதமெனி
ன் - அபரவித்தை என்பதாயிவற்றை பொதுக்கப்படும்-வேதான்
னியமெனின்-வேதபாஹ்யத்வம்உபநிஷத்துக்களுக்கு கூறவேண்
டிவரும்-வேதத்தினின்றே வெளிப்பட்டதாய் உபநிஷத்துக்களை
க்குறிக்கப்பட்டிருத்தலின் வேதான்னியமென்பது கூடாது வே
தான்னியமாய் ஒரு மெய்நூல் வெளிப்பட்டிருக்குமாயின் அ
வை தோற்றியதற்கு பிரமாணம் வேண்டும் ஈசான ஸர்வவித்யா
னாம் மென்னும் சுருதியே இவற்றிற்கு பிரமாணமெனின் உப
நிஷித்துக்கள் ருக்காதி வேதமூலகமகங் கூறியிருப்பதால் இவ
ற்றை ஈசான முகோத்பவங் கூருதலிழுக்காய் முடியும் இவற்று
ல் உபநிஷித்துக்களும் அபரவித்தையென்பதே முடிபாம்-பிரும்
மத்தை அடையுந்நிலையை பரவித்தையென கூருவோமெனின்
ஜெகஜ்ஜீவேசுரர்முதலிய முப்பொருளும்மித்தையாயிருத்தலின் ஜீ
வரடைதலெங்கம் ஜீவேசுவரபேதமிருந்தாலன்றோ அடையுங்கா

லக்குறிப்புண்மையாம் இவ்விரண்டுமேற்ற ஏகான்மவாதிகளுக்கு இவை பொய்யாயிருத்தலின் அடையுங்காலமென்றதும் பொய்யாய் முடிந்துவிடும் இதுவுமன்றி வித்தை இரண்டுளதெனவேதங்கூறியிருக்க அபரவித்தையை மாத்திரம் அங்கீகரித்து பரவித்தைக்கலத்தில் சைபர் போடும் இவர்கள் வைதிகம் சாலச்சிறப்புடைத்தே-அபரவித்தைக்கு-அஸ்யமஹதோ பூதஸ்யநிஶ்வஸிதமேதத் ருக்வேதோ எனவும் பரவித்தைக்கு ஈசானஸர்வ வித்யானு மெனவும் சுருதிகளிரண்டு பிரகாரமாய் கூறியிருத்தலின் இவ்விரண்டும் இரண்டு வித்தைகளேயாகும் இவற்றுள் அபரவித்தையாதென்பதை பிரமாண புரஸ்ஸரமாய் முன்னர்க்குறிப்பிட்டோம் இங்கனம் பரவித்தையாதென்பதை நிர்மானிக்கப்புகுவோமாக-ஈசானஸர்வவித் யானுமென்னும் சுருதிக்கேர்ப்ப சைவபுராணம் அகஸ்திய ஸம்ஹிதையில்-ப்ரணவாத்யா மஹாமந்த்ராஸ்தத்வாக்ஷராணி ச । ஶிவஜ்ஞாநநிதிர்வ்யாப்தி காமிகாதீநி ஸர்வஶ: । ஶ்ரீமதீஶாநவக்த்ரேஷ்வேவ ஸம்பவந்தி வ்ருஷத்வஜ । ஸாங்கஸ்ஸாஙேவவேதஸ்து ருக்வேதஸ்தத்புருஷ வக்த்ரத: । ஸாங்கஸ்ஸோபஙிஷத்ஸாரோ யஜுர்வேதஸ்ததா ஹ்யகோரவக்த்ரத: । ஸஸாமஸாமவேதஸ்து ஸாமவேதஸ்ஸ வாமத: । அதர்வவேதஸ்ஸத்யோஜாதேந வாமதேவீஸ । என்னும் வாக்கியத்தால் பிரணவாதிமஹா மந்திரங்களும் அகாராதி அக்ஷரங்களும் சிவஞான மயமாம் காமிகாதி திவ்யாகமங்களும் - சிவபெருமான் ஈசானமுகமாகிய ஊருத்வமுகத்திற் றோற்றியதெனவும் - உக - சாகைகளோடுங்கூடிய ருக்வேதம் தத்புருஷ முகத்திற்றோற்றியதெனவும் - ளக - சாகைகளோடுங்கூடிய எஜுர்வேதம் அகோரமுகத்திற்றோற்றியதெனவும் - ஆ - சாகைகளோடுங்கூடிய ஸாமவேதம் வாமதேவமுகத்திற் றோற்றியதெனவும் - க - சாகைகளோடுங்கூடிய அதர்வணவேதம் ஸத்யோ ஜாத முகத்திற்றோற்றியதெனவுங்கூறியிருத்தலின்-ஈசானமுகத்தில் ஸகலவித்தைகளும் தோன்றிற்றென்னும் வேதத்துட் கருத்து வெளியாயிற்று இஃதன்றி அக்ஷராதிகம்யம் நாதநாதாந்தமேயாதலால்-நாதரூபஶிவஜ்ஞாநம் ஸர்வவித்யாஸ்பதம் ஶிவம்-எனவும் ஶிவாத்விஶேஷஸம்ஜ்ஞிதம் நாதம் ஸர்வம் ஜகத்-எனவும்-ஸர்வேபி வேதா நாதவதித்வமேவ ।

தஸம்ஜ்ஞகம் | பரத்வ்யாக்யஸம்ஜ்ஞகம் ஜ்ஞானம் காமிகாதிவசோதிதம் | வேதாத்யபரஜ்ஞானம் அபராக்யஸம்ஜ்ஞகம் | யதாநிசி சக்ஷுர்வைசக்ஷண்யம் ந்ருபிடாலயோ: | என்றுஞ்சிவாகமம் வாக்கியங்களால் நாதரூப சிவஞான மயமான சிவாகமங்கள் பரவித்யா ஸ்வரூப மெனவும் நாதாந்தமான மேம்பாடுடையமதத்தைதயே இச்சைவாகமங்கூறுகின்றதெனவும்வேதசிவாகமம் இரண்டும் பராபரமென்னும் பேதத்தால் பதியையும் - பசுவையும் பொருளாக்காட்டுமெனவும் - பதியைப் பொருளாக்காட்டு ஞானம் காமிகாதிகளான பரஞானமெனவும் பசுவை பொருளாக்காட்டுவது வேதாதிகளான அபரஞானமெனவும் - இந்தபராபர ஞானங்கள் இராத்திரியில் மனிதர்கண்ணும் பூனையின்கண்ணும் வித்யாஸத்தை அடைந்திருப்பதுபோல் இவ்விரண்டும் வித்யாஸத்தை அடையுமெனவுங் கூறியிருத்தலால் காமிகாதிகளானதிவ்யாகமங்கள் பரவித்தையென்பதமையப்பெறும்- இஃதன்றி - ஊர்த்வாதோமுகஜாதா வேதாஸ்தே த்விவிதா ஸ்ம்ருதா: | ஊர்த்வஸ்ரோதோத்பவம் ஜ்ஞானம் பரஜ்ஞானம் ப்ரகீர்த்திதம் | அதோஸ்ரோதோத்பவம் ஜ்ஞானம் அபராக்யம் ப்ரகீர்த்திதம் | பராபரவிபாகாஸ்யாம் சிவஜ்ஞானம் ப்ரகாசதே 'என்னும்வாக்கியத்தால்ஊருத்வமுகத்தாலும் - அதோமுகத்தாலு மிரண்டுபிரிவாய் வேதங்கள் வெளிப்பட்டதெனவும் - ஊருத்வமுகத்தால் வந்தது பரவித்தை எனவும் அதோமுகத்தால் வந்தது அபரவித்தை எனவும் இப்பராபர மென்னும் பேதத்தால் சிவஞானம் பிரகாசித்து விளங்குகிறதெனவுங்கூறியிருத்தலின் சிவாகம்பரவித்தைஎன்பதற்கைய்யமில்லை வேதம் சிவாகமங்களை பரவித்தையென குறித்துணர்த்தியதின்றெனின்- பராபர பேதத்தால் வேதமிருகூறாய் நிற்றலின் சிவாகமமுணர்த்தியது வேதவுணர்ச்சியேயாகும் - இவற்றால் வேதம்வுணர்த்தியதின்றென்னும் அபவாதம்திரஸ்கரிக்கப்படும் ருக்காதிவேதத்தால் பரவித்தையெனச்சுட்டியுணர்த்தியதென்றெனின்ருக்காதிவேதம்அபரமாயிருத்தலின் அபரம் பரத்தைகுறித்துணர்ந்தா-இதுவுமன்றி சிவஞானத்திற்கு வேதாகமங்கள் அங்காங்கி பாவமுடையதுபற்றி வேதம் அங்கமுஞ்சிவாகமம் அங்கியுமாய் இருத்தலின் அங்கி அங்கத்தை குறித்துணர்த்தும் தரமுடையதும் அங்கம் அங்கியைக் குறித்துணர்த்தத் தரமற்றதுமா

ட்க் காணப்படுதலின் வேதங்கூறுது விடுத்தது பாதகமாஹாது. வேதஅங்கமென எவற்ருல் நிரூபிப்பதெனின் - தஸ்யயஜுரேவ ஶிரः ருக்தக்ஷிணः பக்ஷः ஸாமோத்தரः பக்ஷः அதர்வாங்கிரஸः புச்சம் ப்ரதிஷ்டா-என்னும் வாக்கியத்தால் எஜுர்வேதம் சிரஸெனவும் ருக்குவேதம் வலப்புரத்து சிரகெனவும் ஸாமவேதம் இடப்புரத்து சிரகெனவும் அதர்வணவேதம் வாலெனவும் வேதத்திலேயே அங்ககல்பனை கேழ்க்கப்படுவதால் இவை சிவஞானத்திற்குஅங்கமென்பதிற்றடையில்லை இஃதற்ருல் வேதம் அங்கமாயினை தன்றி சிவாகம மங்கியாயினதின்றெனின் அஜிதாகமம்- ஶிவஜ்ஞானாங்கம் வேதம் ஶைவமாகமம் | அங்கீ ஸர்வ ப்ரதிஷ்டாநம் ஶிவ தம் பரமேஶ்வரம் | என்னும் வாக்கியத்தால் சிவஞானத்திற்கு வேதம் அங்கமாகவும் சிவாகமம் - அங்கியாகவும்- சொல்லப்படுகிறதெனவும் அங்காங்கி பாவத்தினுல் சிவபெருமான் விளங்குகிருரென வெளியாயினமையினுல் வேதம் அங்கமும் சிவாகமம் அங்கியுமாய் முடியப்பெரும் - அங்ககல்பனைக்கு வேதமும் அங்கிகல்பனைக்கு சிவாகமத்தையும் பிரமாணமாக்கி வியுவஹரித்தல் தகுமோவெனின் - சிவாகமம் வேதாதிகமான பரவித்தையென்பதாய் முன்னெடுத்துக் காட்டியுள்ளோமாதலாலும் அங்கம் அங்கியைக்குறித்துணர்த்தாதென்னும் ஞாயமூகத்தாலும் சிவாகமம் வேதவிசேஷமானஸத்பிராமாண்யமென்பது சாதிக்கப்படும்-சிவாகமங்கள் வேதோதக்கிருஷ்டமானஸர்வோத்கிருஷ்ட பிரமாணமாயிருப்பின் - யானி ஶாஸ்த்ராணி த்ருஶ்யந்தே லோகேऽஸ்மின் விவிதானி து | ஶ்ருதிஸ்ம்ருதி விருத்தானி நிஷ்டா தேஷாம் ஹி தாமஸீ | காபாலம் லாகுலம் ஶாக்தம் பைரவம் பூர்வ பஶ்சிமம் | பாஞ்சராத்ரம் பாஶுபதம் ததாந்யானி ஸஹஸ்ரஶः | என்னுங் கூர்மபுராண வாக்கியத்தால் - காபாலம் - லாகுலம்-சாக்தம் - பைரவம் - பாஞ்சராத்திரம் - பாசுபதம் - இவை முதலிய மதங்களை அசுராதி வியாமோஹார்த்தம் சிவகேசவாதிகளிருவரும் கர்பித்தாரெனக் காணப்படுதலின் சிவாகமங்களுக்கு பாதிதமுண்டாகாதோவெனின் அக்கூர்ம புராணத்திலேயே- நிர்மிதம் ஹி மயா பூர்வம் வாமம் பாஶுபதம் ததா | மஹாகாலம் மஹாஸ்ஸம் ஸர்வம் வேதவிரோதி யத் | வாமபாஶுபதம் ஸ்ருஷ்டம் மோஹநார்த்தம் மஹாத்மநாம் | ஹைதுகத்வேந ஸர்வ...

𑌤𑌤𑌂 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌶𑌿𑌭𑌿𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑍈𑌃 । என்னும் வாக்கியத்தால் ரஹஸ்யத்திற்கெல்லா ரஹஸ்யமாயும் சூக்ஷுமமாயும் வேதஸாரமாயுமுள்ள பாசுபதவிருதத்தைத்தெறிவிக்கும்ஆகமமந்திரங்கள் முக்தியின்பொருட்டு முன்னரெம்மால் கூறப்பட்டதெனவும் இஃது பூதிசாதன சிவசின்னம் புனைந்த புனிதராயுள்ள முமுக்ஷுக்களால் ஸேவிக்கத்தக்கதென்றும் நிஷ்காம்யர்களாகிய பரமவைதிகசிகாமணிகளுக்கு இதுவேசுருதியெனவுங் கூறியிருத்தலால் இவற்றாலும் சிவாகமங்களுக்கு பரசுருதியென்பதை நிலைநாட்டப்படும். அக்கூர்ம புராணத்திலேயே- 𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍀𑌮𑌾𑌨𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑍋𑌹𑌨𑌾𑌯𑍇𑌹 । 𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌮𑌯𑍈𑌵 𑌕𑌥𑌿𑌤𑌾𑌨𑌿 𑌤𑍁 । 𑌵𑌾𑌮𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌸𑍋𑌮𑌂 𑌲𑌾𑌕𑍁𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌭𑍈𑌰𑌵𑌮𑍍 । 𑌅𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑍇𑌤𑌤𑍍𑌕𑌥𑌿𑌤𑌂 𑌵𑍇𑌦𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌤𑌥𑍇𑌤𑌰𑌮𑍍 । 𑌯𑌾𑌨𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌤𑍁 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌹𑌿 𑌤𑌾𑌮𑌸𑍀 । என்னும்வாக்கியத்தால் வாமபாசுபதம்-ஸோமம்-லாகுளம் பைரவம் முதலிய மதங்களை அஸுராதி வியாமோகார்த்தமாய் என்னால் கற்பிக்கப்பட்டதெனவும் இவை வேதாகம விருத்தமுடையதுர்மதமாதலின் சாதுக்களால்சேவிக்கத்தக்கதன்றெனவுங் கூறியிருத்தலால் மோகனசாஸ்திர மினத்தென்பதினிது விளங்கும். அன்றியும் -𑌵𑌾𑌮𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌾𑌚𑌾𑌰𑌾𑌃 𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑍇𑌵 𑌚 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌹𑌿 𑌤𑌾𑌮𑌸𑍀 । என்னும் வாக்கியத்தால் வாம பாசு பதாச்சாரமும் பாஞ்சராத்திராச்சாரமும் சுருத்யாகமவிருத்ததர்மங்களாதலின் இவற்றையும்பரித்தியஜிக்க கூறியிருக்கின்றது. இக்காரணம்பற்றி வேதாதீத சுத்தசிவஸாக்ஷாத்கார பரவித்தையாம் சிவாகமங்களை மோகனசாஸ்திரமென்பதை பிரமாணமுகத்தால் திரஸ்கரித்தொதுக்கப்படும். இஃதிங்கனமாயின் ஸ்ரீநீலகண்டசிவாச்சாரியார் அவர்கள் பாஷ்யம் ௩-௩ சூத்திரத்தில் -𑌵𑍇𑌦𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑌯𑍋𑌃 எனக் கூறியிருப்பதாலும்-𑌵𑍇𑌦𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌕𑌾𑌰𑌣 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑌯 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌯𑌾𑌨 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍇𑌶𑌿 𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌨𑍁𑌕𑌾𑌃 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌨𑌿𑌰𑍍𑌕𑍃𑌤𑌂 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑍇𑌵 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑍇𑌹𑌂-என்னும் வாக்கியத்தால் ஆகமஶ்ரு

ஷ்டதர்மங்கள் கேவலதந்திரமெனப் புறக்கணித்தொதுக்கியிருக்க அவைவேதோத்கிருஷ்டமாதல் யாங்ஙனமெனின் பரமேசுவரருக்கு சுருதிஸித்தமாயுள்ள ஜகதுபயகாரணத்வங் கூறுவதில் அதாவது நிமித்தகாரணம் உபாதானகாரணம் இவ்விரண்டையுஞ்சுருதிஸித்தமாய்க்கூறும் ஆகமநிஷ்டர்கள் அபிப்பிராயத்தை அறியாதவர்களான ஏகதேசிகளான தாந்திரிகர்கள் பிரும்மத்திற்கு உபாதானகாரணமின்றி கேவலம் நிமித்தமாத்திரமேகூறுகிறார்கள். அதுஸரியா ஸரியன்றுவென்னும் ஆசங்கைசெய்து கேவலநிமித்தத்வங்கூறும் பரிணாமவாதிகளையும் விராட்ரூபஸிருஷ்டிகேவல நிமித்தமுடைய ஹிரண்ய கர்ப்பவாதிகளையுங் கேவலதாந்திரகரெனக் கண்டித்தொதுக்குவதால் இவற்றைச் சைவாகமத்திலேற்றி தூஷிக்கமுயன்றதும் வியப்பினும்வியப்பே. பரிணாமவாதமாவது பிரும்மமே பிரபஞ்சரூபமாய் பரிணமித்ததென்பது. அஃதென்போலெனின் தங்கம்பல்படித்தான ஆபரணங்களாதல்போலாம். பிரும்மம் ஸத்தாதலின் பரிணாமம்வருதல் யாங்கனம். பரிணாமம் அஸத்தாதலின்தானே பரிணமிக்கக் காரணமில்லை. தங்கம் பல்படித்தான ஆபரணங்களாதற்கு கம்மாளனன்றி தங்கந்தானே ஆபரணமாகாததுபோல் பிரும்மஞ் செகத்தாய்ப்பரிணமிக்குமிடத்தில் பிரும்மத்தைஜகத்தாய் பரிணமிக்கச் செய்தகர்த்தாவொருவன் வேண்டப்படுவன். இவற்றால் பிரும்மமஸத்தும் பரிணமிக்கச்செய்த கர்த்தாஸத்துவமாய் முடிதலால் சுருதிகளில் ஸத்தாமாத்திரமாய் பிருமத்தை பிரதிபாதித்திருப்பது பற்றி கேவலம் நிமித்தத்தால் பரிணாமங் கூறுதல் சுருதிக்கிலக்கான அவைதிகமே யாதலாலிவற்றை வைதீகமன்றென்பதாய்க் கண்டித் தொதுக்கப்படும். அப்பிரும்மத்தின் சத்தியால் பரிணமிக்குமெனின் -சக்திநிமித்தமும் பிரும்மம் உபாதானகாரணமுமாய்முடிதலால் முன்னர்ப்பிரும்மம் ஜகதுத்பத்திக்கு நிமித்தமென்றதுகுற்றமாய்முடியும். உபாதானகாரணத்திற்கு நிமித்தத்வம் விருத்தமாம். இவற்றால் பிரும்ம சக்தியால்பிரும்மம் பரிணமிக்கப்பட்டதென்பதுங்கூடாது. இஃதன்றி பரிணாமவாதிகளுக்குச்சக்திபொய்யாயிருப்பதால் சக்தியால்பிரும்மம் பரிணமித்ததென்பதும் பொய்யாம். இவர்களுக்கு ஜகதுத்பத்தியோபொய்யாயிருத்தலின்-[illegible] என்னும்லோகோத்பத்தியைக்கூறுஞ் சுருதிவாக்கியங்க

ளும் இவர்களுக்குவிருத்தமாம். இங்ஙனம் யாவும் பொய்யாய்க் கூறுவதாலிவரிருப்பும்பொய்யாய்முடிந்துவிடும். இப்பொய்யுடைத்தாயஉறுப்பினர் பிரும்மமும் பொய்யாய் முடிந்துவிடும் இவ்வாறுள்ள ஞாயம் பலவற்றையும் ஊகித்தறியாது உபாதானகாரணமின்றி கேவலம் நிமித்தகாரணமாத்திரங்கூறிபிரும்மஸ்தானத்தில் ஸைபர்போட யத்தனிக்கும் இவர்கள் வைதிகஞ் சாலச்சிறப்புடைத்தே-வேதத்தைகேவலந்தாந்திரிகமெனக்கூறியதேயன்றிசுருதிமூலகமகமான ஜகதுபயகாரணத்வங்கூறும்சைவாகமங்களை அவ்வாறொதுக்கியதன்று வேதத்தால் கூறப்படாதபொருள் யாவுஞ்சிவாகமத்தில் கூறப்பட்டுள்ளதாதலின் சிவாகமத்தை நீக்கின் இங்ஙனம் வைதிகவாதத்திற்கு நாஸ்திகத்வம் வந்துவிடும். லௌகிகம்-வைதிகம்-அத்யாத்மிகம்-அதிமார்க்கம்-மாந்திரீகமெனபேதம் ஐந்துடையது. அவற்றை எண்டெடுத்து விளக்குவோமாக-லௌகிகம் வைதிகஞ்சைவ ததாத்யாத்மிகம் | ஆதிமார்க்கஞ்ச மாந்த்ரஞ்ச பஞ்சதா ஸம்ப்ரகீர்த்திதம் | லௌகிகம் ஜ்ஞானமித்யுக்தம் ஸர்வம் தந்த்ராதிகம் ததா | இதிஹாஸாதிகம் சைவ ததா லௌகிகமீரிதம் | வேதோக்தம் ததா ஸாங்க்யம் வைதிகம் பரிகீர்த்திதம் | வைதிகஞ்ச ததா ஸாஸ்த்ரம் மீமாம்ஸா ந்யாய ஸம்மிதம் | ஸாங்க்யம் யோகஞ்ச வேதாந்தம் ததாத்யாத்மிகம் ஸ்ம்ருதம் | ஆத்மாத்மாந்தரபேதேந ஸர்வஜ்ஞாநாத்மகம் | இதி ப்ரோக்தம் தயா ப்ரோக்தம் ஸாஸ்த்ரம் பாஸுபதம் | பஞ்சாவிம்ஸதி ஸம்க்யாகா ஸாஸ்த்ரஸம்யோகாந்தரம் | தந்த்ரம் கிரணம் ஸர்வம் யோகஸித்தம் | கந்த்ர ஸூக்ஷ்மம் பரம் ஸாராத்யம் ஜ்ஞானம் பரிமிதம் | ஆத்மாநம் ஸர்வசர்வம் பரிபாஷிதம் | ஏஷ யஃ ஸங்க்ஷேபேண வேதாயுக்தம் ப்ரோக்தம் | வேதாந்த ஸாரம் ஜ்ஞானம் நாம ஸம்ஸ்தம் | பரமேஸ்வரேண ப்ரோக்தம் ஸாஸ்த்ரம் | ஸர்வ ஸாஸ்த்ரேஷு வாதிஸமாநம் பரம் ஸாஸ்த்ரம் | தந்த்ரே வேதாந்தஸாரம் ஸம்ஸார மோக்ஷ ஸாதனம் | ஸாஸ்த்ரம் ஸர்வஸாஸ்த்ரேஷு | நாநாஸாஸ்த்ர ஸாரம் | ஸர்வத்ர ஸர்வஜ்ஞ ஸாஸ்த்ரம் | பரம் ஸாஸ்த்ர ஸம்ஹிதம் | பரமேஸ்வர மஹாஸாஸ்த்ரம் ஸிவஜ்ஞானம்

காஸ்,தே || என்னும் வாக்கியத்தால் லௌகிகம்-வைதிகம்- அத்யாத்மிகம்- அதிமார்க்கம்-மாந்திரிகம் என பேதமைந்துளதென வும் வைத்யம், க்ஷத்திரிய தர்மமாகிய தண்டநீதியைக் கூறும் ஸ்மிருதி இதிஹாஸம்; இந்தமூன்றும் லௌகிக சாஸ்திரமென வும் மீமாம்ஸம் நியாயம் வைசேஷிகம் இந்த மூன்றும் வைதிக சாஸ்திரமெனவும் சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் இந்தமூன்றும் அத்யாத்மக சாஸ்திரமெனவும் பாசுபதம் காபாலம் மஹாவிருதம்; இந்தமூன்றும் அதிமார்க்கசாஸ்திரமெனவும் இருபத்தெட்டு ஸங்கியையுடைய சைவசித்தாந்த ரூபமானசிவாகமம் அனுக்கிரஹஸ்வரூபமானமாந்திரிகமும் இதற்கன்னிய மானயாவும்பரித்யஜித்து மாந்திரிகத்தை கிரகித்தல்வேண்டுமெனவும் ஆத்மலாபத்தை உத்தேசித்து பரமேசுவரரால் சொல்லப்பட்டதென வும் ரிஷிகள் கல்பபேதத்தினால் மோஹத்தால் வேதார்த்தமென வேதாகமவிருத்தமான வசனங்கள் கூறியிருக்கின்றாரெனவும் பரம்அபரமென்னும்பேதத்தினால் சுருதி இரண்டு பிரகாரமாகுமெனவும் ருக்கு யஜுர் ஸாம அதர்வணம் முதலிய வேதங்களும் வேதாங்கமாறும் அபரசுருதி எனவும் நாதோத்பன்னமான சிவாகமம் பரசுருதிஎனவும் இவ்விரண்டு சுருதிகளையும் அறிய வேண்டுமெனவும் விசேஷமான பரசுருதியை நன்றாய் அறியவேண்டுமெனவும் அபரம் பூர்வபக்ஷமும் பரஞ்சித்தாந்தமாகவும் சொல்லப்படுமெனவும் பராபரவிபாகமாய் சிவஞானம்பிரகாசிக்கின்றதெனவும் கூறியிருத்தலால் சிவஞானமுனிவர்வேதாந்தமதத்திற்குவேறாய் சைவமதத்தை ஆகமவாக்கியத்தால்சித்தாந்தித்திருக்கிறாரென துக்கப்படுவதால் யாதுபயன்? வேதாந்தம் அத்யாத்மகமாதலின் அதற்குமேல் அதிமார்க்கம் அதற்குமேலன்றோ சிவாகமமிருக்கின்றது வேதாந்தம் சிவாகமத்திற்கு அடுத்தபடிக்கி கீழ்படி-ரொம்ப கீழ்ஸ்டெப்பிலிருப்பதைஉயர்த்தநினைப்பது எப்படி-வ்ருக்ருத்யா ஷிவ்ருயிவ்ஞா வெதாந்தேஷு வ்ருகாஶி தம் ! நாதாதிஶிவதத்வாந்தோ ஆகமேஷு ஸம்ஸ்திதம்||

என்னும் வாக்கியத்தால் பிரகிருதிதத்வம்முதல் பிரதிவிதத்வ பர்யந்தம்வேதாந்தத்தால்வெளிப்படுமெனவும்—நாதாதிசிவதத்வபர்யந்தம்ஆகமத்தால்வெளிப்படுமெனவும்— கூறியிருத்தலால் வேதாந்தத்தால்எட்டப்படாததத்வங்களைசிவாகமம்

வெளிப்படுத்துவதால் வேதாந்தம் இவற்றைஎட்டிபிடித்துக்கிட்ட
வுந்தரமன்று—வேதத்திற்கு உதாத அனுதாதஸ்வரங்கள் அமைந்
துள்ளதுஸ்தோத்திரஞ் செய்யும்பொருட்டேயன்றி உபாஸனை உ
பாஸ்யபேதம்நோக்கியன்று இந்தஸ்வரம் சிவாகமத்திற்கில்லாத
தாலும்சுலோகரூபமாயிருத்தலாலும்—பரசுருதிஆகாதென்பாரா
யின்—வேதம்ஷட்ஜமமத்தியநிஷாதகாந்தாராதிஸப்தஸ்வரமில்லா
ததால் அபஸ்வரமாயிருக்கிறதென ஸங்கீதஞ்ஞர் குறைகூறுவரா
யின் இவரென்செய்வர். வேதத்திற்கேற்பட்ட ஸ்வரம் இதுதான்
என்பதைத்தவிர தோடி பைரவி கானடாகௌளீ மனோஹரீ முத
லிய ராகங்களில் வேதத்தைப்பாட மாட்டாராதலின் அதனதற்
குள்ள ஸ்வரத்தைத்தவிர நம்மால்கற்பித்தல்கூடுமோ. வேதம் நா
ன்காயிருத்தலால் யஜுர்வேதத்திற்கு ருக்குவேத ஸ்வரம் மாறு
படும் ருக்வேதத்திற்கு ஸாமவேதஸ்வரம் மாறுபடும். ஸாமவேத
த்திற்கு அதர்வணவேதஸ்வரம் மாறுபடும். இவற்றுள் எந்தவேத
உதாத அனுதாதம் சரி எந்தவேத ஸ்வரம் பெசகு அதினதின்
ஸ்வரம் அதனதற்குச்சரி என்பதுபோல் சிவாகமும் சுலோகரூ
பமாய் அமைந்துள்ளதும் சரி இவ்வுண்மை நிற்று ஸ்வரம் சுரு
தி லயம் அந்தபிராணம் பஹிப்பிராணம்முதலிய பரதலக்ஷணங்
கள் வேதாதீதமாகிய பரவித்தைக்கு வேண்டுமென்பது வேதமறி
யாதோர் செயலேயாகும். வேதம்பதார்த்தலக்ஷணமின்றி ஸ்துதி
பரமான தடஸ்தலக்ஷண முடையதாதலின். ஸ்தோத்திரத்திற்
கு உதாத அனுதாத ஸ்வரங்கள் வேண்டப்படும் சிவாகமங்கள்
கேவலம் ஸ்துதி பரமல்லாத பதார்த்த நிச்சயமும் ஸ்வரூபஞான
முமாயிருத்தலின் ஸ்வரம்-இம்மெய்நூலிற்கு அனுவச்யக மாகும்
ஸ்வராதீதவஸ்து பிரதிபாத்தியமுடைய சிவாகமங்கள். ஸ்வரம
ல்லாதிருக்கிறதென்னும் துர்வாதம் திரஸ்கரித்து இவ்வாதிகளை
அவைதீகரென வேறுபிரித் தொதுக்கப்படும். சிவாகமங்களி
லே ஹிருஸ்வம் தீர்க்கம்-புலுதம்-ஸூக்ஷ்மம்-அதிஸூக்ஷ்மமெ
னஉச்சாரண பேதம் கூறியிருத்தலின் இவ்வுச்சாரணபேதங்கள்
குருமுகமாய் உணர்ந்துய்தல்பற்றி பரிபவமற்றோர்க்கு இவற்றை
யுணர்த்தல் கூடாதென்னும் பரவித்தையின் நியாமகமுணர்ந்து
இவற்றை விரித்துணர்த்தாது சுருக்கிக் கூறவிடம் பெற்றது.
இவ்வாறுள்ள ஐவகைப்பட்ட உச்சாரணத்தின் முன் உதாத

அனுதாத ஸ்வரங்கள் தலைநீட்டி வாழுதலெங்ஙனம்-இவற்றால் அபரவித்தை ஸ்வரமுடையதும் பரவித்தை ஸ்வராதீத உச்சாரணபேதமுடையதுமாய்காணப்படுதலின் இவற்றில்ஸ்வரவியவஸ்தை ஏற்படுத்தமுயன்றதும் விசாரணைக் குறைவாகும். இவ்வதிமகிமைதங்கிய பரவித்தையாம், சிவாகமங்கள் பிராம்மண பரிக்கிரிஹீதமன்றெனவும் சூத்திரர்க் குறியதெனவுங் கூறி சிற்சிலர் தம் அவைதிகத்தை நிலைநாட்ட வெளிவருகிறார்கள் அவை தப்போ ஒப்போவென்பதை விசாரிக்கபுகுவோமாக-யாம் முன்னர் வேதம் அபரவித்தை யெனவும் சிவாகமம் பரவித்தையெனவும் சுருதி யுக்தி அனுபவம் முதலிய நியாயவாயிலாய் நிரூபித்துள்ளோமாதலின் அபர சுருதி தமக்கெனவும் பர சுருதி சூத்திரர்க்கெனவும் ஒதுக்கப்புகுவோர்-சூத்திரரினுங் கடையாவரே யன்றி பிராம்மணராதல் யாங்ஙனம் வேதம் பிராம்மண க்ஷத்திரிய வைசியபர்யந்தமே அத்யயநம் செய்யவிதித்திருக்க சூத்திரரும் படிக்கவிதித்துள்ள சிவாகமம் பரசுருதியாதல் யாங்கனமெனின் அபரசுருதி கேவலம் கர்மப்பிரதி பாத்யமுடையதும் பரசுருதி ஞானப்பிருதி பாத்யமுடையதுமாய் யிருத்தலால் கர்மத்திற்குறியார்பிராம்மணாதி வைசியபரியந்தமுள்ளவர்களெனவும் ஞானத்திற்குறியார் பிராம்மணாதி பரிபவமுடைய ஸர்வான்மாக்களும் யெனக்கூறியிருத்தலால்ஞானம்தமக்கங்கீகாரமன்றி அவற்றைசூத்திரர் பரத்தொதுக்கி கர்மபலதாதாவாய்நின்றனுக்கிரகிக்கும் சிவபெருமானை இழந்த இவ்வாதம் நாஸ்திகத்வமெய்தப் பெறுதலால் இவர்கள் ஆஸ்திகராதல் யாங்ஙனம் -சிவாகமாகிய பரவித்தை -ஸர்வஸாதாரண்யவிஷயா-என்னுஞ் சுருதிவாக்கியத்தால் ஸர்வவித்தியாபிரதி பாத்யங்கேட்கப்படுதலால் இவைதீவிரதர பரிபாகிகளாகிய ஸர்வான்மாக்களுக்கும் முத்தியின் பொருட்டுப்பயன்படத்தக்கவை. இவற்றால் முத்திதிசையில் பரிபாகமொன்றுமாத்திரமே விளங்கப்படுவதன்றி வருணதாரதம்ய மின்றாதலால் பரிபாகமல்லாத உயர்ந்தவருணிகளுக்கும் சிவாகமங்களில் அதிகாரமல்லாது போய்விடும்-தீக்ஷாவிஹீ நவிப்ராத்யாஃ க்ஷத்ரவணிக் ஶூத்ரஜாதயஃ। ஸம்ஹிதிஶிவஶாஸ்த்ரேஷு ஶ்ரவணம் நாசரேத் வ்ரஜேத்। என்னும் பரவித்தியா வாக்கியத்தால் சிவதீக்ஷையல்லாத பிராம்மணன் முதல்சூத்திரரிருதியாக சிவாகமபடனஞ்செ

ய்யக்கூடாதெனவும் மீறிச்செய்வாராயின் நரகத்தை அடைவ ரெனவும் கேட்கப்படுதலால் இப்பரவித்யாத்யயனத்திற்கு அபர ஸம்ஸ்காரமாகிய உபநயனாதி கர்மஸம்ஸ்காரம் போதாதென் பது கருத்து. இப்பரசுருதி அத்யயனத்திற்கு அபரசுருதியால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட திவிஜத்வஸித்தி போதாது- ஜந்மநாஜாய தே ஶூத்ர꞉ கர்மணாஜாயதே த்விஜ꞉।என்னும்அபரசுருதிவாக்கி யத்தால்ஜன்மாவால் சூத்திரத்வமும் கர்மாவால்த்விஜத்வமுங் கூ றுதல்பற்றிசூத்திரற்குவேதாதிகாரமிவர் பரத்தேவந்துவிடுவதால் சூத்திரர்வேதாத்யயனஞ் செய்யக்கூடாதென்னும் வேதவாக்கை இவர்கள்உல்லங்கனஞ்செய்தவர்கள் ஆகின்றார். இவற்றாலிவ்வபர ஸம்ஸ்காரிகளைவேதாத்யனத்திற்கு லாயக்கற்ற சூத்திரரெனவே திரஸ்கரிக்கப்படும். பிராம்மணருக்குத் விஜத்வஸித்தி வந்தவிட மென்பாராயின்-ஜந்மநாஜாயதே ஶூத்ர꞉ என்பதிவர் பிறமாண மாதலால் ஜன்மாவிலுள்ள சூத்திரற்குத்தானே வேதாத்யயனங் கூடாதென சுருதிகள் புறக்கணித்தொதுக்கிஇருக்கின்றது. ஜன் மாவால் சூத்திரத்வமுடைய இவர்கள் இவ்விதியை மீறி நடப்ப தெங்ஙனம். கர்மாவால்த்விஜத்வம்வந்துவிடுவதால் அவ்விதி எம க்குடன்பாடென்பாராயின் சூத்திரனுக்கு த்விஜத்வம்வந்து வே தாதிகாரம்வந்துவிடும் என்னுமிவர்கள் ஸமாதானத்தையாவரொ ப்புவர்-சூத்திரற்கு வேதாத்யயனம் விலக்கென்பதையாவருமங்கீ கரித்துள்ள விஷயமாதலின் சூத்திரற்குக் கற்மாவால் த்விஜத்வ ம் வந்து வேதாத்தியனத்தில் அதிகாரம்வந்து விட்டதென்னும் இச்சூத்திரர் வார்த்தையை ஸத்பிராம்மணர் அங்கீகரிப்பரோ க ண்டோக்தியாய் சூத்திரரெனக்கூறிக்கொள்ளுமொருவர்வேதாத் யயனத்திற்கு பரிபவமுடையார் யாமெனமுந்தி நிற்பதுயாங்ஙன ம்-இவற்றால்சூத்திரற்கு வேதாத்யயனம் விலக்கென்பதுபிரஸித் தவிதியாதலின்-சைவஞ்சூத்திரற்குறியதெனக்கூறிதாஞ்சூத்திரத் வம் பெற்று அத்யயனவிலக்காய் நிற்பது இவர்கள் பரத்தன்றி சைவஸமயிகள் பரத்தன்று. சிவபிராம்மணர்களுக்குஜன்மாவால் பிராம்மணத்துவமுங் கர்மாவால் சிவத்வமு முண்டாகின்றபடியா ல் வேதாகமாத்யயனதர்மம் அவர்பரத்து நிற்கின்றது இவற்றால் வேதாத்யயனத்திற்கு இவர்களே யுரியவரென்னும் வாதந்திரஸ் கரித் தொதுக்கப்படும். ஆதிசைவ பிராம்மணர் சிவபெருமான்

திருமுகத்தினின்று வெளிவந்தவரென பரவித்தை கூறுவதால் சிவம் பிராம்மணராதல் பற்றி ஜன்மாவினாலேயே பிராம்மணத் வஸித்தி இவர்களுக்கேற்பட காரணமாயிற்று-ஸம்ஸ்காரத்தாலும் சிவமாந்தன்மையுடைய சிவதீக்ஷா ஸத்பாவத் போதகமாயிருத்தலின்-இவ்விருதிறத்தாலும் பிராம்மண ஸ்வரூபியாகிய சிவபெருமானுக்கு ஸஜாதியராகிறார்-இக்காரணம்பற்றி இவர்க்குற்ற பிராம்மணத்வத்தை யாவராலும் அசைக்கமுடியாப் பொருளேயாகும்-இவற்றைசிறிதுமுற்று நோக்காது சைவஞ்சூத்திரற்கேயுறிய தெனக் கூறுவோர் தமக்குற்ற சூத்திரத்வத்தை வெளிப்படுத்தற் பொருட்டேயன்றோ-ஶிவாஸ்யாஜ்ஜாதவிப்ராஶ்ச ஆதிஶைவா மஹாத்மனா: | ஜன்மஸம்ஸ்காரதோ த்வித்வாத் ஸர்வ ஶிவஸாம்யத: | தேஷாம் ச ஆதிஶைவானாம் நாஸ்தி பேதோ ஹி கர்மணா | ஶூத்ரத்வம் கதம் தேஷாம் த்விஜாநாம் ஶிவரூபிணாம் | என்னும் பரசுருதிவாக்கியத்தால் பிராம்மணராகிய பரமேசுவரரது முகத்தின்னின்று ஆதிசைவர்கள்வந்ததால்இவர்களுக்கு ஜன்மாவினாலேயே பிராம்மணத்வஞ் சித்திக்கிறதெனவும் இவர்களுக்கு கர்மத்தால் நாசரகிதமாகிய சிவத்வம்வந்து விடிவதால் அதிமஹிமைதங்கியத்விஜர்களாகிறாரெனவும் த்விஜத்வலக்ஷணங் குறிக்கப்பட்டிருத்தலின் இவர்களின் மூன்ஜன்வால் சூத்திரத்வமெய்தப்பெற்றுள்ளார் பிராம்மணராதல்யாங்ஙனம் இவற்குற்றசூத்திரத்வத்தைநோக்காது வேதந்தமக்கேஸர்வமான்யமாய் விடப்பட்டது அவற்றால்யாம் வைதிகரென தற்புகழ்ச்சிகூறுதல் குற்றமாம் வைதிகமென்பது ஜன்மாவாலுங்கர்மாவாலும் பிராம்மணத்வம் பெற்றோர்கன்றோ பொருந்தும் ஜன்சூத்திரத்வமுடைய இவர்பரத்து வைதிகம் ஏராதுஎராது. இவற்றால் பரமபரமென்னும் உபயசுருதிஅத்யயனம் சிவபிராம்மணர்களாகிய ஆதிசைவப்பிராம்மணர்களுக்கும்-பரசுருதி அத்யயனம் ஜன்மசூத்திரர்கள் கர்மத்தால் சிவமாய்த் விஜத்வஸித்தி பெற்ற ஸச்சூத்திரருக்கும் விதித்துள்ளது தீக்ஷாவிஹீநவிப்ராத்யா: ஶ்ரவணாத்ஸ்பர்ஶநாதய: | பஞ்சவிம்ஶதிஶிவஶாஸ்த்ரஸ்ய ரௌரவம் நரகம் வ்ரஜேத் | என்னும் பரசுருதி வாக்கியத்தால் சிவதீக்ஷையல்லாத பிராம்மணர்-க்ஷத்திரியர்-வைசியர்-சூத்திரர் முதலினோரும் சிவஞானமயமா பரவித்தையாகிய சிவாகமங்களை நோக்குவராயின் ரௌரவாதி நரகத்

ஷ்தையடைவரெனக் கூறுதல் பற்றி நம்பூர்வபக்ஷியார் ஜன்மாவால் சூத்திரத்வமெய்தப் பெற்றிருத்தலின் வேதாதிகாரமுமற்று சிவதீக்ஷாதி ஸம்ஸ்காரமின்மையின் சிவாகமம் முதலிய சிவசாஸ்திர படனத்திற்கும் அர்ஹரல்லா தொழிந்துவிடுவார் சிவாகமம் அப்பிராமாண்ய மெனக்கூற வெளிவந்ததாலிவற்கு வேத சிவாகம பாஹ்யத்வம் உடன் பாடாயின ஜன்மசூத்திரத்வ முடைய சைவசமயததுள்ள ஸத்சூத்திரி பரஸம்ஸ்கார விசேஷத்தால் பரசுருதி அத்யயனத்திற்கு அதிகாரியாய்நிற்கின்றார் பூர்வபக்ஷியாகிய சூத்திரர்கள் பரசுருதிக்கும் விலக்காயிருத்தலின் அபரசுருதியாகிய வேதந் தமக்குடன்பாடன் றென்பதை ஏனின்னமிவர்கள்ஊகித்தரிந்திலர் இக்காரணம் பற்றி வேதமொன்றே பிறமாணம் சிவாகமம் அப்பிராமாண்யமெனக் கூறுபவற்கு சூத்திரத் வஸித்தியுண்டாய் வேதாதிகார மிழந்து அவைதிகத்வம் ஸித்திக்கப் பெருதலால் அபரஸம்ஸ்காரமாகிய உபனயனாதிஸம்ஸ்காரத்தோடு பரஸம்ஸ்காரமாகிய சிவதீக்ஷை செய்யப் பெருவாராயின் இவர்கள் மஹா சைவத்வஸித்தி பெற்று ஆச்சார்ய முகமாய் ஸம்ஸ்கார விசேஷத்தால் ஜன்மாவால் பிராம்மணத்வமும்கர்மாவால் சிவத்வமும் பெற்று த்விஜத்வசித்தி பெருகின்றார் அங்ஙனமாயின் இவர்களுக்கு வேதாகமாத்யயனத்தில் அதிகாரம் வந்து விடும் இவ்வாரன்றி கேவலம் கர்மபரமாயுள்ள ஸ்மிருதி ஸம்ஸ்கார மாகிய அபரஸம்ஸ்காரத்தால் வைதிகம் வந்துவிடுமென்னும் வாதந்திரஸ்கரிக்கப்படும்-[illegible] என்னும் பரசுருதி வாக்கியத்தால் ஸம்ஸ்காரம்

பாஹ்யம் அந்தரம்மென இரண்டு பேதமுடையதெனவும்பாஹ்
யம் கர்மஸம்ஸ்காரமும் அந்தர் நிஷ்டம் ஞான ஸம்ஸ்காரமுமா
மெனவும் ஸ்மிருதியில் சொல்லப்பட்ட ஸம்ஸ்காரங் கர்மஸம்ஸ்
காரமும் சிவாகமத்தால் சொல்லப்பட்ட ஸம்ஸ்காரம் ஞானஸம்
ஸ்காரமுமாய் முடியுமெனவும் ஸ்மிருதி ஸம்ஸ்காரத்தால்ஸ்வர்க்
காதி புவனபோகமே பல பிராப்தி யெனவும் சிவாகம ஸம்ஸ்கார
த்தால் முக்தியே பல பிராப்தியாமெனவும் ஸ்மிருதி பிராம்மணா
தி வரண ஸம்ஸ்காரமும் சிவாகமம் பிராம்மணாதி உபாஸனா மார்
க்க ஸமய ஸம்ஸ்காரமுமாய் முடிதலால் ஸமயஸம்ஸ்காரமில்லா
திருப்பராயின் ஜன்மத்தால் சூத்திரரெனக்குறிக்கப்படுமெனக்கூ
றியிருத்தலால் ஸ்மிருதியும் பிராம்மணத்வஸித்திக்கு சிவாகமஸ
ம்ஸ்காரத்தையன்றோ அபேக்ஷித்து நிற்கின்றது சிவாகஸம்ஸ்கா
ரமல்லாவிடில் ஸ்மிருதியால் ஜன்ம சூத்திரத்வந்தானேசித்திக்கப்
பெறும் இவற்றால் வரண ஸம்ஸ்காரமாகிய அபர ஸம்ஸ்காரம்
பெற்ற பிராம்மணர்கள் ஸமய ஸம்ஸ்காரமாகிய பரஸம்ஸ்காரஞ்
செய்யப் பெறாதிருப்பராயின் வரணத்தாலுயர்ந்த பிராம்மணரா
யிருப்பினும் ஸமயங்கைவரப் பெறாததால் ஸமயத்தால் தாழ்ந்
து சூத்திரரினுங்கடையாவார் அபரஸம்ஸ்காரம் கர்மஸம்ஸ்கார
மேயாதலால் கர்மம் ஜடமாதலால் கர்மபலதாதாபரமேசுவரராத
ல் பற்றி இப்பர ஸம்ஸகாரத்தை இழந்து நிற்கும் பிராம்மணர்
கள் நாஸ்திகரேயாவார் இன்னாத்திகர்க்கு அத்யயனம் பயன்
படாதொழிந்து விடும் பௌத்தர் முதலிய பிராம்மணர்களும் அத்
யயனஞ் செய்திருக்கின்றார் இவ்வபர ஸம்ஸகாரிகளும் அத்யய
னஞ் செய்திருக்கின்றார் பௌத்தர் கூறுந் தர்மம் வேத விஹித
தர்ம்ம மல்லாதது போல் உபாஸனை யற்ற அபரஸம்ஸ்காரிக
ள் கூறுந் தர்மமும் வேதவிஹித தர்மங்களன் றென்பதாய் வே
று பிரித்தொதுக்கப்படும் இன்னாத்திகர்க்கு வேதத்தாலாய பய
னென்னோ வேதாத்யயனம் புனகிராப் முதலிய அசேதன பதா
ர்த்தத்திலுமிருக்கின்றது வேதமென்னும் சப்தகிரஹணஜடவஸ்
துக்கள் கர்த்திரு போக்திருத்வவிஷயபோதனாகர்வில் அறிவின்
மையாதலின் புனகிராப் வேதவாக்கியம் பயன்படாதது போல்
இவ்வபர ஸம்ஸகாரிகள் அத்யயனமும் பயன்படா தொழிந்நி
ற்கும் இவற்றால் அத்யயனஞ் செய்த மாத்திரத்தாலே வைதி

கத்வ ஸித்தி வந்துவிடுமென்பது தப்போ ஒப்போவென்பதை விவேகிகள் ஊகித்தரிவார்களாக வேதசிவாகமிரண்டினுட்கருத்த றிந்து அபரம்பரமென்னும் ஸம்ஸகார மிரண்டுமுடையார்க்கன்றோ வைதிகத்வஞ்சொந்தப் பொருளாம் இவ்வாறுள்ள ஞாயம் பல வுளவற்றால் அபரசுருதி அத்யயனத்திற்கு உபனயனாதி ஸம்ஸ்காரமும் பரசுருதி அத்யயனத்திற்கு சிவதீக்ஷாதிஸத்பாவஸம்ஸகாரமும் பெருதல் வேண்டுமென விதிமுகத்தால் விளங்கலால் இவ்வுபய சுருதிபோதமுணர்ந்துபிரும்ம ஞானம்பெற்றோர் பிராம்மணராதல்பற்றி பிரும்மஞானவிஹீன ஸம்ஸ்கிருதர்கள் பிராம்மணருதலெங்கனம் இக்கருத்தை யுட்கொண்டேயன்றோ ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரிய சுவாமிகளும் அபரவித்யா பிரும்ம ஸூத்திர பாஷ்யத்திலும்-वयन्तु वेदशिवागमयोर्भेदं न पश्यामः वेदोऽपि शिवागम इति व्यवहारो युक्तः तस्य तत्कर्तृकत्वात् अतश्शिवागमो द्विविधः त्रैवर्णिकविषयः सर्वविषयश्चेति वेदस्त्रैवर्णिकविषयः सर्वविषयश्चान्यः उभयोरेक एव शिवः कर्ता - ईशानस्सर्वविद्यानाम्-अस्य महतो भूतस्य निश्वसितमित्यादिश्रुत्या [illegible] ष्टादशानां विद्यानां [illegible] श्रुतिकर्तारं [illegible] शर्वाणीपतिः [illegible] इति स्मृत्या च वेदस्य कर्तृत्वमेव [illegible] सर्वज्ञस्य अतः कर्तृत्वमेव [illegible] [illegible] वेदागमयोः [illegible] विरोधाभावात् - என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்களுக்கு பேதங்காண்கிலோம் வேதமே சிவாகமமென வியவஹரிப்பது யுக்தமெனவும் இவ்விரண்டிற்கும் கர்த்தா ஒருவராகிய சிவபெருமானே யெனவும் இவற்றால் வேதமும் சிவாகமமெனப்பெயர் பெருமெனவும் இச்சிவாகமம் இரண்டு பிரிவுடை

த்தானதெனவும்ஒன்று திரியீவர்ணிகவிஷயமும்மற்றொன்று ஸர்வவிஷயமுமாய் முடிபுருமெனவும்வேதந்திரயீவர்ணிகவிஷயமும் சிவாகமம் ஸர்வவிஷயமுமாய் இவ்விரண்டிற்கும் சிவபெருமானுகிய ஒருவரே கர்த்தாவெனவும் ஈசானஸர்வவித்யாநாம் என்பது சிவாகமோத்பத்திக்கும் அஸ்யமஹதோபூதஸ்யநிசுவஸிதமெதத் ருக்வேதோஎன்றதுவேதோத்பத்திக்கும் பிரமாணமாகக்கூறி அனேக மார்க்கங்களோகூடிய அஷ்டாதசவித்தைகள் அதாவது ௰அ வித்தைகளுக்கும் ஆதிகர்த்தாவாயுள்ளவர் சூலபாணியாகிய பரமேசுவரரேஎன்பது சுருதிநியாயமெனவும் இவற்றால் வேதத்திற்கு சிவபெருமான் கர்த்தாவாகிறரெனவும்சிவாகமங்களுக்கும் பரமேசுவரரே கர்த்தாவாகிராரெனவும்இவ்விரண்டிற்கும்கர்த்தா ஒருவராயிருத்தலால் இவ்விரண்டினுலும் ஒரேஅர்த்தத்தை நிர்ணயித்தறிதல்வேண்டுமெனவும் இவற்றால்இவ்விரண்டும்பிரமாணபூதமாமெனவும் சிவாகங்களில் பஞ்சபிரும்மபிரணவ பஞ்சாக்ஷரபிராஸாதாதி மந்திரங்களுக்கும் பதி பசு பாசம் முதலிய வஸ்துவியவஹாரங்களுக்கும்பஸ்மோத்தூளன திருபுண்டிரதாரணலிங்கார்ச்சனம் உருத்திராக்கதாரணுதிபர தர்மங்களுக்கும் இதற்கன்யமானமற்ற எல்லா தர்மங்களுக்கும் இந்த வேதாகமமிரண்டும் ஸமமாகவே காணப்படுவதால் அபரதர்மம் பரதர்மம் இரண்டிற்கும் பிரமாணபூதங்களாகிய வேதாகமங்கள் ஒரு கர்த்தாவாகிய பரமேசுவரருக்கே பரத்வஞ்சாதித்து சிவாகமத்திற்கே கார்த்தபரமாய் நிற்றலின் விரோதமாகாதெனவுங் கூறியிருத்தலால் சிவாகமம் பரவித்தையென்பதிவற்றுனுஞ் சுட்டப்படும் ஆகமம் வந்ததென பொருளாதல்பற்றி பசுபதிபரமேசுவரர் திருமுகமைந்திஞனும் வெளிவந்த வேதசிவாகமங்களை சிவாகமமெனவே ஒன்று சேர்த்து கூறப்படும் ஆகமம் என்பது வேதத்திற்கே உறிய உயர்ந்த நாமமாம் இவைஊருத்வாதோ முகங்களின் வழியாய் வெளிவந்துள்ளவை ஊருத்வம் ஈசானமுகமாதலால் அதினின்று தோற்றிய சிவாகமங்களாகிய பரசுருதிக்கு ஸர்வவித்யா பிரதிபாத்யம் வேதத்தால் குறித்தோதப் பட்டிருக்கின்றது அதோமுகம் தத்புருஷாதி நான்குமுகங்களே யாதலால் அதில் தோற்றிய அபரசுருதியாகியருக்காதி நான்கிற்கும் வேதத்வம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது இவற்றால் ஊருத்வமுகத்தால் வெளிவந்ததை பரமெ

ணவும் அதோமுகத்தால் வெளிவந்ததை அபரமெனவுங் கொள்ளப்படும் வேதம் பிராமணக்ஷத்திரிய வைச்யபர்ந்தமே பயன்படத்தக்கவை சிவாகமம் பிராமணாதி சூத்திரபர்யந்தம் பக்குவான்மாக்கள் யாவருக்கும் பயன்படத்தக்கவை வேதம் திரிவீவரணபரமாய் கேவலங்கர்மபிரதி பாத்யமாயும் ஞானசாதகமாயும் இருத்தலின் பிராம்மணாதி வைசியபர்யந்தமே சொந்தம் பாராட்டத்தக்கவர்கள் சிவாகமம் ஞானைகநிஷ்டா சுத்தாத்வைத சிவஸாக்ஷாத்காரம் பெற்றிருத்தலின் பரிபாகமுடையார் யாவருஞ் சொந்தம் பாராட்டத்தக்கவர்கள் திரிவிவர்ணிகள் கர்மானுகுண்யமான உபநயனாதி அபரஸம்ஸ்காரம் வேதாதிகளால் பெற்றிருப்பினும் ஞானைகநிஷ்டாஸமயஸம்ஸ்காரமாகிய பரஸம்ஸ்காரஞ் செய்யப்பெறாதிருப்பராயின் இவர்கள் பிராம்மணத்வம் வசித்திக்கப்பெற்றவர்களாகார் பிராம்மணர்பரமேசுவரரும் விஷ்ணுக்ஷத்திரியரும் பிரும்மாவைச்யரும் இந்திரன் சூத்திரனுமாய் வேதங்களினுத கறிக்கப்பட்டிருத்தலின் சிவத்வஞ்சித்திக்கப் பெறாதோற்கு பிராம்மணத்வஸித்தியுண்டாதல் யாங்ஙனம் திரிவீவர்ணிகபரத்தில் அபரகாயித்திரி யொன்று மாத்திரமே உபதேசிக்கப்படும். ஸர்வவிஷயபரஸம்ஸ்காரத்தில் பரகாயித்திரி உபதேசிக்கப்படும். அபரகாயித்திரி சக்தியும் பரகாயித்திரி சிவமுமாய் முடிதலால் சிவம்மங்களனுதல் பற்றி சிவகாயித்திரியையெழந்த சக்திகாயித்திரி அமங்களத்வமெய்தப்பெரும் இவற்றால் சிவகாயித்திரி இழந்து சக்தி காயித்திரியைமாத்திரமே ஜபிக்கும் பிராமணர்களும் அமங்கள பிராம்மணராவார்.

யதா ஸ்ரீமஹாலிங்கபூஜாவிஹீநா பிராஹ்மணா । க்ஷீணபுண்யா ஸதா பாபா ... (Grantha script, partly illegible)

என்னும் பரசுருதி வாக்கியத்தால் வனத்திலுள்ள யானை ஸிம்மத்தைக் கண்டு அஞ்சுவதுபோல் அதீக்ஷதரால் பூஜிக்கும் சிவலிங்கத்தில் சிவபெருமான் ஆவிர்ப்பவிக்க அஞ்சுவரெனக் காணப்படுவதால் பரஸம்ஸ்காரசிவதீக்ஷையல்லாதோர்சிவபூஜையும் அஸத்பாவமுடைய தென்பதிதன்கருத்து சிவபெருமான்ஸத்தாயிருத்தலால் ஸத்தை பூஜிப்பதில் அஸத்பாவம் வருதற்குக் காரணம் யாதெனில் சிவபெருமான் பதியும் ஆன்மாக்கள் பசுவுமாயிருத்தலால் இப்பசு சிவகைங்கர்யமாகிய ஸத்கார்யத்தைச் செய்ய

த்தனிக்கின்றது. ஒரு காரியத்தைச்செய்ய நிமித்தோபாதானஸமவாயம் முதலிய மூன்று காரணம் வேண்டப்படுவதால் இச்சிவகைங்கர்யமாகிய காரியத்திற்கு ஆத்மா நிமித்தனும் உபாதானஞ்சரீரமும் ஸஹகாரீகாரணங் கைகளுமாய்க் கொள்ளப்படும். இம்மூன்றுஞ்சிவாகாரமான பாவம் வருதல்வேண்டும். சிவாகாரபாவமில்லாவிடில் சிவஸஜாதீய பாவன்னீங்கி பசுகரணமாய் நிற்றலின் பதிபாவத்திற்கு விஜாதீயமாய் நின்றுவிடும். விஜாதீயத்வம் பதிஸ்வரூப பரசிவத்தையும் பசுரூபமாக்க முயற்சித்து நிற்கும் இத்யாதி காரணத்தால் ஸத்பாவமுடைய சிவபூஜை அஸத்பாவப்பட்டு நிற்றலின் சிவதீக்ஷையல்லாதோர் சிவபூஜை குற்றமேயாம்.

வேதாதிமந்திரங்களால் ஸத்பாவம்வருமெனின் வேதாதிமந்திரங்கள் சிவபூஜையை விதிமுகத்தால் விளக்க வெளிவந்தநின்று. இவற்றால் அந்தர் நிஷ்டதர்மபரஸம்ஸ்காரம் விளங்குதபெறு இவை விதித்துள்ள சிவாகமத்தாலன்றி ஸத்பாவம்வருதல் கூடுமோ சிவாகமத்தால் ஸத்பாவம் விளங்கப்பெறுத லெங்கனமெனின் முதலில் சிவகைங்கிரியமாகிய காரியத்திற்கு நிமித்தபூதமான ஆன்மா பசுவாயிருத்தலால் இப்பசுவை அந்தர் நிஷ்டாக்னியால் தகித்து திரும்ப மிருதமான ஆத்மாவை அமர்தத்தால் உண்டாக்கி பஞ்சப்ரம்ம மயமாய் தியானித்து ஞானமயமான சரீரங்கர்ப்பித்து ஹிருதயாதி ஷடங்கம் பர்விக்க சிவாகாரமாம். இவ்வாறே உபாதானகாரணமாகிய சரீரத்தையும் அங்கன்யாசத்தால் சிவாகாரமாக்கி ஸஹகாரிகாரணமாகிய கைகளையும் சிவாகாரமாக்குவது கரந்யாஸாங்கன் யாசமாகும். இவ்வாறுள்ள ஸம்ஸ்காரத்ரயங்களும் பரதர்மத்தால் விளங்கப்படுவதன்றி அபர தர்மத்தால் இவை மருந்திற்குங்கிட்டுவதரிதாய் முடியும். அபர தர்மத்திலோ அஸத்பாவமே வெளிவந்திருக்கும் அஃதெங்கன மெனின் பரதர்மத்தில் சிவாஸ்த்ராயஹூம்படுயென கையைமுதலில்மார்ஜனம்செய்து இது பசுகரணமாகிய கரங்கள் சிவாஸ்தரத்திலுண்டான சிவாக்னியால் தகிக்கப்பட்டதாகும். பின் சக்தியை வௌஷட்என புருமத்யத்தில் அஞ்சலிசெய்வது இது மிருதமான கை அமர்தத்தால்திரும்ப உண்டான பாவமர்கும். அதன் பின் சிவாஸனம் சிவமூர்த்தி சிவமூலத்தால் உள்ளங்கையில் சிவனை ஆவாகித்து ஐந்து விரல்களையும் ஈசானுதி பிர்ம்மபஞ்சகமாய்பாவித்துவித்யாதேகஸ்வ

ரூபமான ஞான சரீரம் கற்பித்து திருனேத்ரமுண்டானதாய் பாவித்து ஹிருதயாதிஷடங்கங்கற்பித்து சிவாகாரமாக்குவது பரஸம்ஸ்காரக ரன்னியாசமாகும். அபரசம்ஸ்காரத்திலோ இச்சத் பாவம் விளங்கப்பெறு. அங்குஷ்டாப்யாநம: தற்ஜனி ப்யாநம: மத்யமாப்யாநம: அநாமிகாப்யாநம: கனிஷ்டிகாப்யாநம: கறதலக் கறப்ருஷ்டாப்யாநம: யென கையாகவே அஸத்துரூபமான அபரஸம்ஸ்காரத்தின் கரன்யாசமாதலின் கட்ட விரலாயணம: ஆள் காட்டி வெரலாயனம: நடுவிரலாயனம: அணிவிரலாயனம: கடை விரலாயநம: கை பின்புறம் முன்புறமாயனம: யென்னும் அஸத் பாவமாம் கருங்கன்யாஸ அபரஸம்ஸ்காரிகள் சிவசாக்ஷாத்காரபரஸம்ஸ்காரஸதாசாரமுடையோர்களை அவைதிகரெனதூஷிப்பது கிறிஸ்துவர் தங்களை ஞானியென தற்புகழ்ச்சிகூறுதலை யொத்திருக்கும் இஃதன்றி வஶுனா ஒஷெஷ வஶுனவோ என்னும்அபர சுருதி வாக்கியத்திற்கு பசுவென்பதை பிராணி ஸாமான்யமாய் பொருள் செய்து பறக்கிற பிராணியில் பட்டம் நீக்கியும் ஊருகிற பிராணியில் படுக்கும் கட்டில் நீக்கியும் மற்ற பிராணி யாவற்றையும் கொன்றுதின்ன மனுஸ்மிருதி விதித்திருக்கின்றது. இஃது அபரசுருதியின் அந்தர்கதமென்பது பூர்வபக்ஷிகளது அபிப்பிராயமாகும். பரசுருதியிலோ பசுவென்பது ஆத்மாவாகக்கொண்டு ஆத்மா ஆணவம் மாயை கர்மமென்னும் மூன்று பாசத்தால் பந்திக்கப்பட்ட பசுவேயாதலால் இப்பசுவை பந்தித்திருக்கும்பாசத்தை ஆசாரியன் ஞானக்னியாகிய சிவாக்கினியால் தகித்து பசுத்வத்தை நிராகரித்து சிவத்வத்யோதகம் செய்வது பசும்வதாவென்னும் அபரசுருதிக்கி சிவாகமம் பொருள் படுத்தி யிருத்தலின் வேதம் ஜீவஹிம்ஸை செய்ய துணிந்திலதென்பது தெற்றெனவிளங்கும் இஃதன்றியும் கஹிஂஸாவுரமொாமஃ என்னும்சுருதி வாக்யத்தால் ஹிம்ஸையல்லாதிருப்பதே முதன்மையான தர்மமென வேதம் விதித்திருக்க இத்திருவாக்கை மீறி சகல பிராணிகளையும் உயிர் செகித்துண்ண வேதம் விதித்துளதாய் மயங்கி அபரார்த்தம் கொண்டு சுருமாம்ஸம் புசிக்க நியமவிர்தம் கைக்கொண்ட இத்துருசாரமுடையார் ஹிம்ஸையற்ற சிவஸாக்ஷாத்கார நிஷ்டானுபூதிபெருஞ் செல்வபரம வைதீகசிகாமணிகளாகிய பரஸம்ஸ்காரம் பெற்றோரை அவைதிகரெனக் குறை கூற வெழுந்தது தம

க்குற்ற அவைதிகத்தை பிறர் மேலேற்றி தூஷிக்கமுயன்றவவஸர மேயாகும். ஹிம்ஸையற்றிருக்குங்கொன்றுதின்னுத்தூய்மையும் பசுத்வநிராகரணமுஞ் சிவத்வத்யோகமும் பிராமணத்வ ஸித்தித் விஜத்வமும் வேதாகம பிராமாண்யமுமுடைய பரமவைதிக சிகா மணிகளை பிராம்மணபிரஷ்டரெனவுஞ் சூத்திரற்குச்சமானமென தூஷிக்கமுயன்றது. புலைத்தனமுற்றோர் செயலாய் ஒதுக்கப்ப டும். நம் வேதாகமாதி சற்சாத்திரவாயிலாய் சுராமாம்ஸம் புசி ப்போர் இழிந்தோர் என்பதும் கோ மாம்ஸம் புசிப்போர் புலைய ரென்பது வெளிப்படுதலால் இவ்விருதிறத்தாரும் ஸத்சூத்திரியில் மிகவுந் தாழ்வுற்று அஸத்சூத்திரியெனவும் புலையரெனவும் பேத ப்பட்டு நிற்பர். இஃதிங்ஙனமாயின் மனுஸ்மிருதியில் நண்டு நத் தைகளுடைய மாம்ஸத்தால் பிதிருக்கள் ஒரு மாஸந்திருப்தி அ டைகிறார்களெனவும். பன்றி எருமை செம்மறிஆடு மணிப்புறா இவைகளின் மாம்ஸத்தால் பிதுருக்கள் மூன்றுமாஸம் திருப்தி அடைகிறார்களென்றும் வெள்ளாடு முசல் ஆமை முதலிய மாம்ச த்தால் ஆறுமாஸந் திருப்தி அடைகிறாரெனவும். மான் முதலிய மாம்ஸத்தால் மூன்று வருஷம் பிதுருக்கள் திருப்தி அடைகிறா ரெனவுங் கோமாம்ஸத்தால் பன்னிரெண்டு வருஷம் பிதுருக்கள் திருப்தி அடைகிறார்களென்றுங் கூறியிருத்தலால் ஸ்மிருதியின ந்தர்கதம் புலயற்கனுகூலமாயிருத்தலின் இவற்றை பிரமாணமாக அங்கீகரித்தொழுகுவோர்க்கும் ஏன் புலைத்தனம் வருதல் கூடாது பராசரஸ்மிருதியில் கலியுகத்தில் மாம்ஸம் புசித்தல் கூடாதெண கண்டித்திருத்தலால் மனுஸ்மிருதி இந்த யுகத்திற்குப் பிரமாணம ன்றெனின் எந்தயுகத்திலும் மாம்ஸங்கூடாததாயிருக்க கலியுகத் திற்கு மாத்திரம் விலக்கெனக்கூறிய பராசரர் வாக்குபிரபல பிர மாணமாவதெப்படி கலியுகந்தவிர மற்றயெந்த யுகங்களிலும் மாம் சம் புசிக்கலாமென்றன்றோ பராசரர் வாக்கைக்கொள்ளத்தக்கதா யிருக்கின்றது. பராசரர் வாக்குமாம்ச பக்ஷணத்தை நிஷேதிக் காதிருந்தமையின் எந்த யுகங்களிலுஞ் சுராமாம்ஸம் புசித்தல் கூ டாதெனக் கண்டித்தொதுக்கும் பரசுருதியனுஷ்டேய வைதிகசி காமணிகளின் முன் சுராமாம்ஸம் புசிக்க விதித்துள்ள விதியை கையாண்டுவரும் அவைதிகர்வைதிகரென வெளிவருதலெங்கனம் வைதிகமென்னுஞ் சொல்லிற்கே அனர்கராயிருக்க யாம் வைதிக

மெனதலை மயக்கெய்தித்திரிவார்வாதம் அவைதிகமென்பதாய் தீர்மானித்தொதுக்கப்படும். இவ்வாருள்ள ஞாயம் பலவுளவற்றையும் விறிவஞ்சிவிடுத்தோம். மற்றுள்ளவை நோக்க விரும்புவராயின் பிரும்மஸ்ரீ நடுக்காவேரி ஸ்ரீனிவாஸ தீக்ஷிதருக்கும் எமக்குன்னேர்ந்த விவாதத்தில் வேதாகமதாரதம்யம் வைதிகதாரதம்யம் முதலிய அனேக சந்தேகங்களை விவேகதிவாகரன் பத்திரிகை வாயிலாய்விடையளித்துநிவர்த்தித்துள்ளோமாதலால் ஆங்குற்றுநோக்கி சந்தேகநிவர்த்தி செய்து கொள்வார்களாக.

இவற்றால் வைதிகராவார் யாவருக்கும் வேதம் அபரமெனவும் சிவாகமம்பர மென்பதோடும் அபரம் பரத்தின்ஐக்கிய பத்யத்தாலன்றி உண்மை பொருள் விளக்காதென்பது தீர்மான மாயிற்று. சிவாகமம் பரசுருதியாயிருப்பின் வாயுசம்ஹிதையில்

ஶைவாகமோऽபி த்விதா ஶ்ரௌதோऽஶ்ரௌதஶ்ச ஸம்
ஸ்ம்ருத꞉ । ஶ்ருதிஸாரமய꞉ ஶ்ரௌத꞉ ஸ்வதந்த்ர இதரோ மத꞉ ।
ஸ்வதந்த்ரோ தஶதா பூர்வம் ததாஷ்டாதஶதா புந꞉ । காமிகா
திஸமாக்யாபி꞉ ஸித்த꞉ ஸித்தாந்தஸம்ஜ்ஞக꞉ ।

என்னும் வாக்கியத்தால் சிவாகமம் இரண்டுபேதமுடைய தெனவும் அவைசிரௌதம்அசிரௌதமென பெயர்பெருமெனவும்சுருதிஸாரமயமாயுள்ளது சிரௌதமும் ஸ்வதந்திரமாயும்வேத இதர அபிமதமுடையது அசிரௌதமெனவுங் கூறி இந்த ஸ்வதந்திரம் முதலில் பத்தாகவும் பின் பதினெட்டாகவும் பேதப்பட்டு காமிகாதிகளான பேர்களினாலே ஸித்தமெனவுஞ் சித்தாந்தமெனவும் ஸம்ஞைகுறிக்கப்பட்டிருத்தலினால் அசிரௌத மென்றதால் வேதபாஹ்யத்வ முண்டாகாதோவெனில் இவற்றுள் சைவாகம மிரண்டுபேதமெனக் கூறியிருத்தலால்- இவ்விரண்டும் சுருதிஎனவே பொதுவில மயப்பெரும் இவ்விரண்டு சுருதிகளும் சிரௌதம் அசிரௌதமென பேதப்பட்டிருக்குமென கூறியதால் சிரௌதம் அக்ஷராத் மகமும் அசிரௌதம் அக்ஷராதி கம்யமுமா யிருத்தலின் சிரௌதசப்தம் அபரசுருதிக்கேற்றுவது தகுதியேயொழிய பரசுருதிக்கு சிரௌதசப்தம் பிரதிபாதித்தல் குற்றமாம். இக்கருத்தை நோக்கியே யன்றோ சிரௌதாசிரௌத வியவஹாரத்தை வாயுஸம்ஹிதை எண்டுத்து விளக்கியது. சிவாகமங்கள்

சுருத்யதீதமான வித்யாபிரதி பாத்யமுடைய பரவித்தையே யாதிலால் இவை சுருதி சம்மந்தப்பட்ட சிரௌதமாயிருப்பின் அஸ்வதந்திரப்பட்டு ஸ்வதந்திரமல்லாதொழிந்துவிடும். இக்காரணத்தை நோக்கியே யன்றோ ஸ்வதந்திர இதரோமத: என சிரௌதத்தை நோக்க விசேஷத்வ முடையதென்பதை விளக்கிக்காட்டியுள்ளது. சிவாகமங்களை ஸ்வதந்திர மென்றதினால் சிரௌதம்-பரதந்திரமுடையதென்பது கருத்து இதரோமதக என்றதினால் வேதத்தில் கூறாததும் வேதாதீத அரும்பொருள் விளக்கமுடைய பரதர்மமாய் சிவாகமங்கள் நிற்றலின் இவற்றை இதரமதமென நீக்கிக்கூறவிடம்பெற்றது. மேலும்காமிகாதிகளானபெயரினால் சித்கம் சித்தாந்த மென்னும் ஸம்ஞையோடு கூடியதென முடிபொருளாக்கி யிருத்தலால் பூர்பக்ஷ ஸித்தாந்த ரூபமாய் வேத சிவாகமங்களை சிவ பெருமான் கூறியிருத்தலால் வாயுஸம்ஹிதையும் சிவாகமம் ஸித்தாந்தமென குறித்துணர்த்தியது-இவற்றால் சிவாகமம் அக்ஷராதிகம்யமும் ஸ்வதந்தரமும் வேதாதீதாபிமதமுடையதும் முடிபொருளான ஸித்தாந்த ரூபமாயுள்ளதென வெளியாயினமையால் வேதத்தை நோக்க சிவாகமம் கோடி மடங்குயர்ந்ததென்பதிற் றடையில்லை. வேதத்தை நோக்க வேறொன்றுளதேன கூறுவது வைதிமாமோவெனின் வேதமே தனக்கன்யமாய் பரவித்தையொன்றுளதெனக் கூறியிருக்க இவற்றை மறுப்பவற்கு வைதீக சித்தி யுண்டாகாதே யொழிய அவற்றை யொப்பி பிரமாண பிறஸித்தமாய் வியவகரிக்கும் சைவாகம நிஷ்டசிவஞானிகளுக்கு வைதிகத்வஹானி வருதல் யாங்கனம் சைவாகமம் இரண்டு பிரகாரம் என்பது வேதமெரண்டு பிரிவென்பதி தன் பொருள் சிரௌதாகமமென்பது ருக்காதி வேதத்திற்கு வேறாய் ஒன்றிருப்பதென்பது பொருளன்று ருக்காதி நான்கு வேதங்களுமே சிரௌதாகமம் சுருதியில் எட்டப்படாததாய் பிரிந்துள்ளது சிவாகமங்கள் யிதிலொன்று திரிவிவர்ணிபரம் மற்றொன்று ஸர்வவிஷயபரமென ஸ்ரீ நீலகண்ட சிவாச்சாரியார் வியவகரித்திருக்கும் வியவகாரத்தை வாயுஸம்ஹிதை சிவாகமநிஷ்டதர்மம் ஸித்தாந்தமென குறித்துக் காட்டியது ஐய்க்க பத்யமான பிறமாணமாயிற்று இவற்றை நோக்கியேயன்றோ சிவஞான சித்தியார் எட்டாங்சூத்திரம் ௰௫-ம் பாட்

யில் வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் என வறையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றது இவ்வாறுள்ள உண்மை பலவற்றையும் ஊகியாது சிவஞான முனிவர் வேதாந்தத்தை விட்டு முற்றும் விலக்கி சைவமதம் புதுப்பித்தாரென வியஸனிப்பது வேதத்துட்கருத்துணராததாலன்றோ- வேதாந்தம் வேதமுடிபேயாதலால் அவை ஸித்தாந்தத்திற்கு மேம்பாடாதல் யாங்கனம் சித்தாந்தமென்னுஞ் சொல் சிவஞான முனிவராய் சிவாகமங்களுக்கு புதுப்பித்ததோ அங்ஙனமாயின் வேதாந்தமென்னுஞ் சொல் சங்கராச்சாரியார் புதுப்பித்ததாய் யாம் கூறுகின்றோம். இவ்விருவர்களால் புதுப்பிக்க வல்லமை யுளதேல் வேதாகமங்களெற்றுக்கு இவற்றால் சிவஞான முனிவர் புதுப்பித்தாரென்பதும் சங்கராச்சாரியார் புதுப்பித்தாரென்பதும் ஞாயமுகத்தில் நில்லாதனவாம் ஸ்ரீகண்டர், சங்கரர், ராமானுஜர், மத்துவர் முதலிய நால்வர்களும் வியாஸ ஸூத்திரமாகிய அபரவித்தைக்கு பாஷ்யஞ் செய்ததேயன்றி அவை பரவித்யா ரூபபாஷ்யமுடையதன்று இவற்றுள் ஸ்ரீகண்டபாஷ்யம் அபாவித்தைக்குச் செய்யப்பட்டதா யிருப்பினும் பரவித்யாத்யோதக தர்மங்கள் இடை யிடையே விளங்கா நிற்கின்றது-சங்கரபாஷ்யமோ எல்லாம் பொய் நான் மாத்திரஞ் சத்தியமெனக்கூறி கடைசியில் அதுவும் பொய்யாய் முடிந்து கிடக்கின்றது இராமானுஜ மதமோ ஜீவோத்பத்தியிலும் பரத்வனிரூபணத்திலும் முக்தியிலும் பரவித்தைக்கு விருத்தமாயிருப்பினும் தைவமொன்றுளதென்னும் அபிப்பிராயத்தால் சங்கரமதம்போல் நாஸ்தி கதை ஏற்படாது ஆஸ்திகத்வம் மெய்தபெறும் மத்வமதமும் ஆஸ்திகமதத்திலொன்றும் இன்னாலு பாஷ்யத்திற்கும் அன்யமாய் ஸோமஞாந ஆராத்யபாஷ்யம் என ஒன்றிருக்கின்றது. அதில் கூறியதாவது வியாஸர் பிரும்ம நிச்சயத்திற்கு ஸூத்திரமெடுக்கும் பரிபாஷையல்லவெனவும் வியாஸ ஸூத்திரத்தால் பிரும்ம நிச்சயம் ஏற்பட காரணமில்லை எனவும் ஏற்படுமாயின் நால்வர்களும் ஒன்றிலொன்று முறணியவேறுவேறு சித்தாந்தங்களை நாட்ட முயன்றதற்கு பிரும்ம நிச்சாயக சூத்திரம் இடந்தராதெனவும் வியாஸர் கங்கை கரையில் நாராயணனுக்கு மேல் தைவமில்லை என மயங்கி கூறிய சந்தர்பத்தில் நந்திகேசருங்காரத்தால் கைஸ்தம்பிக்க நாராயணர் பிறத்யக்ஷமாய் வந்து,

[illegible] । [illegible] ।

என்னும் வாக்கியத்தால் ஸ்ரீஹரமுடனாகிய வியாஸரேகள் நான் உலகத்திற்கெல்லாங் கர்த்தா எனக்குக் கர்த்தா மஹேசுவரன் அவருக்கு மேல் கர்த்தா ஒருவருமில்லை எனக் கூறி வியாஸர் மயக்க மகற்றி சிவஸ்துதி செய்து கிருதார்த்தரானரென கேழ்க்கப்படுதலால் பிரும்ம ஸூத்திரத்தில் மாத்திரம் அவற்கு தெளிவு வந்துவிட்டதென்பதை ஒருவரும் ஒப்பார் தெளிவுளாரு யின் வியாஸரெடுத்து கூறிய ஸூத்திரம்- ருாஅ௰- திற்குள் பிரும்ம நிச்சயங்கூறிய ஸூத்திரமெவை எனவும் பிரும்ம நிச்சயத்திற்கேற்ப ஈண்டெடுத்துக் கூறிய சுருதிகளி லனேகங் கூறியிருக்க இதுவா பிரும்மம் அதுவா பிரும்மமென்னும் மயக்கந் தலைமேற் கொண்டுழலும் வியாஸ ஸூத்திரம் பிரும்மஞானத்தை நிச்சயித் துணர்த்தும் மெய்நூலல்ல வெனவும் இச்சூத்திரத்தி லில்லாப்பொருள்களை வருவித்து ஸ்ரீகண்டமுதலினோர் பாஷ்யஞ் செய்துள்ளா ரெனவும் சங்கரபாஷ்யத்தால் இச்சூத்திரத்தை நோக்கப்புகுவோமாயின் இவை பிரச்சன்ன பௌத்தமாகிய நாஸ்திகத்தை உண்டாக்கிற தெனவும் ராமானுஜ பாஷ்யத்தால் லோகோத்பத்தி பரத்வநிர்ணயம் முக்தி முதலியவற்றில் முரண்படுமெனவும் ஸ்ரீகண்டர் சுத்தாத்வைத சிவஸாக்ஷாத் காரபிரும்மஞானியாதலால் நாஸ்திகதையாய் பிரவர்த்தித்துள்ள வியாஸ ஸூத்திரத்தைதடுத்து ஆஸ்திகத்வமுபகரித் தனுக்கிரகித்தாரெனவும் இச்சிரீகண்ட சிவாச்சார்ய சுவாமிகள் பிரும்ம ஸூத்திரத்தில் வர்ஷித்துள்ள ஸித்தாந்த சுருதிகள் வியாஸ ஸூத்திரத்தை விட்டுத் தனிதொரு மெய் நூலாய் விரியுமாயின் வியாஸ ஸூத்திரத்தின் கதி அதோகதியா மெனவும் பிரும்மஸ்வரூபி பரமேசுவரரென வேதங்களில் பிரதிபாதிக்கின்றமையின் பிரும்மமென்னுஞ் சொல் ஸ்வரூபலக்ஷண மிழந்த தடஸ்த லக்ஷணமாய் விளங்குமெனவும் ஸ்வரூபலக்ஷணம் நித்யமங்கள மூர்த்தியாகிய பரமேசுவர பிரதிபாத்யமாய் யிருத்தலால் ஆதிதொடுத்தந்திய மிருதியாய் சிவமென்னும் மங்களச் சொல்லில்லாதுதால் இச்சூத்திரம் அமங்களமுடையதா மெனவும் இவற்றுள்

வியாசரும் பிரும்ம ஸ்வரூபத்தை அறியவேண்டுமென ஆரம்பசூ ரத்தனமாய், அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா । என்னுஞ் சூத்திரத் தை மாத்திரம் முதலிலெடுத்துக் காட்டி பிரும்மம் இன்னதென கூறாது விடுத்திருப்பதாலும் அபர சுருதியாகிய ரிகாதிவேத வே தாந்தங்களிலும் பிரும்ம ஸ்வரூபம் வெளிப்படாததுபற்றி சூத் திரஞ்செய்தவியாசரும் இங்கனம் மயக்குற்றார். பிரும்மஸ்வரூபம் பரவித்தையாகிய சிவாகமத்தால் வெளிப்பட்டுநிற்க அபரவித்தை யால் ஆராய்ந்து அறியவிரும்பியது நரிவாலைக்கொண்டு கடலை ஆ ழம் பார்க்க விரும்பியவரை யொத்திருக்கின்றதெனவும் கூறியிரு த்தலால் அபரவித்யா சூத்திரபாஷ்யமாகியவேதாந்திகளின் அபி மதம் சித்தாந்தரூபமான பரவித்தையாகிய சிவாகமங்களின்முன் தலைநீட்டி வாழ்வதெங்கனம் இவற்றால் வேதம் அபரவித்தையெ னவும் சிவாகமம் பரவித்தையெனவும் ஞாயமுகத்தால் காட்டித் தீர்மானித்தோமாதலால் வேதத்தின்கருத்து யாவற்றையும் பரவி த்தையாகிய சிவாகமம் பூர்வபக்ஷஞ்செய்து சித்தாந்திக்கு மாற்ற லுடைமையாதல்பற்றி சிவஞானமுனிவர் முதலிய உண்மை சிவ பக்தசிகாமணிகள் வேதம்வேறும் சிவாகமம் வேறுமாய்ப் பிரித்து சிவாகமத்தை சித்தாந்தமெனவும் நிலைநாட்டுதற்கேதுவாயிற்று இச்சித்தாந்தம் வேதாந்தக்கருத்தை பூர்வபக்ஷமாக்குவதால் வே தாந்தத்திற்கு வேறு பட்ட கருத்தா யிருந்தன்றோ, பூர்வபக்ஷ மாக்குதல் வேண்டும், சித்தாந்தம் பூர்வபக்ஷத்திற்கு முற்றும் வித்தியாசப்பட்டிருக்குமென்பதிலென்ன தடை வேதாந்தத்தில் பரிணாமவாதம், பிரதி பிம்பவாதம், சுத்திரஜிதபிரூந்திவாதம், வியாவஹாரிகபாரமார்த்திகவாதம், அக்ஞானகலுஷிதவாதம், க டாகாசபடாகாசவாதம் முதலிய அஸத்வாதமே மேனேக்கி நிற் றலின் இவ்வாதத்தை நிராகரித்து உண்மை உபகரிப்பது பர வித்தையாகிய சிவாகமேயன்றோ பிரும்ம பரிணாமவாதத்தை யாமுன்னரெடுத்துக் கண்டித்துள்ளோமாதலால் ஈண்டெடுத்து கண்டித்தல் அனாவசியகமாகும்; ஆத்மா பிரும்மத்தின் பிரிதிபிம் பமென்பது வேதாந்திகளின் அபிமதமாதலின், பிம்பம் சத்தும் பிரதிபிம்பம் அசத்துமாய் முடியப்பெறும் பிம்பம் பிரும்மமும் பிரதிபிம்பம் ஆத்மாவுமாய்க் கூறுதல் பற்றி ஆத்மா அசத்தா யிருப்பதால் அசத்துக்கு சத்விசாரம் விலக்காதலின் அசத்து

பிரும்ம நிச்சயம் கூறித்தென்பதும் விசார சூன்யமேயாகும் இவற்ருல் ஆத்மாவை பிரதிபிம்பமான அசத்தென்னும் வேதாந்தச்சொல்லை பரவித்தையாகிய சிவாகமங்கள் கண்டித்துஅசத்து அறிவற்றதாதலின் பிரும்மத்தை அறியுமென்பது கூடாதென்பதாய் ஆத்மாசத்தென அபரவித்தைக்கி உண்மைஉபகரித்து சித்தாந்தித்துநிற்கும் சுக்திரஜித பிறாந்திவாதம்போல் பொய்யாயுள்ளஜகத்தென்பது வேதாந்தவாதம் சுத்தியும் இன்மைப் பொருளன்று ரஜதமும் இன்மை பொருளன்றஒன்றிலொன்றைஆரோபித்து வருவித்ததுமாத்திரம் பிறாந்தியாம். இவற்ருல் சுத்தியென்னும் பதார்த்த மொன்றும் ரஜதமென்னும் பதார்த்தமொன்றும் ஒன்றையொன்ருய் கற்பித்து பிரமித்த பார்த்தமொன்றுமாய் இவர்திருஷ்டாந்தத்தில் முப்பொருள் விளங்குதலால்இம்மூன்றையும்ஒன்றென சாதிக்கவருபவரை மூன்றும் மூன்றுபொருளென உண்மையுபகரித்து சிவாகமஞ்சித்தாந்திக்க துணிவுற்று நிற்கும். இல்லாத வெள்ளியை சிப்பியில் உண்டெனநினைத்து பின்னில்லாதுபோவதுபோல் இல்லாத உலகத்தை உண்டென கூறுவதும் பிறாந்தியாமெனின் உலகம் இல்பொருளாயின் பதார்த்தமொன்றேயென்பது வேதாந்திகளின் அபிமதம் ஒன்ருயுள்ள பதார்த்தத்திற்கு இல்லாத உலகத்தை உண்டென பிறாந்தி வருதல் கூடுமோ பிறாந்தி அறிவில்லாதோரியற்கையாதலின் முற்றறிவுடைய பிரும்மத்திற்கிவை யேற்றல் கூடுமோ வியாவஹாரிக பாரமார்த்திக பேதத்தால் இவை பிரும்மத்திற்கு வருமெனின் பாரமார்த்திகத்தில் இருந்த பிரும்மமேயன்ருே வியாவஹாரத்திற்கு வந்திருக்கின்றது பிரும்மத்திற்கு பாரமார்த்திகம் கெட்டு வியாவஹாரிகத்திற்கு வரக்காரணமென்னே ஒரு பதார்த்தம் பாரமார்த்திகமெனவும் வியாவஹாரிகமெனவும் இருபொருளாய் நிற்குமாயின் அகண்டம் கெட்டு கண்டப்பொருளாயன்ருே. முடிந்து விடும் பாரமார்த்திக பிரும்மம் வியாவஹாரிகத்திற்கு வந்தது தானே வந்ததா வேறொருவர் வரும்படி செய்ததரா தானே வந்ததெனின் இவ்வசத்பிரவர்த்திக்கு அவை முந்தி நின்றதால் இவற்றை சத்தெனச்சுட்டுதலடாது மாயையால் வேறுபட்டதெனின் மாயை வேதாந்தத்தில் இன்மைப் பொருளாதலால் அவற்ருல் வந்ததென்பதுங் குற்றமாம் மாயை பிரும்மத்தை வியாவஹாரிகபாரமார்த்திக திசைக்கு கொணர்ந்திரு

க்குமாயின் கர்த்திருத்வம் மாயைக்கு ஏற்பட்டு மாயை சுதந்தர்மும் மாயை வசப்பட்டுள்ள பிரும்மம் அஸ்வ தந்திரமுமாய் முடிதலால் இக்குரும் வேதாந்த ஆசங்கைக்கு பிரும்மம் பாரமார்த்திகத்திலேயேயுள்ளது ஜீவன் மாயா வசப்பட்டு வ்யாவஹாரிகத்தில் உழண்டுநிற்பது வியாவகாரம் நீங்கி பிரும்மத்தோடு ஐக்கியம் பெறுவது முக்தியென சிவாகமம் சித்தாந்திருப்பதால் இக்கருத்து வேதாந்தத்தால் விளங்கப்பட்டதின்றும். அக்ஞானக்கலப்பால் சூரியனை மேகம் மூடுவதுபோல் பிரும்மத்தை மறைத்திருப்பதால் பிரும்மக்ஞானம் தோன்றாது அக்ஞானத்தில் ஆழ்ந்துளோமெனின் சூரியனொன்று மேகமொன்று அக்ஞானத்தில் ஆழ்ந்துளபதார்த்தமொன்று இங்கனமும் முப்பொருள் விளக்கமுண்டாகின்றது. அக்ஞானத்தில் ஆழ்ந்துள பதார்த்தம் பிரும்மந்தானெனின் பிரும்மம் மெய் ஞானமுடையதாதலின் அக்ஞானத்தில் மூழ்கக்காரணமில்லை மாயை பிரும்மத்தைமறைக்குமாயின் பிரும்மத்தை விட மேம்பாடுடைய பதார்த்தமாகின்றது மறைத்தலுள் அடங்கியுள்ளபிரும்மம் அம்மறைவைத்தானே நீக்கி வெளிவருதல் யாங்கனம் தான் நீக்குமாற்றலுடையதாயின் தன்னை மறைக்க சம்மதித்திரா? இம்மறைப்பை வேறொருவன் நீக்கவேண்டியிருத்தலால் அவை பிரும்மத்திற்கு அன்யமான கர்த்திருத்வமுடையதாயிருத்தல் வேண்டும். இவற்றல் மாயையால் மறைந்துள்ளது ஜீவனெனவும் அம்மறைவை நீக்கி முக்தியளிப்பது பிரும்மமெனவும் வேதாந்தத்திற்கு சித்தாந்த ரூபமான சிவாகமங்கள் உண்மைப் பொருளை உபகரித்து நிற்கும். ஒன்றுயுள்ள ஆகாசம் கடத்தில் வியாபித்திருப்பது போல் ஒன்றுயுள்ள பிரும்மமே விருத்தி பேதத்தால் வெவ்வேறுய் தோற்றமெனின் ஆகாசம் நிர்விகாரபதார்த்தமும் அப்பிரத்தியக்ஷமாய் இருத்தலின் விகாரமேற்பட காரணமில்லை. கடம் கடான்னியமாய் ஆகாசவ்யாபகம் இவ்விரு பொருளும் ஒரு பொருளன்று கடம் வேறு ஆகாசம் வேறு ஆகாசமே கடரூபமாய் பரிணமித்து இருக்குமாயின் பிரும்மம் பிரபஞ்சரூபமாய் பரிணமித்திருத்தலுங் கூடும். இவற்றல் கடாகாசவியவஹாரத்தால் ஒரே பதார்த்தமென சாதிக்கவந்ததும் தவறுதலேயாகும். இவ்வாறுள்ளவேதாந்தாபாசம் பலவுளவற்றையுங் கண்டித்து பரமான சித்தாந்தத்தை நிலைநாட்டும் சிவாகமங்கள் வேதாந்தத்திற்குமுற்றும் விரோ

திக்கிறதெனத் துக்கிப்பதுபரிபவமில்லாதோரியல்பேயாகும். வே
தாந்தஞ்சிவாகமத்தின் ஐக்க பத்தியமன்றி உண்மைப் பொருள்
விளக்கா ஆன்மலாபத்திற்கு வேதன்னுபகிலையைப் போலும் சிவாக
மம் நாயகனைப்போலுன்னிலை நின்றனுக்கிரகிக்கு மாற்றலுடைய
துபற்றி நாயகபாவமுடைய சிவாகமங்களுக்கு ஸ்வதந்திரமும்
நாயகிபாவமுடைய வேதங்களுக்கு அஸ்வதந்திரமும் ஏற்பட
காரணமாயிற்று. உத்தமமான நாயகி தன்னாயகனை விட்டுப் பிரி
ந்திராள் பிரிந்திருக்கவொருவன் முயற்சிப்பானாயின் தன் பாதி
விருத்ய தர்மத்தாலுண்டான சாபாக்னியால் தகித்து முயர்ச்சித்
தவனை சாம்பல்கூட அகப்படாது செய்வதுபோல் வேதம் சிவா
கமமாகிய நாயகனைப்பிரிந்து நின்றவிடத்தில் உலகம் ஆன்மா இவ்
விரண்டையுஞ் சுட்டெரித்து தன்னாயகனை விட்டு தன்னை நோக்
க விரும்பியுள்ளவனையும் இருப்பிடந்தெரியாது அவனிருப்பே
பொய்யாக்கி தாம் பாதி விருத்யம் பங்கமடையாவண்ணங்காத்
துக்கொள்ளுமாதலின் சிவாகமத்தை நீத்துவேதத்துட் பொரு
ளாராயப்புகுவோர்க்கு வேதம் அணுத்துணையும் பயனளிக்கத்தக்
கதன்று. இங்கனமுள்ள ஞாயம் பலவற்றையு மூகித்தறியாது
வேதத்துட் பொருளீட்டமுயல்வனாயின் வெளக்கமார்செருப்புக்
கட்டையும் பிரும்மமயமென வற்புறுத்தி ஸத்தஸத்தென்னும்
பேதம் புலப்படுத்தாது யாவும் பொய்யென முடிபொருளாக்கி
யாம்அபரம்எமக்கு மேல்பரமொன்றுளது அவற்றைநோக்கி உய்
வீர்களென வேதம் மௌனமுற்று நிற்றலின் சிவாகமத்தை வி
ட்டு வேதத்தைத் தனித்து பிரித்து வியவஹரிக்கும் வாதத்தில்
ஸர்வலோகநாயகராகிய நித்யமங்கள மூர்த்தியாம் சிவபெருமானை
இழந்திருப்பதால் இவ்வாதம் அமங்களத்வமுடைய முண்டச்சி
வாதமாய் முடியப்பெறும். வேதம்அபரமும் சிவாகமம்பரமுமாய்
கைக்கொள்ளும் சிவஞானிபரத்துமங்களத்வ மெய்தப் பெரும்
இக்காரணம் பற்றியே யன்றோ பிராம்மணரெனவும் சிவப்பிராம்
மணரெனவும் வேறு பிரித்து பரவித்தை தெளித்துரைக்கப் ப
டுகின்றது பிராம்மணரென்பது சிவப்பிராம்மணர், வைஷ்ணவப்
பிராம்மணர், மத்வப்பிராம்மணர், ஸ்மார்த்தபிராம்மணர், பௌத்த
பிராம்மணர், ஜயினப்பிராம்மணர் என பல்படித்தாய் நிற்றலால்
யாவற்றும் பிராம்மணரென்பது பொதுப்பெயர் சிறப்புவகையால்

ஞேக்குமளவில் அவரவர் மதானுஸம் பத்தியை முன்னிட்டு வருமாதலின்பிராம்மணபரத்துமதமினததென்பது சுட்டுதலனறி ஏனயசிவபிராம்மணபரத்தில்தம்தம்ஸமயமுன்னுகக்கொண்டுவரு மியற்கையுடையதுபற்றி சிவபிராமமண ரென்பது யாவற்றினுஞ் சிறந்த சிறப்பு பேராம். சிவம்மங்கள னுதல்பற்றி இவர்களுக்கு மங்களப்பிராம்மணரென்பதே பொருத்தமுடையதாம். பிராம் மணரை உயர்வெனக்கொண்டு பிராம்மணபோஜனம் முதலியவை விதித்திருக்க சிவப்பிராம்மணரை விசேஷமாகக் கொள்ளுதல் யாங்கனமெனின்-பிராம்மணபோஜனம் ஸாமான்யமுஞ்சிவப்பிரா ம்மண போஜனம் விசேஷமுமாய் மேம்பட்டு நிற்கும் சிவப்பிரா ம்மண போஜனமென்பது மஹேசுவர பூஜை என மேம்பட்டிருத் தலின் இவை பிராம்மண போஜனம் போல் ஸாமான்யமாகாது.

ஸ்தாவரஂஜஂகமெஞ்திலிஂக விவித்ஷ்யதே! ஸ்தாவரஂ ஸ்தாபிதஂ லிஂகஂஜஂகமஂ ஶிவ த்விஜஂ ! ஜஂகஸ்யாக்ருதா பூஜாஸா பூ ஜா ஶிவபூஜநஂ ।

என்னும், பரசுருதி வாக்கியத்தால் லிங்கம் ஸ்தாவரம் ஜங்க மமென இருவகைப்படுமெனவும் ஸ்தாவரலிங்கசிவலிங்கமும்ஜங் கமலிங்கம் சிவபெருமானல்தீக்ஷிக்கபெற்ற சிவத்விஜர்களெனவும் சிவப்பிராம்மணருக்கு செய்யப்படும் பூஜை சிவபூஜை யாகுமென வும் கூறியிருத்தலால் சிவப்பிராம்மணபோஜனம் சிவ பூஜையாய் முடிபுற்று நிற்கும் இவற்ருல் பிராம்மணரை ஞேக்க சிவப்பிராம் மணர் விசேஷரென்பது தெற்றெனப் புலப்படும். அங்கனமாயின் இச்சிவப்பிராம்மணர் சிவபெருமானே பரார்த்தத்தில் பூஜிப்பதா லும் சிவநிர்மால்யம் புசித்தலாலும் பரார்த்தத்தில் மூன்று வருஷ ம் பூஜித்து உபஜீவிப்பவரை தேவலகர் எனவும் இத்தேவலகர்க ளை ஸத்காரியங்களில் வர்ஜிக்க வேண்டுமெனவுங் கூறி யிருத்தலா லும் சிவாகமங்களில்,

ஆத்மார்த்தஂ பரார்த்தஂ பூஜா த்விவிதேஷ்யதே! ஆத்மார்த்தஂ சரலிஂகஂஸ்யாத் ஸ்திரலிஂகஂ பரார்த்தகஂ।

என்னும் வாக்கியத்தால் சிவபூஜை ஆத்மார்த்தமெனவும் ப ரார்த்தமெனவும் இரண்டு பேதமுடையதெனவும் ஆத்மார்த்தஞ் சரலிங்கமும் பரார்த்தம் ஸ்திரலிங்கம் அதாவது ஆலயாதிகளில் அஷ்டபந்தனுதிகளால் பிரதிஷ்டிக்கப்பட்ட லிங்கமெனவுங் கா

ணப்படுதலால் தேவலகத்வாதி தோஷஞ் சிவாகமத்தாலுமேரப் பெருமெனின்,

ஆத்மார்த்தம் பூஜநம் நித்யம் ஸ்வநிர்வாணப்ரதம் । பரார்த்தம் பூஜநம் நித்யம் ஸர்வேஷாம் மோக்ஷதாயகம் । ஆசார்யக்ரம ஸம்ப்ராப்தம் ஸ்ரீமல்லிங்கம் முக்திஹேதுகம் । தத்பூஜா தேசிகாநாஞ்ச தத்தர்சநவதாம் ததா । ஸர்வேஷாம் முக்திஹேதுத்வாத் பரார்த்தமிதி கீர்த்திதம் ।

என்னும் சிவாகமவாக்கியத்தால் ஆத்மார்த்த பூஜை தனக்கு மாத்திரமே பயன்படத் தக்கதெனவும் பரார்த்த பூஜை யாவருக்கு மோக்ஷத்தை கொடுக்கத்தக்கதெனவும் இந்த முக்தி பிரதமான லிங்கம் ஆச்சார்ய பரம்பரையாய் கிடைத்துள்ளதெனவும் அதை பூஜிக்குங் குருசிரேஷ்டர்களுக்கும் அதை தர்சிக்கும் மஹாத்மாக்களாகிய எல்லார்களுக்கும முக்தி ஹேதுவாயிருப்பதால் இதற்கு பரார்த்தமெனச் சொல்லப்படு மெனவுஞ் சிவாகமமாகிய பரவித்தை கூறுவதால் இதில் தேவலகத்வாதி தோஷமேறக்காரணம் இல்லை. பரார்த்தமென்பதற்கு முக்தியை பிரயோஜனமாக வுடையதென பொருள் செய்திருப்பதால் இஃது தோஷயுக்தமான பூஜையாகாது மற்றும் பூஜிப்பவர் தர்சிப்பவர் இவ்விருவர்களுக்கும் ஒருங்கே முக்தி கூறியிருத்தலின் இவற்றை பூஜிக்கும் ஆதிசைவ பிரும்மணருக்கு தேவலகத்வ தோஷமுமுண்டாகா இவை ஆச்சர்ய பரம்பறையில் கிடைத்து வரும் லிங்கமாதலின் பிரர் பூஜை என்பது மிதற்கேற்பட காரணமில்லை இவற்றால் ஆதிசைவர்களுக்கு இப்பூஜை ஸ்வார்த்தமாகவே முடிந்துவிடும் இக்கருத்தை பரவித்தை யுட்கொண்டே யன்றோ,

ஆதிசைவாநாம் த்வயோராத்மார்த்தஞ்ச பரார்த்தகம் ! என்னும்; வாக்கியத்தால் ஆதிசைவ பிராம்மணர்களால் ஆத்மார்த்த பரார்த்த பூஜை செய்யத்தக்கதென கூறியிருத்தலின் இவை முக்தி பிரதமான பூஜை என்பதிற்றடையில்லை இவற்றால் ஸ்மிருதியில் கூறிய பரார்த்தம் வேருஞ் சிவாகமத்தில் கூறிய பரார்த்த வேறுமாய் பொருள்பட்டு நிற்கும் சிவாகமத்தில் கூறிய பரார்த்த சப்தத்திற்கு பரம் மோக்ஷம் ப்ரயோஜநம் யஸ்ய ஸா தாத்ருசீ பூஜா பரார்த்தா என்னும் வாக்கியத்தால் முக்தியை பிரயோஜனமாக வுடைத்தான பூஜை எதுவோ அதுபரார்த்த பூஜையாம் என்பது பொருள்.

பரார்த்தம் த்விவிதம் ப்ரோக்தம் ஸர்வாநுக்ரஹ காரணம் । ஆல
யேவ யஜநம் சாந்யோத்திச்யைவ யஜநம் சாந்யோத்திச்யைவ யஜநா
த்ந்யக்ருஹே ஸ்வஸ்யாவகாஶதா । நாஸ்தி வேதநதாநம் கிம் விஶ ஸ்வி
யந்த்ராணே ஸ்வயமாஹிதஃ । உக்த்வா வேதநம் தத்வா ஸ்வஸங்க
ல்பேந தே । கரோதி ஶிவஸம்பூஜாம் ஸர்வேஷாம் த்ர்யப்தாந்தரம் ।
க்ருதம் சேத் ஸ்யாத் தோஷம் ஸம்பவேத்தேவலகத்வதஃ । வர்ஜநீயோ
ஷட்கர்மஸு தோஷேண தேவலகாஸ்ஸர்வ பஹிஷ்க்ருதாஃ ।

என்னும் பரசுருதி வாக்கியத்தால் பரார்த்தமிரண்டு பேதமுடையதென்றும் ஆலயபூஜை ஸர்வாநுக்கிரஹ காரணமென்றும் இதற்கன்யமாய் அன்யர்களை உத்தேசித்து அவர்கள் கிரஹத்தில் பூஜிப்பவருக்கு பூஜை செய்ய ஸாவகாசமல்லாமல் ஒருவருக்கு சம்பளங்கொடுத்து சம்பளம் பெற்றவர் இன்னார் பூஜையை நான் செய்யப்போகிறேனென ஸங்கல் பிடித்து பூஜிக்கு பூஜை பிறரை உத்தேசித்து பூஜிக்கும் பரார்த்தமெனவும் இவ்வாருள்ள பரார்த்த பூஜை மூன்று வருஷம் ஒருவன் செய்வானாகில் அவன் தேவலகத்வாதி தோஷமடைகிறானெனவும் இத்தேவலக தோஷம் பெற்றோரை எல்லா கர்மங்களிலும் வர்ஜிக்கவேண்டுமெனவுங்கூறியிருத்தலால்முக்கியமான ஆலயபூஜையில் இத்தோஷமேற்றி தூஷிக்கமுயன்றது விச்சாரணைக்குறைவேயாகும். இக்காரணம்பற்றி மோக்ஷார்த்த லிங்கபூஜனாதிஸதாச்சாரமுடையாரை தேவலகரென்பது அவைதிகர்வாதமாம் கிரஹாராதன விஷயத்திலும் இவர்கள் சிவபூஜை புரிவதால் அவை அஸத்கார்யமாவது யாங்கனமெனின் பூஜிக்கும் யஜமான் குருவறரிடத்தில் பூஜார்த்தம் லிங்கம் பெரும்பொழுது மறணபர்யந்தம் இந்த சிவபூஜையை கைவிடுதலில்லேனபிரதிக்ஞைசெய்து சிவபெருமானை அடைந்து ஸ்வல்பகாரியத்தால் பிரதிஞாஹானியும் நித்யவிஹித தர்மமும் இழந்து பிரரைச் செய்யும்படி முயற்ச்சித்து நிற்பதால் குருவினிடஞ் சிவலிங்கம் பெற்றோர்க்கும் இவற்குச் சாதகமாய் வந்து பூஜிப்போர்க்கும் இவ்விருவருக்கும் இப்பூஜை பரார்த்தமாய்விடும். தான் பூஜிக்கவேண்டுவதை அன்யரிடம் ஒப்பித்து விட்டதால் எஜமானனுக்கும் இது பரார்த்தமாய் தோஷமேற்படக் காரணமாயிற்று இவற்றால் தோஷமேறுதல் கூடுமோவெனின் ஸந்தியாவந்தனாதி அனுஷ்டானங்களை தானே நித்யமாய் செய்ய

வேண்டிய ஒருவன் ஸாவகாசமின்மையில் ஒருவனை ஏற்படுத்தி சம்பளந்திட்டஞ்செய்து பிறதிதினமும் அவனே செய்யும்படி விடுத்து விடின் இவன் ஸந்தியாவந்தனாதிகளை இழந்து பிரஷ்டனாவதோடும்இப்பிரஷ்டனுக்குடன்பட்டு நின்ற கூலிக்காரனும் பிரஷ்டனாவதுபோல் சிவபூஜையை விட்ட பிரஷ்டனுக்கு உடன்பட்ட பூஜகனும் பிரஷ்டனாவன் கூலிக்காரன் கூலி வாங்குவதால் இவனுக்கு தோஷமுண்டாகாதெனின் கூலியுங்கார்யன்னோக்கிப்பெறுதல் வேண்டும் ராஜகிரகத்தில் திருடிவந்தால் நூறு வராகந்தருகிறேனெனக் கூலி பேசி இத்திருட்டுக்குடன் பட்ட கூலியாள் பாராக்காரரிடம் பிடிபட்டு தன்பந்துஜனங்களை நீங்கி பந்தேகானாவிலிருப்பதுபோல் சிவபூஜைக் கைவிட்ட பிறஷ்டனுக்கிணங்கி கூலிக்கு பூஜித்தபிறஷ்டர்கள் ஸ்வஜாதிவகுப்பின்ஸத்கார்யத்தில் சேர்க்கப்படமாட்டார். இவற்றால் பிறரை உத்தேசித்த ஸ்வார்த்தமல்லா பரார்த்தபூஜையிலும் ஜீவிப்பவரிவரென்பது தெற்றென விளங்கும். ஆதிசைவ பிராம்மணர்களும் கோயிலில் சம்பளம் வாங்கி பூஜிக்கின்றதால் இத்தோஷமவர்பறத்தேராதோவெனின் இவ்வாதிசைவர் ஒருவர் பூஜித்தபூஜையை அவற்காக தான்பூஜிக்காது ஸ்வார்த்தமாகவே பூஜிப்பதால் பரார்த்த தோஷப்படுதலெங்கனம். இவற்றால் ஸர்வாத்மாக்களுக்கும் தமக்கும் முத்திப்பிரதமாயுள்ள ஸர்வானுக்கிரஹகரமாம் சிவபூஜை பரார்த்த தோஷமுண்டாதற்குக் காரணமில்லை. இஃதன்றி பரவித்தையாகிய சிவாகமத்தில் கூறியவாறு தீக்ஷிக்கப்பெறாது பூஜிக்கும்சிவபூஜையும் பரார்த்த தோஷப்பட்டிழந்துவிடும்.

ஶூத்ராணாம் வா பராணாம் வா ஶிவலிங்கஸ்ய பூஜநம் । தீக்ஷிதேந காரயேல்லிங்கே க்ஷயம் ராஷ்ட்ரம் விநஶ்யதி । யஸ்மாதீஶஸ்ஸ்வபக்திஃ ப்ராக்தைஃ ஜீவைஃ பஶுபிஸ்துதஃ । பஶுபதேஸ்து ஸம்ஸ்காரபூஜநாத் ॥ பதிஃ பஶும் ஸமாஸ்ருஜ்ய யஸ்மாத்விமுச்யதே । ஸாமாஜிகஷ்ட்யா ஜ்ஞ்யாதீக்ஷாஹீநேந க்ருதாயதி । தஸ்மாச்சிவஸ்ய தீக்ஷாணி பஶுபாஶாவச்சேதஃ । பஶுபாஶம் வ்யபோஹ்யாயதஸ்ஸாஜா த்ராநுஷ்டாநஸாஜா த்ராதேஷு நோதிதாவஶேஷு விரோஹிதா । யத்ர ஶூத்ரலிங்கம் ஸ்பர்ஶ நஹீதராமஜஸ்யா । தீக்ஷிதாஶிவலிங்கம்

[illegible]

என்னும் பரசுருதி வாக்கியத்தால் சிவதீக்ஷையல்லாது ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளை பூஜித்தல் கூடாது பூஜிப்பானாயின் நாசத்தையுண்டாக்குமெனவும், பரமேசுவரர் பதியெனவும், ஆத்மாபசுவெனவும், பதி பசுவென்னும் பேதத்தினால்பசுரூபமாயிருக்கிற ஆத்மாவானது பதிரூபமான பரமேசுவரரை அறியாதாகையால் இந்த அதீக்ஷிதர் பூஜை நிஷ்பலமாமெனவும் இவற்றால் சிவபூஜைக்கு பசுபாவந்நீங்கத்தக்க சிவதீக்ஷை முக்யமெனவும் பசுபாவஞ்சிவதீக்ஷையால் நீக்கிக்கொள்வானாயின் பதிபாவத்தால் பதிஸ்வரூபமாகிய பரமேசுவரருக்கு ஸஜாதியமாகிறார் ஸாஜாத்தியத்தால் ஐக்கமும் அவையில்லாவிடில் ஐக்கவிரோதமு முண்டாகுமெனவும் வனத்தில் ஸிம்மத்தைக்கண்டு யானை எவ்வாறு அஞ்சுமோ அவ்வாறே அதீக்ஷிதரால் பூஜிக்கப்படுஞ் சிவலிங்கத்தில் சிவபெருமானுவிற்பவிப்பதற்கஞ்சுவரெனவும் சிவபூஜை முதலிய ஸத்காரியங்களுக்கு சிவதீக்ஷை முக்யமெனவும் அந்த சிவதீக்ஷை கிரியாவதீ, ஞானவதீ, வியதா, ஸ்பர்சா, வாசகி, சாக்ஷுஷீ, மானஸீ எனஏழு பேதமாமெனக் கூறியிருத்தலால் பரஸம்ஸ்காரமாகிய சிவதீக்ஷையல்லாததால் சிவபெருமான் இவர்களுக்கு வேறாய் நிற்றலால் இவர்கள் பூஜையும் பரார்த்தமாகும் இவற்றால் சிவதீக்ஷையல்லாது மூன்று வருஷம் சிவபூஜை பரார்த்தத்தில் பூஜிப்போரையும் ஸத்கர்மாக்களில் வர்ஜிக்கவேண்டுமென்பதாம் சிவதீக்ஷையல்லாதோர் சிவபூஜை பதியாகிய பரமேசுவரரை பசுரூபமான அஸத்பாவஞ் செய்பவராதலால்இவர்கள்பூஜையால் தோஷ யுக்தாளாகிரா ரென்பது கருத்து. இவற்றால் இவர்களையும் ஸத்கார்யத்தில் வர்ஜிக்கத்தக்கது பிராம்மணர் சிவதீக்ஷை பெருவராயின் முக்திபிரதமான பரார்த்தாலய பூஜைக்கும் யோக்யமாவாரோவெனின்,

[illegible]

ஸதீக்ஷிதாஶ்சூத்ராதிஶைவாகா:। ஆதிஶைவாஸ்து தே ஜ்ஞேயா
ஸதாநுக்ரஹகாரகா: ஸ்ம்ருதா: । ஶிவஸ்ய பஞ்சவக்த்ர
ஜாதா ஏவ ப்ராஹ்மணா: ஸ்ம்ருதா: ! ஜாதா ப்ரஹ்மாஸ்யாத்
ஶைவாஸ்யா: கேவலம் ப்ராஹ்மணா ஹி தே । ஜாதாஸ்ய ஸ்ருஷ்ட்யா
விநாஶம் ஹி ப்ராஹ்மணா மஹாத்மந: । ஆதிஶைவாஸ்து
தே விப்ரா தீக்ஷிதா ப்ராஹ்மணாஸ்ததா । ஶிவதீக்ஷாதி ஸம்ஸ்கா
ரை: பராமர்ஶிதா: । தஸ்மாத் தே ஜ்ஞேயா
மஹாஶைவா த்விஜாஸ்ம்ருதா: ।

என்னும் பரசுருதிவாக்கியத்தால் பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் முதலினோரும் சிவதீக்ஷை பெற்றோராயிருப்பராயின் ஆத்மார்த்த பூஜை மாத்திரம் புரிதற்குரியாரெனவும் முக்திபிரதமான பரார்த்த பூஜை ஒருக்காலுமிவர்களால் செய்யக்கூடாதெனவும் ஆதிசைவப் பிராம்மணர்கள் ஆத்மார்த்தம் பரார்த்தமிவ்விரண்டையும் பூஜித்தற்குறியாரெனவும் ஆதியில் சதாசிவமூர்த்தியால் தீக்ஷிக்கப்பட்டவர்கள் ஆதிசைவர்களெனவும் இவர்கள் யாவருக்கும் அனுக்கிரஹிக்கும் யோக்யதையுடையாரெனவும் இவர்கள் பரமேசுவரரது பஞ்சமுகங்களாகிய ஈசான தத்புருஷ அகோர வாமதேவ ஸத்யோஜாதாதி ஐந்து முகங்களின் வழியாய் வெளிவந்தவரெனவும் சிவசிருஷ்டியல்லாது கேவலம் பிரும்மாவின் முகத்தால் வெளிவந்தவர் பிராம்மணரெனவும் இந்த பிராம்மணர்கள் பரவித்யாமயமாம் சிவாகமங்களில் கூறியுள்ள சிவதீக்ஷாதி ஸம்ஸ்காரங்களை ஆதிசைவர்களிடம் பெருவாராயின் மஹாசைவர்களாகிறாரெனவுங் கூறியிருத்தலால் ஆதிசைவ பிராம்மணர்கள் பிறவியிலேயே சிவத்வஸித்திபெற்றவரும் பிராம்மணர் பிறந்த பின் ஸம்ஸ்காரத்தால் சிவத்வஸித்தி பெற்றவருமாய்க் காணப்படுதலின் லோகாநுக்கிரஹகரமான பரார்த்தபூஜை ஆதிசைவப்பிராம்மணர்கள் பரத்தே சாதிக்கப்படும் இவற்றால் இவர்களை லோககுருவெனச் சுட்டப்படும். லோககுருவென சங்கராசசாரியர் முதலிய மஹாத்மாக்களைக் குறிக்கப்படுமன்றி கேவலம் கோயில் பூஜை செய்யுங் குருக்களை லோககுருவென்பது தகுமோவெனின் சங்கராச்சாரியார் கேவலம் அபரவித்யா பாஷ்யஞ்செய்து வேதாந்த மதப்பிரவர்த்தகராயிருப்பதால் வேதாந்தத்தி

ல் ஜகஜ்ஜீவேசுவரம் பொய்யாயிருத்தலின் இவற்கு லோககுருத்வ மும் பொய்யாய் முடிந்துவிடும். இக்காரணம் பற்றி சங்கராச் சார்யருக்கு லோககுருத்தங் கூறுவது ஞாயமுகத்தில் நில்லாவா ம், ஜகத் ஜீவன் ஈசன் என்னும் பதி பசு பாச திருபதார் நிர்ணய ங்களை வேதாந்தத்திற்கு பரவித்தையாகிய சிவாகமங்களால்அனு க்கிரஹித்து ஸித்தாந்தித்து நிற்பதால் லோககுருவாகிய ஆதி சைவர்களை கேவலம் கோயில் பூஜையுடையக் குருக்களென கழி த்து இத்திருபதார்த்த லக்ஷணமற்ற யாவும் பொய்யென்னும் அபிப்பிராயமுடையார் பின் இவர்கள் செல்வதால் யாது பயன் ஆதிசைவ பிராம்மணர்கள் சிவபூஜாதி ஸத்கார்யங்களில் உண் மைப்பொருளும்சங்கராச்சார்யர்சிவ பூஜாதிஸத்கார்யங்களில் இ ன்மைபொருளுமாய் நிற்றலின்ஈதுபல பிராப்தி என்பதை விவே கிகள் உற்றுணர்வார்களாக இஃதின்றி சங்கராச்சார்யார் சிவபூஜை சரரூபம்ஆதிசைவபிராம்மணர்கள் சிவபூஜைஸ்திரமுமாயிருத்தலி ன் ஸ்திரலிங்க பூஜையை நோக்கச் சரலிங்க பூஜைஸாமான்யமா தலின் சரலிங்கந்தமக்கு மாத்திரமே பலனளிக்கத்தக்கதும் ஸ்தி ரலிங்கம் யாவருக்கும் பலனளிக்கத்தக்கதுமாய் முடிதலின் சங் கரர் பூஜையினும் இவர்கள் பூஜையே யன்றோ விசேஷத்வம் பெ ற்றிருக்கின்றது. இத்தகைய அருமை சிறிது முற்று நோக்காது கேவலங் கோயில் பூஜை செய்யுங் குருக்களெனக் கழிப்பதால் யாது பயன் அவர்களை கழித்தவிடத்திலும் அவர்கள் குருத்வங் குறைப்பட்டதின்று எச்சாதியரும் எச்சமயிகளும் இவர்களை குருக்களென வேசுட்டப்பட்டு எக்காலத்திலுங் குருத்வமுடை ய ஜாதியாகவே நிலை நின்றிருக்கின்றனர். இவற்றால் முக்தி பிரத மாம் ஸ்திரலிங்க பூஜாஸத்கார்யமுடைய ஆதிசைவ பிராம்மணர் களை ஜகத்குருவென்பதுந்தகுதியே இவை சாஸ்திரீகமாகாவெனி ன் இவற்குற்ற லோககுருத்வஞ் சாஸ்திரீகமும் ஆதிசைவரல்லா த எனையோர்க்குற்ற லோககுருத்வம் அசாஸ்திரீகமுமாய்க்காண ப்படுதலின் சாஸ்திரோக்தமாகாதெனச் சாதித்தல் கூடாவாம் சங்கராச்சாரியார் முதலினோர்க்கு சங்கரவிஜயம் முதலிய பிரமா ணங்களில் ஜகத்குருத்வங் கூறியிருப்பதால் அதுபோல் இவ்வா திசைவர்களுக்கு ஜகத்குருத்வங் கூறிய மெய்நூலெது வெனில் ஈண்டெடுத்து விளக்குவோமாக ஸ்காந்தம் சங்கரஸம்ஹிதை

உபதேச காண்டத்தில்,

[illegible]

என்னும் வாக்கியத்தால் தாங்கள் லோககுருவாய் புஷ்பகிரி ஸந்தானத்தில்தோற்றிமஹாத்மாவாயுள்ளவராதலால் துக்கத்தையடைந்திருக்கின்ற இவர்களை சிஷ்யர்களாகக் கொள்ளல் வேண்டும் எல்லா பாபங்களும் நீங்கத்தக்க தங்களாலாராதிக்கப் படுகின்ற அமிருதேசுவரரை தர்சிக்கச் செய்து பரிச்சாரகம் புரிதற்பொருட்டு இவர்களை கற்பித்தருளல் வேண்டும் எந்த காலத்திலிவர்கள் துக்கசாகரத்தினின்று நீங்குகிறார்களோ அது பர்யந்தம் இவர்களிடங் கருணை வைத்து அருள் புரிவீராக தாங்கள் லோககுருவாகையால் இது செய்யவேண்டுவதவச்யமாகும் எனக் கூறியிருத்தலால் முக்தி பிரதமான பரார்த்தாலய பூஜா கைங்கர்யம் பெற்ற ஆதிசைவ பிராம்மணர்களுக்கு லோககுருவென்பது பிரமாண பிரஸித்தமாம் சங்கரவிஜயம், நீலகண்டவிஜயம், ராமானுஜவிஜயம், மத்வவிஜயம், ஸோமநாத ஆராத்யவிஜயம் முதலிய கிரந்தங்கள் யாவருமொப்பத் தகுந்த பிரமாண நூலன்றாதலால் அவரவர்களுக்கு சிஷ்யத்வம் பெற்றோர் மாத்திரமே மெச்சத்தகுந்தது. இவை வேதாகமபுராண இதிஹாஸாதி பிரமாணங்களைப்போல் யாவரும் ஒப்பத்தகுந்த பிரமாண நூலன்றாம். இக்காரணம் பற்றி ஆதிசைவ பிராம்மணர்களுக்குற்ற குருத்வம் ஜகத்குருத்வமும் ஏனையோர்க்குற்ற குருத்வம் அவரவர் சிஷ்யர்களாலேற்றப்பட்டதெனவுங் காணப்படுதலால் ஆதிசைவருக்குற்ற ஜகத்குருத்வம் சாஸ்திரீகமென தீர்மானிக்கப்பட்டு ஏனையோர்க்குற்ற குருத்வம் அசாஸ்திரீகமென்பதை சாஸ்திரவாயிலாய் திரஸ்கரித்தொதுக்கப்படும். சைவஸமயன் வீடுபெறுகாலந்தலைத்தோங்கியுய்யப் பெருங்கருணை பூண்டு ஸ்திரமாய் லிங்கப்பிரதிஷ்டாபனாதி ஸத்கார்யம் வகித்த ஜகத்குருக்களாகிய ஆதிசைவ

பிராஹ்மணர்களை கோயில் குருக்களெனக் கழித்து சைவஸ
மயம் மருந்துக்குங்கிட்டா ஏகான்மவாதமாகிய வேதாந்த பாஷ்
யஞ் செய்த சங்கராச்சாரியாரை ஜகத்குருவெனக் கொண்டாட
ல் சைவ ஸமயத்துள்ளோர்க்குத் தகுதியோ அவ்வாரபிப்பிராய
மிருக்குமாயின் பிராமண ஜாதி சிவமதமென கைச்சாத்திடுவதை
நீக்கி பிராமணஜாதி வேதாந்தமதம் அல்லது அத்வைதமதமென
வாவது மாற்றி வைத்துக்கொள்ளுங்கள் வேதாந்தம் வேதத்தின்
முடிபெனப்பொருள் படுமன்றி ஸித்தாந்தமாகாதாதலின் ஸித்
தாந்தரூபமான பரவித்யையாஞ் சிவாகமத்தால் சாதிக்கப்பட்டு
ள்ள சைவசமயத்தைவிட்டு ஏகான்மவாதமுதலிய நாஸ்திகாதி
மதத்துட்பட்டு வருந்துதல் கலிவலிமிகுதியாலன்றோ முதலில்
வேதாந்தவாதத்தா லாலோசிக்கப்புகுவோமாயின் கொலைகளவு
கட்காமம் முதலிய துராச்சாரங்கள் யாவும் ஸதாச்சாரமாய் பரி
ணமிக்கும் வேதாந்தவாதத்தில் தனக்கன்யம் பொய்யாதலின்
மெய்யாத்தோற்று முருவங்களை கொன்று விடுதலால் தோஷமு
ண்டாகா தோஷத்தையடைய பிரும்மத்தைத்தவிற பதார்த்த
மின்றுதலால் கொன்றது பிரும்மம் கொல்லனின்றதும் பிரும்ம
மாய் முடிதலின் ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம எனவேதம் விதித்
துள்ளதும் இவர்களுக்குடன் பாடன்று பிரும்மம் வ்யாவஹாரி
கத்தில் நிற்பது ஜீவனதலால் ஜீவஹத்திசெய்தல் கூடாதெனின்
கொலைசெய்வதால் வ்யாவஹாரிகங்கெட்டு பார்மார்த்திகவந்து
விடுவதால் ஜீவஹத்தி எழுமென்பது புலப்படுகின்றது இவ்வா
ரேகளவும் தனக்கன்யம் பொய்யாய் யாவும் பிரும்மமயமாயிருத்
தலால் முடிச்சவிழ்ப்பதும் பிரும்மந்தான் முடிச்சவிழ்க்க கொடு
த்ததும் பிரும்மமாயிருத்தலில் திருட்டென்னுங்குற்றமிதிற்கில்
லை இருமினல் சேர்ட்டார் முதலியபிருமங்கள் இத்திருட்டுப்பி
ருமங்களைத் தெண்டிக்கக்காறணமென்னே அவை வியவஹாரிக
த்திற்கு விரோதமெனின் பாரமார்த்திகத்தில் விரோதமின்மை
யும் வ்யாவஹாரிகம் பொய்யாயிருத்தலின் திருடினதும் பொய்
யாய்முடிந்துவிடும் இத்திருட்டுப் பிரும்ம தண்டனைக்குட்பட்டு
நிற்கக்காறணமென்னே இவ்வாறே பிரர்மனவியை கலவியால்
கைபிடிக்க விரும்பினும் பிரும்மம் பிரும்மத்தைச் சேஷ்டிப்பதா
ய் முடிதலன்றி இச்சேஷ்டையில் குட்டிகுளவான் பிரும்மம்

உண்டாய்த்திரிவதால் அக்குட்டிபிரும்மமுண்டானதும் பொய்
யாம் இதில்மனஞ்சகியாது என் பெண்டாட்டியை எப்படி நீ
கைபிடித்தாயென்று கூக்குரலிட்டு தடியால் நீட்டும் பிரும்மமு
ம் தடியடிபட்டுவருந்தும் பிரும்மமும் ஒன்றே மாறுபாங்கனம்
இவ்வாறே கள்ளுண்டு மயங்கும் பிரும்மத்திற்குக் கள்குடி பேச
ய்யாயிருத்தலின் கள்குடித்தோர் கள்ளேகுடிக்கவில்லை என
சாதிப்பதற்கு இவ்வேதாந்தவாதம் சாதகமேயாகும் இவ்வாருள்
ள வாபாஸம்பலவுள வற்றையும் விரிவஞ்சி விடுத்தோம். இதற்
கே ஏகான்மவாதமெனப்பெயராம் ஆனால் வேதாந்தமென்பது
பொய்யோவெனின் வேதாகமம் முற்றறிஞனாகிய பசுபதிதிருமுக
த்தினின்று வெளிப்பட்ட மெய்நூலாதலின் அவை பொய்யாபா
ரெங்ஙனம் வேதாந்தம் சார்வாகனை நோக்கி பரிபவப்படுத்தவெழு
ந்ததிருவாக்கேயாதலின் சார்வாகன் சரீரத்தைத்தவிர ஜீவனை
இல்லை என வாதிக்கும் வாதியாதலால் சரீரத்திற்கு பரமாய் ஜீவ
னொன்றுளதென ஸித்தாந்தித்துள்ளது வேதாந்தமென்பது
தெற்றெனவிளங்கும் இக்காரணம்பற்றி வேதாந்தம் அத்யாத்மக
சாஸ்திரமென்பதாய் சுட்டப்படும் இவ்வத்யாத்மிகத்திற்குமேல்
அதிமார்க்கம் மாந்திரிகமென இரண்டுமார்க்கங்களிருத்தலின்
இவ்விரண்டைநோக்கவே தாந்தந்தாழ்ந்ததேயாகும் சார்வாக
னைநோக்க வேதாந்திகள் விசேஷரென்பதி லெமக்குத்தடையில்
லை அதிமார்க்கம் மாந்திரீகத்தை நோக்க வேதாந்தம் உயர்ந்ததெ
ன்பதை வேதமே ஒப்பாது இவற்றால் வேதாந்தமெனவுஞ் சித்
தாந்தமெனவு மிரண்டு பிரிவான மெய்நூல் சிவபெருமானால்
கூறப்பட்டுள்ளதாதலின் வேதாந்தம் வேதமுடியும் சித்தாந்தம்
சிவாகமத்தின் முடியுமாய் நிற்றலின் சித்தாந்தமன்றி வேதாந்தம்
பயன்படா வேதாந்தத்தை ஸித்தாந்தித்தனுக்கிரகித்து நிற்பது
சிவாகமமேயாதலால் சிவாகமாதி பரவித்தை ஜன்யஞானம் ஸத்
பிராம்மணாதிகளுக்கு அத்யாவசியகமாய் வேண்டப்படும் இவ்வா
றுள்ள வுண்மையை அணுத்துணையுமரியாது யாம் வேதாந்தி
எமக்கொன்றுமில்லை என நாஸ்திகராதல் கூடுமோ வேதாந்திஜீவ
னொன்றுளதென சுட்டிநிற்போராதலால் நாஸ்திகராதல் யாங்கன
மெனின் ஜீவன் பிரும்மமாகமதித்து நிர்விகார பிரும்மத்திற்கு
விகாரஞான பிராந்திவ்யாவஹாரபிரதிபிம்பகுண விசேஷமேற்றி

பிரும்மமே பிறக்கிறது பிரும்மமே இறக்கிறது இப்பிரப்பிறப்பிற்
சுட்டப்பட்ட பிரும்மத்தைத் தவிர வேறொன்றில்லை என வேதாந்தி
நிர்மாணித்து விடுதலால் இவற்றை உண்மையில் யோசிக்குமிடத்
தில்ஜீவனாய் நிற்றலின் பிரும்மமென்பதிவர் கட்டியபொருளாக-
பிரும்மஞானமற்ற இந்தவாதம் நாஸ்திகமென்பது தெற்றெனவி
ளங்கும் அதிமகிமைதங்கிய பரவித்தையாஞ்சிவாகமத்தை நீற்று
வேதத்துட்பொருளாராயப் புகுவோர்க்கு வேதமுண்மைப்பொரு
ள் விளக்கா இவ்வாறுள்ள ஞாயம் பலவுளவற்றால் வேதாகமாதி
ஸத்பிரமாணங்களை கைப்பற்றி நிற்கும் ஆதிசைவபிரும்மணர்க
ளே ஜகத்குருவெனவும் அவர்களால் ஸர்வான்மாக்களும் முக்
திபெற்றுய்ய பிரதிஷ்டிக்கும் லிங்கமே சைவஸமயத்துள்ளோர்க்கு
பெருந்தாரகமெனவும் இந்தகய சைவமதஸ்தாபனஞ் செய்த
சிவாச்சார்யர்களை இன்றும் ஜகத்குருக்களாய் யாவரும் மதித்
திருக்கின்றாரென்பதிற்றடையில்லை விபூதிசிவபிரஸாதங்கள் சிவ
தர்சனம் முதலிய ஸத்கார்யங்கள் இஜ்ஜகத்குருக்களாலன்றோ
நன்னடை பெற்றுவருகின்றது. இப்பூஜையில் வேதாந்தப்பிர
வர்த்தகம் வகித்தசங்கராச்சாரியார் பரம்பரையார் தானே நேரஸ்
திரலிங்காதிகளை பூஜிக்கவேண்டுமென கோயிலில் நுழையப்பிர
யத்தினிப்பது இன்றும்வழக்கமாயிருக்கின்றது-சங்கராச்சாரியர்
ஸ்வாயம்புவாதி ஸ்திரலிங்கத்தைத்தொட்டு பூஜிக்க வேதாகம
புராணஇதிஹாஸாதிகளில் விதியிருக்கின்றதா சைவஸமயத்தி
லுள்ள ஸத்பிராம்மணாதிகளுமன்றோ இவ்வகார்யத்திற்கு முந்தி
னின்று பிரயத்தினஞ் செய்யப்புகுகிறார் சங்கராச்சாரியார் ஜகத்
ருவா யிருப்பதால் அவர்புக யாம் பிரயத்தினிக்கிறோமெனின்
அவர்க்குற்ற ஜகத்குருத்வஞ் சாஸ்திரீகமன்றென ஞாயமுகத்தா
ல் நிருபித்துள்ளோமாதலின் பிரமாணப் பிரஸித்தமாய் ஜகத்
குருத்வம்பெற்ற ஆதிசைவப் பிராம்மணலிங்க நிஷ்டாதி சிவதர்
மங்களில் பொய்க்குருக்கள் புகுதல் நீதியோ அங்கனமும் இவர்
கையில்பஸ்மமுதலிய ஐசுவர்யஸம்பத்தியை உலகினர்அங்கீகரி
த்து வருகின்றார்களா ஒய்குருக்களே விபூதிகொடுமெனக் கேட்
கின்றாரேயொழிய சங்கரர்பூஜையில் பஸ்மவைபவங் கொண்டா
டப்பட்டு வருகின்றதா இச்சங்கராச்சாரியாரையுமன்றோ ஜகத்
குருக்களாகிய ஆதிசைவப்பிரும்மணர்கள் திருக்கரத்தால் பஸ்ம
ம்பெறவேதசிவாகமங்கள் விதித்திருக்கின்றது இதில் சிலரவிகை

புற்று ஸ்வாமியார் சிவத்விஜர்கள் கறத்தால் பஸ்மம்பெருதல் கூடாதெனநினைத்து தட்டைநீட்டி அத்தட்டிலிருந்து தானே எடுத்துக்கொள்வது தகுதிஎன நினைக்கிறார் சிவத்விஜர் திருக்கரம் ஸத்பாவமுடையதுந்தட்டு அஸத்பாவமுடையதுமாய் காணப்படுதலின் அஸத்தைன்னேக்க ஸத்திற்குயர்வு கூறப்படுதலின் ஸத்தைநீக்கி அஸத்தை இப்பஸ்மபிரதான விஷயத்திலுட்கொண்டதற்கு காரணமென்னோ - ஸ்வாமியள் மஹானுயிருப்பதால் இவர் கொடுத்தல் கூடாதெனின் மஹான்ஸத்தா யுள்ளவரிடத்தில் பிரஸாதங்கிறஹிக்காது அஸத்துனிடம் பிரஸாதங்கிரஹிப்பதற்கு விரும்பிநிற்பதென்னோ தானேஸ்வீகறித்துக் கொள்வதால் பாதகமில்லைஎனின் தாமேதம்மிடமிருக்கும் விபூதியைஸ்வீகரித்துக்கொள்வ துசிதமாமன்றி தமக்கன்யஞ் சிவபெருமான் திருச்சன்னிதானத்திலுள்ள பஸ்மாவை இவர் ஸ்வார்த்தமாய் ஸ்விகறிப்பதெப்படி இச்சங்கராச்சாரியார் யாவும் பிரும்மாகாரமாய்பாவிக்குபபிருமஞானியாதலால் இவற்கு ஸாமான்யர் விபூதி கொடுத்தல் கூடாதெனின் விபூதிகொடுப்பதும் பிரும்மம் விபூதி வாங்குவதும் பிரும்மமாய்முடிதலின் விபூதிகொடுக்குஞ் சக்தியுள்ள பிரும்மத்தை நீக்கி விபூதிகொடுக்கச்சக்தியற்றதாம் பாளம் பிரும்மத்தை இச்சத்கார்யத்தில் கைக்கொண்டதற்கு காறணம் யாதோ பரார்த்தத்தில் பூஜித்து உபஜீவிப்பவர்களை கானினீயரெனவும் குண்டகரெனவுங் கோளகரெனவும் நிஷித்தங்கூறப்படுதலின் மஹானுயுள்ளோறிவர் பிறஸாதங்கொடுத்தல் கூடாதெனின் இவற்கு யாவும் பிருப்மாகார பாவமா யிருத்தலின் குண்டர் கோளகரென்னு பேதமிவர்பறத்தில்லை இங்கனம்விசாரிக்கவேண்டுவதத்யாவச்யமாக விருத்தலின் அவற்றையுற்றுனோக்கப்புகுவோமாக பரார்த்தத்தில் உபஜீவிப்பவர் ஆதிசைவறல்லறென்பதுமுன்னெடுத்து நிரூபித்துள்ள விஷயமாதலின் மீண்டுமவற்றை பிரஸ்தாபிப்பது புனருக்திதோஷமாய் முடியும் இகன்னங்கானினீயர் குண்டர் கோளகர் என்பவர்களைப்பற்றி மாத்திரமே விசாரிப்பதத்யாவச்யகமாம் கானினீயரென்பது கன்னிகழியா ஸ்திரீயினித்துண்டானே றென்பது சாஸ்திர பிரஸித்தியாதலால் ஆதிசைவபிராம்மனேத்பத்திகன்னி கழியாஸ்திரீயினிடம் உண்டானதாய் வேதசிவாகமங்கள் கூறத்துணியா பரவித்

தையாகியசிவாகமங்களில் ஆப்பரமாச்சார்ய பூதர்கள் சிவமுகோத்பவ சிவஸிருஷ்டியுடையா ரென்பதாய் நாட்டப்பட்டிருத்தலின் இம்மஹாத்மாக்களை கானினீயரென கூறுதல் சிவாபச்சாரமாய் முடியும் ஶிவேந ஹ்யாவிஷ்க்ருதம் ஶைவம் ஶைவேந ஹ்யாவிஷ்க்ருதம் ஶிவ꞉ ॥ ஶிவம் ஶைவவிஶிஷ்டாத்மா ஶிவப்ராஹ்மண உச்யதே ॥ என்னும் பரசுருதிவாக்கியத்தால் சிவனால் சைவஸமயம்ஸ்தாபிக்கப்பட்டதெனவும் சைவத்தால் சிவபெருமானை ஸ்தாபிக்கப்பட்டதெனவும் சிவபெருமானையும் சைவஸமயத்தையும் உட்கொண்டு விசுத்தாத்மாவாயுள்ளவர் சிவப்பிராமணரெனவுங் கூறி இருத்தலால் இவர் பரத்துக்கானினீயதோஷமேற்ற முயல்வது வேதமறியாதோர் செயலேயாகும் இஃதன்றி

ஶிவஸ்ய பஞ்சவக்த்ரேப்ய꞉ ஶைவப்ராஹ்மணாஸ்ஸுஜாதா꞉ ॥ ஜாதாஸ்து ப்ரஹ்மண꞉ ஶைவாஶ்ச கேவலம் ப்ராஹ்மணா உதாஹ்ருதா꞉ ॥ ஜாதாஸ்ஸ்ருஷ்ட்யாதி நாஶம் ஹி ப்ராஹ்மணாயே உதாஹ்ருதா꞉ ॥ ஆதிஶைவேஷு தேஷ்வேவ தீக்ஷிதா ப்ராஹ்மணாஸ்ததா ॥ ஶிவதீக்ஷாதிஸம்ஸ்காரை꞉ ஸம்ஸ்காரா விப்ரஸந்ததே꞉ ॥ தஸ்மாத் த்வஸங்கரா ஜ்ஞேயா மஹாஶைவ ஸிஜாஸ்து தா꞉

என்னும் பரசுருதிவாக்கியத்தால் பரமேசுவரரது ஈசானுதி பஞ்சமுகங்களிலிருந்து சிவபிராம்மணர்கள் உண்டானாரெனவும் சிவஸிருஷ்டியல்லாது கேவலம் பிரும்மமுகத்தால் வெளிவந்தவர் பிராம்மணரெனவும் ஆதி சைவர்கள் பரசுருதி சிவாகமங்களில் கூறியசிவதீக்ஷையால் பிரும்மமுகோத்பன்னர்களாகிய பிராம்மணர்களை மஹா சைவராகச்செய்தல் வேண்டுமெனவுங் கூறியிருத்தலால் ஆதி சைவப்பிராம்மணர்கள் சிவமுகோத்பவ சுத்தபுவனஸிருஷ்டி பேதமுடையாரென்பதும் இச்சுத்தாத்மாக்கள் பிராம்மணர் முதலானோருக்கும் சைவத்வஞ் சித்திப்பதற்கு ஆச்சார்யரெனவுங் காணப்படுதலின் இவர்களை கானினியர் என்பது குருவுக்கு நாமம்போட நினைந்த மூடர் கொள்கையேயன்றோ இவற்றால் கானினீயர் இவரன்றென்பது வேதாகமாதி பிரமாணமுகத்தால் புலப்படுகின்றது பின் கானினீயர் யாவரென்பதை விசாரிக்கப்புகுவோமாக பராசரர் ஓடத்திலேறிச்செல்லும்பொழுது சுபமுகூர்த்தம்வர ஆங்கு கன்னிகழியா மத்ஸியகந்தியை

யோசனகந்தியாக்கி புணர்ந்து அதினின்றுண்டாகியவர் வியாஸர் முதலினோர் என புராணங்கூறப்பட்டிருத்தலின் அவர்வம்சத்தவர் கானீனியரென்பது புராணமுகத்தால் புலப்பட்டு நிற்கின்றது இனியேனுங் கானீனீயர் இன்ன வம்சத்தவரென்பதை லக்ஷித்தறிந்தடங்குவாராக இனி குண்டரைப்பற்றி விசாரிப்பாம் அம்ருதே ஜாரஜ꞉ குண்ட꞉ ம்ருதே பர்த்தரி கோளக꞉ । என்னும் வாக்கியத்தால் பர்த்தா இருக்கும்பொழுதே சோரத்தனமாய் அன்யரைக்கலந்து பிறக்கும் பிள்ளைகளுக்கு குண்டனெனவும் பர்த்தா இறந்தபின் முண்டைகள் புருஷரைக்கலந்து பிறக்கும் பிள்ளைகளுக்கு கோளகனெனவும் பெயரெனக் கூறியிருத்தலால் உத்தமோத்தமமான ஆதிசைவப்பிராம்மண ஸிருஷ்டி சிவமுகோத்பன்னமுடைய சிவசிருஷ்டியேயாதலின் குண்டகோளகத்வ வியவஹாரமிவற்கேறக்காரணமில்லை தாரை அகிலிகை முதலிய ரிஷிபத்னிகள் புருஷனிருக்க அன்ய புருஷனைக்கலந்து ரமித்ததாய் புராணமுகமாய் வெளிப்படுதலால் அவ்வாருள்ள ரிஷிகோத்திரத்திலுதித்தவர்களே குண்டருவரென்பது தெற்றெனப்புலப்படுகின்றது இவற்றால் ஸத்பிராம்மணர்களாகிய ஆதிசைவபிராம்மணர்களை குண்டரென தூஷிக்க முயன்றது விச்சாரணைக் குறைவாம் இனி கோளரென்பதைப்பற்றி பறிகறித்தொதுக்குவோமாக ஆதிசைவபிராம்மணர்கள் உத்பத்தி சிவமுகோத்பவமுடையதாதலின் இவர் முண்டைக்குப்பிறந்த மக்கள்கள் ஆகார் ஒருவிநாயகரை ஸௌமங்கிலியொருத்தி பிரதிதினமும் குடத்து நீராலபிஷேகித்து புத்திரசந்தானம் உண்டாக வேண்டுமென பிரார்த்திக்கிறது வழக்கமெனவும் அவளோடு கைம்பெண்டாட்டியொருத்தி ஸௌமங்கலி செய்வதுபோல் விக்னேசுவரருக்கு அபிஷேகஞ்செய்து அவளதை விரும்புகிறாளோ அதை எனக்குத்தரல்வேண்டுமென பிரார்த்தித்தாளெனவும் ஸௌமங்கலி கர்ப்பவதியாயிருந்து புத்திரனை பிரஸவித்தாளெனவும் அமங்கலியும் அவ்வாறே கர்ப்பவதியாயிருந்து புத்திரனை பிரஸவித்தாளெனவும் அப்புத்திரன் கல்விமானாய்வேதாந்தாதி மதபிரவிஷ்டனாய் வியாபகனாயிருந்து அனேக சிஷ்யருடன் இருந்தார் என்பதாய் சிலநூல்கள் கூருவதால் அவ்வாறு அமங்கலிக்குப் பிறந்தவரும் அவற்கு உடன்பட்டு சிஷ்யருமுள்

ளோரும் கோளகர்களேயாவர் இவ்வுண்மையுணர்ந்து சிவமுகோத்பவர்களான ஆதிசைவர்களை கோளகரெனக் கூறமுயன்றது தனக்குற்ற கோளகத்வத்தை பிரகாசிப்பிக்கும் பொருட்டேயன்றி வேறன்று இவற்றால் ஜகத்குருக்களாகிய ஆதிசைவபரமாச்சார்யமூர்த்திகள் பிறவியாலும் ஜாதியாலும் ஸமயத்தாலும் அச்சமய உணர்ச்சிக்குத்தக்க மெய்நூலாலும் அந்நூன்முறைதனாலனுஷ்டிக்கும் பர தர்மங்களாலும் ஸர்வான்மாக்களிலும் மேம்பாடுடையவராயிருத்தலின் இவர்கள் திருக்கரம் அசுத்தமாவதெப்படி.

ஶிவத்விஜகரேணைவ ஸ்வீகார்யம் விஶேஷத꞉ । அந்யத்விஜகரேணாபி ஸ்வீகார்யம் ந காரயேத் ॥ ஶிவத்விஜகரஸ்தம் ஶிவஹஸ்தமிதி ஸ்ம்ருதம் ॥ அந்யத்விஜகரஸ்தம் ஶிவ... கீர்த்திதம் ॥ ஸ்நாத்வா ... வ்யயேந்ந ஶிவஹஸ்தேந தாபயேத் ॥ அந்யதா ... கோரான் ரௌரவம் நரகம் வ்ரஜேத் ॥

என்னும் பரசுருதி வாக்கியத்தால் சிவத்விஜர்கள் கரத்தினாலேயே விபூதிகொடுக்கவேண்டுமெனவும் அன்யத்விஜர்கள் கரத்தினால் கொடுத்தல் கூடாதெனவும் சிவத்விஜர் கரத்தால் கொடுக்கப்பட்ட பஸ்மாசிவஹஸ்தத்தால் கொடுக்கப்பட்டதற்குச் சமானமாகுமெனவும் அன்யத்விஜர் கரத்தின் பஸ்மாவானது அமங்களத்தை உண்டாக்கு மெனவும் சிவஹஸ்தத்தினாலேயே ஸர்வ பிரயத்தினங்களினாலும் பஸ்மாவைப் பெருதல்வேண்டுமெனவும் இதற்கன்யதாவாக நடப்பாறேயாகில் ரௌரவாதிநரகத்தை அடையவரெனவுங் கூறியிருத்தலால் இம்மஹிமை தங்கிய ஆதிசைவ பிராம்மணர்கள் திருக்கரத்தால் மஹாத்மாக்கள் யாவரும் சிவபிரஸாதம் பெருதல் உசிதமேயன்றோ—சங்கரர் முதலியவர்கள் வானப்ரஸ்தத்திற்கு மேலான துரியமாம் ஸன்யாஸ ஆசிரமத்திலுள்ளவருதலின் கிரஸ்ததர்மமுடைய ஆதிசைவர் விபூதி பிரஸாதங் கொடுத்தல் கூடாதெனின் ஸன்யாஸம்சைவஸன்யாஸம் வைஷ்ணவஸன்யாஸம் மென இருகூருய் நிற்றலின் சுத்தசிவ ஸாக்ஷாத்கார சிவதர்மதீக்ஷாஸம்ஸ்காரதுரீயத்வமிவற்கில்லையாதலின் வைஷ்ணவம் சைவமென்னும் ஸமயத்தாற் குறிக்கப்பட்ட இருதிரத்துஸன்யாஸமும் இவற்குடன்பாடற்ற

தாரும் ஸமயத்தால் மேம்பாடடையாததும் கேவலம் வேதாந்தத்தால் ஜீவஞானம்பெற்று யாவத்கர்மத்தையும் பரித்யஜித்து வேதோக்தமான பூணல் குடுமி எழுந்து கர்மபிரஷ்டராய் நிற்குமிவர்களை துரீயாசிரமீ எனவும் ஸன்யாஸி எனவுங்கூறுதல் தகுமோ ஸன்யாஸமும் பிரும்மசர்ய கிரஹஸ்தவானபிரஸ்தஸன்யாஸமென்னும் நான்காவதான ஆசிரமமுடையதாதலின் இவை ஆசிரமபேதமான தர்மங்களேயன்றோ இவற்றிற்குவேதோக்தமானபூணல் குடுமி காயித்திரி முதலிய ஸத்காரியத்தில் பங்கம் வருதல் கூடுமோ வருணஸம்ஸ்காரத்தில் காயத்திரியைவிட உயர்ந்த மந்திரம்வேதத்திலேயேயில்லையாதலால் அவற்றை கைவிட்டஇவர்கள் பிராம்மண பிருஷ்டருவார்—வேதோக்தஸம்ஸ்காரமாகிய பூணல் குடுமி முதலியவை பரித்யாகமாவதால் வேதவிஹித கர்மாக்களை பரித்யாகஞ்செய்தவர் அவைதிகராவர்கள் இவ்வாறு வைதிகபிரஷ்டராயுள்ளவர்களை ஸன்யாஸி எனவுந்துர்யாசிரமி எனவுங்கூறுதல் கூடுமோ ஆசிரமத்தை அதிக்கிரமித்தவிடத்தில் காயித்திரி நீங்குதல் கூடுமெனின் பிரும்மசர்யத்தை அதிக்கிரமித்த கிரஹஸ்ததர்மத்தில் காயித்திரி நீங்காதிருத்தலாலும் கிரஹஸ்தத்தை அதிகிரமித்த வானபிரஸ்தத்தில் காயித்திரி ஆசிரமாதீதத்தில் நீங்காதிருந்ததுபோல் ஸன்யஸித்தலிலும் காயத்திரி நீங்கக்காரணமில்லை ஸன்யஸித்துள்ளோற்கு பிரணவ ஜபமேவிசேஷமெனக் கூறியிருத்தலால் காயித்திரிநீங்கிவிடுமெனின் பிரணவத்தைமாத்திரம் ஜபம்செய்பவரிலும் பிரணவம்காயித்திரி இவ்விரண்டையுஞ்சேர்த்து ஜபிக்கும் பிரும்மச்சாரியே விசேஷமெனக் காணப்படுதலால் பிரும்மசர்யத்தில் கீழிட்டளாமான்புறை துரியாசிரமி எனக்கூறுதல் கூடாது பிரணவம் ஸன்யாஸிக்கே யுறித்தானது மற்றோற்கு கூடாதெனின் ருத்திரரிற்கு மேலிட்ட வைசியர்முதல் பிராம்மணபர்யந்தம் பிரணவாதிகாரமுடையாரெனக் கேட்டபடுதலால் ஸன்யாஸிகளுக்கு பிரணவத்தை ஸர்வமான்யமாய் விடப்பட்டதென்னுஞ்சொல் ஏறாது இவற்றால் இவர்களை ஸன்யாஸிஎனவுந் துரியாசிரமிஎனவுங் கூறுதலடாது பின்னை வேதங்களில்

வேதாந்தவிஜ்ஞாந ஸுநிஶ்சிதா
ர்த்தா: ஸந்ந்யாஸயோகாத் யதய: ஶுத்தஸத்த்வா: தே ப்ரஹ்மலோகேஷு
பராந்தகாலே பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே

என்னுஞ் சுருதிவாக்கியத்திற் றப்பொருள்தான் யாதெனில் [illegible]

[illegible] வேதமென்னுஞ் சொல்லிற்கு பிரணவமெனவும் அந்தமென்பதற்கு நாதமெனவும் இவ்விரண்டுங் கூடியுள்ளதை நிச்சயித்தறிவதே வேதாந்த ஜன்யஞானமெனவும் சுத்தஸத்வா என்பதற்கு ஜிதேந்திரியத்வமுடைய சிவதீக்ஷாதி பரஸம்ஸ்காரத்தால் நிர்மலாத்மாவாய் பிரும்மலோகே பிரும்மபிலமாகிய ஸதாசிவபுவனத்தில் சிவனை ஸாதாரணமாய் அடையும் பொருட்டு பெரிதான ஸதாசிவ சரீரமாம் அந்த புவனத்திலிருந்து பராந்தகாலே பரா உண்மனையின் அந்த காலத்தில் லயகாலத்தில் ஸந்யாஸயோகாத் அகாரம் முதலிய அதிஷ்டாக்களை செய்வையாகவைத்து சேர்ந்து பராமிருதாத் பரசிவ ஞானத்தினால் ஆத்மாவை சிவபெருமானிடத்தில் ஸம்யோஜித்தால் ஸம்ஸாரபாசம் விடுமென்பதிதன் கருத்து இவற்றுள் பிரணவம் முதல் நாதபர்யந்தமானது வேதாந்த ஜன்யஞான மென்பது சுருதிமுகத்தால் வெளிப்படுகின்றது பரசுருதியிலேயோ [illegible] ம்.வாக்கியத்தால் அகாரம் உகாரம் மகாரம் பிந்து அர்த்தசந்திரன் நிரோதி நாதம் நாதாந்தம் சக்தி வியாபினி ஸமனை உன்மனை என பன்னிரண்டு ஸ்தானம் மெய்நூல் வழி விளங்குதலால் அகாரமுதல் நாதபர்யந்தமான ஸ்தானம் வேதாந்த ஜன்யஞான

மாதலால் வேதாந்தம் கீழிட்டுள்ள ஏழு ஸ்தானத்தையே வெளிப்படுத்துமென்பது பொருளாகின்றபடியால் அதற்கு மேல் நாதநாதாந்தமுதல் நிருமயமிருதியாக ஸ்தானம் ஐந்திருத்தலாலிவற்றை வேதாந்தம் விளக்குமியல்புடையதன்று ஸித்தாந்தரூபமான சிவாகமங்களே இவ்வைந்து ஸ்தானங்களையும் நன்கு விளக்க வல்லுடையது இஃதன்றி சிவதீக்ஷாதி ஸம்ஸ்காரத்தால் நிர்மலாத்மாவாய் இருத்தல் வேண்டுமென்பது சுருதிமுகத்தால் வெளியாயின இதுவும் சிவாகமத்தால் அறியத் தகுந்த மார்க்கங்களாம் ஸதாசிவபுவனத்திலிருந்து என்பதற்கு சிவாகமமே பயன்பட்டுநின்றமையாதலின் வேதாந்த மிங்ஙனம் விலக்காகும் ஸமனு உன்மனு பேதங்களும் ஸம்போக அதிகாரக் கிரமங்களும் சிவாகமத்தால் வெளிப்படுமேயன்றி வேதாந்தத்தால் விளங்கத் தக்கதன்று அகாரர்த்தி அதிஷ்டாதாக்களை சிவாகமம் விளக்குமன்றி வேதாந்தம் விளக்குவதன்று இவற்றால் சிவாகமஞர்களுக்கு ஸன்யாஸயோகம் ஸம்பூர்ணயுள்ளதென்பது திண்ணம் பரமசிவஞானத்தில் ஆத்மாவை சேர்ப்பது ஸித்தாந்தரூப சிவாகம ஞானமேயன்றி வேதாந்திக்குத்தனக்கன்னியம் பொய்யாதலால் சிவபெருமானிருப்பும் பொய்யாம் அந்த ஞானத்தில் ஆத்மாவை சேர்ப்பதென்பது பொய்யாம் இவ்வாறு சுருதிக்கிலக்கான வேதாந்திகளை ஸம்ஸாரபாசம் எப்பொழுதும் விடாது இக்காரணம்பற்றி இந்த சுருதியும் சிவாகமஞர்களுக்குப் பயன்படுமன்றி வேதாந்திகளுக்கு அணுத்துணையும் பயன்படா இவற்றாலும் ஆதிசைவர்கள் ஜகத்குருவென்பது தெற்றென வெளியாகின்றது இம்மஹிமை பொருந்திய ஆதிசைவர்களை நோக்க ஸன்யாஸி விசேஷமென்பதை யாவரொப்புவர் ஸன்யாஸி என்பது வைஷ்ணவம் சைவமென பேதமிரண்டுடையதாதலின் தற்கால வியவஹாரத்திலுள்ள ஸன்யாஸிகள் வைஷ்ணவஸன்யாஸியா அல்லது சைவஸன்யாஸியா வைஷ்ணவஸன்யாஸியாயின் பூணல்குடுமியெடுத்து நித்யானுஷ்டான மொழுக்கக்காரணமில்லை சைவஸன்யாஸியாயின் சிவதீக்ஷை மஹாகாரண பஞ்சாக்ஷரம் ஜபஞ் செய்வதோடும் பூணல் குடுமியும் இருக்கும் இவர்கள் சிவகாயத்திரி ஜபஞ் செய்தல் வேண்டும் இவ்விரு திறத்திற்கும் விலக்காம் ஸன்யாஸம் யாதென்பதைப் பரிசீலிக்க விடந்தருகின்றது ஸமார்த்த ஸன்யாஸமெனின்

ஸ்மார்த்தமதமென ஸமயமிருந்தாலன்றோ ஸ்மார்த்தஸன்யாஸ
மெனக் கூறுதலுங் கூடும் ஸ்மார்த்தமென்னும் மதமின்றாதலால்
இக்கணம் ஸன்யாஸி என்பதும் விருத்தமாம் ஸ்மிருதி அநுஷ்
டானமுடையார் ஸ்மார்த்தர் என்பது கூடாதோவெனின் விபூதி
சிவபூஜை உருத்திராக்ஷதாரணம் முதலிய பரதர்மங்கள் ஸ்மிரு
தியை அறுத்தெடுத்தாலும் அகப்படாதாதலால் ஸ்மார்த்த ஸன்
யாஸிகளுக்கு பஸ்மருத்திராக்ஷ சிவபூஜாதி பரதர்மங்களிருக்கா
ய் முடியும் வேதாந்த ஸன்யாஸிகளெனின் வேதாந்தம் பரகிரு
தி முதல் பிரதிவிதத்வபர்யந்தம் ஜகத்தெனச் சுட்டப்படுவதால்
நாதபர்யந்தமே இங்ஙனம் வெளிபாதல் பற்றி நாதாந்தம் முதல்
கிராம்ப சிவபதம் வரையில் விளக்கும் சைவஸித்தாந்திகள் பழு
த்தேபஸ்மருத்திராக்ஷ சிவபூஜாதி பரதர்மங்கள் நிற்றலால் வே
தாந்திகளுக்கிவை குற்றமாம் வேதாந்திகளுக்குத் தமக்கன்யம்
பொய்யாயிருத்தலால் பஸ்மருத்திராக்ஷ சிவபூஜாதி ஸத்கர்மாங்
களும் மித்தைப்பொருளாம் ஸித்தாந்த ரூப சிவஞானிகளுக்
கிவை ஸத்யப்பொருள் இதிற்சிறிது முற்றுணைக்காது இவர்க
ள் பஸ்மவைபவங்கொண்டாடல் குற்றமாம் இச்சன்யாஸிகளிட
த்து சிற்சிலர் பஞ்சாக்ஷரம் முதலிய மஹாமந்திரங்களுபதேச
ம்பெறுகின்றார் ஸன்யாஸிகள் குருத்வமாயமைதற்கு பதிஞானி
டந்தருமா க்ருஹஸ்தஸ்ஸர்வவர்ணாநாம் குருஸ்ஸ்யாச்ச ஸர்வதா
ஸர்வதா! ஸந்ந்யாஸிநா ந கார்யஞ்ச க்ருதம் சேந்நிஷ்பலம் பவ
ந:। என்னும்வாக்கியத்தால் கிருஹஸ்தன் ஸர்வவர்ணிகளுக்கும்
குருவென்றும் ஸன்யாஸியால் இந்த காரியத்தைச் செய்யக்
கூடாதென்றுஞ் செய்தால் அந்த கர்மம் நிஷ்பலமாமென்றுங்
கூறியிருத்தலால் ஸன்யாஸிகளிடத்தில் மந்திரோபதேசம் பெற்
றோர்க்கும் காரியஹானியை உண்டாக்கும். ஆதிசைவகுலே
ஜாதஶ்ஶைவஸ்ய ஸர்வ ஶாஸநாதிஷு ! வித்யாதீக்ஷா யஸ்ய ஸம்ப-
ந்நா ஶைவீயா மந்த்ரஸம்ஸ்க்ருதா ! தீக்ஷாயாம் ஸம்ஸ்க்ருதாநாம்
வ்ரதிஷ்டாயாம் யோக்யோ ஸ்வ ஸ்தாபநே வ்யாக்யாநே ச வ்யா
யஸ்தீக்ஷாஸிஷே உதேநா வ்யாவ்ருத்தாந ஶைவஸ்யாசார்ய தேச
மைவ வாராதிகே । ஸாவதேவாவத்தேநமேவ ஆதிசை
வாசார்ய ஈத்ருஶ: । ஆதிசைவகுலத்தில் ஜனித்தவர் பிரதிஷ்டாதி

தருக்குச் சிறந்தவர் பிராமமணர் முதல் சூத்திரர் பர்யந்தமுள் ளா நான்கு வருணத்தாரும் அவர்கள் தங்கள் ஆத்மார்த்தக் கிரியைக ளையே செய்தற்குரியார் யாவருக்கும் தீக்ஷை செய்தல் பிரதிஷ் டை உத்ஸவம் ஸ்நபனம் ஸம்ப்ரோக்ஷணை பிராயச்சித்தாபி ஷேகம் சிவஞானசாஸ்திரமுபதேசித்தல் இவை முதலிய முக்தி பரமான பரார்த்த கர்மாக்களில் ஸ்வார்த்தத்திலும் பரார்த்த த்திலும் ஜகத்குருக்களாகிய ஆதிசைவர்களுக்கு அதிகாரமிருப் பதோடும் ஸகலதேவார்ச்சனைகளிலும் அதிகாரமுள்ளவரெனக் காணப்படுவதால் மந்திரோபதேசம் முதலிய ஸகல கர்மாக்களு க்கும் ஆதிசைவர்களே அதிகாரிகளென்பது தெற்றென வெளி யாகின்றது இவர்களோடொக்க ஸன்யாஸிகள் விசேஷரென்பது சாஸ்திரமறியாதோர் செயலேயாகும் அத்வைதபாஷ்யம்செய்தரு ளிய வேதாந்தா வலம்பிகளாகிய ஸன்யாஸிகளோடொக்க ஆதி சைவ பிராம்மணர்கள் விசேஷராவது யாங்ஙனமெனின் சிவஞா ன சித்தியார் நானே பிரமமென்றுரைத்து ஞாலம் பொய்த்தே ரென வெண்ணியூனை புகுந்து நின்றுயிர்கட்குபதேசங்களுரைத் து வருமாறுமதிகேடனுமாய் மாயாவாதி பேயாகித் தானேயுரை க்குமன்றாலி னுண்மை தன்னைச் சாற்றுவாம். என்னும் வாக் கியத்தால் நானேபிரமமென்றும் இவ்வுலகம் பொய்த்தேர் போன்றதெனக்கூறிய இவர்சுக்கில சுரோணிதக் கூட்டுறைவால் ரக்தமாம்ஸாஸ்தி மயசரீரத்தில் புகுந்து இவர்க்கன்யமானஉயிர் களுக்குபதேசிக்கும் பெரியமதிகேடனுமாய் இவர்கள் மாயையால் பிடிக்கப்பட்ட பிசாசாய்தாமென அகந்தை கூறியுரைக்கு இம் மாயாவாதநூலினுண்மையும் சொல்கிறேனென்றார் இவற்றை நோக்கியே யன்றே திருலோசன சிவாச்சாரியார் பரவித்யாபாஷ் யத்தில் ஶிவஜ்ஞாநம்விநா கேவலாத்வைதஜ்ஞாநேந முக்திர்நைவ ஜாயதே என்னும்வாக்கியத்தால் சிவஞானமல்லாது கே வலாத்வைதஞானத்தினுல் முக்திகிட்டாதெனவுங் கூறியிருக்கின் றார் கேவலாத்வைதஞானம் அஞ்ஞானமேயாதலால் அதுசிவஞா னமாகாது இதுவுமன்றி பலகாலுந் தாம்பிரமங்கண்டவர்போற்றம் மைக்கண்டாங்க துவேநாம்பிரமமென்பவர் பானன்றே செஞ்சொலாலாதிமறைபோகியதன்பயனென்றும்மறியா வேதி யர்சொல்மெய்யென்று மேவாதே பதிபசுபாச முற்றதி நீறுத்

சிவாலயமு முள்ளத்துச் செற்றபுலையர்பாற் செல்லாதே நற்றவஞ்சேர் வேடமுடன் பூசையருள மெய்ஞ்ஞானமில்லாத மூடருடன்கூடி மயங்காதே நீட வழித்து பிரப்பதறியாதரனைப் பழித்துத்திரிபவரை பாராதே என்னும் ஆன்றோர் வாக்கியத்தால் எக்காலத்திலும் தாம்பிரம்பத்தைக் கண்டவர்போல் தம்மைக்கண்டு நானேபிரும்மமென்பவர் கிட்டநெருங்காதே தெளிவான ஆதியானவேதங்களை யோதி அதின் பிரயோஜனத்தையரியாத பிராம்மணர்சொல்லை உண்மை என்றுநம்பாதே திருநீறுஞ் சிவாலயமும் தனதுள்ளத்து நினையாப்புலையர் கிட்டநெருங்காதே நல்லதவத்தைச் சேறத்தக்க விபூதி ருத்திராக்ஷ சிவபூஜைமுதலிய உண்மைஞானமில்லாத மூடருடன்கூடி திரியாதே தொன்று தொட்டு ஸிருஷ்டித்து ஸம்ஹரித்துவரும் பரமேசுவரரை தூஷித்துதிரிபவரைபாராதேனக்கூறியிருத்தலால் நானே பிரும்மம்எனக்கன்யம் பொய்யென்னும் மாயாவாதிகளுடன் சேராதே என்பதும் வேதாத்யயனஞ்செய்து அதின் உண்மையான அர்த்தத்தை தெறியாதவரான பிராம்மணர் வார்த்தையை நம்பாதே என்பதும் ஏகான்மவாதிகளாகிய மாயாவாதத்தைக் குறித்ததாம் திருநீறும் சிவாலயமும் தனதுள்ளத்து நினையாப்புலையருடன் சேராதே என்றதால் நானேப்பிரும்மம் எமக்கன்யம்பொய் என்பார்க்குவிபூதிசிவாலயமும் பொய்யாயிருத்தலால் இவர்களைச்சேராதே என்பது கருத்தாம்நல்லதவத்தைச் சேரத்தக்க விபூதிருத்திராக்ஷ சிவபூஜைமுதலிய ஸதாச்சாரத்தில் உண்மைஞானமில்லாதமூடருடன் சேராதே என்றதால் விபூதிருத்திராக்ஷம் வேஷம் சிவபூஜைமித்தைநான் மாத்திரமே சத்தியம் மற்றயாவும் பொய்யென்னும் மூடருடன் கூடாதே என்றதாம் ஸிருஷ்டித்து ஸம்ஹரித்துவரும் பரமேசுவரரை தூஷித்து திரிபவரைபாராதே என்றதால் ஸிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களும் வியாவஹாரிகம் பாரமார்த்திகத்தில் இவையாவும் பொய்யெனக்கூறுபவரோடு சேராதே என்றதால் இவையாவும் மாயாவாதிகளின் கூட்டுரவு கூடாதென்பதாய் கண்டித்தொதுக்கிய விஷயமாயிற்று இவ்வாறே ஸதாஸம்பூஜ்யஸெளாக்ஷ்யஷடாக்ஷஸ்ஸம்பூஜ்யவாதிஷு । ஜநநஜாஸ்வஷிநாஷுஸ்யீதஷாமக்ஷும் வஸிஷ்ஜேக என்னும் வாக்கியத்தால் எப்பொழுதும் பிரம்மத்தை பார்க்கிறே

யென்று தன்னை பிரும்மமாகச் சொல்லும் மனுஷனை ஒருசமயத்திலும் பார்க்கக்கூடாது சேரவுங்கூடாதெனக் கூறியிருக்கின்றது. தீஸம கீர்த்தி ஸ்ரோத்ரீநாம் ஸ்வஜ்ஞாநம் விநாஸதா! ஸதாம் விப்ரவஸ்த்ரநாம் வாக்யாநாத்ரிய தாம் தயா । என்னும்வாக்கியத்தால் வேதார்த்தந் தெரியாத பிராம்மணன் வார்த்தையைநம்பாதே என்பதாம். ஸிவாலயம் விபூதிஞ்ச யோ ந ஸ்மரதி மாநவ: । தேவா நாஸ்திகாஸாம ஸந்தேவகர்த்ய ஸங்கமாவஹ । என்னும்வாக்கியத்தால் சிவாலயம் விபூதி இவைகளை நினைக்காதசித்தத்தையுடை பஞ்சமர்களின் சேர்க்கையை செய்யக்கூடாது எனவும் தபஸ்ஸாம் மஹாஸித்திதாநுதீக்ஷாகரம் ஸிவேஸஸ்ய க்ஷவமஜாக்ஷருத்ராக்ஷ ஸிவஸம்பந்தா: । என்னும்வாக்கியத்தால் தபசினால் அடையக்கூடிய மஹாஸித்தியை கொடுக்கிற தீக்ஷாகரமாயிருக்கிற மங்களகரமாயிருக்கிற பஸ்ம ருத்திராக்ஷ சிவபூஜைகளில்லாதவரோடு சேராதே என்பதாம். ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரஹேதும் லோகாநாம் ஸர்வேஸ்வரம் । த்ரூஷயந்தஸ்ய ஸங்கம் வர்ஜயேந்நவாஸிதஸாமகம் । என்னும் வாக்கியத்தால் லோகத்திற்கு ஸிருஷ்டி திதி ஸம்ஹார ஹேதுவான பரமேசுவரரை தூஷிக்கிற மனிதர்களைச் சேராதே என்பதாம். இவ்வாறுள்ள ந்யாயம் பலவுளவற்றால் கேவலம் வேதாந்தஜன்யஞானஜ்ஞானமாயிருத்தலால் சிவஞானவிளங்கப்பெற்ற அதிதாசிரமபேதமுடைய ஆதிசைவ பிரும்மணர்களை நோக்க வேதாந்த ஸன்யாஸி விசேஷமாவதெப்படி இக்கருத்தையுட்கொண்டே யன்றோ ஸ்ரீஜிதே ஆஸாயமிதிஸர்வஸ்ய ஸர்வாரஸாக: । ம ஸம்ஸேஷ ப்ரவேஸாஸ்யாஸ தீக்ஷாயஸ்ஸவிப்ரகம் । வேதாந்த ஸவிஸேஷ்ஞம் ஸஜம்ஸம்பவஸ்விதம் । மஹாஸைவாதி, விப்ர ஸஹாஸம்பவஸ்வதம், ஸைவஸ்தீஸ்தித ஸைவஸந்யாஸீ ந்ய ஸ்ஸம்பவே । க்ஷத்ரியஸ்யாபி ஸைவஸ்ய வைஸ்யே ச விஸேஷத: । ஸஸ்ஸம்ஸ்ரீ ப்ரஷப்ரஷ்ட ஸஸங்ஸ்ஸ்ரீ தத:பரம் । ஸஜ்ஜாதேர்ஞாதேர்ஸாஹ்யஹாஸவிஸேஷத: । ஸ்ஜாதம்பஸ்யவா ஹேஹ்யஸஸஸீஸம்ப்ரதிஷ்டாதம் । ஸம்பாஷாதிஸியஸவைஸ் ஸ்ஸஸாதீயஸிஸ்ஸாம் । ஸ்ருஷ்டிஸாக்ஷாதேகவிஸ்ஸ்ஸ ஹாஸ் ஸ

கோராஷ்டிரஸ்ருஷ்டிஷேஷவாசி ! என்னும் வாக்கியத்தால் ஆச்சார்ய
ன் அர்ச்சகன் ஞானிகன் பாசசகன் பரிச்சாரகன் முதலிய பஞ்
சாச்சார்யர்களும் கர்ப்பக் கிரஹத்தில் பிரவேசிக்கலா மெனவும்
வேதாகம விசேஷஞ்ரும் சிவதீக்ஷை பெற்றவருமான அத்ய ன
பட்டர் அர்த்தமண்டபத்தில் நின்று ஸேவிக்கலா மெனவும் ம
ஹாசைவர்களான பிராம்மணர்கள் மஹா மண்டபத்தினின்று
ஸேவித்தல் வேண்டுமெனவும் தபஸி அபரயாகஞ்செய்து தீக்ஷி
தரென பெயர்பெற்றோர் ஸன்யாஸி இவர்கள் நிருத்தமண்டப
த்தினின்று ஸேவித்தல் வேண்டுமெனவும் க்ஷத்திரியர் வைச்யர்
இவர்கள் ஸ்நபனமண்டபத்தினின்று தர்சித்தல் வேண்டுமென
வும் ஸச்சூத்திரி விருஷபத்தின் பின்புறத்தில் நின்று தர்சித்தல்
வேண்டுமெனவும் அஸச்சூத்திரி இவர்களுக்கும் பின்னின்று
தர்சித்தல் வேண்டுமெனவும் அநுலோமன் இரண்டாவது பிர
காரமாகிய அந்தர்ஹாரத்தில் நின்று தர்சித்தல் வேண்டுமெனவு
ம் பிரதிலோமர் மத்தியஹாரமென்னும் பிருகாரம் த்வஜதண்டத்
திற்கு வெளியில் நின்று தர்சித்தல் வேண்டுமெனவும் பஞ்சமர்க
ள் முதலிய தாழ்ந்தவர்கள் யாவரும் மஹாமர்யாதியாகிய ஐந்
தாவது பிராகாரத்தில் நின்று தர்சித்தல் வேண்டுமெனவுங் கூறி
யிருத்தலால் அதிஷ்டானு சிரதராகிய ஆதிசைவ பரமாச்சார்ய
ர்களை ஏகைக்க மண்டபாசிரத ஸன்யாஸிகள் விசேஷமறுவதெப்ப
டி இவ்வாறுள்ள ஞாயம் பலவுளவற்றால் சிவாகமஜன்ய ஞானம்
ஸன்யாஸிகளுக்கு அத்யாவசியகம்வேண்டப்படுமாதலின் இவை
கைவறப் பெறுதோர் ஸாமான்யஞானம் பெற்றஜீவஞானிகளே
யாவர் வேதாந்திகளுக்கு ஸமயநெறிக்குறிப்பின்மையின்மதப்பி
ருஷ்டத்வ மெய்தப் பெறுவார் மதப்பிருஷ்டத்வம் மதத்தில்
சேர்ந்துள்ள ஒருவர் அவை நீற்றுனின்ற விடத்துக் கூறுதல்
தகுமேயன்றி ஸமயநெறியடி யொட்ற்ற வேதாந்திகளை
நாஸ்திகரெனக் கூறுதலொழிந்து மதப்பிருஷ்டரென வலி
ந்திட்டிப் பொருள்கொள்ள விரும்பிய தென்னென் பிராம்மண
ஜாதி சிவமதமென முன்னர் ஸமயங்குறிப்பிட்ட ஒருவரேயன்
றோ வேதாந்தஜன்ய கேவலாத்மஞானத்துட்பட்டு வருந்து
கின்றார் இங்ஙனம் மதத்தினின்று நீங்கியது காரணமாய் நிற்ற
லின் மதப்பிருஷ்டரெனக் கூறியதன்றி வேதாந்திகளை ஆஸ்திக

ரெனக் கூறவெளிவந்தது மின்றும் இவற்றால் வேதாந்தாசலம்பி களாகிய ஸன்யாஸிகளும் நாத்திகரென்பது ஞானமுகத்தால் போதரும் அதிதீவிரதரபரிபாகிக்குக் கூறியுள்ளமெய்ச்சமயமாகி யசைவஸமத்தைக்கைவிட்டு வேதாந்தக்கொள்கை யவலம்பித்து யாம் பிரும்மம் யாம்பிரும்மமென செருக்குற்று நாத்திகராதற் குக் காரணம்யாதெனின் வித்தை அபரவித்தை பரவித்தையென இரண்டாயிருத்தலின் இவ்விரண்டு வித்தைகளையும் அத்யயன ஞ் செய்தல் உசிதமாயிருக்க அபரவித்யாத் யயனத்திலேயே காலங்கடத்தி பரவித்தை னேக்கஞ்சிறிதும் மனம்மற்று அவை குருக்களுக்கு நமக்குவேண்டாமென உபரதியடைந்த குற்றத் தால் இவற்கு நாத்திகத்வமேறப்பெறும் வேதாந்த பாஷ்ய மனேக்கிய ஒருவன் சிவாகமத்தை உற்றுனேக்கப்புகுவானாயின் வேதாந்தத்தை நிர்ணயித்து ஸித்தாந்தித்துள்ளது பரவித்தை யாஞ் சிவாகமமென்பது தெற்றெனப் புலப்படும். இவ்வுண்மை நீற்றுவேதமொன்றே எனக்குப் போதும் சிவாகமம் வேண்டா மென்னும் அவை திகவாதத்தாலன்றோ ஸத்பிராம்மணர்களும் மதபிருஷ்டராதற்குக் காரணமாயிற்று பரவித்தையாஞ் சிவாக மங்களில் நம்மால் நியமித்து உபஜீவிக்கச்செய்த குருக்களை உயர் வெனவும் பிராம்மணரை ஸாமான்யரெனவுங் கூறியிருத்தலால் பிராம்மணருக்குயர்வு கூறிய வேதமே எமக்குப் பிரமாணமெ னின் [illegible] என்னும் வேதவாக்கியத்தால் குரு முகமாகவே அறியத்தக்கது குருவன்றியிலறியக்கூடாது எனவேதம் உத்திரவளித்திருப்ப தால் குருக்களுக்கு பிராம்மணர் தாழ்ந்தோரென்பது வேதக்க ருத்தன்றோ இவற்றால் வேதமுமிவர்களையுயர்த்தாது குருக்களை யுயர்த்தி கூறியிருப்பதால் இவர்களுக்கு வேதமுமன்றோ அப்பி ராமாண்யமாய்க்கொள்ளவேண்டி வரும் வேதத்தில் கூறியகுருத் வம் வேதாத்யயனங்கற்பித்துவைக்கு கனபாடியருக்குஞ்சாஸ்திரா ப்யாஸஞ் செய்துவைத்த சாஸ்திரிகளுக்கும் பெறுமன்றி கோயி ல்க்குருக்களை குருத்வமாகக்கொள்ளுதல் யாங்ஙனமெனின் வே தாத்யயனஞ் சொல்லிக்கொடுப்பவரை கனபாடியெனவும் சாஸ் திரபாடஞ்சொல்லி வைப்போரை சாஸ்திரியரெனக்கூப்பிடு தல் உலகவழக்காயிருக்க அவர்பால்குருத்வமேற்றுவதுந்தவராம்

குசப்தஸ்த்வந்தகாரஸ்ஸ்யாத் ருசப்தஸ்தந்நிரோதக: ॥ அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே ॥ என்னும் பரசுருதிவாக்கியத்தால் குவென்பது இருட்டெனப்பொருள்படுமெனவும் ரு என்பது இருட்டை நீக்குதல் என பொருளாதல்பற்றி அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை பிரகாசிப்பிக்கத்தக்கவர் குருவென்பதற்கு பொருளாமெனவுங் கூறி யிருத்தலால் ஞானமுபதேசிப்பவரையன்றோ குருவெனச்சுட்டப்படும். கேவலம் ஞானோகநிஷ்டசாதன சதுஷ்டய சர்யை கிரியை யோகஞானானுபவசிவஸாக்ஷாத்காரபரமுக்தியை உலகினருய்ய கிருபை கூர்ந்து புரியும்ஜகத்குருக்களாகிய ஆதிசைவபிராமணர்களையன்றி குருத்வம் வகித்தற் குரியார் ஒருவருமின்றாதலால் அப்பர மாச்சார்ய ரூபர்களான ஆதிசைவ பிராம்மணர்கள் பரத்தேஜகத் குருத்வஞ் சாதிக்கப்படும் வேதாந்தப்பிரவர்த்தகம் வகித்த சங்கராச்சாரியார் எங்களுக்கு குருவாவாரெனின் சங்கராச்சாரியாற்கு லோககுருத்வம் பிரமாண பிரஸித்தமாய் ஏற்படாததாலும் நீங்களெல்லோரும் பிராம்மணஜாதி சிவமதத்துள்ளோருமாய் காணப்படுதலின் வேதாந்தப் பிரவர்த்தகம் வகித்த சங்கராச்சாரியரிடங் குருத்வங்கொண்டாடுதல் வேதாகமாதி ஸத்பிராமணர்களுக்கு விருத்தமாம் வேதத்திலேனும் புராணத்திலேனும் சிவாகமங்களிலேனும் சங்கராச்சாரியரை ஜகத்குருவாய் கூறியுள்ளவசனமுளதேல் எண்டுத்துவிளக்குவாராக இவற்றால் நாம் பூஜார்த்தங் கொணர்ந்து வைத்தகுருக்களை நாம் குருவென்பது கூடாதென்னும் மமதையை நீக்கி நாம் க்ஷேத்ரமார்த்தங்கோயிலில் பிரதிஷ்டித்த லிங்கத்தை தாமேவணங்கி அனுக்கிரமடைதல்போல் நாம் பூஜார்த்தம் ஸ்தாபித்துள்ள குருக்களும் நமக்கு குருவாவர் என்பதேனின்ன மிவர்வளுக்கு புலப்படுகிறதில்லை குருக்கள் வீட்டில் ஜலபானமும் செய்யாதிருக்க அவர்களை ஜகத்குருவாய் கொண்டாடுதலெங்ஙனமெனின் குருக்கள் வீட்டில் சாப்படகூடாதென எந்தவேதங்கூறியிருக்கின்றது எந்தசிவாகமங்கூறியிருக்கின்றது எந்தபுராணங் கூறியிருக்கின்றது நீங்கள் குருக்களை காளினீயரெனவுங் குண்டகோளகரெனவும் இதுபர்யந்தநீளாத்து நிந்தித்து வந்தீர்கள் காளினீயர் குண்டகோளகர் இன்

ரென்பது பிரமாணபிரஸித்தமாய் விளக்கி இவர்கள் அவற்ன்
றென மருந்துணர்த்தி யுள்ளோமாதலால் ஜலபானங் கூடச்
செய்யாதிருக்கத்தக்க அகிருத்யம் இவரிடம் யாதுளது பாகவத
த்தில் சிவநிர்மால்யம்பு சித்தல் கூடாதெனக் கண்டித்திருக்க
சிவாலய நிர்மால்யம் புசித்தலால் குற்றமாவாரெனின் பாகவதம்
ஶிவ தூர: ஸாவயோஷாஸவதம் எனப் பொருளாதல்பற்றி
வியாதேவாயார் பரமாய்க்கூறியுள்ள தேவீபாகவதம் பதினெட்
டு புராணத்திலொன்றும் பாகவதமே யன்றி பொப்பண்ணர்
என்னும் தெலுங்கரால் சிவதூஷணார்த்தஞ் செய்யப்பட்ட பாக
வதம் பிரமாணமாகா யாமெடுத்துக் காட்டும்பிரமாணங்களை பிர
மாண மன்றெனக்கூறுதல் கூடுமோவெனின் பிரமாணத்தை பிர
மாணமாகவு மப்பிரமாணத்தை யப்பிரமாணமாகவும் கூறு
தல்வழக்காயிருத்தலால் பாதகமின்றும் அங்ஙனங்கூறியிருப்ப
தற்குச் சமாதானந்தான் யாதெனின் ருக்வேதத்தில் ருத்ர ஸா
ஸ்தம் ஜீவ ருத்ர ஸீதம் ஸிவெக ருத்ர வ்ராதம் ஸிம் ஷ்ரதி
தஸ்மாத்ஸ்வ்ராஹ்ணா: வ்ரஶாதோ நஸா ஸிசிரா ஷ்ந் வேஷஸ்
யதி என்னும் வாக்கியத்தால் ருத்திருக்குநி வேதிதமான
அன்னத்தையே சாப்பிடவேண்டுமெனவும் ருத்திரருக்கு அபி
ஷேகித்த தீர்த்தத்தையே பானம்பண்ணவேண்டுமெனவும்ருத்தி
ரனுக்கு பூஜித்தபுஷ்பத்தையே ஆக்கிராணிக்க வேண்டுமெனவும்
பிரசாந்தமனஸையுடைய பிராம்மணர்கள் நிர்மால்யத்தையே புசி
த்தல் வேண்டுமென கூறியிருக்க சிவநிர்மால்யங்கூடாதென
பொப்பண்ணருளறியதை யாவரொப்புவர் ருக்வேதம் ஸஞ்ஸி
ஷுதிதம் ஜமெருத்ரம் வரோசீ ஷயாஸ்ருஹ்ஸிஜிஹ்யா
ஸஸம் ஸர்வான்மாக்களுள்ளும்அந்தராத்துமாவாயும் ஸர்வோத்
கிருஷ்டராயு மிருக்கிற ருத்திரரான பரமசிவத்தை எந்தமனிதர்
கள் புத்தியினால் தியானிக்கிறார்களோ அவர்கள் சுவையுடன்
கூடிய அன்னத்தை நாவினால் புசிக்கிறார்கள் தியானியாவிடில்
மலத்தையே நாவினால் புசித்தற்கொப்பாகுமெனக் கூறியிருத்த
லால் சிவநிர்மால்யமன்றி மற்றயநிர்மால்யங்களை புசித்தால் மலத்
தைப் புசித்தற்கொப்பாமென பிரமாணமுகத்தால் வெளிப்

படுதலின் [illegible] என்னும் பொய்ப்பண்ணை தேவர்தாத வசனங்களை யாவரொப்புவர் சிவரஹஸ்யத்தில் [illegible] | என்னும் வாக்கியத்தால் சிவநிர்மால்யமானது மலரகிதமாயும் சுத்தமாயும் இருப்பதால் நிந்திக்கக்கூடாதெனக் கூறியிருத்தலால் சிவப்பிரஸாதமாகிய நிர்மால்யம் பரிசுத்தாத்மாக்களான பிராம்மணர்களுக்கு புசிக்கத்தக்கதென வேதமேகூறியிருத்தலால் வைதிகசிரேஷ்டர்களான ஆதிசைவ பிராம்மணர்கள் சிவநிர்மால்யம் புசித்தல் குற்றமாகா இன்னங்கூறிய நிர்மால்யம் ஆத்மார்த்த பூஜாபரமெனின் ஆத்மார்த்தத்தைநோக்க ஆலயஸேவைகோடி மடங்கதிக பலனாயிருத்தலின் ஆத்மார்த்த பூஜாநிர்மால்யத்தை நோக்க ஆலயாதி நிர்மால்யம்விசேஷமாமென்பதுகருத்து [illegible] என்னும்பரசுருதி வாக்கியத்தால் சிவநிர்மால்யமானது தேவஸ்வம் தேவாதிருவ்யம் நைவேத்யம் நிவேதிதம் சண்டதிருவ்யம் பஹிக்ஷிப்தம் என ஆறுபேதமுடையதெனவும் தேவஸ்வம் என்பது கோயிலுக்கு ஏற்பட்டகிராமம் பூமி முதலியவை என்றும் தேவதாதிருவ்யமென்பது தேவாலயத்திற்குள்ள ரொக்கம் வஸ்திராபரணம் தாஸீதாஸர்களுக்கு விட்டமான்யங்கள் முதலியவைகளென

வும் நைவேத்யமென்பது சிவபெருமானுக்கு நிவேதிக்க மர்கொது சமைத்துவைத்துள்ள அன்னம்முதலியவைகளெனவும்நிவேதிதமென்பது சிவபெருமானுக்கு அர்ப்பணமான அன்னமெனவும் சண்டதிரவ்யமென்பது நிவேதிதான்னத்தை ஆறுபாகஞ்செய்து ஆச்சார்யருக்கு மூன்றுபாகமும் ஸாதகருக்கு ஒருபாகமும் தாவலீதாஸர்களுக்கு ஒருபாகமும் சண்டேசருக்கு ஒருபாகமும் ஆக ஆறுபாகஞ்செய்ததில் ஐந்துபாகம் பிரஸாதமும் சண்டேசுவர நிவேதிதமான ஒருபாகம் நிர்மால்யமும் பிரஸாதக்கிரஹணத்தால் ஆன்மாக்களுக்கு மலபாசன்னீங்கிஸர்வபாபத்தையும் போக்கி புத்தி முத்திகளை கொடுக்குமெனவும் சிவதீக்ஷாவிஹீனர்களான மலதேகிகளுக்கு இந்த சிவப்பிரஸாதங் கொடுக்கக்கூடாதெனவும் அபிஷேக நிர்மால்யம் பிஹிகூிப்தமெனவும் பிரஸாதமன்றி நிர்மால்யபக்ஷணங்கூடாதெனவும்நிர்மால்யம்புசித்தால் தோஷமாமெனவுங் கூறியிருத்தலால் நிவேதிதான்னம் பிரஸாதமும்-மற்றுள்ளது நிர்மால்யமுமாய்க் காணப்படுதலின் பிரஸாதங்கிரஹ்யமும் நிர்மால்யம் அக்கிராஹ்யமென்பது கருத்து தத்காலத்தில் பிஸாதத்தை நிர்மால்மெனக் கழித்து தேவஸ்வாதி நிர்மால்யங்களை பிரஸாதமாய் உட்கொண்டு சிவாபச்சாரமிழைத்துவரும் ஆன்மாக்களுக்கு சிவநிர்மால்ய வியவஸ்தாபனமெவ்வாறு கூறுவது இவற்றால் சிவப்பிரஸாதம் முட்கொண்ட ஆதிசைவபிரம்மணர்களுக்கு தோஷம் வருதல் யாங்கனம் சிவப்பிரஸாதம் ஜகத்குருக்களாகிய சுத்தாத்மாக்களான ஆதிசைவப்பிராம்மணர்களுக்குரித்தென்பதாய் வேதாகமப் பிரமாணங் கூறுதலால் இவற்றை தோஷமெனக் கூறுபவர் வைதீகருதல் யாங்னம் சிவாலயப்பிரஸாதம் புசித்ததால் குருக்களுக்குகுற்ற நேருததால் என் இவர் குருவாதல் கூடாது தெரியாத்தனத்தால் குருக்களைக் குறைகூறி சிவாபச்சார மிழைக்கின்றீர்கள் குருக்கள் வேதாகமபுராணாதி ஸத்பிரமாணங்களால் குறைவுற்றவராயிருப்பின் [illegible] என்னும் வாக்கியத்தால் கோபுரம் சிகரம் துவாரம் பிராகாரம் பலிபீடம் அர்ச்சகர் மூலலிங்கம் இந்த எழுதர்சனமும் செய்தல்வேண்டு

மென. சிவாலய ஸேவாவிதியில் கூறியிருத்தலால் ஸப்தலிங்கத்தி லொன்றும் பரமாச்சார்யலிங்கம் ஹேயமெனக்கொள்பவர் சிவபெருமானை ஹேயமெனக்கொண்ட சிவதூஷகர்களேயன்றோ ஸ்தாவரம் ஜங்கமம் சேதி த்விவிதம் லிங்கமிஷ்யதே | ஸ்தாவரம் ஸ்திரலிங்கம் ஸ்யாத் ஜங்கமம் தீக்ஷிதம் விது: | ஜங்கமஸ்யாவமா நேந தஸ்ய ஸ்தாவரஸ்ய நிஷ்பலா | தஸ்மாத்த்வயம் ஸதா ப்ராஜ்ஞோ நாவமந்யேத ஸர்வதா | என்னும் பரசுருதி வாக்கியத்தால் ஸ்தாவரஞ் செங்கமெனலிங்கம் இரண்டுபேதமுடையதெனவும் ஸ்தாவரலிங்க ஸ்திரலிங்கமான சிவலிங்கமும் ஜங்கமலிங்கம் சிவபெருமானால் தீக்ஷிக்கப்பட்ட ஆச்சார்யலிங்கமும் ஜங்கமலிங்கத்தை அவமதித்தால் ஸ்தாவரலிங்க பூஜை நிஷ்பலமாமெனவும் பிராஞர்கள் இவ்விருவித லிங்கத்தையும் அவமதியாரெனக் கூறியிருத்தலால் சிவத்விஜர்களை சிவலிங்காகாரமாய்க் கொண்டன்றோ உபாஸித்தல் வேண்டுமென வேதாகமங்கள் விதித்திருக்கின்றது.

இக்கருத்தைச் சிறிது முற்றுணேக்காது குருக்கள் தம்மில் தாழ்ந்தோரென்னும் துர்வாதம்எங்கனந்தலைநீட்டும்ஆதிசைவபரமாச்சார்யர்களை குருக்கள் ஜாதி என தனித்து பிரித்துக்கூறியிருப்பதால் ஏனைய ஸர்வஜாதிகளுமிவர்களுக்கு சிஷ்யர்களென்பது கருத்தன்றோ இவர்களைத்தவிர குருக்கள் ஜாதியார் வேறொருவருளரேல் ஈண்டெடுத்து விளக்குவாராக இவர்கள் வேறொருவருக்கு சிஷ்யருகாத ஸ்வயமாச்சார்ய புருஷரா யிருத்தலின் ஆபாலவிருத்தபர்யந்தங் குருக்களெனச்சுட்டப்படுவர்பால்யத்தில் இவர்களுக்கு குருத்வங்கூறுதல்எங்கனம் பொருந்துமெனின் ஆதிசைவஸ்ய தீக்ஷாத்வௌபசாரேண கத்யதே | ஸம்பவ ஸமேத தீக்ஷிதாஸ்ஸர்வே த்விஜா: | பராஸ்வலிங்கஸ்ய பூஜகாஸ்து ஸ்ம்ருதா: | தஸ்மாதாதிசைவஸ்ய த்வசாந்தேஷு த்விஜேஷு ஸர்வேஷா மாசார்யத்வம் ஸ்ம்ருதம் | ஸர்வேஷாம் த்விஜாநாம் ஸதா குருத்வம் ப்ரதிஷ்டிதம் | என்னும் பரசுருதிவாக்கியத்தால் ஆதிசைவர்களுக்கு சிவதீக்ஷை உபச்சாரமாகக் கூறப்பட்டதன்றி முக்யமா

காதெனவும் முதலிலேயே பூஜார்த்தம் சிவபெருமானால் தீக்ஷிக்கப்பட்டதால் பின் தீக்ஷை உபசாரமெனவும் மோக்ஷார்த்தமான ஸ்திரலிங்கபூஜைக்கு பூஜாகாலலோப முண்டாகுமாயின் அதின்பொருட்டு ஆதிசைவனுடைய பால் குடிக்குங்கொழுந்தையின் திருக்கரங்களில் புஷ்பத்தை கொடுத்து அர்ச்சிப்பது நல்ல பூஜையாமெனவும் இவ்வாறு பூஜித்தால் பூஜைலோபமாகாதெனவுங் கூறியிருத்தலால் ஸ்திரலிங்க பூஜா கைங்கர்ய ஸத்பாவம் சுத்தன்மையிலேயே வந்துவிடுவதால் கொழுந்தை முதல் விருத்தபர்ந்தமுமிவர்கள் குருக்களே குருவுக்குள்ள லக்ஷணம் இவர் பரத்திருப்பதை நீங்கள் இன்னுமறியீர்கள் ஸ்வாயம் புவாதிலிங்கனிஷ்ட க்ஷேத்திரங்களிலும் மற்றுள்ளபத்தனம் ராஜதானிகுப்ஜகம் கேடகம் நகரம் கிராமம் முதலிய பேதமுற்ற ஒவ்வொரு இடங்களிலும் ஸர்வான்மாக்களும் உய்யும்பொருட்டு ஸ்திரமாய் லிங்கத்தை பரவித்தையிற் கூறிய விதியால் ஸ்தாபித்து லோகம் க்ஷேமமடையச் செய்வதைத்தவிர ஜகத்குருத்வ லக்ஷணம் வேறு யாது வேண்டும் இஃதன்றி இப்பரமாச்சார்ய மூர்த்திகள் திருக்கரத்தால் விபூதிவாங்கித் தறிக்காதோர் யாவருளர் ஒவ்வொரு க்ஷேத்திரங்களிலும் நடக்கும் உத்ஸவாதிகளை தர்சித்து புக்தி முக்திகளை அடைய விரும்பிநிற்கும் ஆன்மாக்களனந்தம் பேய் பிசாசு பில்லி சூன்னியம் முதலிய க்ஷுத்ரப்ரயோக மஹாரோக நிவாரணங்களும் இப்பரமாச்சார்யரால் பூஜிக்கப்படுந் திருச்சன்னிதானங்களிலேயன்றோ உண்டாகின்றது இவ்வாறுள்ள மேம்பாடுடைய சிவபுண்யத்தைவிளக்கும். பரமாச்சாரிய ஜகத்குருக்களை கைவிட்டுஉலகம்உலகத்திலுள்ள யாவரும்பொய் நான்தான் உண்மை என மித்யாவாத வேதாந்தக் கொள்கையுடையாரை ஜகத்குருவெனக் கூறுதல் நீங்கள் கொண்ட சைவ மதத்திற்கழகாமோ அன்றேல் விபூதி ருத்திராக்ஷம் சிவபூஜை முதலிய ஸத்கார்யங்களை கைநழுவவிட்டு சுத்தமுகத்தராய்யாம் பிரும்மம் யாம் பிரும்மமென ஒரு பிருமத்தை ஒரு பிரும்மம் பித்தையாக்கிக்கொள்ளுங்கள் அங்கணம் உங்களுக்கு சங்கையுற்ற லோககுருத்வமும் பித்தையாய் முடிந்துவிடும். பிள்ளை வறங்கேட்க்கப்போய் பெண்டாட்டியற்ற கதைபோல் சைவஸமதத்

த்தைவிட்டு வேதாந்தத்தில் புகப்போய் குருவை யுண்மையாக்கி நீங்கள் மித்தையாய் முடிந்து விடுதல் சரியா எங்களுக்கன்யங் குருவுளாரெனின் நீங்கள் உண்மைப்பொருளாயிருக்க வேண்டு மானல் குரு அதோகதியாய் நாசத்தை அடைந்து மித்தையாய் முடிந்துவிடுவர் இக்கருத்தையுட்கொண்டேயன்றோ ஸூதஸம் ஹிதையில் கெவிஃெஆகோஶ்ய ஜாஉவதூ ॥ என்னும் வாக்கியத்தால் கேவலமான ஏகான்ம வாதத்தால் பூனையைப்போல் மனிதராய் விடுகிறார் என்றதால் பூனை பாலைச்சாய்ச்சி வைத்திருக்குமிடத்தில் மனிதர் இருப்பதை நோக்கி குடித்தாலடிப்பாரென்னும் பயத்தை யுட்கொண்டு ஒருதிரங் கண்ணை மூடிய தருணத்தில் மனிதர் காணுதிருப்பதால் கண்ணை மூடிவிட்டால் மனிதரில்லாது போய்விடுவாரெனக்கருதி கண்ணை மூடி பாலையுண்ணுந் தருணத்தில் பாலண்டை யிருப்பவர் பூனையையடிக்க பூனைக்கு மனிதருள்ளாரென்று ஞானம் வருதல் போல் தன்னைத்தவிற வேறொன்றில்லை என நினைத்திருக்கும் ஏகான்மவாதிகளும் பூனை ஞானமுடையாராவர் எனக்கூறியிருத்தலால் ஆத்யாத்மஜன்யஞான வேதாந்தவாதம் ஜீவஞானமாகுமேயன்றி சிவஞானமாகாவாம் இவ்வாருள்ள வேதாந்த ஜன்ய ஞானத்தை ஸித்தாந்த ரூப சிவாகமாதி சிவஞானம் வேதாந்த ஜன்ய ஞானத்தை ஜீவஞானமெனக் கண்டித்து இதற்குமேல் பரமொன்றுளதென தீர்மானித்து நிற்பதால் சைவஸமயமே யாவற்றிலுஞ் சிறந்து விளங்கும் மெய்ச்சமயமாம் இம்மங்களகரமான சைவஸமயத்தை நீத்து அன்யஸமயப்படுகுழியில் வீழ்ந்து தைவத்தை இழத்தல் நீதியோ இவ்வாருள்ள ஞாயம் பலவுளவற்றால் நீங்கள் யாவரும் சைவஸமத்திலிருந்து ஆஸ்திகராயிருத்தல் வேண்டுமென்னும் அபிமானத்தால்இங்கனங்கூறப்போன்றதன்றிவேறன்று உள்ளூரில் பரமாச்சார்ய பூதரான ஸ்திரலிங்க பூஜா கைங்கர்யம் பெற்ற ஜகத்குருக்களாகிய குருக்களை இழிவென நினைத்து சைவமதமே உடன்பாடற்ற வேதாந்த பிரவிஷ்ட ஸன்யாஸிகளை பெரிதாய் மதித்து தாம்பாளத்தோடு பஸ்மாவை நீட்டவேண்டும் நேறே கையில் குருக்கள் கொடுக்க கூடாதென்பது எந்த ஞாயம் பற்றியோ ஶ்ரீஶைவகாகமாஹூம் ஙஹூம நாநூ

𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍁𑌕𑌃 । 𑌤𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌭𑌸𑍍𑌮 𑌶𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾 𑌶𑌨𑍈𑌃 । 𑌆𑌦𑍍𑌯𑍇𑌤𑌰𑌕𑌰𑍈𑌰𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌦𑍋𑌷𑌕𑍃𑌨𑍍𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 என்னும் பரசுருதிவாக்கியத்தால் விபூதிவாங்கி யணிதற்கு ஜகத்குருக்களாகிய ஆதிசைவர்கள் திருக்கரமே உரியதெனவும் அன்யஹஸ்தத்தால் வாங்குவாராயின் போகம் மோக்ஷம் மிவ்விரண்டினுசக்கத அடையுமெனவும் ஆலயத்தில் தன்கறத்தால் பஸ்மாவை கிறகிப்பாருகில் தோஷத்தை யடைவாரெனக் கூறியிருத்தலால்விதிநிஷேதபரத்தில் மஹான்கள் பிறவேசிப்பது அவைதிகமாகாதோ ஆனுல் சைவஸமயத்துள்ள பிராம்மணோத்தமர்கள் ஸன்யாஸிகளுக்கு ஜகத்குருக்களாகிய ஆதிசைவ பரமாச்சார்யமூர்த்திகளை நேரேவிபூதிகொடுக்கக்கூடாதெனவற்புறுத்துங்கருத்து வேருயிருக்கலாம் நம் கிறுமத்தில் பூஜிக்கும் ஜகத்குருக்கள் சைவமதத்தவர் இங்குரும் ஸன்யாஸிகளோ வேதாந்திகள் சிவபெருமானை மித்தைப்பொருளாய்க்கூறுபர் இச்சன்யாஸிகளுக்கு அசேதனமாகியதாம்பாளம் இச்சிவப்பிறஸாதத்தை கொடுக்கட்டும் சேதனத்வமுடைய நம் பரமாச்சார்யர் திருக்கரம் இவ்வகார்யத்திலமைதல் குற்றமாமென கருதி தாம்பாளத்தை நீட்ட முயற்சித்தனரோ யாதோவறிந்திலம் அங்கனமும் தட்டைபூ பிறதேசத்தில் வைத்தன்றோ இவர்களை பஸ்மாகிறஹிப்பித்தல் உத்தமமாம் குருக்கள் கைசுமை தாங்கியாய் நிற்பற்குக் காரணம் யாதோ 𑌶𑌿𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑌰𑌾𑌸𑌕𑍍𑌤𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌭𑌿𑌃 । 𑌶𑌿𑌵𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌶𑌿𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌾 । என்னும் பவிஷ்யவாக்கியத்தால் சிவத்விஜகரத்திலே நின்று மஹாத்மாக்களினுல் பஸ்மங்கிரஹிக்கத்தக்கது சிவத்விஜகரஞ் சிவபெருமானது கரமாகவே சொல்லப்படுகிறது எனக்கூறியிருத்தலால் இச்சிவபிரஸாத ஸ்வீகாரத்திற்கு மஹாஞயிருப்பவர் சிவ ஹஸ்தமாகிய மங்கள ஹஸ்தத்தை நீக்கி அமங்களமாகிய தாம்பாளத்தைத் தேடுவதென்னே இவ்வுண்மை சிறிது முற்றுணேக்காது ஸ்வாமியள்வாள் தட்டிலிருந்து விபூதிகிறஹித்தல் வேண்டுமென்பது ஸ்வாமியளை அவமானப்படுத்த வுத்தேசித்தா முக்திபிரதமாஞ் சிவாலயங்களில் ஜகத்குருக்களாகிய சிவத்விஜர் திருக்கரத்தால் பஸ்மா முதலிய சிவ பிறஸாதங் கிறஹித்தல் வேண்டுமென்பது

தீர்மானிக்கப்பட்டது இத்தகயமகிமைதங்கிய பரமாச்சார்யர்களை கோயில் குருக்கள் கிராமத்தொழிலாளி எனசிற்சிலமாந்தர் கூறுங்கூற்றை பரிகரித்தொதுக்குவோமாக தொழிலாளி கிராமத்தாற்கு வேலைசெய்பவனேயன்றி கிராமத்தாரை வேலைவாங்குபவனல்லன் ஒவ்வொரு ஊர்களிலும் தேவாலயங்களை பரவித்தை விதித்தவாறு கிராமத்தாரால் அமைக்கும்படிசெய்து உஷக்காலம் காலஸந்தி உச்சிக்காலம் பிரதோஷகாலம் ஸாயங்காலம் அர்த்தயாமமுதலிய காலங்களிலும் இவர்களை தர்சனஞ்செய்யும்படியாகியஸத்காரியம்வஹித்து மஹோத்ஸவம்நித்யோத்ஸவம் விசேஷதினங்களிலும் அவ்வவற்றிற்குரிய திருமஞ்சனதிஸாமான்களை சேகரிக்கச்செய்து கும்பிடவடிக்கும் குருக்கள் தொழிலாளி யாவதெப்படி நாங்கள் பூஜைசெய்யென்றால் குருக்கள் செய்யவேண்டும் கூடாதென்றால் பூஜைசெய்வதெப்படி இதினால் தொழிலாளியாகுமெனின் நீங்கள் பூஜைவேண்டாமென நிருத்தி கோயிலைப் பூட்டிப்போட்ட லிங்கமும் அன்றோ தொழிலாளியாகக் கொள்ளவேண்டிவரும் இல்லிங்கத்தை முத்திபிரதமாய்க் கொண்டுவணங்கியது தொழிலாளியைத்தானே இவர்கள் ஆச்சார்யர் முதல் சிவபர்யந்தந்தொழிலாளியாக நினைக்கும் இவர்கள் தொழில் சாலச்சிறப்புடைத்தே இவற்றால் ஜகத்குருக்களாயுள்ள ஆதிசைவபிராமணர்களை தொழிலாளியென்பதுங்கூடாது ஆதிசைவபிராம்மணர்கள் ஜகத்குருக்களாயிருப்பின் மடபத்யமிவர்களுக்குளதோவெனின்

𑌕𑍈𑌲𑌾𑌸𑌶𑌿𑌖𑌰𑍇 𑌰𑌮𑍍𑌯𑍇 [illegible] 𑌕𑍌-
𑌶𑌿𑌕𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑍍𑌚𑍈𑌵 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜 [illegible] । [illegible]
[illegible] 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 । [illegible]
[illegible] । [illegible]
[illegible] । [illegible]
[illegible] । [illegible]
[illegible] । [illegible]
[illegible] । [illegible]
[illegible] । [illegible]
[illegible] ।

என்னும் பரசுருதிவாக்கியத்தால் மனோஞ்யமான கைலாஸ கிரியில் சிவபெருமானை பூஜிக்குந்நிமித்தம் கௌசிக காச்யப பாரத்வாஜ கௌதம ஆத்ரேயர் முதலிய ஐந்து ரிஷிகள் ஐந்து திருமுகத்தினின்றுவெளிவந்தார்களெனவும் அதன்பின்ஐக்துஸ ந்தானங்களாக பிரிந்துள்ளதெனவும் தூர்வாஸர் ருரு ததீசி சுவேதர் உபமன்யு இவ்வைவர்களும் ஸந்தானகுருக்களெனவும் மந்தான காளீசத்தைச்சுற்றிலும் நான்கு மடங்கள் உண்டாயின தெனவும் அஃது ஆமர்த்தகி கோளகி புஷ்பகிரி ரணபத்திரம் என்னும் திருநாமங்களால் விளங்கப்பெற்றதெனவும் தூர்வாஸர் முதலிய ஐவர்களும் இம்மடங்களுக்கு அதிபராயிருந்தார்களெ னவும் இந்தபரம்பரையிலுண்டானவர் சிவத்விஜர்களெனவுங் கூறியிருத்தலால் மாடாமத்யம் இவர்களைத்தவிர வேறொருவர் களுக்கு உண்டெனநிரூபிக்க வேதாகமங்கள் இடந்தரா சிவபக் தர்கிரஹங்கள்யாவும் சிவலோகமெனசிவரஹஸ்யம்முதலிய பிர மாண வாயிலாய் வெளிப்பட்டிருக்க சிவபக்திக்கு முதன்மை ஆச்சார்யவத்வம் வஹித்தஜகத்குருக்களாம் ஆதிசைவபிராம்ம ணர்களுக்கு மாடாபத்யமுண்டோவென சந்தேகிப்பது அம்மா ளுக்கொச்சியுண்டோவென ஸந்தேகிப்பவர் கதைபோலாயிற்று இவ்வதிமஹிமைதங்கிய ஜகத்குருக்கள் ஆங்காங்கு ஸ்திரலிங்க ப்பிரதிஷ்டாபனஞ் செய்து பூஜித்து வருவதால் ஒவ்வொரு ஆதி சைவப் பிராம்மணர் கிரஹங்களும் மடங்களேயாகும் தத்காலத் தில் சைவஸமயமே அறிக்குழிவெட்டிப்பழக்கத்தக்க வேதாந்தி கள் மடாதிபராய்வெளிப்பட்டு தர்மசிவாச்சாரியார் ஞானசிவா ச்சாரியார் ஈசானசிவாச்சாரியார் அகோரசிவாச்சாரியார் முதலி யதிருநாமங்களை வைத்துக்கொண்டு குருக்களாகமுயலுகிரார் கள் சைவஸமயமனுத்துணையு மறியாமாந்தருள் சிலரிவர்களை ஆச்சார்யராக மயங்கி வழிபடுகின்றார் இக்குருத்வத்தை யங்கி கரித்து வழிப்படுமிவர்கள் சிஷ்யர்களும் மதபிரஷ்டர் ஆவார்கள் பிள்ளைவறங்கேட்கப்போய் உள்ள வரமும் போய்விட்டதுபோல் குருத்வந்தேடப்போய் மதப்பிருஷ்டத்வம் பெறுதல் உசிதமோ சிவாச்சாரியாரென்பது ஜகத்குருமணிகளான ஆதிசைவர்களுக் கன்றோ வேதாகமங்கள் செப்புகின்றது அவை மருந்துக்குங் கிட்டாஸ்மார்த்தர் சிவாச்சார்யத்வங் கூறி வெளிவருதல்கூடுமோ

ஸ்மிருதிகளில் பரார்த்தோபஜீவியை தேவலகரெனவும் இவர்
களை ஸங்கார்யத்தில் வர்ஜிக்கவேண்டுமெனவுங்கூறியிருத்தலால்
இவர்கள் பிரர்பொருளைக் கவரவேண்டி குருவென வேஷம்போ
ட்டு காணிக்கைவாங்கல் பாபமேயன்றோ இவை பரார்த்தோப
ஜீவனமாகாதோ இவற்றால் குருத்தலையில் இவர்களுக்குற்ற சிஷ்
யர்கள் பாபமாகிய மூட்டையை யேற்றி அவற்றையவர் தாங்க
முடியாதகாலத்தில் சிஷ்யனுஞ் சுமந்து இவ்விருவர்களும் யெதி
வாய் நிறயத்திற்காளாக வேண்டிவருமாதலால் குருவெனகும்பி
டப்போய் பாபத்தை ஸம்பாதிக்க முயற்சிப்பது ஆத்மலாபமா
குமா ஸ்மார்த்தர் சிவதீக்ஷைபெற்றால் மஹாசைவராகிறார். அவ
ர்களுக்கு ஆச்சார்யத்வம் வருமெனின் சிவதீக்ஷைபெற்ற ஸ்மா
ர்த்தர்களாகிய மஹாசைவர்களுக்கு சிவமெனப்பெயர்வருதல்
தகுதியேயன்றிசிவாச்சார்யராதல் யாங்கனம் திருடர் ராஜாவின்
கிரீடத்தைத்திருடினால் ஸிம்மாஸனமேறி ராஜ்யாதிபத்யஞ் செ
ய்தல் கூடுமோ இதுபோல் ஆதிசைவபரம்பரையார் ஆதீனத்தை
காலவசத்தாலபஹரித்தால் அவற்குற்ற சிவாச்சார்ய நாமகரண
த்தோடு வெளிப்படுதல்கூடுமோ இது நிற்க இவர்கள் சிவதீக்ஷை
பெற்ற மஹாசைவர்களாயென்பதை உற்றுநோக்கப்புகுவோமாக

ஆதிசைவா: ஸ்வயம் ஸ்வார்த்தம் பரார்த்தம் சைவகா: ।
ஸாமான்ய ஸைவவர்ணானாம் அயோக்யாஸ்ஸாத்யசைவகா: ॥
அநுசைவாஸ்து தீக்ஷாம் ப்ராப்நுயுஸ்ஸ்ய சிவத்விஜாத் ।
ப்ராஹ்மணே மஹாசைவ: தீக்ஷிதோ த்ருபவத்விஜ: । க்ஷத்
ரிய வைஸ்ய ஸூத்ரா: தீக்ஷிதா: தஸ்யைவ ச । ஸ்வஸ்வாசார
தீக்ஷா பாயஸ்வா ப்ராப்நுயாத் ।

என்னும் பரசுருதி வாக்கியத்தால் ஏழுபேதமானசைவர்க
ளுடைய மத்தியயில் ஆதிசைவர்கள் ஸ்வார்த்தத்திலும் பரார்த்
தத்திலும் யோக்யாளாவார் ஆகையால் அவர்களாலேயே அன்
யசைவர்களாகிய பிராம்மணாதியோர் தீக்ஷைபெறவேண்டியது
சிவத் விஜர்கள் இடத்திநின்றே ஆதி சைவர்களினால் தீக்ஷிக்
கப்பட்ட பிராமணர் மஹாசைவராகிறார் அந்த ஆதிசைவர்களா
லேயே ஆச்சார்யாபிஷேகம் செய்வித்து அநுமதி செய்யப்பெற்

னிருந்தால் தன்ஜாதிக்கும் தனக்கு கீழிட்ட ஜாதியாருக்கும் ஆச்சார்யராவாரெனக்கூறியிருப்பதால்-மஹாசைவத்வஸித்திக்கும் ஆதிசைவர்களிடத்தன்றோசிவதீக்ஷைபெருதல் வேண்டுமெனசிவாகமங்கூறுகிறது. இம்மஹாசைவர் ஆச்சார்யராக வேண்டுமானால் ஆதிசைவர்களாலேயே அபிஷேகிக்கபெற்று அனுமதியுங்கொடுத்தபின்னன்றோ-இவர்கள் ஆச்சார்யத்வம் வகிக்க யோக்யராவார் சிவதீக்ஷையே பொய்யெனக்கூறுமிவர்கள் இத்தீக்ஷைக்கு ஆதிசைவர்களைத்தேடுதலெங்கனம்- ஆதிசைவரை இவர்கள் குருவாக்கிக்கொண்டால்- ஸ்மார்த்தர்களிவர்களை அவைதிகரெனபிரஷ்டராக்கி விடுவார்கள்- இவற்றால் சிவதீக்ஷையே இவர்கள் செய்துகொளளுகிற ஸம்பிரதாயமில்லை- பணத்தாசையால் பல்லாக்கு எடுபிடிகளோடு சிஷ்யரிடங்காணிக்கை வஸூலிக்கவெளிவறத்துவிகின்றார்- இதைஅறியா அவிவேகி சிலர்கும்பிட்டு பணங்கொடுத்து பாபத்தை விலைக்கு வாங்குகிறார்- இஃது தப்போ ஒப்போவென்பதை விவேகிகளானார் பலரும் அறிந்து கொள்வாராக- சிலர் குருத்வத்திற்கு ஸன்யாஸியா யிருக்க வேண்டு மெனவுஞ் சிலர் பிருமச்சாரியாயிருக்க வேண்டுமெனவும் சிலர் வானப்பிரஸ்தராயிருக்க வேண்டுமெனவும் ஆசங்கைப்படுகிறார்கள்-

गृहस्थस्सर्ववर्णानां [illegible] गुरुः ॥
यतिर्वा ब्रह्मचारी वा नैव [illegible] ॥

என்னும் பரசுருதிவாக்கியத்தால் கிரஹஸ்தன் ஸர்வர்ணிகளுக்குங்குருவாயிருக்கலாமெனவும்- யதிபிரும்மச்சாரி- வானபிரஸ்தனை குருத்வத்தில் நீக்கவேண்டுமெனவும்-கூறியிருத்தலால்- மேற்காட்டிய ஆசங்கை சுனம்பெருமாறெங்கனம்-பரமேசுவரர் ஸர்ஞராயிருத்தலால்:ஸ்வஸ்திரீயோடுரமித்து அக்குருகுலோத்பவராயிருந்தால் குருத்வத்திற்கு சிதமென்பதைநோக்கியேயன்றோ கிரஹஸ்தனுக்கு குருத்வங்கூறியிருக்கிறார்- இவற்றால் ஸன்யாஸிமுதலியவற்களுக்கு குருத்வங்கூறுவது அறியாதவர் செயலேயாகும்- இக்காரணம்பற்றி தண்டுகமண்டலம். காஷாயம் முதலியசின்னங்களை தாங்கியுள்ள ஸன்யாஸிகளையும். தலையில்முடிவைத்த பிரும்மசர்யாதி அனுஷ்டானிகளையும் குருக்களன்றென்பநாய் பரவித்தை நிராகரித்துக் கூறுவதால் இவர்கள் குருத்வங்

திரஸ்கரித்தொதுக்கப்படும். ஆனால் நைஷ்டிக பிரும்மசாரிகளிடத்திலும் ஸன்யாஸிகளிடத்திலும்- ஞானசாஸ்திரம் பாடங்கேட்கலாமேயன்றி ஆச்சார்யத்வங்கொண்டாடல் கூடாதாகையால்- இவர்களுக்கு குருத்வமேற்படக்காரணமில்லை அதுவும் ஞானவதி தீக்ஷையடைந்தவராயிருந்தால் ஞானசாஸ்திரங்கேட்கலாம்- தீக்ஷையல்லாதோராயின் வேதாந்தியேயாதலால்- அவர்களண்டை ஞானசாஸ்திரங்களை கொண்டுபோவதே குற்றமாம்- இக்காரணம்பற்றி ஆதிசைவபிராமணர்களுக்குஜகத்குருத்வஞ்சாதிக்கப்பட்டு அவரிடந்தீக்ஷிக்கப் பெறாதோர் கேவலம் ஸமார்த்தர் அல்லது வேதாந்தி என ஒதுக்கப்படுவர். வேதாந்திகளுக்கு தன்னைத்தவிரமற்றவைமித்தையாயிருத்தலின் தனக்கன்யமான ஞானசாஸ்திரங்களும் வியாவஹாரிகமாய் யொதுக்கப்பட்டு பாரமார்த்திகத்தில்யாவும் பொய்யாய் முடிந்துவிடும் இவரிடங்கற்கும் ஞானசாஸ்திரத்தாலாய பயனென்னே - இவர்களுக்கு ஜகத்துப்பொய்யாய் முயற்கோடு போலிருத்தலின் ஜகத்குருக்களென்பதும் சுத்தப் பொய்யாமேயன்றிமெய்யாமாறுயாங்ஙனம், இஃதன்றி ஷண்மத பிரதிஷ்டாபகாச்சார்யரென வலிந்திட்டுப் பொருள்கொள்ளவெளிவருகின்றார், ஷண்மதங்களும் வேதாகம புராணேதிஹாஸங்களால் முதல்வன் வகுத்த வழியேயன்றி முற்றறிவற்றதாந் தோன்றித் தம்பிரான்களால் புதிதாய் புக்கிய நவீனமதங்கள் விவேகிகள் கொள்ளற்பாலதன்று. மேதாவியாகிய ஆதிசங்கராச்சாரியாரும் நாஹம் ஶைவோ ந ஶாக்த: என்னும் வாக்கியத்தால் நான் சைவனுமன்று சாக்தனுமன்று எனஷண்மதங்களை புறக்கணித்தொதுக்கியதால் ஷண்மதப்பிரதிஷ்டாபகாச்சார்யர் என்பதிவர்பரத்துங்குற்றமாம் மதமென்பது தைவத்தை முன்னுக்கிவரும் நற்பேறுதலின் தம்மைத்தவிரவேறொரு தைவம் உண்டெனச்சாதிக்கப்புகுவராயின் பதார்த்தமிரண்டாய் த்வைதப்பட்டுஅத்வைதஹானிவந்துவிடும். தைவமேபதார்த்தம் அதையன்றி வேறொன்றில்லை மற்ற யாவும் பொய்யெனின் ஷண்மதபிரதிஷ்டாபனம்யாருக்குதைவத்திற்கா ஆன்மாக்களுக்கா-அன்றன்று. மதங்கள் யாவும்-ஸத்வரஜதமோபேதமான குணமூர்த்திபரமாயிருத்தலின் குணாதீதவஸ்து நிர்தேசத்தால் யாவும் பிரும்மமாய் சிவன் விஷ்ணுவென்னும் பேதமற்று அத்வைதஸ்

தாபனஞ் செய்தவராதலின் ஷண்மதபிரதிஷ்டாபனஞ் சங்கரா ச்சாரியாருக்கு பொருந்துமெனின் இங்கனம் பிரும்மத்திற்கு நிற்குணந்தான் உண்மைஸகுணம்பொய்யென வாதிக்கவேண்டிவ ரும் ஸகுணம் நிற்குணமிரண்டு பிரும்மந்தானெனக்கொள்வரா யின்குணாதீதவஸ்து நிச்சயாத்வைதம் முரண்பாடடையும் குண த்தையுமொக்க முடித்துக்கூருமிவர்பாத்து முரணுதலிழக்காமெ னின் குணம் த்வைதம்நிற்குணம் அத்வைதமெனக்கொண்டு வா திக்கும்வாதி இவராதலால் இவ்விரண்டையும் ஒன்றெனச்சாதிக் கப்புகுதல்குற்றமாம். பிரும்மமேத்வைதாத்வைதப்பட்டு நிற்றலி ன்குற்றமாகாதெனின்—த்வைதமேபிரும்மரூபமாயிருக்க வேதாந் தபாஷ்யம் யாதுக்கு-த்வைதமற்றதல்லவோ அத்வைதம். த்வை தத்தையும் ஒருபுடையொத்து வியவஹரிக்கும்வாதம் அத்வைத மாகுமோ த்வைதத்தில் ஜகஜ்ஜீவேசுவரர்முதலிய முப்பொருள்க ளும் அனாதி நித்யங் கூறப்படுதலின் ஜீவேசுவர ஜகத்துப்பொய் யென்னும். வாதிகளை த்வைதாத்வைத வாதிகளெனச்சுட்டப்ப டுதலெங்கனங்கூடும். பிரம்மத்தைத்தவிர மற்றவை பொய்யென் பதிவர் மதமாதலின். ஜகஜ்ஜீவர்களிருப்பு மிவர்களுக்கும் பொய் யாம். ஜீவனைப்பொய்யாக்கிய இவர்முக்திவிச்சாரஞ்செய்வதெங்க னம் இவர் சைவம் முதலிய ஷண்மதங்களையும் கண்டித்து அத் வைதமென்னுந் தனிமதம் புதிக்கியுள்ளாராதலின் ஷண்மதமும் இவர்களுக்கு உடன்பாடன்றென்பது திண்ணமாம் யாவும் பிரு ம்மமென்றதால் எம்மதமும் நமக்குச்சம்மதமாமெனின் யாவு மென்பதில் இவருமதிலடங்கி நிற்றலின் இவரை பிரும்மமென வேதாகமங்கள் சுட்டியுணர்த்தத்துணியா இவற்றுல்யாவும் பிரு ம்மமென்பதிழுக்காம் யஃ ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந் தரோ யம் ப்ருதிவீ ந வேத யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் யஃ ப்ருதிவீ மந்தரோ யமயதி ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ- என்னும் சுருதிவாக்கியத்தால் பிருதிவீதத்வமுதல் ஆத்மதத்வபர்யந்தம்ஸ மஸ்தவஸ்து அந்தர்யாம்யத்வம். கேட்க்கப்படுவதால். பிருதிவ் யாதி ஜீவாத்மபர்யந்தமுள்ள வஸ்துகளும் இன்மை பொருள ன்று- இன்மை பொருளாயின் இவற்றிற்கு அந்தர்யாம்யத்வங் கூறியவேதவாக்குஇவர்பரத்துவிருத்தமாம். ஜீவாத்மாவேஸகல வஸ்து அந்தர்யாம்யத்வ மெனின் - தன்னால் ஸம்பாதிக்கப்ப

ட்ட வினைப்பயனுக் கிடாந்தனு கரணபுவன போகங்களை அனு பவிக்கும் பொருட்டு பஞ்சபூத கூட்டுறைவாலெய்தியசரீரத்தில் பஞ்சேந்திரிய வழித்தாய்போகம் புசிக்கும் ஜீவாத்மா ஸர்வாந்தர்யாமித்வ மாவதெப்படி. விசுவஸ்வரூபியான விராட்புருஷனுக்கு ஸர்வாந்தர்யாமித்வங் கூருவோமெனின். விஶ்வாயம்[illegible] [illegible] என்னும் சுருதிவாக்கியத்தால் விசுவத்தை அதிக்கிரமித்துள்ளவர். ருத்திரரெனச்சுட்டப்படுவதால் விசுவரூபமாய் பரிணமித்த விராட்புருஷனுக்கு ஸர்வாந்தர்யாமியத்வமும் குற்றமாம். அங்கனமன்றுபிருமத்திற்கு நிற்குணமேவடிவம் ஸகுணம பொய்யெனின். நிர்குண வடிவுடைத்தாய பிரும்மம் ஸகுணமாய் மூர்த்திகறிக்குந்திரமில்லாதலால் இப்பிரும்மத்திற்குஸர்வசக்தித்வங்குன்றிவிடும். இவற்றால் ஸர்வாந்தர்யாமித்வம் பங்கப்படும். இதினால் ஸர்வஞ்ஞத்வம் மாறிவிடும். இங்கனம் ஸர்வகர்த்திருத்துவம் நீத்துவிடும். இவற்றால் ஸ்வதந்திரத்வம் போய்விடும். இவ்வாரே அலுப்த சக்தித்வம் மாரிவிடும். இவ்விஷய பர்யாலோசனையால் ஷாட்குண்யபரிபூரணத்வம் அறவேயொழிந்து. ஜிவாத்மாவினும் இழிந்த பொருளாய் பிரும்மம் நிற்றலின்- நிர்குணம்மாத்திரமே பிரும்மத்திற்கு லெக்ஷணமென்பது வேதாகம விருத்தமாம்- உமாஸஹாயம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] என்னுங் கைவல்யோபநிஷித்வாக்கியத்தால் பார்வதியோடு கூடினவராய் பிரபுவாய் மூன்று கண்களுடையவராய் கருத்த கண்டத்தை யுடையவராய் சாந்தஸ்வரூபியாய் ஸர்வஸாக்ஷியாயுள்ள பரமேசுவரனை முனிக்கூட்டங்கள் தியானித்து இருளைப்போக்கி ஒளியைஅடைகின்றாரெனக் கேட்கப்படுவதால் பிரும்ம ஸ்வரூபியாகிய பரமேசுவரருக்கு உருவமுண்டென வேதத்தால் வெளிப்படுகிறது. இப பரம்பொருளுக்கு அனுக்கிரஹத்திருமேனியாதலால் சித்சக்திமத்தால் ஆவிர்ப்பவித்தனுக்கிரஹிக்கும் திருமேனி ஆன்மகோடிபோல் வினைப்பயன்புசிக்க எடுத்த சரீரமன்றாம்- இவற்றால் பரப்பிர்ம்மஸ்வரூபியாகிய பரமேசுவரருக்கு ஒவ்வொரு ஆன்மாக்கள் பரிபவத்திற்குத்தக்கவாறு அனுக்கிரகிக்குந்திருமேனிஸ்வதந்திரமுடையதாயிருத்தலின் ஸகுணத்திருமேனியும்நம்பெருமானுக்கு

அநாதிநித்யமே-இப்பரம்பொருள்ஸத்வரஜதமோ குணவயப்பட்டதன்று. குணாதீதஸர்வேச்வரதேசமுடைய பரமபதியேயாதலால் குணத்தால் விகாரப்படுமென்பதுங் குற்றமாம், இவற்றை வேதாந்தபரத்தால் குணமூர்த்தியென்றிடலாகாது. ஸர்வவியாபகமுடையபர பிரும்மத்திற்கு அவயவங்கள் கேட்கப்படுவதால் ஸர்வவியாபகத்வஹானியுண்டாமெனின்- அப்பெருமான் ஸர்வசக்தியுடையவராதலால் பக்திமான்களுக்குத் தக்கவாறு வியாபகனைதன்னிபமே மூர்த்தி கரித்தனுக்கிரஹித்து நிற்றலால் ஸர்வவியாபகத்வஹானி ஏர்ப்படா- இவற்றால் குணமேபிரும்மத்திற்குத் திருமேனியாய்க்காணப்படுதலின். குணாதீதநிற்குண வடிவங்கூடுமோவெனின்- நிர்க்குணம். ஸகுணம். ஸகுணநிர்க்குணம். இம்மூன்றும்திருமேனியாய்க்கொண்ட யிப்பெருமானுக்கு நிர்க்குணத்திருமேனி விலக்கன்றாம். பிரத்தியக்ஷத்தில் பார்க்கப்படும். கரசரணாதிஅவயவபேதமுடைய சரீராதிகள் அழியக்காணலால். பிரும்மத்திற்கு அவயவவிசிஷ்டத்திருமேனியும் அழிவுபாடெய்து மெனின். நம்சரீரம் வினைப்போகத்திற்கிடாம். கர்மசரீரமாதலால் முத்தி திசைபர்யந்தம். அவ்வவ்வினைப்பயன் புசிக்க சுகதுக்கரூபமான சரீரங்கள் அனந்தமுளதாதலின் இச்சரீரம் அழிவுபாடெய்தும் பிரும்மசரீரம் சுகதுக்கவேதனையற்றதும் முத்திக்கு வித்தாயுள்ளதுமாய்க் காணப்படுதலின் இவை அநுக்கிரஹார்த்தம். அப்பரமன் சிற்சக்தி தடித்து மூர்த்திகரித்துள்ளதால் பிரும்மத்திற் கழிவு நேர்ந்தாலன்றி இச்சரீரம் அழியாதனவாம் இவற்றால் பிரும்மத்தின் அநுக்கிரக ரூபசரீரங்களும் அழிவுடைத்தாய பொருளன்று. இங்ஙனன்றேக்காது முக்குணமே மூர்த்தி என்றும் அக்குணத்தில் சிவத்தையும் உடன்பாடாக்கி இக்குணம் மித்தை எனக்கழித்து இக்குணாதீதநிற்குணமே ஸத்யமெனத்தேர்ந்து அதுவே பிரும்மமென உய்த்துணர்ந்த வேதாந்தாபாஸகர் ஜாலம் வியப்பினும் வியப்பே. நம் சிவபரஞ்சுடரை குணமூர்த்தி என்றிடல் கூடுமோ. ஶிவஏகோ த்யேய: ஶிவங்கர: [illegible]- என்னுஞ் சுருதி வாக்கியத்தால் சிவபெருமான் அத்வைதராகவும் துரீயராகவும்ன்றோ வேதங்களில் உத்கோஷிக்கப்படுகின்றது இவரை குணமூர்த்தி யென்பதோடும் நிற்குண திருமேனியங் கூறப்படும்.

குணம் - நிர்குணமிவ்விரண்டும் - நம்பசுபதிபரமேசுவரற்கு திருமேனியாய் அமையப்பெற்றிருத்தலின் ஸகுண நிர்க்குணத்திருமேனியொன்றுடையாரென்பதும் வெளிப்படை-இவற்றால்பரமேசுவரரை குணமூர்த்தி என்றிடலடாது பிரும்மா-விஷ்ணு-ருத்திரர்-முதலினோர்-ஸத்வ-ரஜ-தமோகுணமூர்த்தியாதலால் ருத்திரரை குணமூர்த்தி என்றிடல் கூடுமெனின் உருத்திரரில் குணருத்திரர்-துரீயருத்திரர்-என பேதமிரண்டுடையதாதல்பற்றி துரீயத்வபிரதிபாத்யமுடைய நிற்குண உருத்திரரை குணமெனப்பிரமிப்பது கற்றறியாமாந்தர் செயலாம்-𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍇-என்னும் சுருதிவாக்கியத்தால் உருத்திரரைத் தவிர இரண்டாவது கிடையாது என ஏவகாரத்தால் இதர விவச்சேதம்செய்துள்ளது-𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌃 என்னும்சுருதிவாக்கியத்தால் விசுவத்தை அதிக்கிரமித்துள்ளவர் ருத்திரரென்னும்ஹருஷிஎனச் சுட்டப்பட்டிருக்கின்றது. இஃதன்றி-𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍋 𑌲𑍋𑌕𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌵𑍃𑌤𑌃 𑌦𑍇𑌵𑌾 𑌹 𑌵𑍈 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌲𑍋𑌕𑌮𑌾𑌯𑌨𑍍। 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌪𑍃𑌚𑍍𑌛𑌨𑍍-என்னுஞ் சுருதி வாக்கியத்தால் ஸ்வர்க்கலோகமானது ஜ்யோதிஸ்வரூபமாயுள்ளது எல்லா தேவர்களும் ஸ்வர்க்கலோகத்தை அடைகிறார்கள்-அந்த தேவர்கள் உருத்திரரை பிரசனிக்கிறார் என்பதினால் இந்த ஸ்தானம் துரீயாதீதஸ்தானமாகின்றது. இவ்வாறேஉத்தரகீதையில்-[illegible] - என்னும் வாக்கியத்தால் உருத்திரஸ்தானத்தை துர்யாதீதமாய் பிரதிபாதிக்கபடுகின்றது. இவ்வாருள்ள ஞாயம் பலவற்றையும் வேதாந்திகள் ஊகித்தறியாது-ருத்திரஸ்வரூபியாகியசிவத்தை குணமூர்த்தி என ஒதிக்கி இச்சிவம் சகுணம்-சகுணத்திற்கழிவுண்டு இதற்கன்யம் பிரும்மமொன்றுளது-அது அழியாப்பொருளெனக்கண்டு தேறிக்கொண்டலமலர்ந்துநிற்கும்பிரசன்னபௌத்தவாதிகள்வேதவிஹிததர்மமுடையாருவரோ-சிவத்தையன்றி பிரும்மம் வேறொன்றுளதென பூச்சிகாட்டும் பதிதர்வாயில் வேதாகமங்கள்-மண்கொட்டியன்றோ மூடிவிடும். இவற்றைச்சிறிதேனும் உற்றுநோக்காது பிரசன்னபௌத்தர் ஒருவர்ஸன்யாசிவேஷம்பூண்டு தேவகோட்டையில்-சிவாகமம்மந்தபரிபாகிக்குக்கூறியுள்ளது புராணத்தைக்காட்டினும் தாழ்ந்த நூலென்றும் சைவமதமேபேதத்தில் கூறவி

ல்லை எனவும்-வேதாத்யயனத்திற்கு ஆதிசைவர்கள்-அனர்கரெண வும்-ஆகமம் சுத்ததாந்திரீகமென்றும் ஆதிசைவன் அநேக ஜன் மாக்களில் நல்ல கர்மாக்களைச்செய்து வைதிகஸ்மார்த்தகுலத்தில் ஜனித்து அத்வைதமதஸித்தாந்தப்படி ஸ்வானுஷ்டானத்திற்கு வந்தாலொழிய மோக்ஷங்கிடையாதென்றும் இதற்கு ஸமாதான ம் எவருவது சொல்லமுடியுமாவென்றும் இறுமாப்பெய்தி திரிகி ருரென்றும் காளயார்கோவில் ஸ்வர்ணகாளீச்வரக்குருக்களய்யா ஸிம்மரவி-நகலயில் எழுதியுள்ள ஆப்தலிகிதத்தால் தெறியவந் தது. தத்காலம் கோவிலூருக்கு வந்த மஹானுபாவர்களானகு ம்பாபிஷேகத்தில் பட்டுக்கறைச்சோமனுடித்தித் திரியவிரும்பிய குருக்கள்கள் எங்கே தூங்குகிருர்-நகரத்தார் சிவாகமத்தில் அபி ஞ்யர் இன்னாரென தேர்ந்தெடுக்காதுசெய்த சிவாபச்சாரமேயன் ரோ நாத்திகஸன்யாஸி உருக்கொண்டு-சிவம்-சிவாகமம்-சிவதர் மம்-சிவாச்சாரியர் முதலிய சிவநிந்தை செய்யப்புறப்பட்டு நிற் கின்றது. ஒவ்வொரு கும்பாபிஷேகங்களிலும் சிவாகமஞ்யர்ப லரும் ஒருங்கு கூடி கிரியாபிரவர்த்தகங்கள் வகித்து ஸத்கார்ய ம் புறிவரேல்-இன்னாத்திகர்தலை நீட்டிவாழ்தலெங்கனம் இவை நகரத்தார் ஊகித்தறியாக்குற்ற மென்பதிற் றடையில்லை இது நிற் க நமது பௌத்த ஸன்னியாசியைச்சிறிதுதற்றுனோக்கப் புகுவோ மாக-ஓய் நாத்திகஸன்னியாஸியே-சிவாகமம புராணத்தைக்காட் டிலுந் தாழ்ந்ததென்பது எதினால் கூற வெளிவந்தீர் சங்கரஸம் ஹிதையில் ஶைவாகமக்ஷீராப்தே-ர்மத்யாத் ஸ்காந்தம் ஸமுத்த்ருதம்-எ ன்னும் வாக்கியத்தால்-சிவாகமமாகிய கிரியினுடைய மத்யத்தில் அமிருதம் பிரவாகித்துள்ளதில் கொஞ்சமெடுத்து இந்த ஸ்காந் தபுராணத்தைச் செய்கிறேனென ஸ்காந்தபுராணங் கண்டோக் தியாய் கூருவதால் புராணத்திலுந் தாழ்ந்தது சிவாகமம்-என இ ச்சிவனிந்தகபாஷண்ட ஸன்யாஸி கூறுவதை புராணங்களேஒப் பாது. ஓய் பாஷண்டஸ்வரூபநாத்திக ஸன்யாஸியே-ஈஶாந ஸ்ஸர்வவித்யாநாம்-என வேதம் உத்கோஷிக்கின்றபடியால் ஈசா னமுகத்தினின்று வெளிவந்தவித்தையாதென்பதாய் உற்றுநோ க்கப்புகுவீராக-வ்யாஸவாக்யா மஹாபுராணாநி ஸர்வாணி புராணாநி வ | ஶிவஜ்ஞாநாப்திஸம்பூதாநிகாநிசிதேவதாதய: | ஶ்ரீமதாகம ஸ்யநாயஸ்யஸம்பவம் த்ருஷ்டவந்த: | என்னும் அகஸ்திய

ஸம்ஹிதா வாக்கியத்தால் பிரணவாதி மஹா மந்திரங்களும் அகாராதி அக்ஷரங்களும் சிவஞான மயமாம் காமிகாதி திவ்ய யாகமங்களும் சிவபெருமான் ஊர்த்வமுகத்தில் தோற்றியதென்னும் பிரமாணத்திற்கு நீவிர் என்செய்வீர் - வேதமோ- 𑌦𑍍𑌵𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑍇 𑌇𑌤𑌿 𑌹𑌸𑍍𑌮 𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾 𑌚𑍈𑌵𑌾𑌪𑌰𑌾 𑌚 | என்னும் வாக்கியத்தால்-இரண்டு வித்தைகளையும் அறியவேண்டுமெனவும் பிரும்ம வித்துக்களாயுள்ளோர் இவ்வாறே அறிகிறார்களென்றும் அது பரம் அபரமென இருகூறாய்நிற்குமென்பதால் வேதமொன்றே பிரமாணம் சிவாகமம் அப்பிராமாண்யமெனக் கூறுபவர்வாயில் வேதம் தெள்ளுமண் கொட்டி நிறைப்பி இருக்கின்றது. இதுமட்டோ—𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌰𑌾 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌮𑌿𑌤𑌿- 𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇-என்னும் வாக்கியத்தால்ருக்யஜுஸ்ஸாம அதர்வணம் முதலிய வேதம் நான்கும்-சிக்ஷைமுதலிய வேதாங்கம் ஆறும்அபரவித்தையென தன்னை தாழ்த்தி தனக்கு மேலிட்டபர வித்தையொன்றிருப்பதாய் வேதங்கூறியதற்கு நீரென்செய்வீர்-இங்ஙனம் வேதத்தின் கர்மகாண்டம் அபரமெனவும்-ஞானகாண்டம் பரமெனவுஞ் சில அவிவேகி பொருளுரைக்க முந்துவர் வேதம் நான்கும்வேதாங்கமாறும் ஒருங்கே அபரமென கழித்திருப்பதால்இதில்கர்மஞானப்பிரதியாத்தியங்கூறுதல் விவேகிகளுக்கழகன்றும் இவற்றால் ஸ்ரீநீலகண்டர்-𑌵𑌯𑌂𑌤𑍁 𑌵𑍇𑌦𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑌯𑍋𑌰𑍍𑌭𑍇𑌦𑌂 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌃 𑌵𑍇𑌦𑍋𑌽𑌪𑌿 𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑌃 𑌤𑍍𑌰𑍈𑌵𑌰𑍍𑌣𑌿𑌕𑌵𑌿𑌷𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵-𑌵𑌿𑌷𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌃 𑌤𑍍𑌰𑍈𑌵𑌰𑍍𑌣𑌿𑌕 𑌵𑌿𑌷𑌯 𑌸𑌰𑍍𑌵-𑌵𑌿𑌷𑌯𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌃-என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்களுக்கு பேதங்காண்கிலோம் வேதமே சிவாகமம்-இவை பிராம்மணர் முதல் மூன்றுவர்ணத்தார்க்கு உரியதும்-பிராமணர் முதல் ஸகலவருணிகளுக்குறியதுமாய் வேதமிருகூறாய் நிற்றலின்-வேதந்திரியிவர்ணிக பரமும்-சிவாகமம் ஸர்வவிஷய பரமுமாய் முடிப்புற்றிருத்தலின்-ஸர்வவிஷய பரம்ஞானே கநிஷ்டமுடையதுபற்றி பறவித்தை ஈதென்பதை இனியாயினுந் தெளிந்துய்வீராக-இவ்வாறுள்ள விஷயம் பலவற்றையும் இவவேதாகமதாரதம்ய முகவுரை தொடங்கி

விரிவாய் வியவ்ஹரித்து நிர்மாணித்துள்ளோமாதலால் ஆங்குற்று ணோக்கி ஸந்தேகநிவிர்த்தி செய்து கொள்வீராக— ஒப் நாத்திகஸன்யாஸியே-பஞ்சாக்நிவித்யாவிஷ்ணோ தேவிஷேஷஸம்ஸவதி என்னும் சுருதிவாக்கியத்தில்பஞ்சாக்னி வித்தைகளில் உபாஸிப்பதற்கு உசிதமாய்க்கூறப்பட்டிருக்கின்றது. என்றதால் நீர்சொல்லும் அபரவித்தையாகியருக்காதி வேதங்களில் தக்ஷிணாகார்ஹபத்திய ஆஹவநீயம் முதலிய அக்னி மூன்றேயன்றி வேறன்றேயீந்துள்ள இறண்டக்னிக்கு பெயர் யாதென்பதை ஈண்டெடுத்து விளக்குவீராக— இவற்றால் பஞ்சாக்கினிவித்தை சிவாகமமென்பதை வேதமே சுட்டியுணர்த்தியது-ஒய் நாத்திகஸன்யாஸியே சைவமதமே வேதத்தில் கூறவில்லை அத்வைதமதந்தான் கூறியுள்ளதெனவாய் வம்பாடக்கற்றீர்- அதர்வசிரஸில்- ப்ருஷ்டாம்ஸிஹா ஹைதஜாநுஸ்ப்ருஷ்டமும்பாஸ்யாஸம்விஜ்ஞாயாசஹாதா ஜ்ஞாநாஜ்ஞவகக்ஷாஹா ஸம்ப்ராணம் ஸாதம் விவேகாநாம் உஷ்ணேஜம் தவஸாநியஹ்ய வ்ரதமேதத் பாஸுபதம் தஸ்மிந்- இதற்கேற்பகூர்மபுராணத்தில்- நிர்மிதம் ஹி மயா பூர்வம் வ்ரதம் பாஸுபதம் பரம்। குஹ்யாத்குஹ்யதமம் ஸூக்ஷ்மம் வேதஸாரம் விமுக்தயே| ஸுவேஷ: பாஸுபதாசாரா: ஸேவநீயோ முமுக்ஷுபி:। என்னும் வாக்கியத்தால் வேதசாரமாயுள்ளபாசுபத விருதத்தை தெரிவிக்கும் ஆகமந்திரங்கள் முமுக்ஷுக்களால் ஸெவிக்கத்தக்கதென கேட்கப்படுவதால் பசுபதி ஸம்பந்தமான சைவஸமயம் வேதத்திலேயே கூறியுள்ளதாதலால் சைவமதமேயில்லை எனக்கூறிய இவர் உன்மத்தஉறை எங்கணங்கணம்பெரும்-இப்பித்தர் அத்வைதமென்றதால் சைவத்திற்கு வேறான பிரும்மவாதமென அகங்கரித்தெழுகின்றார்—ஶிவ ஏகோ த்யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய - என்வும் விஸ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:-எனவும் ஸர்வோ வை ருத்ரஸ்தஸ்மை ருத்ராய நமோ அஸ்து-எனவும் ஸோமஸூர்யாக்நிஜ்யோதிஷாவ்ருத:। தேவாஹமேவஸமஸ்த யோகக்ஷேமஸ்து। தத்தேவா ருத்ரவ்யூஹந்து-எனவும் த்யாயீத ஈஶாநம் ப்ரத்யாயீத ஶிவஸ்யாநந்தாநந்தம்- ஶிவ ஏகோ த்யேய: ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு: ஸர்வஜ்ஞ: ஸர்வகர்த்தா ஸ ஏவ ஶிவா-எனவும் ஸர்வதஸ்ஸத்ஸஞ்ஞிதா ப்ராணிநாம் ஸர்வஸாக்ஷீ ஶிவ ஏக ஏவ கேவல: - என

வும்-ஸோऽஸ்ஸ: பராத்பரோ நித்ய ஸித்தேஷ: பரம்பதம் - என
வும் ஸ்யாக்வாத்ர நிர்விசேஷ தத்வம் ஸர்வஸாக்ஷிம் தத்வ:
பராத்பர:-எனவும்-காரணம் ருத்ரம் த்யேய:-எனவும்-ஸ்யாந்நிர்விக
நாதேஷ்வர ஸர்வஹத்வேஷ்டித:-எனவும் ஸ்விக்ஷேமேஸ்தாபா
வாஸநத்வஸ்ய ஸர்வஸ்ரீவசிரஸ்ய ஸ்ரீர:। சத்யாஸ்ரஸ்வஸ்தேஷ
ஷ்யாணி நிர்ஸ்யஹஸ்தாஷ்டம் ரம்யணஸ்ய। ஹ்ருத்கண்டீகம்
விரஜம் விஸ்தம் விவிக்தசவி ஸ்ரவிஸ்தீவிலோகம் । சாருக்ஷேவ்யக்த
சவிக்ஷ்யம்வம் ஸிவம்ப்ரஸாந்தம் ஸ்ரஹ்மயோநிம் । தயா
திஸ்யாக்ஷவிஷ் நமேகம் விநம் விஷா நஜசர்வம்ஹந்த। உமாஸ
ஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஸா
ந்தம் । ஸ்யாக்வாத்ர நிர்விசேஷ தத்வம் ஸர்வஸாக்ஷிம் தத்
ஸ: பராத்பர: । எனவும் கூறியுள்ள சுருதி வாக்கியங்களால்-சி
வபெருமான் அத்வைதர் சாந்தர் துரீயர் என்பது வெளிப்படுகி
ன்றது. விசுவத்திற்கதிகர் ருத்திரர் என்பதும் ருதத்திரரைத் த
விர இரண்டாவதான பதார்த்தமில்லை என்பதும் ஜ்யோதி ஸ்வ
ரூபமான ஸ்வர்க்கத்திற்கு ருத்திரரே அதிபரென்பதும் சிவஸ்
தானந்துர்யாதீதமாய் பிரதிபாதிக்கப்படுகிறதென்பதும் சிவபெ
ருமானொருவரே தியானிக்கத்தக்கவர் மற்றவை பரித்யஜிக்கவே
ண்டுமென்பதும்-பகல் இராத்திரியில்லாதவரெவரோ அவர் சிவம்
என்றும் விஷ்ணுவுக்கு மேலானபரமபதமான சிவஸ்தானமென்
பதும் எல்லாத்திற்கு பரமகாரணமாயுள்ளவர் பரமேசுவரர் என
வும் அவரை தியானிக்கவேண்டுமெனவும் அவரை தியானித்த
வர் பாசத்தை தகித்துமுக்தி அடைகிறார் என்றும்-சுத்தமான பி
ரதேசத்தில் சுகாஸனனாய் சரீரசுத்தி யுடையவனாய் அத்யாசிர
மஸ்தனாய் ஸகல இந்திரியங்களையும் நிக்கிரஹித்து பக்தியினால்
தனது குருவை நமஸ்கரித்து ஹிருதய கமலத்தை அடைந்திரு
க்கிறதாயும் சுத்தமாயும் நினைக்கத்தக்கதாயும் துக்கரஹிதமாயும்
அளவிரந்ததாயும் நிர்குணமாயும் நினைத்தற்கரிதாகிய உருவமு
டையதாயும் நித்யமங்களமாயும் சாந்தஸ்வரூபியாயும் நாசமற்றவ
ருயும்-பிருமயோனியாயும் ஆதிநடுவந்தமிலாதவராயும் ஒரே
பதார்த்தமாயும் வியாபகருயும் சித்கனானந்தராயும் அரூபியாயு
ம் ஆச்சர்யமுடையவராயும் உமையுடன் கூடினவராயும் மூன்று

கண்களையுடையவருயும்-கருத்த கண்டத்தையுடையவராயும் சாந்தருயுமுள்ள பரமேசுவரரை தியானித்து முனிக்கூட்டங்கள் யிருளைப்போக்கி ஒளியை அடைகின்றுரென உபனிஷித் முதலிய பிரமாணவாயிலாய் வெளிப்பட்டு நிற்றலின்-சைவ ஸமயத்திற்கு வேருய் அத்வைத மத மொன்றிருப்ப தென்பதாய் நம்பிரச்சன்னபௌத்த ஸன்யாஸி கண்டுபிடித்து தேவகோட்டை நகரவெளியில் பிரஸங்கிக்க எத்தனித்ததுகற்றறியா மர்தமதிக்கும் பயன்படா. இத்தகயபுத்தியைத்தீட்டி விளக்குமாறுயார் கைப்பட்டு தோவறிந்திலம்-நம் பௌத்தர்-வேதங்களில் பிரும்மசப்தமெங்கணுங் கேட்கப்படுவதால் சிவத்திற்கு வேருய் பிரும்மமொன்றுளதென பிரமித்து பிதற்றுகின்றுர். பிரும்மமென்பது பெரிதெனப்பொருளாதல் பற்றி பெரிதான பதார்த்தங்களையு முண்டுபண்ணுபவர் பரமேசுவரரே யாதலால் பிரும்மயோனித்வம் பரமேசுவரருக்கே என கைவல்யோபநிஷித் முதலிய வேதவாக்குக்கள் முறையிடுகின்றது. ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ நீசயா ஶோசதி முஹ்யமாநஃ। ஜுஷ்டம் யதா பஶ்யத் யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக-என்னும் சுருதிவாக்கியத்தால் ஜீவனனது அனுதியாய் மலத்தால் பந்திக்கப்பட்டு அந்த மலத்திற் கேற்பமாயா மயபெருகளே பர சரீரத்தால் தாபங்களை அனுபவிப்பதால் ஜீவன். ஈசனுகான். இதினுல் உபநிஷித்துக்களில் ஜீவனே அனீசனெனக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அநீசன் கிஞ்சிஞ் யனுதலால் தானே நீக்குதலறிதாம். இவற்றுல் மஹா மோஹத்தால் பிணிப்புண்டு. துக்கஸாகரத்தில் ஆழ்ந்துவிடும். ஸர்வானுக்கிரகமுடைய பரமேசுவர பிரஸாதத்தால் ஜீவன் துக்கனுச மடைகிறதென தெரியவருகிறதால் பரமேசுவரரே பிரும்ம ஸ்வரூபி என்பது தெற்றெனவிளங்கும். பரமேசுவரரைத் தவிர பிரும்ம மொன்றுளதெனக்கூறும். அவிவேகியை இவ்வேத வாக்குத்தாட சுத்தி செய்து விட்டது. இதுமட்டோ-ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶாநீஶௌ -என்னும் வாக்கியத்தால் ஜீவேசுவர பேதமிரண்டுங் கேட்கப்படுதலின்-நம்பௌத்தஸன் யாஸிவிய ஹாரம் பல்லிளித்துக் கொண்டது. யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோஸ்தி கஶ்சித்

ஸெஷுஶா ந-என்னும் உபநிஷித் வாக்கியத்தால் ஆன் மாக்களது ஹிருதயகமல சிதாகாசத்தி லிருந்து யாவற்றையும் வசீகரித்து யாவற்றிற்கும் ஈசனுயுள்ளவன் என கூறப்படுவதால். இதுவும் நம்பௌத்தர் வாதத்தை பூர்வபக்ஷமாக்கியது. இஃவாருள்ள ஞர்யம் பலவற்றாலும், சைவமதம். அத்வைதமாயிருக்க-சைவ மதமேயில்லை-அத்வைதந் தான் உள்ளது-என்பது-தகப்பனை நீத்து-ஆண் குறியை தந்தை என்பதையொத்திருக்கின்றது. ஒய் புத்தரே-ஆண் குறியோடு கூடியவர் பிதாவா-அக்குறியை பிதர் வெனக் கூறிக் கொள்ளுதல் உலகவழக்கமா-இதுபோல்அத்வை தப்பட்டு நிற்குவஸ்துவெது. சிவமேயன்றோ-அத்வைதஸ்வரூபி சிவமெனஸகல வேதங்களும். உத்கோஷித்து நிற்கின்றது. இஃ தன்றி-யதா சர்மவதாகாஶம் வெஷ்டயிஷ்யந்தி மாநவா:| ததா ஶிவமஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி - என்னும் வாக்கியத்தால் ஆகாசத்தைப்போர்வையாகவுடைய பரமேசுவரனை எந்த மனி தன் அறியவில்லையோ அவன் இறுதியில் துக்கத்தை அடைகி றான் எனக்கூறப்படுவதால் நமது பௌத்த ஸன்யாஸிக்கு அன வரத நிரய துக்கமே உரிய ஸ்தானமாயிற்று- ஆகாஶ ஶரீரம் ப்ரஹ்ம-என்னுஞ் சுருதிவாக்கியத்தால் ஆகாசத்தை சரீரமாக உடையது பிருமமமென வெளிப்படுகின்றது-யதா சர்மவதாகா ஶம் வெஷ்டயிஷ்யந்தி மாநவா:| ஆகாசத்தை தோல்போல் போர்த் திக்கொண்டிருப்பவன் பரமேசுவரரென வெளிப்படுவதால் சிவ பெருமானையன்றிபிருமமம் வேறொன்றுளதென பிரமித்துக் கூறும் நமது புத்தருறைஉல்லங் கணப்பட்டொழிந்ததென்க-ஒய்புத்திரே-பிருமமம் பரமேசுவரரென வேதஞ்சுட்டி யுணர்த்தி யிருக்க சைவ மதம் பெரய் அத்வைதஞ்சரி எனக்கூறியனும் புத்தி கௌசல்யத்தை யாவர்மெச்சுவர் -ஒய் புத்தரே-நீர் ஆதி சைவர்கள் வேதாத்யயனத்திற்கு அனர்ஹர் என்றீர்-பின் யாரதி காரி-னும்மவரை சூத்திரரெனஸ்மிருதி தூஷித்துனும் வாயில் மண் போட்டிருக்கின்றது - யாதெனில் ஜந்மநா ஜாயதே ஶூத்ர: ஸம்ஸ்காராத் த்விஜ: என்னும் வாக்கிசத்தால்தாம்மவர் குஜன்ம சூத்திரத் வஞ்சாதிக்கப்பட்டு கர்மாவால்த் விஜத்வங் கூறப்பட்டிருக்கின்றது-ஜன் சூத்திரர்களுக்கு வேதத்தில் அதி

காரமும்-ஜன்ம பிராம்மணர்களுக்கு வேதத்தில் அனதிகாரமும் கூறுவதை விவேகிகள் ஒப்பார் சிவபெருமான் திருமுகத்தினின்று ஆதி சைவர்கள் வெளிவந்தவரென பரவித்தை கூறுவதால் சிவபெருமான் பிராம்மணராதல் பற்றி பிராம்மண தேவதைமுகத்தினின்று வந்தவர் ஜன்மாவால்பிராம்மணத்வஸித்தியும்-கர்மாவால் சிவத்வமும் சித்திக்கப்பெற்றுத் த்விஜத்வ ஸித்திபெற்றிருப்பவராதலின்-இவர்கள் ஜன்ம சூத்திரர் போல் வேதத்திற்கனதிகாரிகளாகார்கள். ஓய் புத்தரே சூத்திரற்கு கர்மத்தால்த்விஜத்வஸித்திவருமென்பதை வேதமொப்பாதே-𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑍂𑌦𑍍𑌰𑍋 𑌯𑌜𑍍𑌞𑍇𑌽𑌨𑌵𑌕𑍢𑌪𑍍𑌤𑌃-என்னும் சுருதி வாக்கியத்தால் ஜன்ம சூத்திரர்கள் அத்யயனஞ் செய்யக்கூடாதெனக் கூறியிருக்கின்றது-𑌅𑌥 𑌹𑌾𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌮𑍁𑌪𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍁𑌜𑌤𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍂𑌰𑌣𑌮𑍁𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌚𑍍𑌛𑍇𑌦𑍋 𑌧𑌾𑌰𑌣𑍇 𑌶𑌰𑍀𑌰𑌭𑍇𑌦𑌃-என்னுஞ் சுருதிவாக்கியத்தால்-வேதம் ஜன்ம சூத்திரர் காதுகேழ்க்கும்படி சொல்லுகிறவன் நாக்கை அருக்கவேண்டுமெனவும்-சூத்திரற்கு சொல்லி தரிக்கும்படி செய்தவன் சரீரச்சேதஞ்செய்யவேண்டுமெனவுங்-கூறியிருத்தலால் இச்சூத்திரசப்தத்தை யாநீர் அன்வயித்துக் கொண்டீர். னும்மையேயன்றோ அஸல் சூத்திரனாய் வேதங்கழித்திருக்கின்றது-ஸ்மிருதியோ-னும்மவற்குஅத்யயனஅத்யாபகயஜனயாஜனதானப்பிரதிக்கிறஹாதி ஆறு கர்மாக்களும்-செய்யக்கூடாதெனக் கண்டித்திருக்கின்றது ஷட் கர்மாக்களும் பிராம்மணபரமாய் முடிதலால் னும்மனோர் பிரவேசிக்கின் தேவலகத்வ தோஷம் வந்துவிடும்-ஏனெனில்-பரார்த்தத்தில் உப ஜீவிப்பவர்தேவலகர் எனவும்-இத்தேவலகர்களை ஸத்கார்யத்தில் வர்ஜிக்கவேண்டுமெனஸ்மிருதி நிஷேதித்திருத் தலின்.தானப்பிரதிக்கிற ஹாதிகள் பரார்த்தமாதல் பற்றி இஷ்ஷட் கர்மத்தில் ஜன்ம சூத்திரர்களை ஓதுக்கப்பட்டிருக்கின்றது-பிராம்மணர்களாயிருந்தால் தானப்பிரதிக்கிரஹாதிகளுக்கு தோஷமுண்டாகா. இதுமட்டோஸ்மிருதி நம்பௌத்தரைப்போன்ற ஜன்ம சூத்திரர்களுக்கு கோமாம்ஸம் பிதிர்கிருத்தியங்களில் புசிக்கும்படி சிறூர்த்த நியமம் கூறப்பட்டிருக்கின்றது-ஏபுத்தரே-ஸ்மிருதி னும்மனோர் யாவரையும் கேவலங் கர்ம வாதிகளாய் சிவத் வேஷியாய் நாத்திகருய்

ஓதிக்கி ஸத்கர்மாக்களில் வர்ஜித்திருக்கின்றது- யே வீரபத்ரஸம்ஶப்தா: ஶிவபக்திபராங்முகா: | ஸம்ஹார்ய த்ர்யக்ஷம் தேவேஶம் யே(அ)ந்யஸ்மிந் யே நதீக்ஷிதா: | தேஷாம் ந ஹி மஹேஶஸ்ய ப்ரஸாதஸ்ஸர்வதா க்ஷயம்-என்னும் வாக்கியத்தால் வீரபத்திர மூர்த்தியால் சபிக்கப்பட்டவர்களும் சிவபக்தியில் பரான்முகராயிருப்பவர்களும் சிவபெருமானை நீத்து அன்யரை உபாஸிப்பவர்களையுஞ்சிவதீக்ஷை பெறாதோரும் இன்னோர்வர்களுக்கும் சிவனுடைய பிரஸாதங் கூடாதெனக்கூறியிருத்தலால் கேவலம் கர்மவாதிகளை வீரபத்திரர் சிவஞானமல்லாது போகசபித்திருப்பதால் ஜன்மசூத்திரர்களாகிய னும்மவர் சாபகிரஸ்தராகவு மண்ணேறு கொள்ளவேண்டிவரும்- இக்கருத்தை உட்கொண்டே யன்றோ ஸ்மிருதி கேவலம் அக்னியுபாஸனையை மாத்திரமே னும்மனோர்க்கு ஸத்கர்மமாய் விதிக்கப்பட்டுள்ளது-சிவோபாஸனையான சுருதிவிஹிதகர்மங்களை ஸ்மிருதியுந்துங் கூறினதில்லை பஸ்மோத்தூளனதிருபுண்டிதாரண உருத்திராக்கதாரணைபதி பசுபாசவஸ்து நிர்ணய சிவலிங்கார்ச்சன பிராஸாதாதி மந்திரம் முதலிய பரதர்மங்கள் வேதாகமவாயிலாய் விளங்கப்படுதலின் ஜன்மசூத்திரர்களுக்கு இப்பரதர்மத்தை ஸ்மிருதி பரிந்தூட்டமுயன்றதின்று-ஸ்மிருதியோ அக்னிஹோத்திரத்தை கைவிட்டால் பிரஷ்டனாவானெனவற்புருத்திக்கூறியதால் ஸ்மிருதியில் கூறிய-வைசுவாநராக்னி கேவலஞ் சாடராக்கினிபரமான ஜடதர்மமுடையதேயன்றி சேதனத்வமுடையதன்று-யஸ்த்வேதமேவம் ப்ராதேஶமாத்ரமபிவிமாநமாத்மாநம் வைஶ்வாநரமுபாஸ்தே ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸ்வந்நமத்தி-என்னும் சாந்தோக்யோபநிஷித் வாக்கியத்தால் வைசுவாநராக்னியேயுபாஸிக்கத் தகுந்தது சிவனுக்கு விசேஷத்வங் கூறவில்லை இவற்றால் ஸ்மிருதியும் வைசுவாநராக்கினிக்கு விசேஷத்வங்கூறிற்றென்பாருயின்-அயமக்நிர்வைஶ்வாநரோ யோ(அ)யமந்த: புருஷே யேநேதமந்நம் பச்யதே யதிதமத்யதே தஸ்யைஷ கோஷோ பவதி யமேதத் கர்ணாவபிதாய ஶ்ருணோதி ஸ யதோத்க்ரமிஷ்யந் பவதி நைநம் கோஷம் ஶ்ருணோதி-என்னும் வாக்கியத்தால் வைசுவாநராக்னி ஜாடராக்னி பரமாய்க் காணப்படுதலின் இவைச் சேதனோபாஸ்தை

யாகா-[illegible] என்னும் வாக்கியங்களால் வைசுவாநரமென்னும் சப்தத்திற்கு இந்தஇடத்தில் பிரஸித்தமிருக்கின்றபடியால் [illegible]-என்னும் வாக்கியத்தால் இஷ்டி தேவதையால் பலங்கொடுப்பதாய் கூறுவதால்இதைத்தவிரச் சேதனத்வமுடையது வேறொன்றில்லை எனின்-[illegible]-என்னும் வாக்கியத்தால் பரமேசுரருக்கு அஸாதாரணபிரும்மசப்தாதிகளினுல் விசேஷித்திருக்கின்றபடியால் இது ஜட ரூபமான ஜாடராக்னி பரமாகாது இவற்றுனும் பரமேசுவரரே உபாஸ்யரென்பது திண்ணம்-[illegible] என்னும் வாக்கியத்தால் பரமேசுவரருக்கு ஸ்வர்க்கம்முதல்பிரதிவிபர்யந்தமான ரூபமென்பது கூறப்படுகிறது. [illegible]-என்னும் வாக்கியத்தால் பரமேசுவரரையே சுட்டப்படுகின்றது- [illegible] என்னும் வாக்கியத்தால் மூன்றக்னி நிரூபிக்கப்பட்டு அங்ககல்பனை கேட்கப்படுதலின்ஜாடராக்னிபரயான பிராணுஹுதியின் பொருட்டாமன்றி இவை தேவத்வமுடைய முக்தியின் பொருட்டன்றும். [illegible]-என்னும் வாக்கியத்தால் அக்னிஸ்வரூபியாகிய பரமேஸ்வரர் ஸந்தோஷிக்கின்றுர் எனக் கேட்கப்படுதலால் சிவாக்னி உபாஸனையன்றி கேவலம் ஜாடராக்னி பரமானவைசுவாநராக்னி பிராம்மஞேபாஸ்யை யாகாது. இவை ஜன்மரூத்திறற்கே உறியது. அகனிஹோத்திரம் ஸாமான்யம் விசேஷமென இரு கூறுய் நிற்றலின் ஸாமான்யம் வைசுவாநராக்னி பரமும் விசேஷம் சிவாக்னி பரமாய் நிற்றலின் ஸர்வபூதாந்தராத்மா பரமேசுவரரேயாதலால் வைசுவாநராக்னி அந்தர்யாமி பரமேசுவ ரென்பது புலப்படும், இவற்றுல் சிவாகாரயான

சிவாக்னியே விசேஷமென்பது திண்ணம். இக்காரணம்பற்றிஜன்மருத்திரர்கள் ஜாடராக்னி உபாஸகரும்-ஜன்மபிராம்மணர்கள் சிவாக்னி உபாஸகருமாய்க் காணப்படுதலின் அத்தியயனயோக்யர்யாவரென்பதை உற்றுணர்ந்தடங்குவீராக-ஓய்புத்தரே நீவிர் ஸ்மிருதியை மாத்திரமே பிரமாணமாகக் கொண்ட ஸாமான்யர் சிவத்விஜர் வேதசிவாகமங்களைப் பிரமாணமாகக் கொண்ட விசேஷர் வேதாகமம் ஆதிசைவ பிராம்மணர்களுக்கு சொந்தப்பொருளென்பதையும் னும்போன்ற ஜன்மருத்திரர்க்கெங்ஙனம் விளங்கும் சுராமாம்ஸத்தை ஸத்காரியமாய்க்கொண்டுழலும் ஓய் அசைவரே மெய்ச்சமயமாகிய சைவஸமயத்தையும் சிவாச்சார்யர்களையும் நிந்தித்தால் னும்மை விசேஷரென மதித்து மறியாதிசெய்வாரென அகந்தை மேலிட்டு வெளிப்பட்டிருக்கின்றீர் ருக்வேதத்தில்சிவத்தைநீத்து அன்யதைவத்தை உட்கொண்டவன் மலத்தையுட்கொண்டவனாவான் எனக்கூறியிருத்தலால் இப்பதிதற்குற்ற வியாதிக்கு மலமன்றோ அவுஷதமாய் வேதங்களால் பரிந்தூட்டப்பட்டிருக்கின்றது இதுமட்டோ - ஶிவே ஶிவாக³மே சைவ ஶிவத⁴ர்மே ஶிவகு³ரௌ । த்³வேஷபு³த்³தி⁴ர்ப⁴வேத்³யஸ்ய ஸந்த்யஜேந்நரம் ॥ என்னும் வாக்கியத்தால் சிவபெருமானிடத்திலும் சிவாகமங்களிடத்திலும் சிவதர்மங்களிடத்திலும் சிவாச்சார்யர்களிடத்திலும் த்வேஷபுத்தியுள்ள நரனை பரித்யஜிக்கவேண்டுமெனக் கூறியிருத்தலால் நப்பவுத்தர் ஸாதுக்கள் கூடிய ஸபையில் யிருக்கத்தக்கவரா-ஓய் புத்தரே ஆசார்யாத்³தை⁴வ ஜ்ஞாதவ்யம் நாந்யதா² ஶ்ருதே-என்னும் வாக்கியத்தால்குருவினலேயே அறியத்தக்கது குருவன்றிஅறிதல் கூடாதெனவேதம் வியவஸ்தாபனஞ் செய்திருத்தலால் னுங்குலத்தாற்கு குருக்களென உலகப்பிரசித்தியாயுள்ளவர் யாவருளர் பரமவைதிகசிகாமணிகளாகிய ஆதிசைவ பிராம்பண ஜாதியாருக்கே குருக்கள் ஜாதி என வேதாகமவாயிலாய் உலகபிரஸித்தியாய் நிலைநின்று கொண்டிருக்க குருவுக்கு நாமம் போடநினைந்து வெளிப்பட்ட னும்புத்தியை நீட்டிவிளக்குமாறு யார் கைப்பட்டுதோவறிந்திலம் ஓய் புத்தரே குரு குலோத்பவ வாஸமுடைய குருக்கள் ஜாதியாருக்கு ஜன்மருத்திரர்களாகியனும்போலியோர் வேதாத்தியன வியவஸ்தாபனம் செய்ய வெளிப்பட்டது னும்மவரனத்தி

ற்குத்தக்க காரியமன்று னும்மைவேதமென்னும் சப்தத்தையே உச்சரிக்காவண்ணம் ஜன்மசூத்திரராய் ஸ்மிருதிகழித்திருக்கபந்தியில் னுழையாதே யென்றால் எலிபீத்த லென்பவன்போல் வேதாத்யயன வியவஸ்தை செய்யவந்தது னுமக்குற்ற அறியாமையேயன்றோ ஓய் புத்தரே யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் யஸ்ய ஜ்ஞானமயம் தப: தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூபமன்னஞ்ச ஜாயதே | என்னும் வாக்கியத்தால் பரஞ்சோதிரூபமாய் ஹிருதயபுண்டரீகசிதாகாசமத்தியையில் யிருப்பவருயும் ஸ்வபாவிகமாய் பாபத்தை தகித்து முக்தியைகொடுக்கத்தக்க பரமசக்தியோடுகூடிய பார்வதீ நாதரான பரமேசுவரரை குருமுகத்தாலறியத்தக்கதெனக்கூறி யிருத்தலால் இங்ஙன்முற்ற குருத்வசப்தத்திற்கு யாது கெதிதேடுவீர் ஸன்யாசியே ஜகத்குருவாவாரெனின் ஸன்யாஸியை-குருரக்நிர்த்விஜாதீநாம் வர்ணாநாம் ப்ராஹ்மணோ குரு:-என்னும் வாக்கியத்தால் கிரஹஸ்தனுக்கே குருத்வங் கூறப்பட்டு ஸன்யாசியை பரித்யஜித்திருக்கின்றபடியால் நம்புத்தருறை வெற்றுரையாகும் சங்கராச்சாரியார் முதலினோர் ஜகத்குருக்களாய் கொண்டாடப் பட்டிருத்தலால் குருத்வமவருக்குக் கூடுமெனின் சங்கராச்சாரியார் குருகுலோத்பவவம்சமல்லாது தனக்குப்பின்வேறொருவரை ஸ்வீகரித்துக் கொள்வதால் குருகுலோத்பவ மிவற்கில்லை என்பதுதெற்றெண வெளியாகின்றது இதுவுமன்றி-குகாரஸ்த்வந்தகாரஸ்ஸ்யாத் ருகாரஸ்தந்நிரோதக: | அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே-என்னும் வாக்கியத்தால் யிருட்டை நீக்கி ஒளியை கொடுப்பவர் குருவெனக் காணப்படுதலால் இருட்டே பொய்யென வாதிக்கும் மித்தியாவர்திகளுக்கு குருத்வஞ் சாறுத லெங்கனம் ஜகத்ஜீவன் பொய்பிரும்மந்தான் உள்ளதெனக்கூறு மிவர்களுக்கு ஜகத்குருத்வமென்பதும் பொய்யேயன்றோ ஜகஜ்ஜீவ சுவரபேதம் முப்பொருளை யொப்ப முடித்து கூறுந்திருப்தார்த்த ஜன்யஞானமுடையசிவஞானிக்கன்றோஜகத் குருத்வம் உண்மை பொருளாம் இவற்றாலன்றோ ஆதிசைவபிராம்மணர்கள் யாவரும் ஜகத்திலுள்ள யாவராலும் குருக்களெனக் கொண்டாடப்பட்டு வருகின்றார் வேதாகமங்களோ குருமுகத்தா

லறிபத்தக்கதென வியவஸ்தாபனஞ் செய்துவிட்டது பரவித்தைகளிலோ சிவத்விஜர்களுக்கே ஜகத்குருத்வஞ் சாதிக்கப்பட்டிருக்கின்றது ஸ்காந்தபுராணத்தில் [illegible] என்னும் வாக்கியத்தால் தாங்கள் லோக குருவாய் புஷ்பகிரி ஸந்தானத்தில் தோற்றிய மஹாத்மாவா யுள்ளவராதலால் துக்கத்தை யடைந்திருக்கின்ற இவர்களை சிஷ்யர்களாகக் கொள்ளவேண்டும் எல்லா பாபங்களும் நீங்கத்தக்க தங்களாலாராதிக்கப்படுகிறஅமிருதேசுவரரை தெர்சிக்கச்செய்து அல்லிங்கத்திற்கு பரிச்சர்யாதி சிவகைங்கரியத்தை இவர்களை செய்யும் பொருட்டமைத்து எந்தகாலத்திலிவர்கள் துக்கசாகரத்தினின்று நீங்குகிறார்களோ அதுபரியந்தம் இவர்கள் மேல் கருணை வைத்து அருள்புரிவீர்களாக. தாங்கள் லோககுருவாதலால் இது செய்யவேண்டுவது தங்கள் கடமையாகும் எனக்கூறியிருத்தலால் சிவப்பிராம்மணர்களே ஜகத்குருக்களென்பது ஸர்வசாஸ்திர ஸம்மதமாயிற்று மந்தானகாளீசம் ஆமார்த்தகி புஷ்கிரி கோளகிரணபத்திரம் முதலிய மடங்கள் சைவஸந்தான பரம்பரை யாதலின் சிவாச்சார்யர்களுக்கன்றே ஜகத்குருத்வஞ் சாதிக்கப்படும் சிவாச்சாரியர்களையன்றி ஏனையோர்க்கு ஜகத்குருத்வங் கூறியிருக்குமாயின் அவற்றை வேதத்தாலேனும் சிவாகமத்தாலேனும் புராணம் பதினெட்டாலேனும் புத்தரே ஈண்டெடுத்து விளக்க வெளிவருவீராக இவையன்றி புதிதாய் புதிக்கிய புதுநூல்யாம் பிரமாணத்திலங்கீகரிக்கமாட்டோம் அதுவும் வேதாகமபுராணேதிஹாஸாதி பிரமாணங்களாயிருத்தல் வேண்டும் ஓய்புத்தரே ஆதிசைவர்கள் வேதஸ்மிருதிவழித்தாய் முத்தியடைதல் வேண்டுமெனவற்புறுத்தினீர் வேதமென்றது நத்தாங்கூடரிஹி எழுதியதைப்போலொருவாறு ஒத்துவிட்டது ஸ்மிருதிஎனப்பின் சீர்தூக்கமுயன்றது விவேகக்குறைவாம் ஸ்மிருத்யாச்சாரம் கேவலம் கர்மடாளுக்கேயன்றி உ

யர்ந்த சிவஞானமுடையபரிபாகிக்குஸ்மிருதி அனுக்துணையும்பய ன்படத்தக்கதோவேதார்த்தம்ஸ்மிருதிஎனக்கூறுவீராயின்வேத ம் யார்முகமாய் வெளிப்பட்டது.ஸ்மிருதியார் முகமாய் வெளிப் பட்டது வேதம் சிவபெருமானது திருமுகத்துதித்தது ஸ்மிரு தி மன்வாதிகளின் வாக்கு மன்வாதிகளும் க்ஷத்திரியாதி தர்மங் களான கோர்ட்டுவியவஹாரநிபந்தனைகளும் வேட்டையாடல் மா ம்ஸம் புசித்தல் முதலிய தர்மங்களும் ஆகாராதி சுகாதார விள க்கங்களையும் அவ்வவற்றிற்கனுகுண்யமான கர்மாக்களையும் அக் னி உபாஸ்தனையுங்கூறப்பட்டிருக்கின்றது ஒப்புத்தரே-னும் வா யில் முக்தியல்லாதிருக்க ஸ்மிருதி மண் போட்டிருப்பதை அறி யாது ஆதிசைவருக்கும் ஸ்மிருத்யுக்த அனுஷ்டானத்தால்முக்தி வறவேண்டுமென ஊத்தை வாயைத்திறந்து கூக்குறலிடுகின்றீர் ஸர்வஞ்ஞன பரமேசுவரர் கூறிய பதிவாக்காகிய வேதங்களுக் கு கிஞ்சிஞ்ஞராகிய ருஷிகள் அர்த்தஞ் செய்யத்தக்கவர்களோ செய்யதக்கவராயின் வேதத்தில் பசும்வதா வெனகூறியிருப்ப தற்கு மாஸ்மபக்ஷணம் விதியெனக்கொள்ள வெளிப்படுவாரா வெளிப்படுவாராயின்-ஈஹிம்ஸாவ்யமொரய3-ஃ-என்னும் வேத வாக்கியக்கருத்தைபூர்வபக்ஷமாக்கிவிடுகின்றது தக்ஷிண கார்ஹப த்ய ஆஹவனியம்முதலியமூன்றக்னிக்கு ஸ்மிருதிவிசேஷங்கூறு கின்றது பஞ்சாக்னி வித்தைக்கு வேதம் விசேஷங் கூறுகின்றது வைச்வாநராக்னிவிசேஷமென ஸ்மிருதிகூறுகின்றது [illegible] [illegible] [illegible] [illegible] என வேதங்க ளில் பசுபதிசம்பந்தமான சிவாக்கினியே விசேஷம்பசுக்களாகிய ஜீவான்மாக்களுக்கு பாச நிவிருத்தியைச்செய்து முக்தியடையச் செய்யுமென்பதால் சிவாகாரமற்றவைச்வாநராக்னிஜடராக்னிபர மான அசேதனத்வ முடையதாம் [illegible] என செதிக்கிஎடுத்த சிலையைப்பூஜி எனக்கூறிய வேத வாக்கிற்கு ஸ்மிருதி என்னபொருள் கூறியிருக்கின்றது உமாஸஹாயரான பரமேசுவரரை தியான பூஜாதி ஸத்கர்மாக்களை விதித்துள்ளவே

திவாக்கிற்கு ஸ்மிருதி என்னபொருள் கூறியிருக்கின்றது பஸ்ம
ஜாபாலாதி ப்ரதிபாத்யமுடைய விபூதிஉருத்திராக்கதாரணாதிஸ
த்கர்மாக்களில் ஸ்மிருதி என்னபொருள் கூறியிருக்கின்றது பி
ராம்மிமுஹூர்த்தத்தில் எழுந்திருத்தல் வேண்டுமெனக் கூறிய
ஸ்மிருதி இராப்பகல் அறுபதுநாழிகையை என்னென்னமுஹூ
ர்த்தங்களை நிர்ணயித்து எந்தெந்த ஸத்கார்யங்களை எந்தெந்த
முஹூர்த்தத்தில் செய்யும்படி விதித்திருக்கின்றது ஸ்மிருதியில்
விராட் புருஷனையன்றி உலகத்திற்குநிமித்த காரணன்வேறொன்
றிலையெனக்கூறப்பட்டிருக்கின்றது வேதசிவாகமங்களில்சிவபெரு
மானை நிமித்தகாரணமாய்க்கூறுவதால் ஹிரண்யகர்ப்பவாதவிராட்
புருஷ ஸிருஷ்டியைக் கூறியதால் ஸ்மிருதி கேவல தந்திரமா
யொதுக்கப்படும்ஸ்மிருதியும்ஸர்வஞ்யனாகியபரமேசுவரர் திருவா
க்கன்றாதலால் வேத சிவாகமம்போல் பிரபல பிரமாணமாகாது ரி
ஷிகள்கிஞ்சிஞ்யராதலால் முற்றறிஞர்கூறியவேதத்திற்கு இக்கிஞ்
சிஞ்யர்பொருள்கூறிமுடித்தாரென்பதும் விவேகிகள் கொள்ளற்
பாலதன்று இவற்றால் ஸர்வஞ்யராகிய சிவபெருமான் திருமுக
மைந்தினாலும் வெளிப்பட்டவேதாகமங்களே ஸத்பிரமாணமாகி
யமுதனூல் இதற்கு வழினூல்புராணம் சார்புநூல் இதிஹாசம்
இதிஹாசத்திலும்தாழ்ந்தது ஸ்மிருதி இந்தஸ்மிருதியில் ஸுரா
மாம்ஸாதிகிருதுக்களை ஸத்கார்யமாய் முக்திபதத்திற்குச்சாதன
மென்பதாய்பரிந்தூட்டப்பட்டிருத்தலின் இவை அஸுராதிவி
யாமோஹார்த்தமாயொதுக்கப்பட்ட காபாலாதி கேவலதந்திர
நிஷ்டமுடையதாம் காபாலர்பைரவோபாஸனையுடையவர் இவ
ர்கள் அக்னி உபாஸனையுடையவர் இவ்விருதிரத்தார்க்குஞ் சீவ
ஹிம்ஸைஸத்கார்யமாயிறுதியில்முடிபுற்றிருத்தலின்! இவ்விரு
திறத்தாரையுமொன்றுகூட்டி யுவமிக்கமுயன்றதன்றி காபாலிக
றைனேக்க இவர்களுக்கு தைவமேயில்லாது அக்னி ஹோத்திரா
திஜடதர்மமுடைய ஜாடராக்னி உபாஸகரேயாதலால் கேவலம்
கர்மவாதிகளான நாஸ்திகரேயாவார்கள் ஒப் புத்தரே சிவாகமத்
தை நிந்தித்து வேதத்தைபுகழ்ந்து ஸ்மிருதியை உயர்த்திப்பேசி
யதால் நும்மை வைதிகரென உலகினர் கொண்டாடுவாரென்னும்
மமதைமேலிட்டு சிவாகமத்தை முதலில் நிந்திக்க யத்தனித்ததா
ல்வேதமிவற்குச்சார்பாமாறெங்கனம் ஸ்மிருதியைப் பின்னுயர்த்

களுக்கு அத்வைதஹானியன்று யாவும் பிரும்மாகாரமாயிருக்க குரு வேது சிஷ்யன்தானேது. குருமுகமாகவேதார்த்தத்தை எது அறிகிரது அறிவிப்பதுயாது, வேதம் யாரால்சொல்லப்பட்டது. இதர்க்கு அர்த்தஞ் சொல்லுபவர்யாவர் ஸர்வஞ்யசாஸ்திரத்திற்கு கிஞ்சிஞ்யர் அர்த்தஞ் சொல்லக்கூடியதோ முன்னுள்ள மஹாத்மாக்களுக்கே வேதார்த்தந்தெறியாது மயங்கி சிவபெருமான் அருளினரென சூதஸம்ஹிதை முதலியபிரமாணங்கள் கூறுவதால் சிவபெருமானை யன்றி வேதார்த்தஞ் செய்தற்குறியார் யாவருளர், அத்வைதத்தை அறிந்து என்றீரே, அத்வைதமென்பது யாது அறிபவர்யார், பிரும்ம நிஷ்டாளாயிருக்கிர வைதிகர் என்றீரே நிஷ்டாளார், நிஷ்டை எது. இங்கனம் யாவுமிவரே சான் மவாதத்திற்கிழுக்கா யிருத்தலினிவற்றிற்கு மகிமை என்பதுமாத்திரம் ஸத்யப்பொருளாதலெங்ஙனம் இவற்று லிவற்பரத்து வைதிகமென்பது மித்தைப்பொருளாம் இவை ஸத்யமாயிருப்பவர்கன்றோ வைதிகமஹிமையும் உண்மைப்பொருளாம். இங்ஙனமற்றதாலன்றோ வேதத்தை இரல்வாங்கினதென்றார், சிவாகமநிஷ்ட சிவஞானிகளுக்கு வேதஞ்சொந்தப் பொருளாயிருக்க எறவல்யாதுக்கு, சிவபெருமானோடு அன்யரையும் ஸமமெனக்கூறும் பிராந்திவாதமுடையாற்கன்றோ இரவல்வாங்குதல் ஆவச்யகமாம், சிவபெருமான் அத்வைதஸ்வரூபி என்று நமதுஸ்வாமிகள் வேதமிரல்வாங்கவேண்டுவதவச்யமில்லை. சைவத்தையன்றி அத்வைதமென ஒரு மதமிருக்கிறதென நிரூபிக்க வெளிவருவாரிது விஷயத்தில் இரவல் வாங்கவேண்டுவதுதான். ஆனல் நாம் சைவஸமயிகளாதலால் எம் மதஸ்தர் அவற்குற்றபிரமாணங்கூறினும், அவற்றை அப்பிராமாண்யமென ஒதுக்கவிரும்பேரம், அவ்வவகாரியகாரணம் நோக்கி யதார்த்தநிர்ணயத்தில் பின்னிடும் ஸாமான்யசாஸ்திரங்களை பூர்வபக்ஷமாக்கி மூர்ப்பட்டு நிர்பகைத கைப்பற்றுதல் சைவஸமயிக்குற்ற கடைமையாம். இதுவிஷயத்தில் இரவல்வாங்கியாவது சிவனையன்றி அத்வைதஸ்வரூபி வேறொன்றுளதெனக்காட்ட வெளிவரட்டும் பார்ப்போம். அங்கனமன்றோ இவர் ஸாமர்த்தியம் விளக்குதல் வேண்டும். வீணே வாசாலப்பனஞ் செய்வதால் யாது பயன் ஸ்வாமிகள் வாதமினத்தென்பதிவரின்று மூஹித்தறிந்திலர் கடிதத்தில் மய்தீட்டுவது கடமை என்றதைக் கைக்கொண்டவராயினர் அந்தோ அனியாய மனியாயம் மேதாவியர்கிவர் வாதமறுவறுப்பைத்தரும் இது நிற்க மேலுமிவர்கூறியுள்ளதை வருவித்துக்காட்டி ஆங்குறுமாசங்கையை பரிகறித்

தொத்துக்குவோமாக இவர்வரைந்துள்ள விஷயங்களாவன இவன் துரீயத்வ பிரதிபாத்யமுடைய நிற்குண உருத்திரரை குணமெனப் பிரமிப்பது கற்றறியாமாந்தர் செயலாமென்று வெழுதியிருக்கிறான். யாராகிலும் நிற்குணவஸ்துவைகுணமென்று இம்மூடந்தவிர வேறொருவன் சொல்லுவனா, ஒருக்கால் ப்ரமத்தால் ஸகுணமென்று இந்த மூடனைப்போலொத்தவன் சொன்னாலுஞ் சொல்லுவன், குணமென்றுருபித்தனுஞ் சொல்லான். தர்மதர்மிபேதஞானமில்லாதவனாய் முன்பின் விரோதந்தெறியாதவனாய் ஸம்ஸ்கிருத ஸம்ஸ்காரமேல சங்கூட யில்லாதவனாய், அளவில்லாவபசப்தங்களைச் சொல்லிக்கொண்டு ஆகமத்தினருகாமையில்கூட அண்ட அனர்கனாய், ஆகமபாரங்கதனென்ற பிமானமுள்ளவனாய் தாருமாறாக உளருகின்றயிவன் தன்னுடைய கற்றறியாத்தன்மையை பிரத்தியார் மேரிலாரோபிக்கிறான். இதுவானது தந்தோஷங்களை பிறிடத்தாரோபிக்கின்ற துஷ்டர்களுக்குறியது. இந்த அஞ்ஞாதகுல கோத்திரனை பாமதடியன் குடியனா, வெறியனா பூதமா, பிரேதமா, பிசாசமா இன்னுமென்னென்று சொல்ல இதுவரையில் ஒருவருக்குந் தெறியவில்லை. இந்தக் கொறைக்கொள்ளிவாயன் மதகண்டனஞ் செய்யப்புறப்பட்டு கொள்ளிவாய்ப்பிசாசம்போல் கூத்தாடுகிறான். இந்த நருதமன் உளருபடியை யூகித்துக் கேளுங்கள் அத்வைதத்தை தூஷிப்போமென்றெண்ணங்கொண்டு தன்மதத்தை நிருபிக்க வேதவாக்கியத்திற்கற்த்தஞ் சொல்ல ஆரம்பித்து அத்வைதத்தை ஸ்தாபித்தான். எப்படி என்றால் உருத்திரனைத்தவிர இரண்டாவதுகிடையாது ஆகையால் வேதாந்திகளிந் தர்த்தை யூகித்தரியாதவர்களென்று பிதற்றுகிறான். அத்வைதிகள் மதமே இதல்லவா, உருத்திரனைத்தவிர இரண்டாவது கிடையாது. உருத்திரன்தான் பிரும்மாவென்றும், விஷ்ணுவென்றும், சிவனென்றும், பிரும்மமென்றும் அனேக சப்தங்களினால் வியவஹரிக்கப்படுகின்றார். எனவரைந்துள்ளதோடும், இவையாவும் ஒன்றென்பதற்கு பிரமாணமாய் விஷ்ணு புராணத்தையும், சூதசங்கிதையும் பிரமாணமாக்கிக் கூறினற். முதலிலிவர் நமதுஸ்வாமிகள் துரிய பிரதிபாத்யமுடைய நிற்குண உருத்திரனை குணமெனப் பிரமிப்பது கற்றறியாமாந்தர் செயலென்றதைக் கண்டிக்கப்புகுந்தார். அங்கனங் குணமென்றது ஸகுணமென ஊகித்தல் வேண்டும். இதனால் துரீயனை ஸகுணமென்பதாய் ப்ரமித்தல் குற்றமென்பதவர்கருத்தாயிற்று இதற்கிவர்யாராகிலும் நிற்குணவஸ்துவை குணமென்று இம்

மூடந்தவிர வேறொருவன் சொல்லுவானோ என்றனர். பரமேசுவரர் ஸர்வசக்தியுடையவராதலின் ஸகுணம், நிற்குணம், ஸகுணநிற்குணமென்னும் மூன்று திருமேனியுடையாரென்பது வேதாகமமற்றுணிபாதலால் அவற்றையிவர்பரத்து அனுமானத்தாலும் யாம் முன்னெடுத்து சாதித்திருக்கின்றேன். பரமேசுவரசரீரம் ஸகுணமும் அருட்ச்சக்திமத்தாயுள்ளது, ஸகுணநிற்குணமும் அருட்ச்சக்திமத்தாயுள்ளது. நிற்குணமும் அருளுருவாயுள்ளது. இவற்றால் பரமேசுவரசரீரம் ஜீவான்மசரீரம்போலுள்ளதன்று. பிரும்மா, விஷ்ணு உருத்திரபர்யந்தம் ஸகுணமாயிருத்தலால் ஸகுணஉருத்திரர் துரீயஉருத்திரர் எனபேதமிரண்டுளதாகும் இவர்வாசாலம்பனமாய் நிற்குணவஸ்துவை குணமென்று யாராவது சொல்லுவாரா என்றும் அத்வைதிகள் மதமே இதுவெனவும் உருத்திரரைத்தவிர இரண்டாவது கிடையாது உருத்திரந்தான் பிரும்மாவென்றும், விஷ்ணுவென்றும், சிவனென்றும், பிரும்மமென்றும் அனேகசப்தங்களினால் வியவஹரிக்கப்படுகிறாரென்றும் இவரீண்டெடுத்து வியவஹரிக்கும் வியவஹாரம் ஸகுண உருத்திரருக்கும் நிற்குண உருத்திரருக்கும் பேதந்தெறியாது கூறும் விவாதமுடையாரென்பது அறிவுடையோர் யாவருக்கும் நன்குவிளங்கும் இவர் சாஸ்திரங்களில் மிக்கவல்லோராய் பிறர்கூறாது தாமே கூறிக்கொண்டு தற்புகழ்ச்சி செய்கின்றார். உருத்திரரைத் தவிர இரண்டாவதில்லை எனக்கூறிய வேதவாக்கியத்திற்கு ஜகஜ்ஜீவர்களே இல்லை எனக்கூற வெளிவந்து பிரும்ம, விஷ்ணு, உருத்திரர் முதலியவர்களேயும் பரமேசுவரரையும் ஒன்றுபடுத்திக்கூற விசைந்தார்.

இது வேதாகமாதி பிரமணங்களுக்குமுற்றும் விரோதமாம். இவரைமாத்திர மிங்கனன்னீக்கிக்கொண்டதற்குக் காரணம்யாதோ [illegible] என்னுஞ் சுருதிவாக்கியத்தால் த்விபாதசதுஷ்பாத பிராணிகள் பசுக்களென்றும், அப்பசுக்களுக்கு பதிபரமேசுவரரென்றும் இப்பரமேசுவரரை அறிந்தவர்கள் எல்லாபாபங்களினின்றுந்நீங்கி ஜன்மமிருத்யு

வைக்கடந்து பரமமுக்தி யடைவரென்றும் இந்த சிவஞான விசாரத்தால் சிவபக்தர்கள் பாசத்தை தகிக்கிராரெனவுங் கூறியிருத்தலால் பசு, பதி, பாச, மென்னுந் திருபதார்த்தஜன்ய சிவஞானமேயன்றோ வேதாகமங்களால் கூறியுள்ளது. இவ்வுண்மை நீற்றுயாவுமொன்றெனக்கூறும் ஏகான்மவாதிஸகுணம் நிற்குணமென்னும் பேதமுணர்ந்து நிற்பதெங்ஙனங்கூடும். யோ தேவாநாம் ப்ரபவஶ்சோத்பவஶ்ச விஶ்வாதிபோ ருத்ரோ மஹர்ஷி: ஹிரண்யகர்ப்பம் பஶ்யத ஜாயமாநம் என்னும் சுருதிவாக்கியத்தால் பிரும்மாமுதலிய ஸர்வபிரபஞ்ச ஸிருஷ்டிகளுக்கு பரமேசுவரர்காரணரெனத் தெறியவருவதால் பிரும்மாவே துரீய உருத்திரர் என்றது வேதமறியாதோர் செயலேயாகும் ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே நகாரணம் என்னும் சுருதிவாக்கியத்தால் பிரும்மா, விஷ்ணு முதலியவர்கள் பரமேசுவரராலுண்டாக்கப்பட்டவர்கள் இவர்கள் ஜகத்காரணர்களாகாரெனக் கூறியிருத்தலால் விஷ்ணுவே பரமேசுவரரென்றதும் வேதமறியாதோர் மயக்கவுணர்ச்சியாம் இவ்வாருள்ளஞாயம்பலவுளவற்றை விரிவஞ்சி விடுத்தோம் இங்ஙனமுற்ற வுண்மைகளைச் சிறிதும்முற்று நோக்காது ஸர்வோத்பத்திகாரணமாயுள்ள சிவபெருமானையும், அவராலுண்டாகிய பிரும்ம, விஷ்ணு முதலாகியவர்களை ஒன்றெனக் கூறும் வாதிகளுக்கன்றோ, இவர் கூறியுள்ள தூஷணங்கள்யாவும் பொருந்தும், சிவாச்சார்ய ஸ்வாமிகள்பாலிவற்றைப் பொருத்த நினைந்தது பொருந்தா விஷயமாம். இவற்றால் ஸம்ஸ்கிருதபாஷையில் தாமே வல்லவராய் தற்புகழ்ச்சி கூறியது விவேகிகள் கொள்ளத்தக்கதன்று இவர்பின்னும் நாராயண மஹாதேவாதி சப்தங்களில் வஸ்து ஒன்றுதானெனக் கூறியதையாம் முன்னெடுத்துக் கண்டித்துள்ள விஷயமாதலின் மீண்டுங்கண்டிப்பதனு வச்யகமாம் மேலுமிவர் காரியகாரண பிரும்மவாதங்கூறி இவ்விரண்டையும் ஒன்றுக்க விரும்பினற். இவர் கூறியஞாயத்தாலேயே இவ்விரண்டும் வேறெனக்காட்டிக்கண்டிக்கப் புகுவோமாக, பதினண்புராணங்களிலும், உபபுராணங்களிலும், சிவபுராணங்களில் விஷ்ணுவுக்கு ஜீவதர்மஞ் சொல்வதால் சிவபுராணங்களிலுள்ள விஷ்ணுநாராயணுதி சப்தங்களுக்கு காற்யபிரும்மம் அர்த்தம் சிவமஹாதேவாதி சப்தங்களுக்குக் காரணபிரும்மம் அர்த்தம். விஷ்ணு புராணங்களில் சிவனுக்கு ஜீவதர்மஞ்சொல்வது விஷ்ணுபுராணங்களிலுள்ள சிவமஹா தேவாதி

சப்தங்களுக்கு காரியபிரும்மம் அர்த்தம். விஷ்ணுநாராயணாதி சப்தங்களுக்கு காரணபிரும்மமர்த்தம், கார்யபிரும்மத்தைவிட்டு காரண பிரும்மம் உபாஸிக்கத்தக்கதென தாத்பர்யமாகிறதென்றார். ஒரு வஸ்துவுக்கே காரியங்காரணமென இரண்டவஸ்தை வருதல்கூடுமோ. மண்ணாகிய காரணம் கடமாகிய காரியம்போல் வருதல்கூடுமெனின் மண்ணும் அசேதனம் அவற்றில் தோற்றியகடமாகிய காரியமும் மசேதனம். இவற்றால் கடோத்பத்திக்கு சேதனமாகிய குலாலம்போல் நிமித்த காரணமாகாது. மண்துணைக்காரணமாய் நின்றுவிடும். சிவபுராணங்களினால் விஷ்ணுவுக்கு கார்யபிரும்மத்வத்தையும், விஷ்ணுபுராணங்களினால் சிவனுக்கு கார்ய பிரும்மத்வத்தையும் சாதித்தீர் காரியபிரும்மத்தை நீக்கி காரண பிரும்மத்தை உபாஸித்தல் வேண்டுமெனவும் தாத்பர்யம் விளக்கினீர். சிவவிஷ்ணுவாதி இருவர்களும், காரியபிரும்மமேயன்றி காரணபிரும்மமாகாரென்பதிவற்றாலேற்படுகின்றது. காரணபிரும்மத்தை உபாஸித்தல் வேண்டுமெனதாத்பர்ய மிருத்தலால் இது இவ்விரண்டிற்கும் அன்யமென்பதிவர் தீர்மானம் அதுதான் பிரும்மம். அந்த பிரும்மந்தான் சிவ விஷ்ணுவாதிகளைக் காரியத்திற்குக் கொண்டுவருகிறது. அதையே பிரும்ம நிஷ்டர்கள் உபாஸித்தல்வேண்டுமென வியவஹரிக்க வெளிவருவார்போல் காணப்படுகின்றது.

இவர் இங்கனங்கூறுவதற்கு பிரமாணமொன்றும் விளக்கவில்லை. இவர்பொருட்டியாம் பிரமாணமெடுத்தாள்வதனாவச்யகமாம். மற்றுமிவற்றின் வாஸ்தவார்த்தந்தான் யாதெனின் சிவபுராணங்களில் விஷ்ணுவுக்கு ஜீவதர்ம்மங்கூறியுள்ளது மூலபூதராகியவிஷ்ணுவுக்கேயென்றும் விஷ்ணுபுராணங்களில் உருத்திரருக்குக் கூறியுள்ள ஜீவதர்ம்மமானது ஸகுண உருத்திரபரமாமன்றி சிவபரமாகாதெனவுங் கண்டித்திருப்பதால் காரியபிரும்மகாரண பிரும்மவாதமிங்கன. முபஜீவித்திருத்தற்கிடமில்லை. பிரும்ம மொன்றாயிருப்பதால் அதற்கு காரியபரிணாமம் வருதலஸங்கதமாம் ஒன்றாயுள்ள பிரும்மம்பரிணாமடையுமாயின் அகண்டங்கெட்டு கண்டப்பொருளாயன்றோ போய்விடும். இவ்வாதிக்கு ஜீவஜகதீசுவரரென்னும் முப்பொருளும் உண்மைப்பொருளன்றாம், இவற்றால் முக்திவிசார மிவருபதேசிக்க முந்தினது விச்சாரணைக்குறைவாம். இவர்களையே நமதுஸ்வாமிகள் ஏகான்மவாதியென்றும் பிம்பபிரதிபிம்பவாதி என்றும், பரிணாமவாதியென்

றும், மாயாவாதியென்றும், பிரச்சன்ன பௌத்தவாதியென்றும் பல வாறுய்க்காரணப் பெயர்சூட்டி அவராசங்கபை வருவித்துக்காட்டிக்கண்டித்து வேதாகமற்றுணிபு நன்கு போதித்துள்ளாராதலின் பந்தலில் நுழையாதே என்றுலிலை மீத்தலென்பார்போல் திரும்பவிவர்விவாதம் ஆபாஸப் படுகுழிவீழ்ந்து தத்தளிக்கின்றது. ஏகான்ம வாதத்தைநாட்ட வெளிவருமொருவர் சைவ வைஷ்ணவமதம்புக்கிக் காலங்கடத்துவதுயாதுக்கு சைவவைஷ்ணவர்களிருவரும் ஆஸ்திகரேயாதலால் பரத்வ நிரூபணத்திலும் முக்திதாரதம்யத்திலும் வேறுபட்ட வியவஹாரிகள் இவற்றால் ஜகஜ்ஜீவேசுவரரென்னும் முப்பொருளு மித்தையென இவ்விருவர்களுங் கூறுர். இவ்வேகான்மவாதிகள் சைவஸமயம் வியவஹரித்தாலும் நமது ஸமயிகள் சைவரென அங்கீகரியார் வைஷ்ணவரும் தம் மதஸ்தராக்க விசையார் அவ்வவஸமய ஸம்ஸ்காரம் பெற்றீருர்க்கன்றே அம்மதஸ்தராதல்கூடும். இவர் விஷ்ணுபரத்வஞ் சொல்லவந்தவர்போல் வெளிவந்து விஷ்ணுவுக்கு காரியபிரும்மத்வஞ் சாதித்தது வைஷ்ணவருக்கனுகூலமோ பேஷ், பேஷ், நன்றுயிருக்கின்றது இவர் விஷ்ணுபுராணத்தையும் சூதசங்கிதையு மொன்றுக்கி தாத்பரியம் விளக்கியது விந்தையே தாருக்குமாறுய்த் துரஹங்காரத்தால் திட்டுவதை கற்காக்கயவர்க் கற்ப்பிதமாயொதுப்பட்டது. இவர்தாங்கொண்ட ஏகான்மவாதமாகிய கேவலாத்வைதத்தை நாட்டவனுவுளோராயின் நமதுஸ்வாமிகள் நிக்கிரஹித்திருக்கும் பூர்வபக்ஷங்களைக் கண்டித்து இவர் ஸ்வமதமாகிய ஏகான்மவாதத்தையன்றே நிலை நாட்டுதல்வேண்டும். அத்வைதிகளெல்லோருந் துரீய உருத்திரபிரதிபாத்யரென்றார். பின்போயிவர் இந்த உருத்திரர்காரிய உருத்திரரென்றார். இதற்க்கன்யங்காரண மொன்றுளதென வியவஹரித்து வருகின்றார். இவ்வியவஹாரம் முன்னெடுபின்முரணி நிற்க்கின்றதென்பதை யிவரின்று மூகித்தறிந்திலர் வாசாலம்பனமாய் ஸகலகலையுங்கற்றவரென்பதாய் பயமுறுத்துகின்றார். பனங்காட்டு நரி சிலுசிலுப்புக்கஞ்சுமோ வென்னும் பழமொழிபோல் உண்மைப் பொருளுணர் வுடையார் இவர் பயத்தை யொருபொருட்டாய் நினையார். பிரமாணமற்ற வெற்றுரைக்குயார்தானஞ்சுவர் ஒருவர்விசகு நாங்கோடி வசவுவய்யும்படியாயிவர் வியவஹாரமிடந் தருகின்றது. கற்றறிந்தோரங்கன மிறகேந்தத் துணியார். பின்னுமிவர் நமதுஸ்வாமிக்ள்மேல் குறைகூறியதாவது, ஸர்வோத்கருஷ்டர் உருத்திர

ரென அர்த்தமிருக்க விசுவத்தை அதிக்கிரமித்தவர் என்றெழுதியது தப்பெனக் கூறுகின்றார் அதிக சப்தத்திற்மேலெனைப் பொருளாதல் பற்றி அதிக்கிரமித்துள்ளவரென்பது தப்பன்று எவ்வாராயினுமாகுக இங்கன மிரண்டர்த்தத்தினுலும் உருத்ரபரத்வத்திற்கு ஹானியுண்டா இவர்கூறியவாறு விசேஷரெனப் பொருள்கொள்வோமாயின் ஸாஜாத்யப்பொருளாய்விடும் விசுவவிசேஷர் என்பதைநோக்க விசுவத்தைக்கடந்தவர் என்பது விசேஷார்த்தமாகும் இவற்றால் வேதார்த்தம் வேதவியாஸராலும் ரிஷிகளாலும் இவர்போன்ற காவ்யவியாகரணவித்பத்தியுடையவராலும் செய்பத்தக்கதன்று வேதமோ ஸர்வஞ்யனல் கூறியுள்ள மெய்நூல் இதற்குகிஞ்சிஞ்பர்களாகிய தேவதைகளாலும், ரிஷிகளாலும் கூறியுள்ளது அர்த்தமாகா அனேகதேவதைகளுக்கும் ரிஷிகளுக்கும் வேதார்த்தத்தில் ஸந்தேகம் ஜனித்துபரமேசுவரரே ஈசானவிஷயஞானத்தால் நிவிர்த்தி செய்கின்றாரென பிரமாண முகத்தால் தெறியவருவதால் பசுபதிபரமேசுவரர் திருவாய்மலர்ந்தருளிய வேதார்த்தவிரோதமாய் இவர்கு லிருஷ்டார்த்த காவ்யவித்பத்தி செல்லுதலெங்கனம், இதுகாரிய பிரும்மங்காரண பிரும்மமென்னுங் கதைபோலாயிற்று இவற்றால் படிக்காதமுட்டாளென்னும் அகம்பாவச்சொல் யாருக்கென்பதை விவேகிகளுகித்தறிவார்களாக.

இதுவுமன்றி ஸ்வர்க்கலோகமானது ஜோதிஸ்லினலே வியாபிக்கப்பட்டிருக்கிரதென அர்த்தமிருக்க ஸ்வர்க்கலோகமானது ஜோதிஸ்ரூபமாயிருக்கிரதென்று நமதுஸ்வாமிகள் சொன்னாராம். இதினுல் சப்தார்த்தம் இவற்கு வித்யாஸப்பட்டுப்போச்சுதாம். இங்கனம் நமதுஸ்வாமிகள் பதவுறை கூறியிருக்கின்றாரா, அபிப்பிராயங் கூறியிருக்கின்றாரா இவ்விரண்டையு முற்றுணருந்தரமற்ற விவர்சப்தார்த்தவித்யாஸமெனக் கூறுவதெப்படி சப்தத்தின்மேல் அர்த்தஞ்சொன்னுலன்றோ சப்தார்த்தத்தை ஆறாய்சசிசெய்தல்வேண்டும் வேதாகமங்கள் சப்தசாஸ்திராதிகளை அபரமெனக்கழித்து பூர்வபக்ஷமாக்கியிருத்தலால் இப்பூர்பக்ஷம் சித்தாந்த சாஸ்திரத்திர்க்கு முன்னெங்கனே தலைநீட்டிவாழ்தற்குறியது. இங்கனம் ஸ்வர்க்கலோகத்தில் பரமேசுவரர் வியாபித்திருக்கிரார் எதினுல் வியாபித்திருக்கிரார் ஜ்யோதிஸ்வரூபத்தால் வியாபித்திருக்கின்றாரென்னும் அர்த்தபுஷ்டி தோன்றுமாறு ஜோதிஸ்ஸைஸ்வரூபமெனவும் இந்த ஸ்வரூபமய

மாய் ஸ்வர்க்கலோக மிருக்கின்றதெனவும் கூறியுள்ள அருமை நோக்காது பன்னாடைபோல் ஸாரத்தைநீக்கி அஸாரத்தைக் கைப்பற்றுவது விவேகிகளுக்கு அழகாமா இவ்விருதிரத்தாலுமிவர் கக்ஷிக்கனுகூலம்பாதிருக்கின்றது. இவரேகான்மவாதத்திற்கு ஸ்வர்க்கலோக பிரஸ்தாபமிழுக்கன்றோ பதார்த்தம பிரும்மத்தைத்தவிர வேறொன்றில்லாதிருப்பதுபற்றி ஸ்வர்க்கலோக மொன்றிருப்பதாய்க் கூறியுள்ள வேதவாக்கிவர்க்குப் பொய்யேயன்றோ இங்குருமாசங்கைக்கிவரென்ன விடையளித்திருக்கின்றார் நமதுஸ்வாமிகள் கேழ்வையின்னதென வூகித்தறியாதிவர் சப்தார்த்தந் தெறிந்தவர்போல் பிரஸ்தாபித்துக்கொள்வதெப்படி, ஆசங்கைதெறிந்தாலன்றோ சப்தஜாலத்தால் தக்கவாறு பொருள்விகற்பமுறுமாறு மாற்றுதலுங்கூடும் ஆசங்கையின்னதென உய்த்துணருந்திரமற்ற விவரெங்கனம் போயினுவாதத்திற்கனுகூலமாவதெப்படி. இங்கனமுற்றுணர்ந்தடங்காது விருதாநிந்தாவசனங்களால் தங்கக்ஷி ஜயித்துவிட்டதாய்க் கிடித்தை நிரப்பி ஸந்தோஷித்தார். இன்னிந்தை வசனங்கள் யாவுமவிவேகிக்கற்பிதமாயொதுக்கப்பட்டது. இதுநிற்க,

சுமகநு சுவுரவுநு என்கிர சப்தங்களுக்கு போகிறார்கள் பிரசினிக்கிறார்கள் என்று நமது குருநாதர் அர்த்தஞ்சொன்னாராம் இந்த சப்தத்தைக்காட்டி நமதுஸ்வாமிகள் ஓரிடத்திலும் அர்த்தஞ்சொன்னதில்லே. அவர்கள்சொன்ன அர்த்தத்தில் விகற்பார்த்தத்யோதகமாய் சப்தத்தை நோக்கியிவர் பிரமித்திருக்கலாம். இங்கனமிவர்க்குற்ற பிராந்தி பரிபாககாலத்தில் நீக்கப்படும் பின்னுமிவர் உருத்திரனைத் தவிர இரண்டாவது கிடையாது உருத்திரர் விசுவத்தையதிக்கிரமித்துள்ளவர் ஸ்வர்க்கலோகமானது. ஜ்யோதிஸ்வரூபமாயுள்ளது எல்லாதேவர்களும் ஸ்வர்க்கலோகத்தை யடைகின்றார்கள். அந்ததேவர்கள் உருத்திரனை பிரச்னிக்கிறார்கள். என்பதினால் துரீயாதீதஸ்தானமாகின்றது. என நமதுஸ்வாமிகள் வியவஹரித்துள்ளவிடத்தின் மஹிமைநோக்காது பரிஹாஸஞ்செய்யப் புரப்பட்டார். இங்கனம் ஸத்வரஜதமோ குணபர்யந்தம் ஸகுணமாகவும், அதற்குமேல் நிற்குணமாகவும் வேதாகமங்கள் கூறியிருப்பதால் குணஉருத்திரர்துரீய உருத்திரர்யென பேதமிறண்டுடைய தென்பதுகாட்டி துரியரும் துரியாதிதரும் பரசிவமென்பதாய் நிரூபித்துள்ளவிடத்தில் இவர் குவிருஷ்டார்த்த கல்பனம் எங்ஙனமேருதற்குறியது. இவ

றுற்றுநோக்காது தப்பபிப்பிராயங்கொண்டு விருதாகண்டக்ஷேபஞ் செய்வதால் யாதுபயன். இங்ஙன மிவர்சப்தார்த்த ஆராய்ச்சி பயன்பட்டதின்று இவற்றாலுமிவர் நிந்தாவசனங்களை மூர்க்கற்க் கற்பிதமா யொதுக்கப்பட்டது. பின்னுமிவர் ஆகமஸ்ய கிரேர்மத்யாத் அம்ருதம் ப்ரஸ்ரவத்யஹோ என்னும் சங்கரஸம்ஹிதை சுலோகார்த்தம் சிவாகமமாகிய கிரிமத்தியத்திலிருந்து அமிருதம்பிர வாஹித்துள்ளதெனக் கேட்கப்படுவதால் அதினின்று கொஞ்சமெடுத்து புராணங்களைச் சொல்லுகிறேனென நமதுஸ்வாமிகள் கூறியுள்ள கருத்தைக் கண்டிக்கப்புகுந்து ஆகமபதத்திற்கு வேதம் அர்த்தம் அமிருதபதத்திற்கு மோக்ஷமர்த்தம் பிரவதி என்றால் பிரவாகிக்கிறதென்றர்த்தம் வேதத்திற்குள்ளே மோக்ஷமிருக்கிறது. அதில் கொஞ்சமெடுத்து இந்த ஸ்காந்தம் பண்ணினேனென்றதால் வேதத்திலுள்ள பூர்ணமான அமிருதத்தையடைய புராணத்திலுள்ள ஸ்வர்பஅமிருதமானது ஸாதனமென்றேற்படுகிறதென அர்த்தங்கூறி மகிழ்ந்தார். சங்கரஸம்ஹிதையிவர் தலைமுறையிலேயும் பார்த்தறியாதவரென்பது அர்த்தத்தால் புலப்பட்டுநிற்கின்றது. யதா ஶாஸ்த்ரேஷு வேதேஷு விஶ்வாதி: கௌரீபதி: | பரேஶ: பரம: ஸாக்ஷாச்ச பதி: பாஶவிமோசக: | பரம்ப்ரஹ்ம பரந்தாம பரஞ்ஜோதிரநாகுலம் | மங்களம் மங்களாநாஞ்ச பாவநாநாஞ்ச பாவநம் | ஸர்வமங்களஸம்யுக்த உத்யத்ஸூர்யஸமப்ரப: | ஶாஶ்வதோ மோக்ஷதோ நித்ய இத்யேதம் ப்ரவதந்தி ஹி | ததா ஶைவபுராணாநி ஶிவம் ஸாம்பம் த்ர்யம்பகம் | ஸ்வதந்த்ரமேகமத்வைதம் ப்ரவதந்தி நிரந்தரம் | என்னும் சங்கரஸம்ஹிதாவாக்கியத்தால் எப்படி சாஸ்திரங்களிலும் வேதங்களிலும் விசுவாதிகராயுள்ள பார்வதீஸமேதரான பரமேசுவரர் பரமபுருஷரென்றும் பாசத்தினின்று உண்மையில் விடுவிக்கத்தக்கபதியென்றும், உத்தமஸ்தானமென்றும், மறைக்ககூடாத சிரேஷ்டமான ஜோதியென்றும், சுபத்திற்கெல்லாஞ் சுபமென்றும், பரிசுத்தத்திற்கெல்லாம் பரிசுத்தமென்றும், ஸர்வமங்கள ஸ்வரூபரென்றும், பிங்கள வர்ணரென்றும், நித்தியரென்றும், மோக்ஷரூபமென்றும் சிவாகமங்கள் சொல்லுகிறதுகளோ அதுபோலவே புராணங்களும் பரசிவனை அம்பாளோடு கூடியவரென்றும், மூன்று கண்ணுடையாரென்றும், ஸ்வதந்திரரென்றும், அஸமானரென்றும், அத்வைதஸ்வரூபி

யென்றும் சொல்லுகிறதுகள். எனக்கூறியிருத்தலால் ஆகமபதத்திற்கு வேதமர்த்தமென்பது. அபரவித்யையாகிய ருக்காதிவேதங்களென்பது பொருளாகாது ஏனெனில்:—

[illegible]

[illegible]

என்னும் சங்கர சங்கிதாவாக்கியத்தால் முன்காலத்தில் கைலாஸத்தில் பரமேசுவரரைப்பார்த்து பார்வதி, பிரும்மா, விஷ்ணு, ரிஷிகள் இவர்களெல்லோரும் பக்தியுடன் வணங்கி ஆதரவுடன் எங்களுக்கு சிவாகமார்த்தங்களை தயவுசெய்து கிருதார்த்தராகும்பொருட்டு உபதேசிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டவராய்க்கொண்டு நந்திமுதலான கணங்களுடன் ஆஸனத்திலிருந்தெழுந்து அதே கைலாஸபர்வதத்தினுடைய புஷ்பகிரி என்ற சிகரத்தில் மனோஹரமான ஆலயத்திலிருந்து ஆச்சார்ய மூர்த்தமாயமைந்து அம்பாள், கணபதி, ஸ்கந்தர், சாஸ்தா, பைரவர் முதலான பூதநாதர்களுக்கும் வீரபத்திரர் முதலான கணநாதர்களுக்கும், வேதாகமார்த்தங்களை அத்தியனஞ் செய்வித்தார். ஆமர்த்தக்கிரி என்ற மற்றொரு சிகரத்தில் ஆச்சார்ய முஹூர்த்தமாயமைந்து. நந்திகேசுவரர், மஹாகாளர், சந்திரன், நந்திமுதலான பிரமதகணங்களுக்கும் வேதாகமார்த்தத்தை அத்தியயனஞ் செய்வித்தார். கோளகிரி யென்ற பிரஸித்தமான மற்றொரு கொடுமுடியில் குருமூர்த்தமாயமைந்து பிரும்மா, விஷ்ணு, இந்திரன் இவர்களுக்கு அதிகமான சிவாகமார்த்தங்களை உபதேசித்தார். பிக்ஷாச்சார்யனென்கிற பிரஸித்தமான வேறொரு கொடுமுடியில் ஸனகாதிகளான ரிஷிகளுக்கு வேதாந்தார்த்தமான சிவாகமங்களை அத்தியயனஞ் செய்வித்தார். இந்த பிரகாரம் நாலுகொடுமுடிகளிலும் பிரஸித்தங்களான நாலுமூர்த்திகளிருந்தும் அனுக்கிரஹத்தையடைந்த ரிஷிகளனேகருண்டு மருபடிகொஞ்

சகாலங்கிரமித்து த்வாபரயுகத்தின் கடைசிகாலங்களில் சிவாகமார்த்தங்களும் வேதார்த்தங்களும் அழிந்துபோக ஆரம்பிக்க சிவபெருமானனுமதியினல் நாலுகொடுமுடிகளிலும் சிஷ்யர்களாயிருந்தநாலுகூட்டத்தாரும் பூமியில் அதே ஆச்சார்யர் பெயரை வகித்தவர்களாக அவதரித்து அந்தந்த ஸந்தானப்பேருடன் சிவபெருமானுஜ்ஞையால்அனேகர்களுக்கு தங்களுடைய வேதசிவாகமஸாமர்த்தியத்தால் சிவதீக்ஷையையுஞ்செய்வித்து சர்யை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களான சிவாகமங்களை உபதேசித்து அனேகமான ஸந்ததிகளை அந்தந்த ஸந்தானக்கிரமமாய் யேற்படுத்தி வேதசிவாகமார்த்தங்களைத் தன்னைப்போலவே கற்பித்து ஆச்சார்யாபிஷேகஞ்செய்து இவர்கள் கைலாஸத்தை அடைவார்கள். அந்த ஸந்ததியில் பிரந்த குருக்கள் பாரம்பரியக் கிரமமாக இந்த லோகத்தில் பரிபாகமுடைய ஆத்மாக்களை அனுக்கிரிக்கிரார்கள் ஆகையால் சிவாகமார்த்தத்தை தெறிந்த குருக்களை சிவமாக அறியவேண்டியது அவருடைய அனுக்கிரஹத்தால் பரமேசுவருக்குச் செய்கிரபூஜையானது உடனே பலத்தைக் கொடுக்கின்றது. அவரனுக்கிரஹமில்லாவிடில் ஒரு வித்தையும் ஸித்திக்காது. குருவினிடத்திருந்துதான் எந்தப்பிரகாரமாவது எல்லா வித்தைகளையும் அப்யஸிக்கவேண்டுமெனக் கூறியிருத்தலால் இவர் ஆகமபதத்திற்கு வேதமர்த்தமென்றதை சங்கர ஸம்ஹிதையே புறக்கணித்தொதுக்குகின்றது. வேதசிவாகமங்களிரண்டும் பராபரவித்யாபேதமாய் ஆன்மலாபத்தில் பயன்பட்டு நிற்கும் மெய்நூலாதலால் சிவாகமத்தோடொப்ப முடிந்துள்ளது வேதமென்பதாம் இவற்றல் வைதிகரென்பது வேதசிவாகமங்களைக் கைப்பற்றி நிற்போற்குறியதேயன்றி சிவாகமத்தை அப்பிராமாண்யமாகக்கூறும் நாஸ்திகர் பாத்தில் வைதிகத்வமேராதென்பது வேதாகமற்றுணிபாம் இருக்காதிகளும், சிவாகமங்களும் சிவபெருமாந் திருமுகத்துதித்தமெய்நூலாதலால் இவ்விரண்டிற்கும் வேதமென்பது பொதுப்பெயர், வித்யாசப்தங்கள் வருமிடங்களில் வேதத்தைச்சாராது சிவாகமத்தைச் சார்ந்து சிரப்புப்பொருளை நன்கு விளக்கிநிற்கும். இவற்றல் வேதமென்றூலும், சுருதியென்றூலும் சிரௌதமென்றூலும் வேதசிவாகம மிரண்டிற்குப் பொதுப்பெயர் வித்தையென்னுமிடத்தில் சிவாகமத்திற்கு மாத்திரமே பயன்பட்டு நிற்கும் சிறப்புப்பேர் இங்ஙனமுற்ற உண்மைப்பொருள் சிற்சிலற்கு விளக்கமற்று சிவாகமநிந்தைப்புறியவெளிப்படுகின்றூர். இவை வேதாகம புராணுதிஸத்பிராமா

ணங்களின் முன்-நிலை நிற்றலெங்ஙனம் இவற்றால் இவர் தூற்றும் சிவாகடாதூஷணம் நிஸ்பிருஹமென்க. இங்ஙனம் புராடாசம் நாய் ஊத்தைவாய் முதலியவசை மொழிகைப்பற்றியது. வேதாகமபுராணேதிஹாஸாதி ஸத்பிரமாணமுடை ஸாதுக்கள் பாத்தாகாதென்பது நன்றுபோதிக்கப்பட்டது.

நெய்யின்குணம் அறிந்தோமென்னும் ஆடம்பரச்சொல் அடியோடற்று தலைசாய்ந்துவிட்டன. இவ்வாறாயின் உத்கடேச்சாரூப ருசியுண்டாதலெங்ஙனம் இவர்வீணே பூர்ணானந்தம், ஸ்வரூபம், போகஸுகம், நிரதிசயானந்தம் வேதாந்த விச்சாரமென்னுஞ்சொற்களை நிரப்பி ஸந்தர்ப்ப விரோதமாய் கதைவிளப்பதை செவியாரல்ச்செய்து ஸந்தோஷிப்பவர் இவரையன்றி வேறு யாவருளர் வேதாந்திகளாகிய ஏகான்மவாதிகளுக்கு மந்தாதிகாரத்தில் நிர்பெதது பிரும்மமேயன்றோ இப்பிரும்மத்தின்மந்தத்தை நீக்க புராணாதிகளைப்பண்ணின ரிஷிகள்யார். பிரும்மமாபிரும்மத்திற்குவேறா பிரும்மமெனின் தனது அதிகாரத்தை பேதிக்கவிச்சையா, பிரும்மமன்றெனின் ரிஷிகள் பிரும்மத்திலுந் தாழ்ந்தோராதலால் பிரும்மத்தினதிகாரத்தை மாற்றவகையற்றோராவர். இவற்றால்புராணங்களை ரிஷிபண்ணினதும் நிஷ்பிரயோஜனமாகும் இதினாலென்னதாத்பர்யமென்றாலென விவர்வருவித்துக் காட்டுபது அத்தியாச்சர்யமாயிருக்கின்றது. இவருக்கு மோக்ஷமென்பது முயற்கோடு போலிருக்க அவற்றை யடைதல்விருத்தமன்று மேலுமிவர் வேதத்திலதிகாரமுள்ள த்ரைவர்ணிகாள் அதாவது பிரும்ம க்ஷத்திரிய வைச்யர்கள் மோக்ஷத்துக்காக வேதாந்தத்தை விசாரிக்கவேண்டும் வேதத்திலனதிகாரிகளான ஸ்திரீ சூத்திரர்கள் பாரதம் முதலான இதிஹாஸங்களையும் ஸ்காந்த விஷ்ணுபுராணம் முதாலான புராணங்களையும் பிராம்மணமுகமாக பிராம்மணனை முன்னிட்டு சிரவணம் பண்ணவேண்டும். 𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑍇𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍋𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑌗𑍍𑌰𑌤𑌃। என்னு ஸ்மிருதி வசனத்தால் சிரவணம்பண்ணிவைக்கிர பிராமணனும் பிராம்மணரை முன்னிட்டு நாலுவர்ணங்களுக்கும் சிரவணம் பண்ணிவைக்கவேண்டும். 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌜𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑍋𑌚𑌰𑌾। 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌕𑍃𑌤𑌮𑍍। என்கிற வசனத்தால் ஸ்திரீசூத்திரர்களுக்கும் ஸ்திரீசூத்திரர்களுக்கு ஸமானனான த்விஜர்களுக்கும், அதாவது வேதாத்தியயனாதி ஸம்ஸ்கார சூன்யாளான வேதாந்த சிரவண அனதிகாரிகளா

யிருக்கின்ற பிரும்ம க்ஷத்திரியவைச்யர்களுக்கும், பௌராணிக பிராம்மணன் புராணேதிஹாஸாதிகளைச்சொல்லவேண்டும். யஸ்து வேதவிதோ விப்ர: புராணம் வேத்தி நார்த்தத: | தம் த்ருஷ்ட்வா பயமாப்நோதி வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி| என்கிர வசனத்தில் வேதவேதார்த்தங்களை குருமுகமாக நன்றாகத் தெரிந்துகொண்டு இதிஹாஸ புராணங்களுக்கு ஸம்சய விபர்யயமில்லாமல் அறிந்து கொண்டவனான வைதிக பிராம்மணம் முகமாக அதாவது ஸகலவேத சாஸ்திர ரஹஸ்யந் தெறிந்தவனான அத்வைதி மஹாப்பிராம்மணன் மூகமாக ஸ்திரீ சூத்திர த்விஜபந்துக்கள் இதிஹாஸ புராணாதிகளைக் கேழ்க்கவேண்டும். க்ஷத்திரியவைச்யர்கள்வேதத்திலதிகாரமுள்ளவர்களாயிருப்பினும், அத்தியயனம் பண்ணிவைக்க அதிகாரமில்லாதவர்களாகையால், இவர்கள் புராணஞ்சொல்லவுங்கூடாது. இவர்கள் முகமாக ஒருவரும் புராணசிரவணம் பண்ணவுங்கூடாது. த்விஜஸ்த்ரீணாஞ்ச ஶூத்ராணாம் தஜ்ஜ்ஞாநாத்ஸ்யாத்ஹ்யதிகாரிதா | என்கிர சூதஸங்கிதா வசனத்தால் த்விஜ ஸ்திரீகளுக்கு வேதாந்த சிரவணத்தில் அதிகாரஞ்சொல்லப்பட்டிருக்கிறது. ஶுஶ்ரூஷைவ ஶூத்ரஸ்ய த்விஜஶுஶ்ரூஷைவ | புராணே நைவ வேதநம் | என்கிர சூதசங்கிதாவசனமானது ஸ்வதர்மநிஷ்டனான சூத்திரனுக்குத்விஜ சிசுருஷைதான் முக்ய விருத்திஎன்கிர சாஸ்திரப்படிக்குத் விஜசிசுருஷைபண்ணிக்கொண்டிருக்கிர சூத்திரனுக்கு புராண சிரவணத்தில் தானதிகாரமென்று சொல்லுகிரது. அநுலோமவிலோமாநாம் ஜ்ஞாநாப்யாஸோ விதீயதே| பாஷாந்தரேண காலேந தேஷாம் மோக்ஷஸ்ய காரக:| என்கிர சூதஸம்ஹிதா வசனமானது நாலுவர்ணங்களுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு பாஷாந்திரத்தாலேக் ஞானப்யாஸமானது விதிக்கப்பட்டிருக்கிரதென்றும் அது காலாந்தரத்தில் பலத்தைக்கொடுக்குமெனவும் சொல்லுகிரது. அதாவது புராணத்திலும் அதிகாரமில்லாத ஸங்கரர்களுக்கு கெதியுண்டு பண்ணுவதற்காகதயவினால் மஹாத்மாக்களால் செய்யப்பட்டிருக்கிற அத்வைதாத்மபரமான அந்தந்ததேசபாஷை பிரபந்தங்களை ஸங்கரர்கள்படிக்கவேண்டும். அவர்களும் காலாந்தரத்தில் த்விஜசரீரமெடுத்து வேதாந்த விச்சாரம்பண்ணி மோக்ஷத்தை யடைவார்கள் என்று தாத்பர்யம். ஆகமமென்றால் சைவாகமந்தான், அதிலிருக்கிர அமிருதப் பிரவாகத்தில் கொஞ்சமெடுத்துக்கொண்டுவந்து ஸ்காந்தத்தில் வைத்

திருக்கிறேனென்று ஸ்காந்த புராணத்தில் கண்டோக்தமா யிருப்பதினாலே புராணத்தைக் காட்டிலும் ஆகமம் சிரேஷ்டமென்று நீ சொன்னது அஸங்கதம் ஆகம பதத்திற்கு நீ சைவாகமமென்றர்த்தஞ் சொன்னால் வைஷ்ணவாகமந்தானர்த்தம், பைரவாகமந்தானர்த்தம், லாகுளாகமந்தானர்த்தமென்றேன் சொல்லக்கூடாது. அதெல்லாமர்த்தமல்ல சைவாகமந்தானர்த்தமென்று சொல்வதற்கு பிரமாணமில்லையாகையால் நிருபபத ஆகம பதத்திற்கு வேதந்தானர்த்தம். அதிலிருந்து கொஞ்சம் அமிருதத்தைஸ்காந்தத்தில் வைத்தோமென்று புராணார்த்தஞ் சொல்லியிருப்பதினால் புராணம் வேதமூலகமென்று அர்த்தமாகிறது. ஆகமம் வேதமூலகமென்றுசொல்லப் பிரமாணமொன்றுமில்லாததினால் நிர்மூலமென்பது ஸ்பஷ்டம் ஆகச்சே வேதமூலமான புராணமானது நிர்மூலங்களான ஆகமங்களைக் காட்டிலும் சிரேஷ்டமென்பதும் ஆகமங்களைக் காட்டிலும், புராணம் நிகிருஷ்மென்று சொல்லுகிற நீ புராணங்களுக்குத்கர்ஷத்தை ஸகிக்காதபடியினாலே பாஷண்டி சிரோன்மணி யென்பதும் பாலர்களுக்குந் தெறியவருமென்பதி லாக்ஷேபமென்னவென வறைந்தார். முதலிலிவர் திரயிவர்ணிக விஷயங்கூறியது நத்தாங்கூடறிஹி எழுதியது போலொருவா ரொத்திருக்கின்றது. வேதத்தி லனதிகாரிகளான ஸ்திரீ சூத்திரர்கள் பாரதம் முதலாகிய இதிஹாஸங்களையும், விஷ்ணுபுராணங்களையும் பிராம்மண முகமாய் பிராம்மணனை முன்னிட்டு சிரவணம் பண்ணவேண்டுமென ஸ்மிருதிவாயிலாய் விளக்கி யிருக்கின்றாரே. இங்ஙனம் பிராம்மணராரென்னுமா சங்கை நிகழ்கின்றது. ஜன்மத்தால் சூத்திரரும், கர்மத்தால் த்விஜரும், வேதாத்தியன்த்தால் விப்பிரரும், பிரும்ம ஞானத்தால் பிராம்மணருமாய் தஜ்ஜாதியற்ற ஸம்ஸ்காரானு குண்யபிராம்மணரைக் குறிக்கின்றதா பிரவியாலே பிராம்மண ஜாதியில் ஜனித்தோரைக் குறிக்கின்றதா ஸம்ஸ்காரத்தாலுற்ற பிராம்மணனைக் குறிக்குமெனின் இங்ஙனம் சூத்திரனும் ஸம்ஸ்காராதிகுண்யமான பிராம்மணராதற்குக் காரணமேற்ப்படுகின்றது. முதலில் சூத்திரனா யிருந்தன்றோ ஸம்ஸ்காரத்தால் த்விஜத்வமேற்படுகின்றது. இவை சூத்திரர் ஸம்ஸ்காரத்தால் பிராம்மணராதற்கு விதியன்றோ இங்குற்ற அனதிகாரிகளையா வேதாகமங்கள் பிராம்மணனெனப் புகழ்ந்தோதப் போகின்றது. இவ்ற்றால் பிராம்மணரென்பது சிவபெருமானை வேதாகமங்களில் குறிக்கப்பட்டிருத்தலின் அவர் முகத்தில் தோற்றிய ஆதிசைவ பரமாச்சா

சிவங்கிந்தக பிரச்சன்ன பௌத்தக்ரோட பங்கவஜ்ராயுதம். கந்கூர்ய மூர்த்திகளுக்கு ஜாதியாலேயே பிராம்மணத்வஞ் சித்தித்திருத்தலாலிவற்றை ஸம்ஸ்காரப் பிராம்மணர் மேலேற்றி ஸந்தோஷிக்க விரும்பியது வேதாகம மிருந்தவூரில் குடியிருந்தறியாதோரியற்கையாம். இவற்றை பிரும்ம முகோத்பவர்களான ஸம்ஸ்கார பிராம்மணர்களுக்கு முடிசூட்ட நினைந்தது திருடன் ராஜகிரஹம் புக்கி கிரீடத்தைத் திருடி தந்தலையிலேற்றிக் கொள்வதை யொத்திருக்கும். இது நிற்க ஸ்திரீ சூத்திராளுக்கும், ஸ்திரீ சூத்திராளுக்கு ஸமானளாயிருக்கிற த்விஜாளுக்கும், அதாவது வேதாத்யயன ஸம்ஸ்கார சூன்யாளான வேதாந்த சிரவண அனதிகாரிகளாயிருக்கின்ற பிரும்ம க்ஷத்திரிய வைச்யர்களுக்கும், பௌராணிக பிராம்மணன் புராணேதிஹாஸாதிகளைச் சொல்ல வேண்டுமென்றார்.. இதற்குப் பிரமாணமாய்க் காட்டியுள்ள வசனத்தில் ஸ்த்ரீஶூத்ரத்விஜபந்தூனாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா: | இதி பாரதமாக்யாநம் க்ருபயா முநிநா க்ருதம் | என்னும் வாக்கியத்தால் ஸ்திரீ சூத்திரர்கள் த்விஜன் இவர்கள் பந்துக்கள் முதலியவர்களுக்கு சுருதியிலதிகார மின்மையால் பாரதமென்னு மிதிஹாஸத்தை கிருபையோடு கூடிய முனியால் செய்யப்பட்டதெனத் தெறியவருகின்றபடியால் இங்ஙனமுற்ற த்விஜ சப்தம் சூத்திரர்க்கு ஸம்ஸ்காரானுகுண்யமாய் வந்திருப்பதாலன்றோ பாரத்தைச் செய்தாரென்றும், உண்மை யிவர் வியவஹரித்துக்காட்டிய பிரமாணத்தால் விளங்குகின்றது. ஜன்மத்தால் சூத்திரரும் கர்மத்தால் த்விஜருமாயிருப்பவர், விப்ரத்வ பிராம்மணத்வ ஸம்ஸ்காரமில்லாதவராதலால் இவர்களையும் ஸ்திரீ சூத்திரர்களுடன் ஒரு படித்தாய் பிரமாணங்கூட்டி முடிக்கத் துணிவுற்றது

இவ்வாறுள்ள உண்மைக்கருத்துநீத்து ஸ்திரீ சூத்திரர்களுக்கும் ஸ்திரீ சூத்திராதிகளுக்கு ஸமானளாயிருக்கிற த்விஜாளுக்கும். அதாவது வேதாத்யயனாதி ஸம்ஸ்கார சூன்யாளான வேதாந்த சிரவண அனதிகாரிகளாயிருக்கின்ற பிரும்மக்ஷத்திரிய வைச்யர்களுக்கும் பௌராணிக பிராம்மணன் புராணேதிஹாஸங்களைச் சொல்ல வேண்டுமெனப் பொருளுணர்த்தினர். இக்கருத்து மூலத்தில் அடியோடற்று நிற்பதால் நிர்மூலமாமென்பது யாவருக்கும் நன்குவிளங்கும் இஃதன்றி யஸ்து தேவேஷு விதித: வர்ணாநாம் வேதிநாக்ஷிபுத: | தத்ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநாஸ்ய வேதோ ஶாஸ்த்ரதிஷ்டதி |

என்னும் வாக்கியத்தால் யாதொருபிரும்மணனவன் நான்குவேதங்களை அறிந்தும் புராணஅர்த்தத்தை அறியாதவனாயிருந்தால் அந்த பிரும்மணனைப்பார்த்து வேதம்தன்னை விட்டுவிடுவென் என்று பயப்படுகிறதுஎன இந்தசுலோகத்தின்கருத்துவெளிப்படுவதால் இதற்குஇவர் கூறியகருத்தாவது வேதவேதார்த்தங்களை குருமுகமாகநன்றாகதெரிந்துகொண்டுஇதிஹாஸ புராணங்களுக்கு அர்தத்தைசம்சயவிபர்யயமில்லாமல்அறிந்துகொண்டவனை வைத்தீகபிராமணன்முகமாகஅதாவது சகலவேதசாஸ்திர ரகசியம் தெரிந்தவனான அத்வைதிமகாப்பிராம்மணன் முகமாக ஸ்திரிசூத்திர திவிஜபந்துக்கள் இதிகாசபுராணாதிகளை கேட்கவேண்டுமென பொருள்கூறி மகிழ்ந்தார். இவர்கொண்டபொருள் மூலத்திற்கு முரண்பட்டுநிற்கின்றது. இங்ஙனமுற்ற இவர் சமஸ்கிருத பாஷாபிரவீணரெனத்தர்ப்புகழ்ச்சி கூறுதலிழுக்கன்றே இவ்விழுக்குடையார் நம்சுவாமிகள் கூறிய மெய்ப்பொருளுக்கு குறைகூறுதலை அறிவினரங்கிகரிப்பரோ நன்று நன்று கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென்பார் கூற்றிங்ஙனமாயிற்று இவற்றால் புராணார்த்தம் தெரிந்தவரே வேதமொணர்ந்தோராவரென்பது வேதற்றுணிபாதலின் புராணம் அபரிபாகிக்கு கூறியதாழ்ந்த நூலென்னும் குற்சிதவாதம் தலைநீட்டாதொழிந்ததென்க மேலுமிவர் திவிஜஸ்திரி சூத்திரதர்மம் பாஷாந்தர ஞானம் முதலிய சந்தர்பவிரோத திருஷ்டாந் தரங்களால் தன்கட்சியை ஜெயிக்க நினைந்தது பிர்மாணராயிச் சியற்றோர் இயற்கையாம். யாம்வேதம் அபரவித்தை எனவும் சிவாகமம்பரவித்தை எனவும் வேதபிராமணங்களால் சாதித்திருப்பதுடன் சங்கரசம்ஹிதையில் ஆகமபதத்திற்கு சிவாகமமே அர்த்தமென்பதாய் நன்குவிளக்கியுள்ளோமாதலால் நமது சுவாமிகள் உண்மைபொருள் அசங்கதமாவதெப்படி மேலுமிவர் ஆகமமென்றதற்கு சிவாகமமென பொருள்கொள்வோமாயின் வைஷ்ணவ பைரவலாகுளாதி ஆகமங்களை அர்த்தமெனகூடாதாவென ஆசங்கித்தனர் சைவாகமம்தான் அர்த்தமென்பதற்கு பிரமாணமில்லையெனவும் கூறினர். சங்கரசம்ஹிதயே இதற்கு பிரமாணமாயிருக்க வேருபிரமாணம் தேடுவதுயாதுக்கு அன்றன்று ஆகமமென்றதற்கு வேதமெனவே பொருள்கொள்வோமெனின் வேதாகமங்களை அத்தியயனம் செய்வித்தார் எனக்கூறுமிடத்தில் எப்பொருள் விளக்குவீர் ஆகமம் என்றதற்கு வேதம்பொருளாயின் வேதாகமமென இரட்டித்துக்கூறுதல்

அனுவசியகமாம் சர்யைகிரியையோகஞ்ஞானமென்னும் நான்குபாதத்தோடுகூடிய ஆகமங்களை உபதேசித்தாரென்றும் இவைசிவதீக்ஷிசெய்து ஆச்சாரியாபிஷேகம் செய்வித்து ஆன்மாக்களை அனுக்கிரகித்தாரென்றும் கூறிய பெய்னூர் கருத்திற்கு இவராசங்கை முற்றிலும் விரோதமன்றோ இவற்றால் ஸ்காந்தத்தில் கூறிய ஆகமபதம் சிவாகமமென்பதே தீர்மானமாயிற்று இவற்றை நிர்மூலமென கூறுவார் கூற்று குற்றமாய் முடியப்பெறும் இதனிற்க சூதசம்ஹிதயில் சில வசனங்களை இவர் வழுத்திரட்டில் முப்பத்திமூணாவது பக்கம் தொடங்கி 36-வது பக்கம் வரையில் வரைந்து சிவாகம நிந்தைக்கூற துணிந்தார். வேதம் அவித்தை வித்தை யென இறு கூறாய் நிற்றலின் இவ்விரு திறத்தினுண்மை யிவற்கெங்கனே விளங்கப்போகின்றது. அவித்தை அபரவித்தையாகிய ருக்காதி வேதங்களும் வித்தைபரவித்தையாகியசிவாகமங்களும் மென்பதென்றேசூதசங்கிதையின்கருத்து பரிபாகானு குண்ணியமாய் கூறும்ஞானம் உத்தமமெனவும் இவற்காட்டிய வசனங்களில் பொருள்கொள்ள கிடைத்தலால் இவையாவும் இவற்கு சாதகமாவதெப்படி பரிபாகம் மந்தம் மந்ததரம் தீவ்விரம் திவ்விரதரமென் லக்ஷணங்கள் சிவாகமங்களில் கூறியிருத்தலால் இவற்றை உத்தமோத்தம ஞானமென சூதசம்ஹிதை வற்புரித்தி கூறுவதால் சிவாகமநிந்தை கூறும் பிராகத விப்பிரலம்ப வாதமுடையிற்கு யாம்யாது செய்தல்கூடும் சூதசம்ஹிதையில் சிவாகமம் பரவித்தையென கூறியிருப்பதுடன் ஊர்த்துவ முகத்தாலும் அதோமுகத்தாலும் வேதாகமம் வந்த தென்பதை நன்குவிளக்கி வேதத்தைநோக்க சிவாகமம் வரிஷ்ட தர்மமென வற்புருத்தியு மிருக்கின்றது. இச்சூதசம்ஹிதையில் நிஷேதித்துள்ள தந்திர நிஷ்டதர்மங்கள் கேவல தந்திரமாகிய காணாத காபிலமுன் வாதிகளையே குறித்துணர்த்தும் இவற்றை நோக்க மிசிர தந்திரம் விசேஷமாம் மிசிரதந்திரத்தைநோக்க வேததந்திரம் விசேஷமாம் வைதிக தந்திரத்தை நோக்க சுத்த தந்திரம் விசேஷமென்பது சூதசம்ஹிதையின் அந்தர்க்கத் மாதலின் இப்பொருளுணர்ச்சி பெரும்பரிவபமற்று அபரிபாகத் தடிப்பால் பரவித்தியா ரூபமான சிவாகம நிந்தை புரிதல் அறிஞர்க்கழகாமோ.

சிரவுதஸ்மார்த்த தர்மங்களுக்கு சூதசம்ஹிதை விசேஷத்வம் கூறியிருப்பது இவற்றிற்குகீழிட்ட பிரமாணங்களை தாழ்வெனநோக்கியேயன்றி மேலுட்டுள்ள வித்தியாரூபமான சிவாகம பிரமாணத்தை

நோக்கியன்றி சிவாகமமும் வேதமும் அவித்தை வித்தையென பே தப்பட்டு ஒருபுடைத்தாய்நிற்றலின் இவ்விருதிறத்து மெய்நூற்களுக் கும் வேதமென்பது பொதுப்பேர் சிறப்பு வகையாய்க்கொள்ளு மிட த்தில் சிவாகமம் வித்யாவாசகத்தால் மேம்பட்டு நிற்கும். இங்ங முற்று நோக்காது கற்றவர்போல் வேதாகமக்கருத்துணர்த்த வெளி வந்தது ஸாதுக்கள் பலற்குமறுவருப்பைத் தருகின்றது. வேதாகம புராணேதி ஹாஸஸ்மிருதி முதலிய ஸத்பிரமாணங்கள் யாவும் ஆன்ம லாபங்கருதி வெளிப்பட்ட மெய்நூல் களேயன்றோ இம் மெய் ஸர்வஞ்யனால் கூறியுள்ள உண்மைநூலாதலால் கிஞ்சிஞ்யராகிய யிவர் போன்றோர் சப்தார்த்த விஷயம் இத்தகைய நான்முகத்து முனை த்தெழத்தக்கதோ, பின்னுமிவர் மேல்கண்டபடி சுருதிஸ்மிருதி இதிஹாஸங்களில் அனர்களாயும் பிராகிருத பாஷாதிகாரிகளைக் காட்டிலும் மேல்போனவர்களாகவு மிருக்கிறவர்களுக்கு ஆகமங்களி லதிகாரம் அவர்கள் ஆகமோக்த குண்டமண்டபாதி புரஸ்ஸர தீக்ஷா ஸம்ஸ்காரமுள்ளவர்களாய் ஆகமோக்த அனுஷ்டானங்களைச்செய்து கொண்டுவந்தால் காலாந்தரத்தில் வைதிக ஜன்மெடுத்து வேதாந்த ஜன்யஞானத்தினுல் மோக்ஷத்தை அடைவார்களென்று சூதசங் கிதை சொல்லுகிறதென மறைந்து அவ்வசனங்களையும் மறைந்திருக் கின்றார். இவரெழுதிய சூதசங்கிதா வாக்கிய மிவற்கனுத்துணையும் பயனளிக்கத்தக்கதன்று, மேதாவியான ஆதிசங்கராச்சாரிய ஸ்வா மிகளே சூதசங்கிதையை அர்த்தந் தெறிந்துகொள்வதற்குப் பதி னெட்டுத் தடைவை திருப்பித்திருப்பிப் பார்த்தாரென்றால் இவற்கா நற்பொருள்விளைவிக்கப்போகின்றது. இவர்பத பதார்த்தஞாயம்சூத சங்கிதையில் செல்லத்தக்கதன்று சூதசங்கிதையோ காமிகாதி சிவா கமங்கள் ஈசான முகமாகிய ஊருத்வ முகத்தால்த் தோற்றிய தென வும்; இவை எல்லா தர்மங்களினும் சிரேஷ்டமுடையதெனவும், இது பரவித்தையெனவும், இந்த ஈசானமுகோத்பவமான சிவ ஞானம் வேதாந்த சிரவணத்தா லயறித்தக்கதெனவுங் கூறியிருப்பதையா முன்னெடுத்து இதே சூதசங்கிதா வாக்கியத்தால் நிரூபித்துள்ளோ மாதலின், இவற் வெற்றுரையிங்ஙனம் பயன்படுமோரெங்ஙனம், இவற் றால் சுருதி ஸ்மிருதி புராணங்களில் அனர்ஹராளாயிருப்பவர்யாவர். வேதாகமாதி ஸத்பிராமணங்களுக்கு அப்பிராமாண்யங் கூறும் ஏகான்மவாதிகளேயன்றோ பந்தலில் நுழையாதேயென்றால் எலை பீத்தலென்பார்போலிவர் வைதிகம், பிராம்மணன், சிரௌதம், ஸ்மா

ர்த்தம் எனப்பிரமாணங்களில் கூறுமிடங்களிலெல்லாம் விட்டில் விளக்கைத் தமக்கிதமெனக்கருதி வீழ்ந்திரத்தல்போல் ஆங்காங்கு தலைநீட்டி தலையருப்புண்டுபோகின்றார். இங்ஙனம்வேதார்த்தமாய்அவரவர்கொண்டபிரமாணமவரவரைத்தாழ்த்திவிடுகின்றது. மன்வாதிஸ்மிருதிகளைவேதார்த்தமாய் கைப்பற்றிநிற்குமேகதேசிகளை அச்சிமிருதிஜன் சூத்திரத்வங்கூறி சூத்திரற்குவேதத்திலதிகாரமின்மையின் ஜன்மத்தால்சூத்திரத்வமும் கர்மத்தால்த்விஜத்வங்கூறுமிவர்களையும்ஜன் சூத்திரர்களாய்க்கழித்து புராணசிரவணம் பண்ணுதலு சிதமென்பதிவர்வறைந்துள்ள பிருமாணங்களால்நன்குவிளங்கப்பெறும்.அஃதெங்கனமெனின் ஸ்த்ரீஶூத்ரத்விஜபந்தூநாம் என்னும் வாக்கியத்தால் ஸ்திரீ, சூத்திராள, த்விஜர் பந்துக்களென அர்த்தமாகின்றபடியால் ஸாமான்யத்விஜர்கள் அதாவது ஜன்மத்தால் சூத்திரத்வம் கர்மத்தால் த்விஜத்வங்கூறுமிவர்களுக்கு வேதாகமங்களில் அதிகாரமில்லையென்பது தென்றன விளங்குகின்றது. அதிகாரமுள்ளோற்கு ஜன்மத்தால் பிராம்மணத் வஸித்திவருதல்வேண்டும். இங்ஙனமுற்றோர் சிவஸிருஷ்டாளாகிய ஆதிசைவர்களை யாவார்கள். இவர்கள்சிவத்விஜரெனப்பெயராறும், விசேத்விஜத்வம் பெற்றிருப்பார்கள். சிவமங்களராதல்பற்றி மங்களத்விஜத்வமுடையாரென்பதே யிவற்றின்முடிபொருளாம். இவர்களைநோக்க ஸாமான்யத்விஜர்கள் அமங்களராவாரென்பதை நோக்கியேயன்றோ யிவர்களுக்கு வேதாகமாதிஸத்பிரமாணம் அமங்களத்வஞ் சாதித்திருக்கின்றது. இவர்வேதஅனதிகாரத்வங்கூறி விலக்கியுள்ள வசனங்களும், ஸ்திரீ, சூத்திரர், த்விஜர் பந்துவெனக்கூறியிருப்பதால் இங்ஙனம் ஸாமான்யத் விஜரெனப்பொருளாமன்றி விசேஷத்விஜர்களாகிய சிவத்விஜர்களை இங்ஙனம்பொருள்படுத்த விடமில்லை. இவற்றாலும் வேதஅனதிகாரத்வ மிவ்வாதிகளுக்கே உண்டாயிற்றென்பது கற்றோர்மைற்றோர் யாவருக்கும் நன்கு விளங்கும் பின்னுமிவர் சூதசங்கிதாவாக்கியத்தை எண்டெடுத்துக் காட்டிக்கண்டித்தொதுக்கப் புகுவோமாக.

'வெஃாஂஸ்யஃுஶாஹூாணி வஶாணஂஹாஶதஜ்யா |
வெஃாஂஶாநூவவெஃாஂஸ்ய காஶிகாஃூாஶஶாநவி | காவாஞஂ
ஞாகஹெஜ்ஞுவ தயொஹெஃுஶாநிஜஷஃுஹாஃ | தயாவாஶ
வதஂஹொஶஂ ஹெஶவஹூஶவாஶஶாஸ | தெஷாஂஹெஶா
வஹெஃாஂஸ்ய ஶதஶொயஷஹஹஹூஶஃ | விஷ்ணாஶஶாஷயாவூா

[illegible]

ஜா: ||

என்னுஞ் சூதசங்கிதாவாக்கியத்தால் ஹேபிராம்மணோத்தமர்களே வேதங்கள், தர்மசாஸ்திரங்கள், புராணம், பாரதம், வேதாங்சம், உபவேதம், காமிகம்முதலிய ஆகமங்கள், காபாலம், லாகுளம், இவைகளின்பேதம் பாசுபதம், ஸோமம், பைரவம் முதலியவைகள் இவைகளின் அனந்தபேதங்கள் விஷ்ணுவாகமம், பிரும்மாகமம், புத்தாகமம், ஆர்ஹதாகமம், லோகாயதம், விஸ்தாரமானதர்க்கசாஸ்திரம், கம்பீரமானமீமாம்ஸசாஸ்திரம், ஸாங்கியம்யோகம் இவ்வாறு அனேகபேதமான சாஸ்திராந்தரங்களையும், ஸர்வஞ்ஞனாகிய பரமேசுரவர் ஸங்கிரஹமாகதானே சொல்லியிருக்கின்றார் இப்பரமேசுவரருடைய பிரசாதத்தினால் பிரும்மா, விஷ்ணு முதலானதேவர்கள் ஸித்தர், வித்யாதரர் யக்ஷர் இராக்கதர்முதலானோர்கள முனிகளும்மனுஷ்யர்கள் இவர்கள்யாவரும் பரமேசுவரரால் சொல்லப்பட்டசாஸ்திரங்களையே விரிவாகவுஞ் சுருக்கமாகவுஞ் செய்தார்கள். வித்வான்கள் இந்தப்பிரமாணங்களைச் செய்திருக்கிறார் அதிகாரிபேதத்தால் பிரமாணங்களாக ஆகிறதுகள் இந்தவழிகள் தர்க்கயுக்தியால் கெடுக்கத்தக்கதல்ல எப்படிஜலத்தின் பிரவாகமானது கடைசியில் ஸமுத்திரத்தைப்போயடைகிறதோ அதுபோல் எல்லாவழிகளுக்கும்

ஈசுவரன் அடையத்தக்கவன் எந்தெந்த வழியாயுபாஸித்தாலும் அந்த வழியை யொத்து அவர்களுக்கு ஈசுவரன் அனுகூலமாயிருக்கிறார். அவருடைய அனுக்கிரஹத்தினல் கிரமமாக உத்தமமான வழிகளை மனிதன் அடைகிறான் அங்கங்கிருந்து அவனுக்கு அனுக்கிரஹஞ் செய்கின்றார். படிப்படியாய் இவைகள் வேதவழிக்குக்காரணங்களாகிறதுகள் வேதமார்க்கத்திலிருக்கின்ற ஈசுவரன் முக்திக்கு நேரேகாரணமாகிறார் இவ்வேதமார்க்கத்திலும், கர்மபாகத்திலிருந்து அவர் ஞானபாகத்திலிருந்து அவர் ஞானவழியாய் மோக்ஷத்தைத் தருகிறார் பரமானமுக்தியானது ஒருவிதமாகவே யிருக்கின்றது. முக்திவிஷயமானதோற்றமும்ஒன்றாகவேயிருக்கும் பலவிதமாயிருக்கமாட்டாது. வேதாந்தமானது சங்கரனை நிர்விசேஷமான ஒரேபொருளாகச்சொல்லுகிறது. இதைத்தவிர வேறுவழியில்லை. இதனல் வித்தை வேதபுருஷனுலுண்டாக்கியது. இந்த மார்கங்களிலுண்டானது ஹேமுனிசிரேஷ்டர்களே அபிமதமாகும் அவித்தை வித்தையென வேத மிருகூருடையதில் அவித்தை வித்தையாகாது வித்தைய வித்தையாகாது இது விஷயத்தைச் செவ்வயாக நிருபணஞ்செய்கிறேன். ஹேவேதவித்தமர்களே இக்காரணத்தா லிவ்விரண்டு மார்க்கங்களும் பிரமாணங்களாகும் முக்தியைக்காட்டிலும் வேறுவிஷயங்களில் பிரமாணங்களான வேதாந்தபாகத்திலிருக்கிற மஹாதேவரானவர் சீக்கிரத்தில் முக்தியைக்கொடுக்கிறார் வேறு வழியிலிருந்து கொடுக்கிறதில்லை. அன்யத்திலிருப்பவரும் கிரமமாகக் கொடுக்கிறார். இதைத்தான் வேதங்களும் முறையிடுகிறதுகள் ஆனதால் வேதமார்க்கத்திலிருப்பவர் அன்ய மார்க்கமாசிரியிக்கக்கூடாது. வேதமார்க்கத்திலேயே இருப்பவருக்கு எல்லாம் சுலபமாகவே முடியத்தக்கது. இதிலேயேதான் புக்தி முக்திகள் நிறைந்திருக்கின்றது. இதிலதிகாரிபேதத்தால் மார்க்கங்கள் பிரமாணமாகிறது ஸம்சயமில்லை ஈசுவரருடைய ஸ்வரூபவிஷயஞானத்தில் பந்தத்திற்கு ஹேதுவும் அதுபோலவே ஜெகத்திற்குக் காரணமாயிருக்கிற ஞானம் முக்திகளிலுமப்படியே இந்த மார்க்கங்களுக்கு யாதொருவிருத்தாம்சங்களான வேதாந்தத்தினல் ஸமர்த்தாளாயிருக்கிற இவர்களுக்கும் மந்தமதியான மஹாமோஹாவிருதாத்மாக்களுக்கும் அவரவர்கள் விஸ்வாஸத்திற்குத் தக்கபடியதார்த்தமற்றதில் பிரவர்த்திப்பார்கள். புல்லைக் காட்டி ஓடுகிறபசுவை மனிதன் பிடிப்பதெப்படியோ அப்படிக்கே மஹேசுவரரானவர்முன் இஷ்டமானக்ஷேத்திரபலத்தைக் காட்டி அ

தின்பின் பரிபாகானுகுண்யத்தினுல் உத்தமமான ஞானத்தைக் கொடுக்கிருர். ஆகையாலிதில் சொல்லியிருக்கிறமார்க்கம் ஈசுவரராலேயே சொல்லியிருக்கிறது. இந்த மார்க்கங்கள் பிரமாணங்கள்தான் அப்பிரமாணமில்லை. அப்பிரமாண்யமென்பாராயின் ஈசுவரர் பொய்சொல்லுகிறவரல்லர் மஹாகருணாமூர்த்தியான பரமேஸ்வரரானவர் எல்லாமறிந்தவர் நிர்மலரென்பது பிரஸித்தமன்றே இந்த வேதமார்க்கங்களுக்குள உத்தமமான மார்க்கமானது எல்லாவற்றையும் கொடுக்கத்தகுந்தது. எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறதினுல் மார்க்கப்பிரமாண நிர்ணயத்தை இந்தப்பிரகாரமறிந்து சுருதியில் சிரத்தையைத் விஜர்கள் வைக்கத்தக்கதென கூறியிருத்தலால் இங்ஙனமிவர்க்கு அணுததுணையும் பயன்படத்தக்கதன்று அவித்தைவித்தையெனவே தமிருகூறாய் நிற்கின்றது விஞாஞாவிஞாஞய த்தெசெஷாஹயாதூஃ என்னும் சுருதிவாக்கியத்தால் வித்தை அவித்தையென வேதமிரண்டு பிரகாரமாயுள்ளதெனச்கூறியுள்ளது இவற்றிற்கு அனுகூல்யமாய் சூதசங்கிதையும் அவித்தை வித்தையாகாது வித்தை அவித்தையாகாதென கூறியிருக்கின்றது. வித்யாபிரதிபாத்யம் சிவாகமத்திலேறிநிற்றலால் அவித்யாபிரதிபாத்யம்அபரவித்தைக்குஉடன்பாடென்பது திண்ணமாம் வேதம்இவ்வாறு உபயாத்மகமாயுள்ளதென்பது தெற்றென விளங்கும் இவற்ருல் சுருதியென்பது வேதசிவாகமிரண்டிற்கும் பொதுப்பெயர். விசேஷித்துக் கூறுமிடத்தில் வித்யாவாசகத்தாலும் ஞானவாசகத்தாலும் மேம்பட்டு நிற்கும் பாகானுகுண்யமாய் உத்தமமானஞானம் கொடுக்கிறரென்பதாய் இவர்காட்டியவசனத்தால் பொருள்பட்டு நிற்றலின்பரிபாகம், மந்தம், மந்தரம், தீவிரம். தீவிரதரம் என நான்கு பேதமுடையதாய் சிவாகமங்கள் கூறிமுடிபொருளாக்கி நிற்றலின் இவற்றையேயன்றே சூதசங்கிதை குறித்துணர்த்த விடமபெற்றுள்ளது. இவற்ருல் பரமேஸ்வரர் சங்கிரகமாக சொல்லியிருக்கிறேனென குறித்துள்ள வாக்கியமும் சிவாகமமெனவன்றே இங்ஙனமும் பொருள் பட்டுநிற்கின்றது. இவற்றையன்றிதேவர் ரிஷிமனிதர் முதலியவர்களால் அவரவர்புத்திக்கேற்ப மிகவிரிவாய் பிரமாணங்களை செய்துகொண்டிருக்கின்ருர் எனவும் அது ஸமுத்திரம்போலுள்ளதெனவும் எல்லாமார்க்கங்களுக்கும் பிரத்தியக்ஷத்தில் மஹேஸ்வரநிஷ்டமான சிவாகமமே சிறந்ததெனவும் இது வேதமார்க்கஹேதுவெனவும் அவித்தைவித்தை இவ்விரண்டும் செவ்வையாக நிரூபிக்கப்பட்டுள்ளதெனவும் ஆகையினுல் வேதவித்

தமர்கள் மார்க்காந்தரங்களுக்கு வேதாகமமிரண்டுமே பிரமாணமாகக்கொள்ளவேண்டுமெனவும் இவற்றையன்றி முக்திகிட்டாதெனவும் இந்தவேதமார்க்கத்திலுள்ள மஹாதேவரானவர் சீக்கிரத்தில் முக்தியைக் கொடுக்கிறாரெனவும் கூறியிருப்பதால் வேதாகமமிரண்டிற்கும் அன்யமான மார்க்கங்கள் அசிரௌதமுடையது யென்பது கருத்து இவற்றுள் ஞானம் சிவபெருமானுக்குரித்தான ஸ்தானமென்றும் கர்மம் இந்த ஞானத்தை அடைதற்கு ஸாதகமென்றும் கர்மஞானபேதமாய் வேதங்கள் இரண்டுபிரகாரமாய் இருக்கிறதென கூறியிருத்தலால் அபாவித்தை கர்மபாக முடையதும் பாவித்தை ஞானபாகமுடையதுமாய் பாவித்தை யாகியசிவாகமமே பரமேஸ்வரருக்குரித்தான ஸ்தானமாயிருத்தலின் இவற்றிலிருந்தும் கர்மபலதாதாவாய் ஆகின்றமையின் இவ்விரண்டும் முக்திமார்க்கமென்பது நோக்கி பிரமாணத்தில் முற்பட்டுகூறுதல் அவசியமாயிற்று. இவற்றால் ஞானம் விசேஷசுருதியாய் பாகுபாடுபெற்று நிற்றலின் சிரௌதமென்னும் சப்தம் இவற்றையே பின்தொடர்ந்து நிற்கும் சுருதி இரண்டினுள் ஒன்று சிரௌதமாய் மேன்படின் மற்றொன்று ஸ்மார்த்தமென இவற்றை தழுவிநிற்றற்கேதுவாயிற்று. இவற்றால் சிரௌதஸ்மார்த்த தர்மமென்பது வேதசிவாகம மென்பதாய்தெற்றென விளங்கப்பெறும். இங்ஙனம் இவரெடுத்தாண்ட சூதசங்கிதை இவற்கே அவைதீகத்வம் சாதித்து வேறொதுக்கிவிட்டது. ஜென்மசூத்திரத்வமுடையார்க்கு வேதம் சொந்தப்பொருளென்ப திழுக்கன்றோ இது நிற்க.

இவர் வழுத்திரட்டு (கூயஎ) வது சயிட்டில் சிவாகமங்கள் ஈசானாதி பஞ்சமுகங்களின் வழியாய் தேற்றியுள்ளதென சிவாகம வசனமொன்று வரைந்து சந்தோஷித்தனர். இவ்வசனம் இவரே ஆராய்ந்தெடுத்தனரோ அல்லது ஆகமக்ஞர்பால் கற்றுணர்ந்துரைத்தனரோ யாதோவரிந்திலம் தாமேநேரே நோக்குவதற்கு சிவதீக்ஷாதி பரஸம்ஸ்காரமின்மையின் அங்ஙனம் நோக்கப்புகுதல் வேதாகமவிருத்தமாம். குருக்கள்முகமாய் தெரிந்துகொண்டோமெனின் இவருக்கு வசனமெழுதிக்கொடுத்த குருக்களும் சிவாகமத்தின் வாஸ்த்தவார்த்தம் தெரியாது மயக்குற்றாரென்பதும் நன்குவிளங்கும். குருக்களே இங்ஙனம் மயக்குருவாராயின் சிஷ்யர்கள் யாதுசெய்வரெனின் குருக்களாயிருப்பின் ஒருபோதும்மயக்கப்பொருள்வருவித்துக்காட்டார். ஆசாரியர், அர்ச்சகர், ஸ்தானீகர், பாசகர், பரிசாரகர் என ஐவகை

பேதமுற்றுள்ள இவர்களுள் ஆச்சாரியர், அர்ச்சகர் இவ்விருவருக்கும் இம்மெய்ப்பொருள் நன்கு விளங்கும் மைற்றோர்க்கு புலப்படுதல் அரிதாதலின் கலிவலித்தடிப்பால் யாவரையும் ஒப்பமுடித்து ஆச்சாரியராக்கி நவீனகும்பாபிஷேகப் பிரவர்த்தகர்கள் கண்டிகுண்டல, பீதாம்பர கௌடு முதலியதுகளால் ஸமர்த்தரெனமயங்கி மெய்ப்பொருள் மறைக்க அவதரித்துள்ள பரிபாகத்தாழ்வுற்ற ஸ்தானீக பாசகபரிசாரகாதி ஆச்சாரியர்களை குருக்களெனமயங்கி அவர்பால் இப்பொருள் கற்றுணர்ந்திருந்தாலு மிருக்கலாம் இங்ஙனமன்றி ஆசாரியமுகமாய் மெய்ப்பொருள் உய்த்துணர்ந்திருப்பராயின் இவ்விபரீதாசங்கை முளைத்தெழக் காரணமில்லை உள்ளபடியே ஆசாரியத்வம் வகித்த குருக்களிடத்தில் மெய்ப்பொருளுணரும் திரமற்றயிவர்தாந் தோன்றித்தம் பிறனைய் வேதாகமார்த்தம் செய்யப்புகுதல் குற்றமன்றோ இவர்பரத்து வேதாகமங்கள் மெய்ப்பொருளுணர்த்த பரிபவமற்றோரென்பதை உற்றுணர்ந்து மௌன முற்றிருக்கின்றது. சூதசங்கிதை சிவபெருமான் ஊர்த்தமுகத்தால் காமிகாதி சிவாகமங்கள் தோற்றியுள்ளதாய் கூறியிருக்க பஞ்சமுகங்களாலும் தனித்தனிதோற்றிற்றென்னுமீண்டெடுத்து இவர்வரைந்துள்ள பிரமாணத்திற்கென்னகெதிதேடுவர் வேதாகமமிரண்டும் ஆன்மலாபங்கருதிய மெய்நூலாதலின் இவ்விரண்டும் எம்மனோர்க்கு பிரமாணங்களேயாகும். இவர் வேதமாத்திரமே பிரமாணமெனக்கொண்டு சிவாகமத்தில் அப்பிராமாண்யபுத்தி வகித்தவராதலின் இங்ஙனம் தமக்குற்ற பிரமாணத்தை நீற்று அன்ய பிரமாணத்தில் லக்கணுற்றழிதலெற்றுக்கோ சிவதீக்ஷா விஹீனர்கள் சிவாகமத்தை நோக்குதல் குற்றமென சிவபெருமான் பிராமாணத்தால் வற்புருத்தியிருத்தலை நமது குருநாதர் வேதாகமதாரதம்யத்திலிடை யிடையே நன்குவிளக்கி காட்டியிருத்தலால் அங்ஙனம்நோக்கி மௌன முற்றடங்காது சிவாகமப்பிரமாணத்தை யீண்டெடுத்து வரையத்துணிந்தது பிரமாணவிருத்தங்களேயாகும். இவ்வாறுள்ள வேதாகமவிருத்தர்ம முடையார் பரத்துவிடையளிக்கபெமது திருக்கரமிரகேந்த விசையாதிருப்பினும் பரிபாகிக்கு விளக்குதல் அவசியமாதலா லிரகேந்திவரை அதனு முசிதயாயின. சிவாகமம்மஹாளககிரமமெனவும், பிரதிஸம்ஹிதை கிரமமெனவும், இரண்டுபேதமுடையது இவற்றுள் மஹோககிரமம் இருபத்தெட்டு சிவாகமங்களும் யீசானமுகத்தில் தோற்றியுள்ளது பிரதிஸம்ஹிதை தனித்தனி பஞ்சமுகத்தில் தோற்றியுள்ளது ஈசானமுகத்தில் யாவும்

தோற்றியது ஆதிஉற்பத்திகிரமம் தனித்தனி பஞ்சமுகங்களில் தோற்றியது ஆங்காங்கு வேதார்த்தந்தெரியாது மயங்கியதேவர், முனிவர் முதலினோர்க்கு கல்பபேதத்தால் கூறியது இவ்வுண்மை வேதாகமஞ்யர்களாகிய ஆதிசைவ பரமாச்சாரியமூர்த்திகள் பால்கற்றுணர்ந்து கொள்ளக்கடவாராக. இங்ஙனமுற்ற மெய்ப்பொருள் உய்த்துணரும் பெரும்பாக்கியம்கிட்ட பரிபவமற்றயிவர் துறர்த்தம்செய்திருப்பதை யீண்டெடுத்துக் காட்டிகண்டித்தொதுக்கப் புகுவோமாக இவர்சைவம், காபாலம், லாகுளம், இவைகளின் அவாந்தரபேதங்கள் பாசுபதம், சோமம, பைரவம் இவைகளுடைய அனந்தாவாந்தரபேதம் பாஞ்சராத்திரம், வைகானஸம், பாகவதம் முதலியவிஷ்ணுவாகமங்கள், பிரம்மாகமம், புத்தார்காதி ஆகமங்கள் லோகாயதம், தர்க்க சாஸ்திர மீமாம்சம், ஸாங்கியம் யோகம் முதலிய அனேக விதமான சாஸ்திரங்களையும் ஸாக்ஷாத் ஸர்வக்ஞரான ஈஸ்வரன் ஸங்கிரமாக நிர்மாணஞ்செய்தார். அவரநுக்கிரகத்தால் பிர்மா, விஷ்ணு, வஸித்தர், வித்யாதரர், யக்ஷர், ராக்ஷஸர், முனி, மனுஷ்யன், இவர்கள் விஸ்தாரங்களாகவும் ஸங்கிரகங்களாகவுஞ் செய்தார்கள் ஒன்றுக்கொன்று விருத்தங்களாயிருக்கிற இவைகள் அதிகாரிபேதத்தினல் சொல்லப்பட்டிருக்கிறதுகள் ஆகையால் விரோதமில்லை. ஒருவனைக்குறித்து பரஸ்பர விருத்த ஆகமங்களை சொன்னுல் அவைகள் அப்பிரமாண்யங்களாய் விடும். ஒவ்வொரு அதிகாரிகளைக் குறித்து வெவ்வேறுகள் சொல்லப்பட்டிருப்பதால் இவைகளொன்றுமப்ராமாண்யங்களல்ல அந்தந்த அதிகாரியைக்குறித்து அந்தந்த ஆகமங்கள் பிரமாணந்தான். ஆகமங்களெல்லாம் வேத அனதிகாரிகளுக்குப் பண்ணப்பட்டிருப்பதால் வேதாதிகாரிகளான வைதிகர்களால் இவைகள் ஸ்மரிக்கக்கூடத்தக்கது களல்ல ஜலப்பிரவாகத்திற்கு ஸமுத்திரமானதுபோலே ஸர்வமார்க்கங்களுக்கும் மஹேஸ்வரர் எல்லையாயிருக்கிருர். அதாவது எல்லாமார்க்கங்களுக்கும் பரமேசுவரனிடத்தில் தாத்பர்யமென்று கொள்க. எந்தெந்த பிரகாரமாக ஜனங்கள் ஈஸ்வரனை யுபாஸிக்கிருர்களோ அந்தமார்க்கத்திற்குத்தகுந்தபடி அவர்களுக்கு ஈச்வரன்பலன் கொடுக்கிருர். அவரது பிரஸாதத்தினலே உத்தமமார்க்கங்களை மனுஷ்யன் அடைகிருன். அந்தந்த மார்க்கத்திலிருந்துகொண்டு ஈசுவரன் அவனவனுக்கு அநுக்கிரஹத்தைப்பண்ணுகிருர். சைவாகமாதி அனேகமார்க்கங்களில் பிரதிபாதிக்கப்பட்டதேவர்கள் படிப்படியாக வேதமார்க்கத்திற்குஹேது

க்களாயிருக்கிறார்கள். வேதமார்க்கத்திலிருக்கிற ஈசுவரர் ஸாக்ஷாத் தாய்முக்திக்குக்காரணமாயிருக்கிறார். இதற்குத்தாத்பர்யம் காமிகாதி ஆகமங்களில் குண்டமண்டபாதி புரஸ்ஸர தீக்ஷாஸம்ஸ்காரமடைந்து அதுகளில் சொல்லப்பட்டபடி அனுஷ்டானங்களைச் செய்து கொண்டு வேதங்களிலும் வேதாங்கங்களிலும் மிகவுஞ்சிரத்தையோடு நமக்கிந்த ஜன்மத்தில் வேதவேதாங்கங்களில் அதிகாரமல்லாது போய்விட்டதே ஜன்மாந்திரத்திலாவது அவ்வதிகாரங்கிடைக்கவேண்டு மீசுவரா. மஹாத்மாக்களில் மஹிமைதெரியாமல் கௌதமாதி மஹரிஷிகளுக்கு துரோகம் பண்ணினதினால் அவருடைய உக்கிரசாபாக்னியால் தகிக்கப்பட்டு வேதவேதாங்கங்களுக்கு அனர்காளாய் போய்விட்டோமே யென்கிற பச்சாத்தாபத்தை யடைந்து வைதிகாளுடைய பாக்கியமே பாக்கியமென்று வைதிகர்களிடத்தில் மிகுந்த பக்தியுடன் கூடினவர்களாய் காலத்தைக்கழித்து வந்தால் அடுத்த ஜன்மங்களில் ஸ்மிருதி புராணோக்த தர்மாதிகளுக்கு அருகமான த்விஜசரீரமெடுத்து அந்தஜன்மத்திற் செய்யப்பட்ட புண்ணியபரிபாகத்தால் அடுத்த ஜன்மங்களில் வேதோக்த கர்மானுஷ்டானஞ் செய்யத்தகுந்த விப்பிரசரீரமெடுத்து அந்த ஜன்மங்களில் செய்யப்பட்ட சிரௌதஸ்மார்த்த கர்மபரிபாகத்தால் அந்த ஜன்மங்களில் ஸகுணநிற்கு ணோபாஸனை செய்யத்தக்க பிராமண சரீரமெடுத்து அதன் ஜன்மத்தில் செய்யப்பட்ட உபாஸனாபரிபாகத்தால் அடுத்த ஜன்மதில் வேதாந்த விசாரத்திற்கு யோக்கியமான ஸாதன சதுஷ்ட யசம்பத்தி யுள்ள பிராம்மண சரீரமெடுத்து சத்குரு பிரும்ம நிஷ்டாளிடஞ் சென்று அவர்கள் பாதகமலங்களை சரணாகபவித்து அவர்களனுக்கிரஹத்தால் வேதாந்த மஹாவாக்கிய ஜன்யபிரம்மாத்மைகத்வக்ஞானத்தை யடைந்து மோக்ஷத்தை அடைவார்களென்று தாத்பரியமென விசித்திரம். பேசினர் மேலுமிவர் வேதமார்க்கத்திலிருக்கிற ஈசுவரர் ஸாக்ஷாத் மோக்ஷத்திற்குக் காரணமாயிருக்கிறதென்று சொல்லி வந்தோம் அதற்குமேல் சுலோகங்களுக்கு அர்த்தஞ் சொல்வோம். வேதங்களிலுங் கர்மபாகத்திலிருக்கிற ஈசுவரர் ஞானசிரத்தையைக்கொடுக்கிறார், ஞானபாகத்திலிருக்கிற ஈசுவரர்ஞானத்தைக் கொடுத்துமோக்ஷத்தைககொடுக்கிறார். இதினால்ஸாதன சதுஷ்டய ஸம்பன்னனான வைதிக குலோத்பன்ன உத்தம பிராமணனுக்கு ஈசுவரன் க்ஞானத்தால் மோக்ஷத்தைக் கொடுக்கிறார். சைவாகமங்களி லிருக்கிற ஈசுவரன் கிர

மமாக படிப்படியாய் உத்தரோத்ர உத்தம ஜன்மங்களைக் கொடுத்து வேதாந்தமார்க்கத்தில் கொண்டுவந்து ஞானத்தைக்கொடுத்து மோக்ஷத்தைக் கொடுக்கிறாரென்று சொன்னதினால் வேதத்தைக் காட்டிலும் ஆகமமானது அத்யந்தம் நிக்ருஷ்டமென்றும் வைதிகனுக்கு தாந்திரீகன் அதிநீசனென்றும், திடப்பட்டதென்று கொள்க. பரமுக்தியானது ஏகரூபமானது ஆகையாலே முத்திவிஷயஞானமும் ஏகரூபமாயிருக்கிறது நானாரூபமாகமாட்டாது. வேதாந்தமானது சங்கரனை ஸாக்ஷாத் நிர்விசேஷாத்வய ஸ்வரூபமாக சொல்லுகிறது. சைவாகமாதி மார்க்காந்தரமானது அப்படிச்சொல்லவில்லை. ஆகையால் வேதவாக்யத்திலுண்டாகிற ஞானந்தான் வித்தையென்று சொல்லப்படுகிறது. சைவாகமங்களாலுண்டாகிற ஞானமானது அவித்தைதான் வித்தையென்று சொல்லப்படாது. இது யதார்த்த நிச்சயமாகையால் சைவாதியாகமங்களுக்கு முக்திவிஷயங்களில் பிராமாண்யமில்லை. முன்சொன்னகிரமப்படிக்கி வேதாந்தத்திற்குபரம்பரையாக காரணமானதைப்பற்றி கௌவுணமாக பிராமாண்யம் சொல்லப்படுகிறது. ஆகையால்தான் சாசுவதசுருதியானதுவேதாந்தபாகத்திலிருக்கிற மஹாதேவர் மற்றொன்றை அபேக்ஷிக்காமல் சாக்ஷாத் மோக்ஷத்தைக் கொடுக்கிறார். தாந்திரிகமார்க்கத்திலிருக்கிற மஹாதேவர் வேதாந்த ஞானத்தை யபேக்ஷித்து பரம்பரையாக மோக்ஷத்தைக் கொடுக்கிறார். சாக்ஷாத் மோக்ஷத்தைக் கொடுக்கிறதில்லை யென்பதுகருத்து. ஆகையால் வேதமார்க்கத்திலிருக்கிற வைதிகர்கள் ஆகமமார்கத்தை ஸ்மரிக்கவேகூடாது. வைதிகர்களுக்கு துர்பலமொன்றுமில்லை. அதாவது இந்த லோகத்தில்புத்திரமித்ரகளத்திரகிரஹாரம்பக்ஷேத்திரவித்யாதி ஜென்யசுகமும், ஸ்வர்க்காதிகளில் அரம்பாதிஸம்போக ஜன்யசுகமும் ஸத்தியலோகத்தில் உத்தமசுகமும் ஞானத்தினால் பரமமுக்தியும் வேதத்தினாலேயே கிடைக்கக்கூடியதாயிருக்க ஆகமாதிகளாகவேண்டியது யாதொன்றுமில்லை ஆகமிகளுக்கு வேதத்தில் வந்துதான் பூர்ணமான போகமும்மோக்ஷமும் கிடைக்கவேண்டியதாயிருக்கின்றது. அதுகிடைக்க வேண்டியகிரமம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது அதிகாரிபேதத்தால் ஆகமாதிகள் பிரமாணந்தான். ஈசுவரச்வரூபத்தையும் பந்தஹேதுவையும் பந்தத்தையும் அதின் ஸாதனங்களையும் வேதாந்தத்திற்கு விருத்தங்களாக சைவாகமாதிகள் சொல்லுகிறதுகள் அவையெல்லாமனாதி மாயையால் மோஹத்தையடைந்திருக்கிற அல்பபுத்திகளான வேத அனதிகாரி

சிரமம்புக்கிவிலாப்புடைக்கதின்று சாபக்கிரஸ்தர்களானது த்விஜர் களே யன்றி சிவத்விகர்களன்று ஏன் அங்கனங்கூறக்கூடாதோ வெ னின் சிவத்விஜர்களிடத்திலும் சிவபெருமானிடத்திலும் சிவாகமங் களிடத்திலும் சிவக்ஷேத்திரங்களிடத்திலும் விசுவாசமற்று நிர்மூல தந்திரநிஷ்டாளாய் வேதாகமாதி சிரௌதஸ்மார்த்தவிமுகளாய் பௌத்தாக மத்திலும் கிழிட்டமன்வாதி ஸ்மிருத்தியனுஷ்டேயர்க ளாய் பிராம்மணுதமாளாகக்கடவதென சபித்திருப்பதால் இங்க னம் ஆதிசைகவர்களை நினைத்தற்குக்கூட காரணமிராது. ஆதிசை வர்களோ வேதாகமமாகிய பராபரவித்யாவிசிஷ்டாராய் ஸ்தாவரஜ ங்கமலிங்கபேதத்தில் ஒன்றாய் சிவஸ்வரூபியாய் ஸர்வான்மாக்களும் முக்த்திபெற்றுய்ய ஸ்திரலிங்கப்பிரதிஷ்டாதி பரதர்ம்ம பிரவிஷ்ட ராய் ஜன்மத்தாலேயே பிராம்மணத்வசித்தி பெற்றவராய் இருக்கிர பிரம்மநிஷ்டாளான இம்மஹாத்மாக்களை கௌதமரிஷி பூஜித்து வந்தித்து தியானித்திருந்ததாலன்றோ அவராச்சிரமம் சுபிக்ஷமா யிருக்கக்காரணமாயிற்று இக்கருத்து சூதஸம்ஹிதையில் அவர்கூரி யுள்ள வாக்கியங்களினுலேயே மேதாவிகளுக்கு நன்குவிளங்கும் ஒய் முத்காமே கௌதமசாபத்தடிப்பால் நீர்கூறும் சிவதூஷணாங் களை ஸத்பிராம்மண ரொருவரும் செவியேற்கவிரும்பார் காபாலம் காளாமுகம் பாசுபதம் பாஞ்சராத்திரம் சாக்தம்சாம்பவம் ஆர்ஹதம் பௌத்தம் நிர்மூலதர்ம்மமாகிய பிரசன்ன பௌத்தம் இவைமுதலி யமதங்களை பரவித்தையில் நிஷேதிக்கப்பட்டு அபரிபாகி பறத்தொ துக்கப்பட்டிருத்தலால் இவற்றைசைவாகம பரத்தேற்றி துஷிக்கமு யன்றது விசாரசூன்யமாம் அபரவித்தையாகிய வேதம் சிவாகமத் தோடைக்கம்பெராவிடங்களில் மேர்குறித்தவாதிகள் வேதம்தமக்கே சொந்தபொருளென மயங்கிமயக்கப்பொருள்வருவித்துக் காட்டத் துணிவார் வேதார்த்தமாகிய சிவாகமத்தைக்கலந்த விடங்களில் சைவசித்தாந்த ரூபமாகிய பரவித்தையாஞ் சிவாகமஞானத்தையே மேர்கோளாக்கி முடிபொருளாய் நின்று அன்யமார்க்கங்களை அப ரிபாகிபரத்தொதுக்குவதால் சிவாகமக்ஞனையன்றி வேறொருவருக் கும் வேதஞ் சொந்தப்பொருளாதலிழுக்காம் நாத்திகரும் தமக்கு வேதஞ் சொந்தப்பொருளென வாதிக்கு மூலகவழக்காதலின் வேதா ர்த்தமன்றி வேதம் பயன்படுமாரெங்ஙனம். வேதார்த்தரூபமாய் சிவ பெருமான் சிவாகமத்தைக்கூறியதாய் சங்கரஸம்ஹிதை சூதசங்கி தைமுதலிய ஸத்பிரமாணங் கூறுவதாப் நமது நண்பர் கைபற்றிய

நிர்மூலதந்திரமான மன்வாதிஸ்மிருதி யிங்ஙனம் யாது செய்தற் பாலது வேதார்த்தமாய் மன்வாதிஸ்மிருதியைக் கைப்பற்றிநிற் கும் ஒருவரை இந்தஸ்மிருதி. ஜாடராக்னிபரமான வைச்வாநராக் னியைத் தவிர வேறு பதிப்பொருளில்லை யெனவற்புறுத்தி யிவற் றைக் கைவிட்டோர் பிரஷ்டராவாரென அசிவம் பாராட்டி நிற்ற லால், சிவைகநிஷ்டமுடைய வேதசிவாகமபாஹ்யர்களான நிர் மூலதந்திரர் வைதிகராதலெங்ஙனம், சிரௌதம், சிவாகமம், ஸ்மா ர்த்தம்,ருக்காதிவேதங்களுமாய் இந்த சிரௌதஸ்மார்த்த பேதத் தால் ஒருங்கே சிவபெருமானைச் சாதித்து நிற்றலால், இவற்றிற்கு புறம்பானோர் சிரௌதஸ்மார்த்தாச்சாரமுடையா ரென்பது சச விஷாணநியாயம்போல் பொய்த்துவிடும், இக்காரணம்பற்றி நிர்மூல தந்திர நிஷ்டர்தாம் சிரௌதஸ்மார்த்தானுஷ்டேயரென அஹங் கரித்தெழுவது வேதாகமவிருத்தமாய் முடியப்பெறும், இங்ஙன நோக்கியேயன்றோ மஹாத்மாவான கௌதமரிஷியும் பாசுபதாதி அசிரௌதாளாகக்கடவதென கேவலதந்திர நிஷ்டர்களை சபித் தார். பாசுபதமென்றதால் சிவாகமமெனப் பொருளாகாதோ வெனில், அக்னிரித்யாதிமந்திரங்களால் விபூதிகுழைத்திடுதலை சிலர் பாசுபதமெனவும், சிலர் சிரோவிருதமெனவும், சிலர் மஹாவிருத மெனவும் சொல்லுகிறார்கள் இந்த விருதத்தின் மஹாத்மியத்தை ஆகமாந்தங்களில் வைப்பட்டிருக்கிறது அதின் பசுத்வத்தை போக்கிக்கொள்ளாத ஒருவனை கொன்றவனுக்கு பிரும்மஹத்யா தி மஹாபாதகங்களும் உண்டாகாதென சூதசங்கிதை கூறுதலால் சிவாகமோக்தமான விரஜானலபஸ்மாவையன்றி கேவலம் வேத மந்திரத்தால் விபூதியிடுதல் பாசுபதமென நிஷேதித்திருப்பதால் சிவதீக்ஷையற்ற கேவலதந்திரநிஷ்டர் பாசுபதாளென்பதே வேதா கமற்றுணிபாம், இவற்றை சிவாகமத்திலேற்றமுயல்வது விசாரணை க்குறைவாம், சிவாகமம் சுத்ததந்திரமெனவும், ஸித்தம், ஸித்தாந்த தந்திரமெனவும், பெயர்பெற்றுவிளங்குவதாலிவைபாசுபத தந்தி ரமாதலிழுக்காம் பஸ்மாவிலும் भस्म च द्विविधं ज्ञेयं [illegible] । [illegible] । विरजानल[illegible] । [illegible] ।

அநுகல்பம் உபாஹ்ருதம் | ஜாபாலாத் ஸ்வஸ்தாநுகல்பம் ஞ்சதி க்ஷீத்ரம் | என்னும் பரவித்யா வாக்கியத்தால் விபூதி நான்குபிரகாரமெனவும், அவை கல்பம் உபகல்பம், அனுகல்பம், அகல்பமென்பேத மூன்றுளதெனவும்,விரஜாநலம்சிவதீக்ஷாபரமாயுள்ளது. கல்பமெனவும், சிவோத்ஸவாதிகளிலும், சிவபிரதிஷ்டாதி சிவபாகத்திலுண்டானது. உபகல்பமெனவும் சிவாக்னிஹோத்திரத்தில் அதாவது சிவாகமோக்தமான அக்னிஸம்ஸ்கார ஈசானுதிபிரும்மபஞ்சகவித்யாதேகஹிருதையாதிஷடங்க கல்பனூரூபமான சிவாக்னியிலுண்டானது அனுகல்பமெனவும், ஜாடராக்னிபரமான வைஸ்வாநராக்னியிலுண்டானது அகல்பமெனவுங்கூறியிருத்தலால் வற்றுள் ஸர்வஜனபரிக்கிரஹீத பஸ்மாவொன்றும் தாம்மாத்திரமணியத்தக்கபஸ்மாவொன்றுமாய் பேதப்பட்டு நிற்கும், கல்பாதி அநுகல்பாந்தம் ஸர்வேஷாம் விஹிதம் ஸதா | அகல்பஸ்து ஸர்வேஷாம் நக்ராஹ்யம் கதாசந| சிவாந்யதேவதா பக்தா யே ந தீக்ஷிதா: | தேஷாமகல்பம் ஸதா யாயாதகல்பம் சிவம் த்ருவம். | என்னும்பரவித்யாவாக்கியத்தால் கல்பம்முதல் அனுகல்ப்பர்யந்தம் எல்லாஜனங்களாலுங் கிரஹிக்கத்தக்கதெனவும், அகல்பம் அன்யர்களால் ஒருக்காலுங் கிரஹிக்கக்கூடாதெனவும், சிவபெருமானுக்கு அன்யமானமூர்த்தியிடத்தில் பக்தியுடையவர்களும் சிவதீக்ஷையற்றோர்களுமான இவர்கள் அகல்பத்தை ஸதாதறிக்கத்தக்கவர். இவை அமங்களத்தைஉண்டாக்கும் நிச்சயமெனக்கூறியிருத்தலால் சிவாகமநிஷ்ட பஸ்மாவிசேஷமும் ஸர்வஜனபரிக்கிரஹீதமும் வைசுவாநராக்னிபஸ்மா தமக்குமாத்திர மணியத்தக்கது. சிவபாகமற்ற அகல்பமாதலால் இவைஅமங்களத்தை யுண்டாக்குமெனவுங் கூறியிருத்தலால் நிர்மூலதர்ம்மமானகேவலதந்திர நிஷ்டபஸ்மா அசுத்தமென்பது தீர்மானம். இதுமட்டோ ஸாங்கோபாங்கா வேதா: | ததாபி சைவாகமா: ஸர்வா ப்ரமாணம் முநிபி: ஸ்ம்ருதா: | ஏகோ வேதோ த்விதா வேதோ வேதாவேதாந்தவிபிந்நா: | ஏகோவேதோவேதஸ்ய ஸாரம் வேதஸ்ய சிவஸ்ய து | என்னும்வாக்கியத்தால் வேதம்ஒன்றும்,வேதார்த்தமாகிய சிவாகமமொன்றுமாய் வேதம், சாகாபேதமாய் அநந்தபிரகாரமாம், வேதார்த்தமான சிவாகமங்களும் அநந்தபிரகாரமாகும், இவ்விரண்டும் சிவ

ஸம்பந்தமாயிருத்தலால் ஒரே பிரமாணமுடையதெனக் கூறியிருத்தலால்வேதார்த்தமாகிய சிவாகமத்தால் கூறியுள்ள விரஜாநலாதி அநுகல்ப பர்யந்தமுள்ள பஸ்மாவையே அணிதல்வேண்டுமென்பது வேதற்றுணிபாம், அகல்பம் முதலியவை பாசுபதர்முதலினோர் அணியத்தக்கது. பாசுபதர்சிவதீக்ஷை அல்லது அக்னிரித்யாதி அதர்வண மந்திரங்களால் விபூதியிடுபவர்கள் இவை நிஷேதமென்பதாய் சூத சங்கிதையில் கூறியுள்ளவசனங்களை ஈண்டெடுத்துவிளக்குவோமாக

யசூாயகூஶாதூ ஸாஸ்யஜூஸாகூஶவாய ஶ்ரஹணம் வ்ரதம் ।
அயவாயவகூணௌசகூணௌஜ்ரு: ஶ்ரஷீகவா ஹஷுவாணாஸம் ।
ஸவகூரம்ஹொாஸஸஜ நயத்தகஸ வ்ரதம்வோராக்தம் சநீஷிஷி: ।
ஷதவெஷ ஸிஹொநிஷ்டா: ஷூாஹா: வாஸவ்தம்சாநெ ।
கெஷிஹிரொ வ்ரதம்வூாஹா: கெஷிசத்ரா ஶ்ரூசம்விசா: ।
கெஷித்தவ்ரதஶித்ரு௰வா: கெஷிஹாம்ஹவ ஹெஶ்வாஸம் ।
அஹஸ்ர்வ்ரதஹஸ்ஶாஹாத்ரு ஶாமஶாஷெஷு ஸம்ஷூிதம் ।
ஸவகூவாவஹாஸம்வாணஸ்ம் ஸஶ்ரக் ஜ்ஞாந ஷூகாஸகம் ।
ய:வஸா ஷகஸவஸாகவஞ வ்ரதெநாநெந நத்ரூஜெகஸ ।
தம்ஹகவா நஸவாஷீயா நிதிவெசாஷநிஶ்வய: ।
ஸவகூசாக்தம்ஸஶாஷெந நியசம்சாநிஸத்தஶா: ।
அநெநவியிநாயாக்தா ஹஷுஜெ்ராதிஹகூவிஷ்ரதி ।

என்னுஞ் சூதசங்கிதைவாக்கியத்தால் தர்ம்மத்தை பிரயோஜனமாக உடைத்தானதற்கும் ஆத்மசுத்தியின்பொருட்டும் ஸ்வல்பமாகக் கிரஹிக்கக்கூடியது விருதம் அப்படிக்கில்லாவிட்டால் அதர்வண மந்திரங்களினாலே சுத்தவெளுப்பான பஸ்மாவை கிரஹித்து ஸர்வாங்கங்ளிலும் உத்தூளஞ்செய்துகொள்ளவேண்டியது யாதொன்றுண்டோ, அது புத்திமான்களாலே ஒருவிருதமாகச் சொல்லப்படுகிறது. இந்த விருதத்தைத்தானே வேதாந்திகள் பாசுபதமென்கிறார்கள் ஹேமுநிசிரேஷ்டர்களே சிலபேர்கள் சிரோவிருதமென்கிறார், சிலர் அத்தியாசிரமமென்கிறார், சிலர் தத்விருதமென்கிறார், சிலர்சாம்பவமென்கிறார், சிலர் ஐசுவரமென்கிறார், எல்லாபாபத்தையும் போக்கடிக்கத்தக்கதாயும் செவ்வையாக ஞானத்தை பிரகாசப்படுத்துவதாயும் உள்ள இந்த விருதத்தினுடைய மாஹாத்

மியத்தை ஆகமாந்தரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றது. யாதொரு பசுவானது இந்த விருதத்தினுலே தன்னுடைய பசுத்வத்தை விடவில்லையோ அப்படிப்பட்டவனை கொன்றவனுக்கு பாபமில்லையென்பது வேதாந்தத்தின் நிச்சயம் ஹே முனிசிரேஷ்டர்களே சுருக்கமாகயெல்லா நியமங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதியில் சொல்லியிருக்கிறபடி அனுஷ்டித்தானுனல் அவன் பஸ்மஜோதிஸ்ஸாக ஆகிறான், எனக்கூறியிருத்தலால் வேதார்த்தமான சிவாகமத்தில் ஆத்மா பசுவெனவும், பதிபரமேசுவரனெனவும், ஆணவம், மாயை, கர்ம்மம், பாசமெனவும்,இப்பாசம்பசுவாகிய ஆத்மாவை பந்தித்துள்ளதெனவும். இப்பாசத்தை ஆச்சார்யன் ஞானுக்னியால் தகித்து சிவதீக்ஷையால் பசுத்வநிராகரணஞ் செய்து சிவத்வத்யோதகஞ் செய்தல் முக்தியெனவுங் கூருதலால் இச்சிவதீக்ஷையை சிவாச்சார்யமுகமாய் அடையாது பசுத்வமுடைய வொருவனைக் கொன்ருல் தோஷமில்லை யென்பது சூதசங்கிதையின் றுணிபாம். இவ்வாறு வேதாந்தமே அறுதியிட்டிருக்கின்றதென சூதசங்கிதையே கூறுவதால் சிவதீக்ஷைபெறாதோர் வேதாந்தி மஹாப்பிராமமணாதலெங்ஙனம் பாசுபதம், விருதம் இதுகள் யாவற்றிலுஞ் சிரந்ததாயிருக்க யிவற்றிற்குக் குறை கூறுதலெங்கனங் கூடுமெனின் சூதசங்கிதை முதலிய பிரமாணங்கள் பசுத்வத்தைப் போக்கி பதிப்பொருளோடொன்று பட்டுநிற்றலே சிவாகமவாயிலா யுய்த்துணர வழிகாட்டி நிற்றலின் இத்திர முணராதோற் கெட்டுணையும் அவ்விருதம் பயன்படத் தக்கதன்று மாகாத்மியமற்ற கேவலபாசுபதம் விருதமாத்திரமாய் அமையப்பெருமன்றி பசுத்வமோசகமாகக்காரணமில்லை. பசுத்வமோ சகத்திற்கு வேதஞ்சிவாகமத்தை விரும்பி நிற்கின்றது. இச்சிவாகமக்கருத்தை யிங்ஙனமாராய்ந் தறியாதோர் கேவலபாசுபதாளாகின்ருர். இக்கேவல பாசுபதாள் வேதக்கருத்தை வேதார்த்தமாகிய சிவாகமத்தாலறியப்புகாது தாம் வேதவாதியென வீண்டம்பங்காட்டி நிர்மூலமான மன்வாதி கேவலதந்திரம்புக்கி பாசுபதவிருதமகிமை யுணர்வதறிதாய் அதர்வண்மந்திரத்தால் விபூதிகுழைத்திடுதலே பாசுபதமென மயக்குற்று பசுபதிவிமுகாளாயிருத்தலாலிவர்கள் கேவலம் பஸ்மதாரணம்மாத்திரங் கைப்பற்றி பசுபதியின்னுரெனப் பகுத்துணராது சிவம், விஷ்ணு முதலியபேதமற்று பின்போயிவ்விருவர்களும் மித்தைபிரும்மஞ்சத்தியமெனப்பிரமித்து பிரும்மம்யார்,நீர்யாரென்னுமிடத்தில் எம்மை

த்தவிர பிரும்மம் வேறொன்றில்லை யெனவும், யெமக்கன்யம் பொய்யெனவும், தம்மை பதிப்பொருளோடொன்று சேர்க்கமேர்க் கூறிய கேவல தந்திர நிஷ்டபாசுபதம் முயல்வதால் மஹாராஜா யாமென மயக்குற்றுக் கூறுவோன் ராஜாக்ஞையால் தலையறுப்புண்டுபோவதுபோல் சிவபெருமான் பிரும்மஸ்வரூபியாயிருக்க யிங்ஙனங் கேவலபாசுபதர்தம்மை பிரும்மமாகக்கூறிக்கொள்வதால் இவர்களையும் சூதசங்கிதை முதலியஸத்பிரமாணங்கள் சிரச்சேதஞ் செய்யவற்புறுத்தியிவற்றால் தோஷமுண்டாகாதென மேலுங்கூறியிருக்கின்றது. இங்ஙனமுற்றோர் பாசுபதம் உயர்வாதலெங்ஙனங்கூடும். உண்மை நூற்களில் ஜீவவதை புறிவதைக்குற்றமாய்க் கூறியிருக்கயிங்ஙனஞ் சூதசங்கதைகொன்றாலுந் தோஷமில்லையென்பது கூடுமோவெனின் ஜகத்ஜீவேசுவரர் முதலிய முப்பொருளும் ஒப்பியவற்கன்றோ ஜீவவதை கூடாதென்பதை கோடலமைவுடைத்து யாமே பிரும்மமென்பாற்கு கொல்பவரும் பிரும்மந்தான். கொல்லநின்றதும் பிரும்மந்தான். பிரும்மம்பிரும்மத்தைக் கொன்றதால் தோஷமாதலெங்ஙனம் தற்கொலைதோஷமாய் கூறியிருத்தலால் பிரும்மத்தைக்கொன்றதாலுந் தோஷமுண்டாகுமெனின் கொன்றபிரும்மத்திற்கு கொல்லும்பிரும்மமித்தை கொல்லும்பிரும்மத்திற்குக் கொல்லநின்ற பிரும்மம்மித்தை யிவற்றால் கொன்றதென்பதும் மித்தையாய் முடிதலால் கேவல பாசுபதர்மதரீதியாய் கொலை, காமம், கட்களவு முதலியமஹாபாதகங்களும் பாபக்காரணமில்லை யாதலின் சூதசங்கிதையுமங்ஙனமே கூட்டிமுடிக்கத் துணிவுற்றது. அங்ஙனமுங் கொன்றாலுந் தோஷமில்லையெனக் கூறியிருத்தலால் ஸ்வமதம் பற்றி உம் என்பது கூடாதென்பதை விளக்குவதால் கொலை செய்வது கூடாதென்பதே சூதசங்கிதையினந்தர்க்கதம் இங்ஙனங் கூறியதற்குக்கருத்து யாதெனில், குண்டமண்டலாதி தீக்ஷாபுரஸ்ஸரமாய் பசுத்வத்தைக்கொன்று பதித்வத்யோதக சிவதீக்ஷை செய்தல்வேண்டுமென்பது கருத்து. இவற்றால் சிவாகமத்திற் கூறியபரஸம்ஸ்காரமாம் அதீந்திரியவிஷய சிவதீக்ஷாதி ஸத்பாவம் ஆத்மபாவத்திற்கு உறியதென வேதசிவாகமங்கள் சாதித்திருத்தலை சூதசங்கிதையும் அவற்றை மேற்கோளாக்கி கூறத்துணிந்தது. நமது நண்பர் குண்டமண்டபாதி புரஸ்ஸரமான சிவதீக்ஷையை நிந்திக்கப்புகுந்தார் இந்நிந்தை வேதபாக்யர்களாகிய காணுதகாபாலமன்வாதிகளான ப்ரச்சன்ன பௌத்தர்பாதத்தொதுக்கி இந்நாஸ்திகரை சிறச்

சேதம் செய்தல்வேண்டுமென சூதசங்கிதை பொருள்கூட்டி முடித்து திறஸ்கரித்திருத்தலால் இவர் நிந்தைகனம் பெருமாறெங்ஙெனம் இங்ஙனம் கேவலபாசுபதர் இன்றென்பதாய் பிரமாணவாயிலாய் விளக்கியுளளோமாதலால் கௌதம சாபம் இப்பாசுபதர்க்கே பற்றத்தக்கது ஸ்ரீமத் ஜகத்குருமணியான ஆதிசைவர்களையே பற்றுமெனின் மேல்படி சாபப்பிரகரணத்தில், ஊஹாதெவவஸூஹக்தளவ எனவும் ஊஹாதெவஸூவிஜஷூர்கெ எனவும் மஹாதேவபக்தர்களாகிய ஆதிசைவர்களிடத்திலும் மஹாதேவஞானமாகிய சிவாகமங்களிடத்திலும் விமுகாளாககடவதென கூறி ப்ராம்மணுகமாளாகக்கடவீரென சபித்திருப்பதால் இவை சிவபக்தாளான ஆதிசைவ பரமாச்சாரியர்களை பற்றுதலெங்ஙனம் மேல்படி கௌதமரிஷி இறுதியில் அரிதியிட்டுக் கூறியதாவது வெகுவிரிவாய் சொல்வதினால் யாதிருக்கின்றது. பிரத்தியக்ஷத்தில் ஸம்ஸாரமோசகரான சிவபெருமானிடத்திலும் அவர் சம்மந்தமான எல்லாசுருதியாகிய சிவாகமங்களிலும் அவர் சம்மந்தமான ஸ்மிருதிகளாகிய நான்கு வேதகங்களிலும் உங்களுக்கும் உங்கள் வமிசத்தாருக்கும் சிரத்தையற்றுபோகக்கடவதென சபித்திருப்பதால் இச்சாபம் ஆதிசைவர்களிடம் எட்டுணையும் நேரக்காரணமில்லை. ஆதிசைவர்கள் வேதாந்தரூபமான பரவித்தையாஞ் சிவாகமத்தையும், ருக்காதிவேதரூபமான அபரவித்தையாகிய வேதங்களையும் மற்றுமுள்ள பிர்ம்மஸ்ரூப விஷயமான சிவோபாசனைக்கு விரோதமற்ற புராணேதிஹாஸங்களையும் ப்ரமாண ஆராய்ச்சியில் முதற்கண்வைத்து ஆராயப்புகும் சாதுக்களாதலின் இவர் பாத்துற்ற ப்ரமாணம் இருதிறத்திலும் வேதப்ரமாணமாய் நிலைநிற்றலால் இவரையன்றி அத்வைதிமஹாபிராமணன் வேறொருவர் இருப்பதாய் மயக்கப்பொருள் வருவித்துக்காட்டியது விகர்ப்பவுணர்ச்சியாம்அந்தோகலிவலிதடித்துகூறும் உன்மத்தவுரை உல்லங்கனப்பட்டொழிந்தது நமதுநண்பர் இங்ஙனமுற்று நோக்காது. அத்வைதிமகா பிராமணன், வேதாந்திமகாப் பிராமணன், யேகான்மவாதி மகாபிராமணன், பிரதிபிம்பவாதி மகாபிராமணன், பிரச்சந்நபௌத்த மகாபிராமணன், பரிணாமவாதி மஹாபிராயணன், கூடாபிர்ம்மவாதி மஹபிராமணன், மாயாவாதி மஹாபிராமணன், சுராமாம் ஸபுக்தவாதி மஹாபிராமணன், நிர்மூல தர்மவாதி மஹாபிராமணன், அக்னிதெய்வ தாத்மகவினைவாதி மஹாபிராமணன், மித்தியாவாதி மஹாபிராமணன் இவ்வா

றுள்ள பிராமணவிருத்தங்களான நிஷேதமுடைய யிவர் பிராம்ம ணரென்றும் சொல்லியெங்கனு மொருங்கே கைப்பற்றி தன் தலைமே லேற்றி மகிழ்வுரவிரும்பியது சாலச்சிரிப்புடைத்தே இவர்கள் இவ்வ ஸப்பியவாதப்படுகுழி வீழ்ந்து தத்தளித்து மீளாநரகிற் க்காளாய் வாணளை வீணளாய் போக்கும் தீயநெறியுடையாற் வேதார்த்தமா கிய சிவாகமத்தை உற்றுநோக்கி நல்லரங்கைப்பற்றாது வேதப்பிரா மணர்போல் தன் தலைநீட்டி நிர்மூலமான மன்வாதிஸ் மிருதிகளை வேதார்த்தமென மயக்குற்று இவ்வேத விருததார்ச்சார படுகுழி வீழ்ந்து ஜீவஹிம்சை நிறைந்தயாகாதிகிருதுக்களை சத்காரியமென கைப்பற்றி கள்ளும் புசிக்கவிரும்பும் இச்கேவலதற்திர பிரவிஷ் டர்களை சூத்திரரிலும் கடையாய் ஓதுக்கவன்றே வேதாகமங்கள் விதித்திருக்கின்றது.

இவர்கள் பாசுபதானுஷ்டானி போற்பூதிசாதனத்தாற் ஸ்தூல வடிவில் தோற்றிநம் பசுபதியை கைப்பற்றி சிவானந்தானுபவவே த்தியமான பாசனசபசுத்வ நிராகரண சிவதீக்ஷாதிபரஸம்காரமின் மையின் இங்ஙனமிவர் பசுபதிவிமுகாளாக காறணமாயிற்று. இக் கேவலபாசுபதம் உபாசனையற்று விருதமாத்திரமாய் கைப்பற்றி நிற் பதிழுக்காம் உபாசனை நித்தியமும்விருதம் நைமித்திகமுமாய் முடி தலால் நித்யத்தை கைவிட்டு உபாசனையற்ற நைமித்திகத்தில் அல க்கணுற்றழிபவர் பவுத்தரிலும்கடையானோரென்பதி லென்னதடை புத்தர் உபாசனை மூர்த்தியாகிய அப்ரத்தியக்ஷவஸ்துவான பதிபொ ருள் இல்லையென ஆசங்கைபூண்டு ஜகஜ்ஜீவர் உள்ளபொருளென சித்தாந்தித்து நிற்பதால் இவர்களுக்கு அப்ரத்யக்ஷவஸ்து இன் மைப் பொருளாகின்றது. மேற்கூரிய கேவலதந்திர பிரவிஷ்டர்கள் முதலில் உபாசனை செய்பவர்போல் மயக்குற்று அவ்வுபாசனை விருத ரூபமான நைமித்திகத்தில் கழித்து இதற்கன்னியம் பிர்ம்மஞ்ஞான மொன்றிருப்பதாய் பிரமித்து யாம்பிர்ம்மமென்னும் மமதைமேலீட் டத்தால் ஜெகஜ்ஜீவேசுரர் முதலியமுப்பொருளும் மித்தையே இறு தியால் கூறிமுடித்தல் புத்தர் அபிமதத்திலும் தாழ்ந்ததேயன்றோ அவர்கள் இருபொருளை யொப்பிமைத்தொன்றில்லை யெனக்கூறு கின்றார் இவர்கள் முப்பொருளும் பொய்யெனகூறுகின்றார். இவ் விருதிறத்தாருள்ளும் யாவர் ஆஸ்திகரென்பதை விவேகிகள் ஊகித் துணரக் கடவாராக, திருடன் ராஜகிரகம்புகும் பெரும்பாக்கியம்

கிட்ட பெரினும் அவர்சொத்தை தன்னதாக பாவித்து திருடுவதுடன் ராஜாங்கமான கிரீடத்தை தந்தலைமீதேற்றி சிம்மாசனமேறி இராஜ்ஜியாதி பத்தியம் செய்யத்துணிவாராயின் அவனது சிரம் இராஜாச்ஞையால் ஏன் கண்டிக்கப்படமாட்டாது இதுபோல் சிவபெருமான் பிரம்மஸ்வரூபியாய் இருத்தலை யறியாது அப்பரமானூர் கற்பிக்கப்பட்ட அவரது சொத்தாகிய உலகம்யாவும் தம்மதென ஸ்வீகரித்து திரும்பஅவற்றை மித்தையென வாயால்ப்பொய்சொல்லி முடிபில்யாமே பிர்ம்மம் எம்மைத்தவிர பிர்ம்மம் வேறென்றில்லையென இவர்கள் சிவஸ்தானமுற்று நிற்றலால் இக்கேவல தாந்திரீக பாசுபதர்கள் சிறத்தையும் வேதாகமங்கள் துணித்தலுசிதமென விதிமுகத்தால் கூறவிடம்பெற்றது. இங்ஙனமுற்றபாசுபதாளாகவேயன்றோபோகக்கடவதாய் மகாத்துமாவாகிய கௌதமரிஷியும் சபித்திருக்கின்றூர் இவற்றை ஆதிசைவ பரமாசார்யமூர்த்திகளின்மேல் ஏற்றி தூஷிக்கமுயன்றது வேதார்த்தம் தெரியாதோர் இயற்கையாம் இங்ஙனம் கேவலதந்திரத்தை ஆதிசைவர்கள் கைப்பற்றாமையால் பிருஷ்டராதல் யாங்ஙனங்கூடும். இவை துலுக்கர் பிராம்மணரை தமது குரானிற்கூரிய தர்மங்களை அனுசரித்துய் யாததால் அவைதீகர் எனவும் பிராம்மண ப்ருஷ்டரெனவும் குறைகூறுதலையொத்திருக்கும் சைவர் என்பது ஆதிசைவர், மகாசைவர், அனுசைவர் அந்தியசைவர் முதலியயாவருக்கும் பொதுப்பேராதலால் இச்சமயத்துற்றோர் சுரா மாம்ஸம் புசிக்க கனவிலும் விரும்பார் இவற்றுள் ஆதிசைவர் சிவப்பிராம்மணரும் மகாசைவர் இவர்களிடம் சிவதீக்ஷைபெற்ற பிராம்மணரும் அநுசைவர், க்ஷத்திரிய, வைசியர்களும், அந்தியசைவர் ஸத்சூத்ரிகளும் ப்ரவரசைவர், அனுலோமர்களும்அவாந்தர சைவர் பிரதிலோமர்களும் ஆவார்கள் இவ்வெழுவகை பேதமுடைய சைவஸமியிகள் மேற்காட்டிய நிர்மூலதர்மங்களை ஒருபோதும் கைபற்ற விரும்பார் ஆதிசைவர்முதல் அவாந்தரசைவ மிறுதியாக எழுவகை சைவர்களை நீற்று ஜிஹ்வாசாபல்லியத்தால் சுரா மாம்ஸம் புசிப்போரை புலையரெனவன்றோ வேதாகமங்கள் கழித்தொதுக்கி இருக்கின்றது இங்ஙனமுற்றோர் சைவஸமயிகளை தூஷித்தல் எங்கனம்கூடும் தத்காலமுள்ள உலகவழக்கிலும் நீ சைவனு அசைவனுவென ஆசங்கிக்க மாம்ஸம் புசிப்போர் அசைவரெனவும் மாம்ஸசம்புசியாதோர் சைவரெனவுமன்றோ விடையளித்துவருகின்றூர். இங்குற்ற அதினீசம்பெற்ற மாம்ஸம் புசித்தலை நிர்மூலதர்ம

மாகிய மன்வாதி ஸ்மிருதிமேற்கோளாய்கொண்டிருக்கின்றது அந்தோ கொடிது கொடிது, சூத்திரரிலும் சைவ அசைவபேதத்தால் ஸத்சூத்ரீ அஸத்சூத்திரீ என பேதமிருகூறுயிருத்தலின் அஸத்சூத்ரீ ஸத்சூத்திரியை தமது தீயசெயலையுற்றுணராது தூஷிக்க முயல்தலுங்கூடும், அதுபோல் பிராம்மணருள்ளும் சிவப்பிராம்மணர்களை தாழ்த்தநினைப்போர் அஸத்பிராமணர்களே யாவார்கள். அஸத்பிராமணர் தாம் ஸதாசாரமாக கைக்கொண்டயாகாதி கிருதுக்களில் ஜீவஹிம்ஸை ஆவசிகமென கைப்பற்றியிருத்தலால் வேதத்தை நோக்க வேதார்த்தமாகிய சிவாகமங்களில் ஜீவஹிம்ஸை அறவே நீங்கப்பெற்றிருக்க தாம்ஸத்காரியமாய்கொண்ட தீயவழியை நீக்கமுயலும் சிவாகமங்களில் பொறுமைகொண்டு சைவமதமே கிடையாதென தூஷிக்க முயன்ற அவஸரம் எங்ஙனே கனம்பெறப்போகின்றது சூத்திரரிலேயே ஸத்தஸத்துவிசாரம் வேதாகமங்கள் கூறத்துணிவுற்றிருத்தலால் இங்ஙனம் பிராமணபரத்தும் இவைவிதியாகாதொழிதலெங்ஙனம் இவற்றால் மாமிஸம் புசிக்கும் பிராம்மணன் அஸத்பிராம்மணனெனவும் அவை புசியாதோர் ஸத்பிராம்மணனெனவும் பேதப்பட்டு அஸத்தைநோக்க ஸத்து உயர்வுற்றிருத்தலின் அஸத்தைகழித்து ஸத்தை மேற்கோளாய் வேதாகமங்கள் முடிபொருளாக்கி கூறுநிற்கும் இங்ஙனமுற்ற பிராமணருள் பிரவியால் பிராமணத்துவம் பெற்றவரும் ஸம்ஸ்காரத்தால் பிராமணத்துவம் பெற்றவருமாய் இறுகூராவர் பிறவியால் பிராமணத்துவம் பெற்றவர் ஆதிசைவபரமாச்சாரிய மூர்த்திகளும் ஸம்ஸ்காரத்தால் பிராமணத்துவம் பெற்றவர் பிறவியால் பிராமணத்துவம் பெற்றவரிடத்தில் தீக்ஷிக்கப்பட்டு மகாசைவராவார்கள் பிறவியால் பிராமணத்துவம் பெற்றவர் ஆச்சாரியரும் ஸம்ஸ்காரத்தால் பிராமணத்துவம் பெற்றவர் சிஷ்யருமாய் சொல்லப்படும். இவ்விருதிறத்தாரும் குருசிஷ்யபாவத்தால் ஸத்பிராமணரென்பதே வேதாகமற்றுணிபு, இங்ஙனமன்றி பிரவியாற் சூத்திரராய் ஸம்ஸ்காரத்தால் துவிஜத்துவம் பெற்று சிவதீக்ஷாதி பரஸம்ஸ்காரமில்லாதவர் அஸத் பிராமணரென்பது முடிபாம் மேற்குறித்த ஸத்பிராமணர் அஸத்ப்பிரம்மணர் இருவருள்ளும் ஆதிசைவபிராமணர்கள் மோக்ஷார்த்தமான ஸ்திரலிங்கபிரதிஷ்டாதி ஆலயங்களில் நித்யம், நைமித்திகம், காமிய மென்னும் பிரதிஷ்டை உத்ஸவம் பிராயச்சித்தாதிசிவ கைங்கரியங்களை செய்தல்வேண்டுமெனவும் மகாசைவர்கள் இவ்வாச்சாரியசிவகைங்கரியத்திற்கு தக்க

27

வாருபரிசர்யாதிகிரியைகளை செய்தல் வேண்டுமெனவும் இவை பரம ஹம்ஸனுகியவேதாந்திக்குவிசேஷவிதியாய் கூறியுள்ளதெனவும் சூத சங்கிதை ஈண்டெடுத்து விளக்கியுள்ளதை நோக்குமளவில் ஆதிசை வபிராமணன் மகிமைபரமஹம்ஸனுகிய ஸங்நியாசிக்கும் கிட்டுதல் அரிதன்றே, இவ்வாதிசைவ மஹாசைவ சிவகைங்கரியபராளான ஸாதுக்களுக்குள் ஆதிசைவர்களுக்குசிவாலயத்திற்குள்ளேயே கிரமம் மரியை என்னும் நான்காவது பிரகாரத்திலும் மகாசைவாதி அந்திய சைவமிறுதியாக சிவகைங்கரியபராளான சிவபக்தர்களுக்கு மகாமரி யை அதாவது ஐந்தாவது பிராகாரத்திற்குள்ளேயும் மற்றுள்ள அசைவர்களுக்கு ஆலயத்திற்கு வெளியே அவரவர் பரிபாகத்திற் கேற்றவாறுபத்தனம். ராஜதானி, புரம், நகரம், கிராமம், குப்ஜகம், கேடகம், முதலிய பேதங்களில் மகாருஜாக்கள் அவரவர்க்கு இருப் பிடங்கல்பித்து ஸ்தாபித்தல்வேண்டுமென மெய்நூல் கூறி யிருத்த லால் அஸத்பிராமணர்களாகிய கேவலதந்திர நிஷ்டாளான நிர்மூல தர்ம்மமுடையாரை இச்சிவகைங்கரியத்தில்பிரவர்த்திக்கசெய்தல் கூ டாதெனவும் பிரவர்த்திப்பாராயின் ராஜராஷ்டிரம் முதலியவற்றிற் கு ஹானி உண்டாமெனவும் இவர்களுக்கு சிவபூஜை நைமித்திகமாத லின் இவர்கள் சிவபூஜைசெய்தல்கூடாதெனவும் ஆத்மார்த்தத்திலும் சிவதீக்ஷை யன்றி சிவபூஜை கைப்பற்று வராயின் இவர்களுக்கு தேவலகத்து வாதிதோஷமேறிச் சண்டாளராவாரெனவும் இச் சண்டாளர்களை மகாருஜாக்கள் கவனித்து புத்தர் ஆர்ஹதர்முதலிய கிரகத்திற்கு வெளியே வீடுகட்டிக்குடிப்புகச்செய்தல வசியமெனக் கூறியுள்ள விதியை உற்றுணர்ந் தடங்காது ஸாதுக்களை இங்ஙன மாக்க முயன்றது விசாரணைக் குறைவாம் ஆதிசைவ பரமாச்சாரிய மூர்த்திகள் சிவஸ்வரூபி யாதலால் இவர்களை திருக்கோயிலுள் வை த்து மகாருஜாக்கள் கும்பிடுதல் வேண்டுமெனவேதாகமங்கள்விதி த்திருக்கின்றது. இவற்றை யறியாவேதபாஹயர்களான சிற்சிலர் கலிவலித்தடிப்பால் இச்சத்பிராமணர்களை ஆதிசைவா ளென்கிற அமேத்தியங்களானதுகள் எனவறையத் துணிந்தனர் பன்றிகள் ஷட்ரஸோபேதமான அமுர்தமிருப்பினும் இதமிவற்றைக்கொள் ளாது அமேத்யமே தமக்குணவென புசித்து வருவதுபோல் இச் சூகரம் ஸாதுக்களாகிய ஆதிசைவர்களையும் தமக்குணவாக அமே த்தியமென கூறத்துணிந்தது கட்குடிப்போர் ஆறு குளம், குட்டை, முதலியயாவும் கள்மயமாய் நிற்குமாயின் நாம் குடித்து கூத்தாடுவ

தற்கு அநுகூலமாமெனகருதும் குடியற்கதை போலாயிற்று சிவன் விஷ்ணு பேதமற்றுகூறும் ஒருவர் பன்றிக்கொப்பாவரென நாம் மேலெடுத்து விளக்கிய விஷயமாதலின் ஜாதிக்கேற்ற புத்திநீனிக் கேற்றலத்தி என்பதுபோல் தாம் மனிதராயிருப்பினும் பன்றியுரு வமாவேசித்து தமக்குணவான அமேத்யத்தை புசிக்க விரும்பியது. ஸஜாதீயத்தாலுற்றசெயலேயன்றி வேறன்று, அந்தக ஞொருவன் குதிரையை கழுதையென்றும் மனிதனை நாயென்றும் கண்ணு ள்ளோர் ஒப்பாருதலின் இவர் கூறிய அமேத்யபதம் ஸாதுக்கள் இவர்க்கேசொந்த ஸ்தானமாக்கிவிட்டனர், சிவதூஷணத்தால் நிறையம் தமக்குறிய ஸ்தானமாயிருத்தலால் பின்வரும் துன்பம் ஈதென்ப தை நம்பரமன் அறிகுறியாய் இவர் வாக்கினிடமிருந்து உற்பவிக்கச் செய்தனர், தீயனெறியால் மலத்திடை யழிந்திக்கிடக்கும் கிரிமிகூட ங்கள் அம்மலமே தமக்குற்ற ஸ்தானமென நினைத்துழுவதுபோல் மலத்தடிப்புற்ற முழுமலதேகி நிர்மலான்மாவான ஆதிசைவ பரமாச் சாரிய பூதர்களை மலமெனச்சுட்டியது தம்மலத்தடிப்பே யன்றிவேற ன்று இது நிற்க நமது குருமணியாம் ஆதிசைவ பிராமணர்களை வே தவேதாங்க பிருஷ்டர்களென பின்னரும் தூஷித்திருக்கின்றார். வே தவேதாங்கம்யாவும் அபரவித்தையாகவும், வேதார்த்தமாகிய சிவா கமங்களை பரவித்தையாகவும் பிரமாணத்தில் முன்வைத்து இவ் வேதாகமத்திற்குபுறம்பான ஹேயதர்மங்களை அறவே ஒழித்து சிவ பெருமானையன்றி வேறுபதிப்பொருளில்லையெனத்துணிந்து சர்யை, கிரியை,யோகம், ஞானமென்னும் சாதன சதுஷ்டய ஸம்பத்தியுணர் ந்து சிவக்ஞானம் சித்திக்கப்பெற்று இவை தன்பொருட்டும் பிறர் பொருட்டும் லோகானுக்கிரககாமாய் செய்தற்குறிய ஜகத்குருமணிக ளான ஆதிசைவ பரமாச்சாரியமூர்த்திகளை வேதவேதாங் கபிருஷ்ட ரென்பதாய்எந்தப் பிரமாணங்கள் ஓதுக்கத்துணியும், ப்ரச்சன்ன பௌத்தரூபமான நிர்மூலதர்ம்மமாம் காணுத காபிலமன்வாதி ஸ்மி ருத்யனுஷ்டேயகேவலதந்திரப்ரவிஷ்டர்களை வேதசிவாகமவேதாங் கபிரஷ்டர்களாய் வேதாகமங்கள் ஓதிக்கிவைத்திருக்கின்றது.

நமது நண்பரிங்ஙனமுற்று நோக்காது சிவதூஷணஞ்செய்யப் புகுந்தது மஹாத்மாவான கௌதமரிஷியின் சாபத்தடிப்பாலிவற்கு நேர்ந்த தோஷங்களென்பது யாவற்கும் நன்கு புலப்பட்டு விளங் கும். இதினுல் நமது ஆதிசைவ பரமாச்சார்ய மூர்த்திகளுக்கு வேத

வேதாங்கப்பிரஷ்டத்வமெங்ஙனே போப்போகின்றது. வேதார்த்த ரூபமான சிவாகமக்கருத்தை கைவிட்டு வேதத்துட்பொருளாராயப்புகுவோரை. வேதந்தாம் அபரவித்தையென கீழ்ப்பட்டுத் தமக்கு மேல்பரவித்தை யொன்றுளதென ஸித்தாந்தித்து அப்பரவித்தையன்றி பிரும்மஞானங் கிட்டாதெனக்கூறி யிருத்தலால் இப்பரவித்தை யறியாதோரன்றே வேதவேதாங்கப் பிரஷ்டராதல்கூடும். வேதாகமசிக்ஷாதியாவு மொப்பப் பிரமாணமாய்க் கைக்கொண்டு வேதார்த்தத்தால் முடிபொருளுணர்ந்துய்ய விரும்பிகிற்கும் நமது குருமணிகள் வேதவேதாங்கப்பிரஷ்டராதலெங்ஙனங்கூடும். வேதவேதாங்க மிரண்டும் வேதார்த்தத்தால் பயன்படுவதன்றி தனித்துப் பயனளிக்கத்தக்கதன்று இவற்றால் வேதவேதாங்க வேதார்த்தம் இம்மூன்று முடிபிலொருபுடைத்தாயனூலென்பதே மேதாவிகள் கொள்கை இத்திரமுற்றுநோக்கும் பரிபவமற்று வேதார்த்தரூபமான சிவாகமங்களைக்கை நழுவவிட்டு நிர்மூலதந்திரமாம் காணுதகாபில மன்வாதி கேவலதந்திரப்படுகுழிப்பட்டு வருந்து மிவரா ஆதிசைவர்களை வேதவேதாங்கப் பிரஷ்டரெனக்கூற வலியுளோர், பேஷ் பேஷ் நன்றாயிருக்கின்றது. நான்கு வேதங்களையும் அத்யயனஞ்செய்தவனுயிருப்பினும் வேதார்த்தந் தெறியாதவனுயின் இவன் வேதத்திற்குப் புரம்பாவனெனக்கூறியுள்ள பிரமாணவாக்கியம் யாமேலெடுத்து நிரூபித்துள்ளோமாதலின் வேதார்த்தரூபமான சிவாகமங்களை அரியாதோர் வேதவேதாங்க பிரஷ்டராவரென்பதே தீர்மானம். இதை ஆதிசைவர் மேலேற்றி தூஷிக்கமுயன்றது வியப்பினும் வியப்பே, இதுநிற்க நமது ஜகத்குருமணிகளான ஆதிசைவ பாமாச்சார்யமூர்த்திகளை மஹாசிவத்துரோஹியென தூஷிக்கமுயன்றார். சிவதுரோஹம் சிவமே யில்லையாமே சிவமென அகந்தைமேலிட்டு வேதவேதார்த்தமான வேதசிவாகமங்களைப் பொய்யெனக்கை னழுவவிட்டு நிர்மூலதர்ம்மமாகிய மன்வாதி ஸ்மிருதியைக் கைப்பற்றி சுராமாம்ஸம்புசிக்கும் யாகத்தைச்செய்து வைசுவாநராக்னியைத்தவிர வேறுபதிப்பொருளில்லை யென்னும் அஸப்யவாதமுடைய வேத அவிச்சாரிகளாகிய அவைதிகர்களுக்கன்றேமஹாசிவத்துரோகிகள்யென்பது பொருந்தும். வேதவேதார்த்தங்களை நன்குணர்ந்து ஹிம்ஸையற்ற வேதார்த்தரூபமான சிவாகமங்களில் கூறியுள்ள சிவயாகம்,சிவத்யானம், சிவயோகம், சிவபோகம், பசுத்வநிராகரணம், சிவத்வத்யோதகம், அதீந்திரிய விஷயஜன்யசிவஞானம்,இவைமுதலிய

ஸதானுஷ்டேய பரமசாம்பவாக்ரேஸரர்களான ஆதிசைவபிராம்மண ர்களை மஹாசிவத்ரோகிகளென்றதடாது,நமதுபரமாச்சாரியர்களுக்கு யிகலோகபரலோகமில்லை யென்பதாய் தமதுவழுத்திரட்டில் வரை ந்துவிடுத்தார்,இகபரமிரண்டையும்மித்தையாய்கொள்ளும்மித்யாவா திக்கன்றோ யிகபரமில்லை யென்பதுகூடும். இவ்விரண்டையும் உள் ளபொருளாய்க்கொண்டு சிவோபாசனைபுரியும் ஆதிசைவர்களுக்கு இகபரமிரண்டும் சொந்தப்பொருளேயாகும், பரத்தால்முக்தியடைய க்கருதிய ஆன்மாக்களுக்கு ஒருங்கேசிவக்ஞானமளித்துநிற்கும் ஆதி சைவர்களுக்கு இகலோக பரலோகமில்லையென்னும் துர்வாதம் கௌதமரிஷியின் சாபத்தடிப்பால் வெளிவந்த உன்மத்தருரையாம். மேலுமிவர் ஆதிசைவர்கள் ஆச்சாரலேசமுமில்லாதவர் எனவரையத் துணிந்தார். இம்மஹாத்மாக்கள் ஆச்சாரமற்றிருக்கும் விஷயங்கள் யாவை? இப்பரமாச்சார்யபூதர்கள் நிர்மூலதர்ம்மமுடையார்போல் கிளப்புவைத்து உபஜீவிக்கின்றனர்களா? சுறு மாமிசம்புஜிக்கும் யா கத்தைச்செய்து துருச்சார ப்ரவிஷ்டராகின்றார்களா? கிறிஸ்தவர் துலுக்கர்,புத்தர்,ஜெயினர் முதலிய துர்மதங்களில் புக்கிஜான் ஞான ஒளிமற்றும் பல்வகைப்பட்டப் பெயர்பூண்டு சிலுவையிட்டு திரிகின் றார்களா? கனபாடிபிள்ளைகளும் ஹூணபாஷாப்ரவீணருய் பன்றி யின் மாம்சம் புலயர்கையால் புசித்தானந்திக்கின்றார்களா? தோல் கிடங்கு, சுருட்டுகிடங்கு, சாராயடப்போ, வாண்ணார்வேலைசெய் தல், கள்ளு, எண்ணை, உப்பு, நவதான்யம்முதலிய துர்வியாபாரஞ் செய்து வயரோம்பிவருகின்றனரா, தண்ணீர்பந்தல் பரிச்சாரகங்கள் செய்து வயரோம்புகின்றனரா, நீச்சரிடத்திலுங் கைகட்டி வாய் புதைத்து உத்யோகஞ்செய்து வயரோம்புகின்றனரா,வேதவிக்ரயம், சாஸ்திரவிக்ரயம், மந்திரவிக்ரயம், முதலியதுருசாரங்கள் இவரிட மேறப்பெற்றிருக்கின்றனரு? இவ்வாறுள்ள அஸந்தர்ப்பங்கள் பல வளவற்றை விறிவஞ்சிவிடுத்தோம் இங்ஙனமுற்று நோக்காது சிவை கநிஷ்டரான ஆதிசைவ பரமாச்சாரியர்களை ஆச்சாரலேசமற்றோ ரென்பது எங்ஙனம்பொருந்தும் கௌதமரிஷியின் சாபத்தால் நீ சவிருத்தியை அவலம்பித்து மதப்ருஷ்டருய் அர்த்தசந்திர, வர்த் துள, அச்வத்தபத்ர, சூலம்முதலிய நிஷேதபுண்டிர முடையாருய் ருமானுக்கு ஸமானமாய் அன்னிய தேவதைகளையும் உடன்படுத்திக் கூறும் அவைதிகர்களை ஆச்சாரலேசமற்றவரென்பது பொருந்தும் இதுநிற்க.

ஆதிசைவர்களை நித்ய தரித்திராளென்றனர் தரித்திரம் யாவர்க்குளதென்பது மேற்காட்டிய விஷயத்தால் இவரேனினும் ஆராய்ந்தறிந்துய்ய விரும்பிலர், ஆதிசைவர்களுக்கு மஹதைச்வரியத்தையும் கொடுக்கத்தக்க பரமேச்வரரே உபாஸனமூர்த்தியாய் யமையப்பெற்றிருத்தலின் இப்பாமன் பொய்த்தாலன்றி இவர்க்கு நித்யதரித்ரத்வம் உண்டாகக்காரணமில்லை இவர்கள் நித்யதரித்ரர்போல் சோற்றுக்கடை, இட்டலிக்கடை, தோல்கடை, தண்ணீர்ப்பந்தல், பரிசாரகம் சண்டாளரிடங்களில்கைகட்டி சேவகாவிருத்திசெய்தல்இவை முதலிய ஹேயமார்க்கப் படுகுழிவீழ்ந்து தத்தளிக்கின்றனரே? இதுவும் கௌதமரிட்ட சாபத்தினியற்கையாம், இங்ஙனமுற்ற உபஜீவனம்பிராம்மணதமர்களுக்கு உறித்தாம் தீயநெறியென்பது தெற்றென விளங்கும். மேலுமிவர் ஆதிசைவர்கள் மூதேவிசாநித்தயமாய்யுள்ளவர்கள் லெக்ஷ்மிகடாக்ஷலேசமில்லாதவர் எனவரைந்திருக்கின்றார் அந்தோ "கொடிது; கொடிது" மூதேவி, லெக்ஷ்மி, ஸரஸ்வதி, துற்கை, பார்வதி, பரமேச்வரர் முதலிய எல்லா மூர்த்திகளையும் பொதுநலங்கருதி பிரதிஷ்டித்து ஆன்மாக்கள் அவரவர் பரிபாகத்திற்கேற்ப சுகதுக்கானுபவங்களை அநுபவிக்கச் செய்யநியாமகமுடைய பரமாச்சார்ய மூர்த்திகளை மூதேவிபற்றுதலெங்ஙனம் இம்மஹாத்மாக்கள், அபரிபாகமுற்றோரை நோக்கி மூதேவிபற்றக்கடவதென நினைத்தால் இம்மூதேவி அவர்களைப்பற்றி பெண்டுபிள்ளைகள் சுற்றத்தார்முதலிய யாவரும் இவர்க்கு தவியற்று இகலோக பரலோக மில்லாத்தீய வழியில்செல்லவைத்து இவனை மொட்டையடித்து பிண்டாபாவமாக்கி தெருக்கடை பிக்ஷையிட்டுண்ணவடித்துவிடும். இவ்வாதிசைவர்கள் புண்ணியமிகுதிபற்றிய ஆன்மவர்க்கத்தினிடத்தில் லெக்ஷ்மிகடாக்ஷ முண்டாவதாய் நினைப்பினும் அவர்களை மஹதைச்வர்யசம்பன்னராய் ஆக்கிவிடுவார் மூதேவி, லெக்ஷ்மி, சரஸ்வதி முதலியயாவர்களும் இவர் ஏவல்கேட்டு நடப்பவர்களாதலால் இப்பரமாச்சார்யர்கடாக்ஷமேயன்றோ லெக்ஷ்மிகடாக்ஷமென்பதுஇங்ஙனமுற்று நோக்காதுகௌதமருஷிசாபத்தால் லெக்ஷ்மி கடாக்ஷமற்று மூதேவி வாஸம்செய்தற் கறிகுறியாம் துர்விருத்திபுக்கிவயரோம்புமொருவர் ஆதிசைவர்களுக்கு லெக்ஷ்மிகடாக்ஷமில்லை யெனச்சந்தோஷிக்கப் புகுவது நரகத்திலுழலும் புழுநிர்மலமான கரையில் நிற்பவரை குடிக்கதண்ணியற்றவிடத்தில் நிற்கின்றாரெனதூஷித்து திருப்தியடைந்திருப்பதையொத்திருக்கும்

அங்ஙனமாயின் ஆதிசைவர்களுள்ளே லக்ஷாதிகாரியாய் ஒருவராவது யிருக்கின்றார்களா? இவ்வாறன்றி இவர்கள் திரவியமற்றிருப்பதால் லெக்ஷ்மி கடாக்ஷமில்லாதவராவரெனின் அங்ஙனமாயின் மஹைதைச்வர்யத்தையும் கொடுக்கத்தக்கசிவபெருமான் திகம்பரராயும் கபாலதராயும் ஸர்ப்பாபரணபூஷிதராயும் உடைத்தாயிருப்பதை லெக்ஷ்மீகர மற்றவரியற்கை யென்பதாய் தூஷிக்கப்புகுவான் கூற்றாய் முடிந்துவிடும்.

ஸகலஸம்பத்தையும் பிரர் பொருட்டீந்து அவரவர்கன்மானுகுண்யமாய்ஸ்வர்க்க, நரக யாதனைகளை யனுபவிக்கயேவும் கர்த்ருத்வமுடையாறிவற்றை தம்பொருட்டு கைப்பற்றி நிற்றலெங்ஙனம் கூடும். உலகம்யாவும் சிவபெருமான் சொத்தாயிருத்தலாய் அவையாவும் சிவாச்சார்யர்களின் சொத்தென்பதில் யாதுதடை? இச்சிவாச்சார்யர்கள் அநுக்ரகித்த சொத்தால் அநேகர் கோடீச்வர வந்தர்களாயிருக்க, இவர்களுக்கு சொத்துண்டோவென விசாரிக்கப் புகுதல் "அம்மாளுக்கு ஓச்சி யுண்டோவென" விசாரிக்க புகும்சிசுவின்கதையாய் முடிந்துவிடும். இதுநிற்க மஹாவிஷ்ணு த்வேஷிகளாய் பிர்மத்வேஷிகளாய், அதிமலினராய், ஆதிசைவனென்கிற அப்ரசித்த நாமமுள்ளவராய் அதிநீசர்களாய் சிவத்ரோகத்தினல் ஜீவனஞ்செய்யத்தக்கவர்களாய்ஜீவச்சதங்களாயுலாவுகின்றாரென்றனர். "பேஷ்பேஷ்" நன்றாயிருக்கின்றது. ஆதிசைவர்கள் விஷ்ணுத்வேஷிகளென்பது எஞ்ஞானறும் பொருந்தாது. ஸதாஶிவஃ நஞ்ஞ ஸ்ரீ கஂ௦ஂஃவிகாஞயா । ஸ்கநஂவிஷ்ணு ப்ரஹ்மாணஂ ... ஸவாநு க்ஷாஸஸூரெஃ। என்னும் வாக்கியத்தால் ஸதாசிவம்அனந்தர், ஸ்ரீகண்டர், அம்பிகை, ஸ்கந்தர், விஷ்ணு, பிர்மா, இவ்வெழுவர்களையும் பறவித்தையாகிய சிவாகமங்கள் பரமாச்சார்யராய் பாவித்தல்வேண்டுமெனக் கூறியிருத்தலால் ஆதிசைவர்கள் மஹாவிஷ்ணுவை த்வேஷிக்கின்றாரென்பதை யாவரோப்புவர்ஆனல் இவரை கௌதுமசாபத்ததடிப்பால் பதிப்பொருளோடொன்றுபடுத்திகூறும்.

அவைதிகர்போல் கூறாது பதி பரமேச்வரரெனவும் மஹாவிஷ்ணு இப்பெருமானை உபாசித்து மேம்பாடுற்றிருகின்றனராதலின் இவரை பரமாச்சார்ய பூதரென வணங்குதல் உரியதாயிற்று. இதனல் இவர்கள் விஷ்ணுத்வேஷிகளாவதெப்படி நிர்மூல தர்ம

முடையஏகான்மவாதிகள்சிவபெருமானையும் விஷ்ணுமூர்த்தியையும் முதலியொப்புவதுபோலொப்பிபின்போய்இவ்விரண்டும்மித்தைபிர்மந்தான் சத்தியமென்னும் படுகுழிவீழ்ந்து; அந்த பிர்மம் இவ்விரண்டிற்கும் அன்னியம்; அது என்னைதவிர வேறொன்றுமில்லை தன்னைத்தவிர அன்னிய பதார்த்தம் ஒன்றிருப்பதாய் கூறுமிடங்களில் அத்வைதஹானி வந்துவிடும் எனபிரமித்து அடிமுதல் நுனிபர்யந்தம் சூன்யவாதாவலம்பியாய் நிற்றலால் ஆதிசைவர்கள் மஹாவிஷ்ணு உள் பொருளாய்கொண்டு பாசிப்பவரகளும் இச்சூன்யவாதிகள் இல்பொருளாய்கொண்டு நிற்பவருமாய் காணப்படுதலால் இவ்விருதிறத்தாருள்ளும் விஷ்ணுத்வேஷிகள் யாவரென்பதை விவேகிகள் ஊகித்து அறியக்கடவாராக, இதுநிற்க ஆதிசைவர்களுக்கு பிர்ம்மஸ்வரூபியாகிய பரமேச்வரர் சொந்தப்பொருளாயிருக்க இவர்களைபிர்ம்மத்ரோகிகளெள்கூறுதல் கூடுமோ? பிர்ம்மஸ்வரூபியாகிய சிவபெருமானை மறந்துதாமேபிர்ம்மமென அகங்கரித்தெழுவார்க்கன்றோ பிர்ம்மத்ரோகி யென்பதுபொருந்தும். தாமே பிர்மமென்பது பிர்மத்ரோகமாவதெப்படிக் கென்னில் தான் பத்தமுத்திக்கேதுவாம் சரீராதி தநுகரண புவனபோகம் புசித்திருப்பதை அறியாது தாம் பரமபதியென மயக்குற்றுபதிப் பொருளையிழந்து நிற்பதால் இவ்வுயிர்க்கு உற்றதுணையாம் பசுபதியை யெழுந்து அவற்றை கைவிட்டோராகின்றார். இவற்றால் இவர் தன்னையே ஹத்திசெய்துகொண்டவராவாரென சூதசங்கிதை முதலிய பிரமாணம் கூறுதலால் இங்ஙன முற்றவாதிகளுக்கு பிர்ம்மத்ரோகம், சிவத்ரோகம், விஷ்ணுத்ரோகம், சகல தேவதாத்ரோகம், ப்ரபஞ்சத்ரோகம், ஆத்மத்ரோகமுதலிய யெல்லாத்துரோகங்களும் சுருதி யுக்தி அநுபவ வாயிலாய்சாதிக்கப்பட்டு இவர்தலைக்கே இவை பெருஞ்சுமையாயிற்று. இதை ஆதிசைவர் மேலேற்றி சந்தோஷிக்க முயன்றது வேத வேதார்த்தம் தெரியாதஅவைதிகறியற்கையாம். இவர்களை அதிமலினரென்றனர் இப்பரமாச்சார்யர் கைப்பற்றியுள்ள சிவபெருமானுக்கு மாலினம் வந்தாலன்றோ இவர்களுக்கு மலினத்வம் சம்பவிக்கப்போகின்றது. இப்பரம்பொருளை இழந்துதான் தோன்றிதம்பிரானுய் தாமே பிர்ம்மமெனபிரமித்தெழும் நிர்மூல தந்த்ரநிஷ்டர்களேயே பிம்மலினத்வம் ஆட்டி அலக்கழித்து நிற்கின்றது. இவற்றை ஆதிசைவர்பாலேற்றி மகிழ்வுரநினைந்தது மஹரிஷியிட்ட சாபத்தடிப்பாலன்றி வேறன்று பின்னுமிவர் ஆதிசைவாளென்கிற அப்பிர

'சித்த' நாமமுள்ளவர்களாய்யென வரைந்தார். வேதார்த்தமாகிய பரவித்தையாம் சிவாகமங்களில் பிரசித்திபெற்றுள்ள ஆதிசைவரென்கிற மஹாத்மாவை அப்பிரசித்தமென குறைகூறவந்தது வேதாகமமறியா வேதபாஹ்யர்களின் செயலேயன்றோ? மஹாருஷியின் சாபம் வேதவேதார்த்தம் தெரியாது சிவனிடத்திலும் சிவபக்தர்களாகிய ஆதிசைவர்களிடத்திலும் த்வேஷபுத்திவகித்து பிராம்மணாதமாளாக கடவதென சபித்திருக்க சாபக்ரஸ்தானுக்கு ஆதிசைவநாமா அப்பிரசித்தமாக தோற்றுதலு சிதம்தான் ஐயோ இவர் வினையிருந்தவாறு "கொடிது கொடிது" பின்னுமிவர் ஆதிசைவர்களை அதிநீசரெனக்குறித்தார். வேதாகமநிஷ்டதர்மமுடைய ஆதிசைவர்களை அதிநீசம்பற்றுதல் எங்ஙனம்கூடும் கொலை, களவு, கட், காமம், கோ மாம்ஸம்புஜித்தல் முதலிய ஹேயதர்மங்களை கைப்பற்றி நிற்போர்க்கன்றோ அதிநீசத்வம் சொந்தப்பொருளாய்நின்றுவிடும், நிர்மூல தர்மங்களாகிய மந்வாதி, ஸ்முருதிமுதலியவைகள் கோமாம்ஸம் புஜித்தல் ச்ரார்த்தநியமமென வற்புருத்தியிருத்தலால் இக்கேவலதந்திரநிஷ்ட தர்மமுடையார்க்கு அதிநீசத்வம் யேனையா உண்டாகாதிருக்கும்? இங்ஙனமுற்று நோக்காது ஆதிசைவர்களை அதிநீசரெனக்குறித்தது கௌதமருஷியின் சாபவலியினியற்கையாம் இதுநிற்க, நமதுநண்பர் ஆதிசைவர்கள் சிவத்ரோகத்தால் ஜீவனஞ்செய்யத்தக்கவரென கூறிமகிழ்ந்தார். சிவத்ரோகம் சிவமேயில்லையாமே சிவமென உண்மைப்பொருளை வருவித்துக்காட்டும் பிறந்தர்க்குறித்தாயதேயன்றி சிவபெருமானை உள்ளபடியே உணர்ந்துய்ய ப்ரதிஷ்டித்து ஆன்மகோடிகள் அநுக்கிரகம்பெற்று புக்திமுக்திகளையடைய சதாசாரம்வகித்துள்ள ஆதிசைவர்களுக்கு சிவத்ரோகம் எஞ்ஞான்றும் மேறக்காரணமில்லை சிவத்ரோகமென்பது சிவனுக்கு அபாவம் கூறுபவரையேபற்றி ஆட்டி அலக்கழிக்கும் வலியுளது. சிவோபாசனையை சிவத்ரோகமென்பதாய் வேதவேதார்த்தங்களாகிய வேதசிவாகமங்கள் மறந்தும் கூறியதின்றாதலால் யிவர் கூறும்துர்வாதம் எங்ஙனே தலைநீட்டி வாழ்தற்குரியது சிவபெருமானின் பொருட்டீந்த எண்ணை, நெய், தயிர், பால், ப்ரசாதம் முதலியவற்றை குறுக்கள் கைப்பற்றுவதால் இவை சிவத்ரோகமாகாதோ வெனின் இவைகளை குறுக்கள் கைப்பற்றிவிட்டால் அபிஷேகம், நைவேத்தியம், பூஜை முதலிய சத்காரியங்கள் நன்னடைப்பெறுதல் எங்ஙனம்கூடும், இவ்வாறு ஒரு குருக்களும் கைப்பற்ற

விரும்பார் கொடுக்கும் திரவியத்தில் கொஞ்சமெடுத்தல் கைப்பற்ற லாகாதோவெனின் எல்லா திரவியங்களிலும் நாலிலொரு அம்சம் ஆசார்யபாகமாயெடுக்க வேத வேதார்த்தமாகிய வேத சிவாகமங்கள் விதிமுகத்தால் விளக்கியிருக்க இவை சிவத்ரோகமெனகூற வெளிவருவார். வேதபாஹ்யரேயாவார்கள் சிவனுக் கற்பிதமான திரவியம் இவர்சொந்தமாய் அனுபவிப்பது சிவத்ரோகமாகாதோ வெனின் சிவபெருமான் ஆச்சார்யரை அதிஷ்டித்து அநுக்கிரகிக்கும் இயல்புடைத்தாய் நிற்றலின் ஆஸ்தானம் அதிஷ்டானம் இவ்விரண்டும் சிவபெருமானுயிருக்க, இங்ஙனம் சிவத்ரவியத்தை சிவம் அபகரித்ததாயன்றோ கூறவேண்டிவரும். இங்ஙனம் தமது சொத்தை தாமே எடுத்துக்கொள்வது சிவதிரவ்யாபகாரமாவதெப்படி? சிவத்திற்கன்னியமாய் இருப்பவர்கிரகித்தாலன்றோ சிவத்ருவ்யாபகாரம் என்பது பொருந்தும் இங்ஙனமுற்று நோக்காது பரமாசார்ய பூதர்களை சிவத்ரோகத்தினுல் ஜீவிப்பவரென குறைகூறியது மஹருஷியிட்ட சாபத்தினியற்கையாம், தம்மைத்தவிர சிவமேயில்லையாசிமே சிவமெனபிரமித்துநிற்கும் ஏகாந்மவாதிகள் சிவபெருமானுக்கு அணுத்துணையும் சம்மந்தமில்லாதிருக்க இவர்கள் கமிட்டி, மானேஜர், பேஷ்கார், ஸம்ப்ருதி, அத்தியானபட்டர், முதலியகோவில் பெறிச்சாளிகள் அடியோடறுத்துத்தள்ளி சிவபெருமானுக்கு பிண்டாபாவமாக்கி ஸதிர், பாட்டுக்கச்சேரி, அண்ணுத்தைக்கூட்டம்விருந்து, அன்னியமதஸ்தர்களுக்கு ஆடு கோழி அடித்து குலைபாதகஞ் செய்து விருந்திடுதல், முதலியவற்றுல் கோவில்சொத்தை சூரையாடி தமது இஷ்டம்போல்சிலவிடும் இவர்களுக்கு சிவத்ரோகம் ஏணையாபிடித்தாட்டாமல் விடப்போகின்றது. நமதுராஜாங்கத்தார் ஹிந்து தேவஸ்தானங்களுக்கு ஹிந்துக்களே கமிட்டிமானேஜர்களாயிருக்க திருக்கோயில்சொத்தை இவர்களிடம் ஒப்பித்திருப்பதுநமதுதேவாலய நன்மையைக்கருதியேயன்றோ? இத்தேயத்துள்ளார் இவர்கள் சைவசமயிகள் அல்லாதிருப்பினும் விபூதியாடும்ஒருகாரணத்தால்நிர்மூலதர்ம்மமாகிய கேவலதாந்திரிகரை சைவசமயிஎன மதித்து வக்கீல் முதலிய சிற்சிலர்களுக்கு ஓட்டுக்கொடுத்து நியமிக்கும்படி செய்கின்றுர்கள்.

இவர்கள் வேலைக்குவந்தவுடன் சிவஸ்வரூபாளான குருக்கள் மார்களையும் பரமேச்வரரையும் பிண்டாபாவமாக்கி பாத்தியா பாத்தியகேஸைக்கிளப்பி நித்தியபூஜை, உத்ஸவம், பிராயச்சித்தம், பிரதிஷ்டை முதலிய நல்லறம்வியாச்சிய வியவகாரத்தால் தடைப்பட்டுபோக நிறுத்திகோயிலை இழுத்துசாத்த தனக்குபவர்யிருக்கிறதென பலர் பார்த்து கௌரவம்கொள்ள மறித்துபூட்டிட்டு பூஜையை நிறுத்திவிடுகின்றார்கள். “அநியாயம் அநியாயம்” இவர்கள் உண்மையானசைவஸமயிகளாயிருப்பின் இச்சிவத்ரோகத்திற்கு துணிவரோ? கமிட்டிக்கு வருவதற்குமுன் ஸர்க்காரில் தேவஸ்தானங்களை வைத்துபார்த்தபொழுது ஒருபொழுதாவது திவ்யக்ஷேத்திரங்கள் சாற்றப்பட்டிருக்கின்றதா? கண்ணிமைபோலன்றோ கவர்ன்மேண்டார் நமது தேவஸ்தானங்களை பாதுகாத்துவந்தார்கள். கிராமாந்தரங்களில்முன்னுள்ளமஹாராஜா, தனவந்தர்கள், மற்றுமுள்ள புண்ணியவான்கள் இவர்கள் ஆங்காங்கு சிவலிங்கப்ரதிஷ்டை முதலிய சிவபுண்ணியம் அபிவிருத்தி யடைவதற்கு ஆதிசைவபரமாச்சார்ய மூர்த்திகளான குருக்கள்களை ஸ்தாபித்து சிவபெருமான் சொத்தை இவர்க்குச்சொந்தமாய் ஆண்டு அனுபவித்து பூஜைநிவழித்தொண்டுபுரிந்துவர அமைத்து இவ்வாறே நீண்டகாலமாய் இச்சிவபுண்ணியம் நன்னடைபெற்று வந்தன, தற்காலத்தில் குருக்களுக்கு கோயில்நிலம் முதலியயாவும் பாத்தியமேயில்லை யெல்லாம் கிராமத்தாருதுதான் நாங்கள் யாரைவைத்து பூஜைபண்ணினாலும் கேட்கக்கூடாது அல்லது பூஜையை நிறுத்தினாலும் தைவங்கூட எங்களை கேட்கமுடியாதென கிராமம்முழுதும் ஒன்றுகூடி ஊருக்கு ஒருகுடியான குருக்கள்மார் தலைமுறைதலைமுறையாய் அநுபவித்துவந்த வீடு, வாசல், நிலம், ரொக்கம் இவைகளை பறிமுதல் செய்து கடைசியாய் இச்சிவபெருமான் பேரால் ஏற்பட்டபட்டாக்கோசங்களைமுதலில் சமுதாயப்பட்டாவாக்கி கொஞ்சங்காலங் கிரமித்து கிராமத்தார்பேரால்செய்துகொண்டு அதின்பின் கோயில் ஒருமைல் விஸ்தாரத்திற்கு கட்டிக்கிடக்கிறது. கடை, வீடு கட்டி வாடகைக்குவிட்டால் கோயிலுக்கு லாபமென நினைப்பான்போல் பிறர்மெச்ச வெளிச்சம்போட்டு அக்கடையும் தமக்கு ஸ்வாதீனமாக்கிகொண்டு பின்சந்நிதானங்களிலும் தெரிசனார்த்தம் வருபவற்கு சாப்பாடு சௌகரியத்திற்கு பக்ஷணக்கடை, சாப்பாட்டு கிளப்பு

இவைகளுக்கு வாடகைக்குவிட்டு அந்த வாடகையும் தம்வயிறு நிறைக்கசாதகமாக்கிஇங்ஙனமுற்ற இடையூறால் சிவபெருமானுக்கு பிண்டாபாவமாயிருப்பதை குருக்கள், ஸ்தாநீகர், பரிசாரகர் முதலிய தேவஸ்தான கைங்கர்யஸ்தர்கள் பார்த்து இனி இக்கமிட்டி மானேஜர்முதலிய கோயில்பெரிச்சாளிகளை எதிர்பார்த்திருப்பது சிவாபசாரம் நாம் கடைத்தெருவு பிச்சைவாங்கியாவது நித்தியபூஜை உத்ஸவம் பிரதிஷ்டை, பிராயச்சிதம் முதலிய சிவ கைங்கரியம் செய்ய உத்தேசித்தால் தர்மவான் பிரவேசிக்கு முன்னிலையில் இக்கமிட்டியார் முதலினோர்க்கு வாய்க்கட்டைபோடாது தர்மத்தில் பிரவேசிக்க முடியாதென பிரவர்த்திப்போர்க்கு புத்தி யுண்டாகுமாறு கமிட்டியார், கிரிமினல் லீவில் முதலியவம்புகளிழுத்து தம் பொட்டி நிறம்பப்பணத்தைவாங்கி தர்ம்மசீலர் நமது சிவபெருமானுக்கு உத்ஸவஞ்செய்து பவனிவருந்தருணத்தில் இம்மாம்ஸபர்வதங்கள் கருத்தகோட்டும் ஷீ டொப்பியும், கால்ச்சிறாய் மூஞ்சியைப்போர்த்துக்கொள்ளும்வலை காலில் பூட்ஸ் இவ்வாருள்ள பூஷணத்தால் சோபாயமானமான அண்ணுத்தைக் கூட்ட பைகாட்பிரதர்களுடன் இவர்கள் உத்யோகந் தெரியுமாறு ஜவானென்பவனிடத்தில் தோல்வடங்கொடுத்து உள்ளபடியே சிவபெருமானிடத்தன்புள்ளபக்தர்கள் கராஞ்சலிசெய்து நிற்கும் கைமுறிந்துவிழ அடிதடிசெய்து உத்வத்தைநிறுத்த இடையூறுசெய்துவிடுகிறார்கள்.

இவர்கள் இன்னமதஸ்தர்களென்பது ஸர்க்காருக்குத் தெறியுமாயின் கம்ட்டி, மானேஜர், மற்றுமுள்ள தர்ம்மவிச்சாரணையில் நேமிக்கமாட்டார்கள். இவர்கள் தர்ம்ம விச்சாரணைக்கு வரவேண்டுமென ஓட்டுவாங்கும்பொழுதே நம்மவர்கள் ஒன்றுசேர்ந்து இவர்கள் சைவமதஸ்தர்களன்று ஸ்மார்த்தர்கள் கேவலங்கர்ம்மவாதியாதலாலிவற்கட்குச் சிவபக்தி இன்றியமயாக்கருவியாயிருப்பவர் சிவாலயதர்ம்மம், சிவாகமம், சிவாச்சாரியார், சிவம் முதலினோர்களிடத்தில் பற்றற்று நிற்பவர்கள் இவர்களிடத்தில் நம்திருக்கோயில்களை ஒப்பிவித்தால் கல்வறிதீர்ந்துவிடுவார்கள் கோர்ட்டார் விசாரித்துயேர்ப்படுத்த வேண்டுமென மனுச்செய்துகொண்டால் ஒருபோதுமிவர்களை கம்ட்டியாராக ஸர்க்காரில் நியமிக்கமாட்டார்கள். கோயிலும்புகாரற்று பூஜை நன்னடைபெற்று லோககேஷமமுமுண்டாகும்

நமதுதேவாலயங்களில் எங்ஙனுமொருங்கே நெய் தீபமிட்டு மகிழ்ந்திருக்க தத்காலம் மண்ணெண்ணைக் குலாட்டிரிபோடுகின்றது, சாராயம், கந்தகம், காந்தம் முதலிய பைசாசதீபமாவேசித்து நமது பெருமானுவிர் ப்பாவத்தைக் குன்றிவறச்செய்கின்றது. திருசிரகிரியின்கண் தேவஸ்தானப்பசுவை அடிமாட்டிற்கு யேலம்போட்டு நீலய்யாவென்னுங் குருக்களொருவர் நம்பெருமானிற் கற்பிதமான கோவை அடிமாட்டிற்குஏலம் போடுவதாவென்னும்பச்சாத்தாபம் மேற்கொண்டு ஏலத்தில் முடிந்ததொகையைத் தாங்கொடுத்தெடுத்துஸம்ரெக்ஷித்துவருகின்றார். அங்ஙனமுற்ற கம்ட்டிமானேஜர்களின் தேவஸ்தான விச்சாரணை சாலச்சிறிப்புடைத்தே இவர்களித்துடனொழியாமல் தேவஸ்தான ஆக்டெனவன்றோ புதிதாய்ச்செய்ய விரும்புகின்றார்.

ஆக்டுசெய்யாதிருக்கும்பொழுதே யிங்ஙனமிருக்க அவைசெய்தால் கோயில் குட்டிச்செவுருதான் தேவஸ்தான ஆக்டு தேவஸ்தானசாஸ்திரம் பார்த்தவர்களன்றோ செய்தல்வேண்டும். செக்கும் சிவலிங்கமும் தெறியாதயிவர்கள் தேவஸ்தானசட்டஞ் செய்வதெப்படி, முன்னுள்ள நம்முன்னோர்கள் தேவஸ்தானத்திற்கு பூஜா கைங்கர்யம்புறியும் ஆச்சார்ய பிரமுகர்களுக்கு கிரஹம், நிலம் ரொக்கம் முதலியயாவுங்கொடுத்து அவர்கள் சுபசோபனுதிகளுக்குத்தக்கவாறு ஸம்மானமளிக்க ஸ்வர்ணுதாயமும்வைத்து யென்றுளிலும் இந்த தர்ம்மமழியாது யாவராலும் பாதுகாக்கத்தக்க நிலமையில்வைத்திருக்க தர்க்காலமுள்ள தர்ம்மசீலர்கள் குருக்கள் வீட்டையும் ஷெ யார் நிலங்களையும் பிடிங்கி சொந்த உபயோகப்படுத்த முயல்வதால் இன்னல்லறமெங்ஙனேதலைநீட்டி வாழ்தற்குறியது குருக்கள்வாயில் தெள்ளுமண்போடுவது ஸ்வாமிக்கே பிண்டாபாவமாய்முடிதல் இதுதேசத்திற்கே அறிஷ்டமாய் முடிகின்றது தத்காலம் யெந்தக்கோயில்களிலுங் குருக்களுக்கு ஸ்வாதந்திரியமற்ற பூஜையாயிருப்பதால் தர்ம்ம விச்சாரணைக்கர்த்தர்களிஷ்டம் போல் பூஜை நடந்துவருகின்றதேயொழிய சாஸ்திரோக்தமான அனுஷ்டானம்எந்தக்கோயிலிலும்பொய்த்துவிட்டதுகம்ட்டிமுதலினோர் சாஸ்திரவிச்சாரமற்ற ஆஞ்யாராயிருத்தலால் நாம் படித்தென் பயனென்பதாய் குருக்கள்மார் படிப்பிலியாய் மென்மேலும் அபிவிருத்தியடையக்காரணமாயிருக்கின்றது.

எழுத்தரமே இங்ஙனம் முற்றுநோக்கியாவர் சிவத்திரவியத்தாலுபஜீவிக்கின்றவ ரென்பதை அறிந்தடங்குவீராக இவற்றால் நமது ஜகத்குருமணிகளான ஆதிசைவ பரமாச்சார்ய மூர்த்திகள் வேதாகம வேதாங்க பரமவைதிகர்களென்றும் ஷட்கர்மாதிகாரத்வமுடையவரென்றும மங்களகரமான சிவப்பிராம்மணர்களென்றும் இவரதுகடாக்ஷம் பெற்றோர்க்கேலக்ஷ்மீகடாக்ஷமுண்டாகு மென வும் இவர்கள்செய்யும் சிவோபாஸனையில் உலகமுய்யக்காரணமாயிருத்தலின் பரமசாம்பவாக்கிரேஸரர்களென்றும், இவர்கள் ஜன்மத்தாலேயே பிராம்மணத்வஸித்தியும் கர்மத்தால் சிவத்வஸித்தியும் பெற்றுள்ள மஹாத்மாக்களென்றும் இம்மஹாத்மாக்களையன்றி தீக்ஷை மந்திரோபதேசம் பெருதற்குமற்றோ ரருஹரன்றென்றும் இவ்வாதிசைவ மஹாப்பிராம்மண பாதபங்கய சரணகநிஷ்டர்களுக்கே இஹபரசாம்பிராச்சிய புக்திமுக்திகள் கிட்டுமெனவும் பிரமாணவாயிலாய் தீர்மாணிக்கப்பட்டு இம்மஹாத்மாக்களை தூஷித்துத்திரிபவர்களை அஸத்பிராம்மணரெனவும் அவைதிகரெனவும் நிர்மூலதந்திர பிரவிஷ்டமதப்பிரஷ்ட பிரச்சன்னபௌத்தரெனவும், மாயாவாதியெனவும்இஹலோகபரலோகமில்லாதவரெனவும் ஜன்மசூத்திரரெனவும்,சிவத்திரவ்யத்தாலுபஜீவிப்பவரெனவும், யஜனயாஜனதிஷட்கர்மங்களுக்குமிவர்களனர்ஹரெனவும்,மந்திரோபதேசம் முதலிய ஸதாச்சாரங்கள் இன்னோஸ்திகரிடம் பெருதல் கூடாதெனவும் சிவபெருமானையும் விஷ்ணுமுதலினோரையும் ஸமத்வம் பாராட்டுவதால் சூகரத்வமா வேசித்துள்ளவரெனவும், மித்தியாவாதம், கீடாபிரும்மம், பிரிணுமம், பிரதிபிம்பம், ஆரோபிதம், அவித்யாகலுஷிதம், வியாவஹாரிகபாரமார்த்திகம் பிராந்தி முதலிய அஸத்வாதமுடையவரெனவும் இங்ஙனமும மஹாத்மாவான கௌதம சாபத்தால் நேர்ந்த துக்காந்தகாரமுடையாரென்பதையும் இவர்களுக்கு கிரஹம் ஆர்ஹதபுத்தர்முதலினோற்கும் வெளியே கட்டிவித்து பரமசாம்பவாக்கிரேஸரர்களான ஆதிசைவ மஹாசைவ அநுசைவாந்தியசைவர் முதலினோர்களைத் தீண்டி அசத்தஞ் செய்யாதிருக்க மஹாராஜாக்கள் செய்தல்வேண்டுமென்பதையும் சுருதி

யுக்தியனுபவத்தால்நன்குவிளக்கிதீர்மானித்தொதுக்கியுள்ளோமாத லால், நமது முத்கரமிங்ஙனம் நாணி நல்லவழிதேடிப்பிழைப்பீராக ஹேமுத்கரமே சிவநிந்தக பிரச்சன்ன பௌத்தக்குரோட பங்க வஜ்ஜிராயுத மென்னும் புத்தகம் இத்துடன் முதற்பாகம் முடியப் பெற்றது. மீந்துள்ளனவற்றை இதினடுத்த இரண்டாம்பாகத்தில் கண்டித்தொதுக்க விருப்புற்றோமாதலால் ஈண்டு நிருத்தவிடம்பெற் றது. ஆங்குற்றுநோக்கியுணர்ந்துய்வீராக. சுபம், சுபம், சுபம்.

ஸ்ரீமத் ஸத்யோஜாத குருப்யோநமஃ

முற்றிற்று.

இங்ஙனம்:

தத்புருஷசிவம்.

உ

சிவமயம்

ஆதிசைவர் முதலிய சைவசமயிகள் யாவருக்கும் இதினுல் தெரிவித்
துக்கொள்வதாவது. நாம் பிரமாணமாய்க் கைப்பற்றிய வேதாகமமிரண்டி
னுள். சிவாகமத்தையும் சைவஸமயத்தையும் மற்றுள்ள சிவாச்சாரியார்
சிவதர்ம்மம் முதலியவற்றையும் சிவஞானபாஷ்யம். ஸ்ரீ கண்டபாஷ்யம்
முதலிய ஸத்கிரந்தங்களை சிற்சிலர் அறியாது பத்திரிகை ரூபத்தாலும் புஸ்
தக ரூபத்தாலும் தூஷித்து நாத்திரராக வகைதேடி வருகின்றூராதலின்.
அவர்களும் நம்பெருமானிடத்தன் புருமாறு எம்மால் வெளியிடப்பட்
டவே தாகமதாத்பர்யமென்னும்—புஸ்தக மொன்றும். தேவகோட்
டையில் ஸன்யாஸியொருவர்—ஆதிசைவ நாமகளேயக முகபங்க-
முத்கரமென்னும். வழுவாசக கண்டனமாய் யெமதுசிஷ்ய கோடிகளி
லொருவனுகிய தத்புருஷ சிவத்தால் வெளிப்படுத்திவரும் சிவநிந்தக பிரச்
சன்ன பௌத்தக்குரோடபங்க வஜ்ராயுதமென்னும் புஸ்தகம் முதற்பாக
மும் இந்த புத்தகத்தில் சேர்த்து பைண்டு செய்யப்பட்டிருக்கின்றது.
இதில் சிவாகமம் மிக்க உயர்ந்த தென்பதற்கு வேதம். உபநிஷத். புரா
ணம்—மற்றுமுள்ள யுக்திப்பிரமாணத்தினுலும் சாதிக்கப்பட்டிருக்கின்
றது. இதை ஆதிசைவர்களும். மகாசைவர்களும்—சைவர்களும் அத்யா
வச்யம் வாங்கி வாசிக்கத்தக்கதோடும் இதைக்கண்ணுற்ற ஒவ்வொருவரும்
தாங்கள் ரூ 1—0—0 கொடுத்து பெற்றுக்கொண்டு இச்சிவபுண்யம் அபி
விருத்தியடைய விரும்புவாராக. ஏனய்யா இந்த புஸ்தகத்தை குருக்கள்
மார் வாங்கிவாசித்து கேட்பவருக்கு ஸந்தேகநிவிருத்திசெய்தல்கூடாது.
எவ்வளவோ அபூர்வமான விஷயங்கள் வெளிப்பட்டிருக்கின்றதே இதை
கொஞ்சமும் அவர்கள் பார்க்க விரும்புகிறதில்லே. மென்மேலுமிவ்வாரி
ரூஜ் வாங்கி வாசிக்க விரும்புவாராக. நமது பெருமானிடத்தன்புடைய
சைவசமயிகளும்வற்றைநோக்கி ஆனந்திக்கவிரும்புகிறேன். நமது சைவ
மடாதிபர்களும் இது விஷயத்தில் மௌனமுற்றிருக்கின்றூர். அவர்கள்
தூக்கச்சீர் தூக்கமொன்று வெளிப்படவிருக்கும். சுபம். சுபம்..

இப்புஸ்தகம் வேண்டுபவர். ரூ 1—0 -0 கொடுத்து நேரிலாவது
வீ. பி யிலாவது பெற்றுக்கொள்ளலாம். 2 வது பாகம் ஸஞ்சிகையாய்ப்
போடப்பட்டுவருகின்றது. ரூ. 1—0—0 கட்டினுல் மாதாமாதம் புத்தகம்
வந்துகொண்டிருக்கும்

என் விலாஸம்- ஸத்யோஜாதசிவாச்சாரியார்.
திருவானைக்காவல் திருச்சி.